# புது எழுத்து

மொழிபெயர்ப்புக்கான
இணைப்பிதழ்

6



புது எழுத்து 39/20 ஜே.கே. சி. தெரு, காவேரிப் பட்டிணம்-635112.

பிக்காசோ

# புது எழுத்து – 6

மொழிபெயர்ப்பிற்கான
இணைப்பிதழ்

ஆகஸ்டு 2002
தனி இதழ் விலை : ரூ. 50/-
ஆண்டு சந்தா : ரூ. 200/-

ஆசிரியர் மனோன்மணி
உதவி ஆசிரியர் சாந்தி சுகுணா

ஆர்ட் எடிட்டர்
ஜீ.முருகன்

அச்சுக் கோர்ப்பு
தே. சங்கர்
அமைதி

ஒளி அச்சு, வடிவமைப்பு
ஜீவா கம்ப்யூட்டர்ஸ்
செங்கம்

அச்சு
செந்தில் ஆப்செட்
தருமபுரி.

முன்அட்டை ஓவியம்
ஆலன் டர்னர்

தொலைப்பேசி 04343 - 52665, 04343 - 51571




தமிழில் சி.மணி

# போதி

### ரேட்டோ / REITO

மூக்கணாங்கயிறு எறிந்து விட்டு
பிரமாணங்கள் செய்துவிட்டு
அங்கி அணிந்தது, சுத்தமாய்
மழித்துக் கொண்டேன்.

போதிதர்மர்

கிழக்கே வந்தது ஏன் என்கிறாய்?
கைப்பிரம்பு நீட்டியிருக்க, நான்
சீட்டி அடிக்கிறேன் களிப்போடு.

### கிஷூ / KISHU

இலக்கு அடைந்தாயிற்றா,
சிரித்துக்கொள் நன்றாக. நீ
மழித்த நிலையில், இன்றும்
அத்தனை அழகு -

பயனற்ற
அந்தப் புருவங்கள்!

கூஜுசான் / GUJUSAN

மூட்டுவாய் இன்றி -
தொட்டதும், அது மின்னுகிறது.
அந்த மாதிரி வலைவிரிப்பு எதற்கு

இந்த ஊர்குருவிக்கு?

கூச்சூ / KUCHU

ஜோஷூ சொன்னார்
'சூன்யம்' என்று.

வசந்த காலத்திலே
எங்கும் பூக்கள்

தற்சமயம் எனதாயிற்று
உன் பார்வை.
கண்களில் மற்றுமொரு

தூசித்துகள்

சேகன் யூயின் / SEIGEN - YUIN

எவ்வளவு பரந்தது கர்மா
எனினும் என்ன இருக்கிறது
பற்றுக் கொள்ள?

நேற்றிரவு

திரும்பினேன், கண்ணே போயிற்று -

ஒரு ஒற்றை ஒளிக் கதிர்.

மரணம்

பாமரன் யாகூசான் / Layman YAKUSAN

செவிடாக்கும் முழக்கம் ஒன்று.
திருடன் ஒருவன் தப்பிவிட்டான்
எனது உடம்பிலிருந்து.

சரி, நான்

தெரிந்து கொண்டது என்ன?
சூன்யத்தின்
அதிபதிக்கு இருப்பது
கறுத்த முகம்.

ஹோமியோ / HOMYO

ஒயின்தாசன் எப்பொழுதும்
தள்ளாடிக்கொண்டு எனினும்
மிகுந்த விவேகம், குடிப்பதில்.

எங்கே போய்ச் சேர்வது இறுதியில்,
தெளிந்த நிலையில் இன்று
மாலையில்?
ஆற்றங்கரைப் பக்கம் எங்காவது
காணக் கிடைக்கும் எனக்கு

விடியல் நிலவு.

ஷீஷின் - கோஷீன் / SHISHIN-GOSHIN

பேசியவாறு, ஏழடிக்கு
எட்டுதடவை
விழுந்து கொண்டு,
மௌனமாக ஒரு தடவை
இரண்டு தடவை இடறிக் கொண்டு.

ஜென்வாதிகள் எங்கெங்கிலும்
'உட்கார்' இருக்கட்டும் அதுவாக.

மனம்.

சேகியோகூ - சேகியோ / SEIK0KU-SEIKYO

இந்தச் சரீரம் மாகுபடுத்தாது
அந்த மலர்சொரியும் மலைச்சாரலை

அங்கே குழி தோண்ட வேண்டாம்;
சமாதிச் சுடருக்கு என்ன தேவை?

அடுக்கி வைத்த
கட்டைகள் போதும்.

ஆருத் புக்ஸ்

4/1 ராஜாஜி அவென்யூ
அனெக்ஸ்,
வளசரவாக்கம்,
சென்னை - 600087.

விலை ரூ.60

ஆன்செக்ஸ்டன், சில்வியா ப்ளாத்,
அருந்ததி ராய், ஆர்லிகேஸ்டல் - ப்ளூம்,
ஹீத் ஹெண்டல், துப்ரங்கா உக்ரேஸிக்,
குர்துல் ஆன் ஹைதர், ஏஞ்சலா கார்ட்டர்,
பி. வத்சலா, பாஸீ அலீயேவா,
லலிதாம்பிகா அந்தர்ஜனம்,
ஜாக்ரெப் - ஆஸ்டர்டாம்.

இவர்களின் கவிதைகள், நாட்குறிப்புகள்,
சிறுகதைகள், குறுநாவல்கள், நாட்டார் கதை
மரபு என்ற வடிவங்களிலான வீரியம் கொண்ட
படைப்புகளை தமிழில் தருகிறது

மூன்றாவது விழியின்
முதலாவது பார்வை

சா. தேவதாஸ்

# மூாக் ப்ரேவர் கவிதைகள்

பிரெஞ்சிலிருந்து தமிழில்
அருண் நாயக்கர்

மூாக் ப்ரேவர் (JAQUES PREVERT) 20ம் நூற்றாண்டின் புகழ்மிக்க பிரெஞ்சுக் கவிஞர். பிரான்சிலுள்ள நெய்யி சுயிர் சேன் (NEVILLY - SUR - SEINE)ல் 4.2.1900ல் பிறந்த ப்ரேவரின் கவிதைகள் எளிமை, இனிமை, ஆழ்ந்த கருத்துக்கள் உடையவை. புற்று நோயால் 11.4.1977ல் மரணமடைந்தார். இங்குள்ள கவிதைகள் 1955ல் வெளியான 'மழையும் வெயிலும்' (Lapline et le brau temps) என்ற கவிதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது. இதற்கு முன்னர் தமிழில் காலச்சுவடு இலக்கிய மலரிலும், க்ரியா அல்லயன்ஸ் பிரான்சைஸ் வெளியிடாகவும் மூாக் ப்ரேவர் கவிதைகள் வெ. ஸ்ரீராம் அவர்களின் மொழிபெயர்ப்பில் வந்துள்ளன.

## எவ்வளவோ காடுகள்

எவ்வளவோ மரங்கள்
பிடுங்கப்பட்டன
நிலத்திலிருந்து
வெட்டப்பட்டன
அழிக்கப்பட்டன
பற்சக்கரத்தில் இடப்பட்டன

மரங்கள் அழிவதால்
உண்டாகும்
அபாயத்தை
வாசகர்கள் கவனத்திற்கு
கொண்டு செல்ல
ஆண்டு தோறும்
கோடிக்கணக்கான
நாளிதழ்கள் தயாரிக்க
காகிதக் கூழுக்காக
எவ்வளவோ காடுகள்
பலியிடப்படுகின்றன.

## ஏமாற்றப்பட்ட காதலர்கள்

என்னிடம்
ஒரு
விளக்கு
இருந்தது

உன்னிடம்
ஒளி
இருந்தது
திரியை விற்றது
யார்? ★

(★ ரகசியத்தைப்
போட்டுடைத்தது யார்?)

## எங்கே போகிறேன்...
## எங்கிருந்து வருகிறேன்...

எங்கே போகிறேன்
எங்கிருந்து வருகிறேன்
ஏன் நனைந்திருக்கிறேன்?
பார்ப்போமா
தெளிவாய் தெரிகிறது
மழை பெய்கிறது
மழை
மழைதான்
அதில் செல்கிறேன்
அப்புறம்!
அப்புறம் என்ன
அவ்வளவுதான்
உங்கள் பாதையைத்
தொடருங்கள்
என் பாதையை
நான்
தொடருவது போல
என்
மகிழ்ச்சிக்காக
சேற்றில்
கால்களைத் தோய்த்து
நடக்கிறேன்
மழை
என்னைச்
சிரிக்க வைக்கிறது
எதையும்
எதையும்
எதையும் குறித்து
நான்
சிரிப்பேன்

உங்களுக்கு
எளிதில்
கண்ணீர் வருமென்றால்
உங்கள்
வீட்டுக்கு
வேண்டுமானால்
செல்லுங்கள்
உங்களை

நினைத்து
வேண்டுமானால்
அழுங்கள்

ஆனால்
என்னை
விட்டுவிடுங்கள்
விட்டுவிடுங்கள்
என்னை

உங்கள்
குரலின்
ஒலியைக்
கேட்க
நான் விரும்பவில்லை

உங்கள் பாதையைத்
தொடருங்கள்
என் பாதையை
நான் தொடருவது போல

நான்
விரும்பிய
ஒரே
மனிதனை
நீங்கள் தான்
அடித்து
காலில்
போட்டு
மிதித்துக்
கொன்றுவிட்டீர்கள்

அவன்
குருதி
வழிந்தோடுவதைப்
பார்த்தேன்

ஓடையில்
கலந்தோடுவதைப்
பார்த்தேன்

உங்கள்

பாதையைத்
தொடருங்கள்
என்
பாதையை
நான்
தொடருவது பேல

நான்
விரும்பிய மனிதன்
இறந்துவிட்டான்
சேற்றில்
அவன் தலை

இதற்காக
உங்களை
வெறுப்பது
முட்டாள்தனம்
முட்டாள்தனம்
ஆம்
முட்டாள்தனம்

நீங்கள்
என்னிடம்
கனிவாக இருக்கிறீர்கள்

மிக
அன்பாக
இருக்கிறீர்கள்

என்னை
நம்புங்கள்
நீங்கள்
நல்லவர்கள்

எலி பொறியைப் போல
எலிக்கு
மிகமிக
நல்லவர்கள்

ஆனால்
ஒருநாள் வரும்
அன்று

உங்களைக்
கடித்துவிடும்
எலி

உங்கள்
பாதையை
நீங்கள் தொடருங்கள்
நல்ல மனிதர்களே
கனிவான மனிதர்களே

# இப்பொழுது நான் வளர்ந்துவிட்டேன்

குழந்தையாக
இருந்தபோது
நான் வேடிக்கையாய்
வாழ்ந்து வந்தேன்

நாள்தோறும்
அர்த்தமற்ற சிரிப்பு
உண்மையிலேயே
விவரிக்க முடியாத சிரிப்பு

பிறகு சோகம்
அப்படியொரு சோகம்
சிலநேரம்
இரண்டும்
ஒரே நேரத்தில்
அப்பொழுது
நம்பிக்கையை
இழந்தவனாக
உணர்ந்தேன்

இருக்கிறேன்
என்பதைத் தவிர
வேறெதுவும்
என்னிடம் இல்லை

சரியாக இருந்தேன்
மகிழ்ச்சியாக இருந்தேன்
சோகமாகவும் இருந்தேன்

ஆனால்
எப்பொழுதும்

என்னுள்
பாசாங்கு
இருந்ததில்லை

உயிர் இயக்கச் செய்கை
தெரிந்திருந்தது
எனக்கு

இல்லை என்பதற்கு
ஆட்ட வேண்டும்
தலையை

மாற்றார்
எண்ணங்கள்
என் வாசலில்
இடம் தேடாமலிருக்க
ஆட்ட வேண்டும்
தலையை

ஏற்பதென்றால்
சிரிக்க வேண்டும்

உயிர்களுக்கும்
பொருள்களுக்கும்
உடன்பாட்டை
வெளியிட
பார்க்க
வாஞ்சையாய் நீவ

நேசிக்க வேண்டிய
பொருள்களுக்கும்
உயிர்களுக்கும்
ஏற்கவோ
விட்டுவிட வேண்டிய
பொருள்களுக்கும்
ஏற்பை
வெளியிட வேண்டும்

நான்
நானாக
இருந்தேன்
எவ்வித

மனநிலையிலும்
இல்லாமல்
எண்ணங்கள்
தேவைப்பட்ட
போதெல்லாம்

எனக்குத்
துணையாய்
இருக்கக்
கூப்பிட்டேன்

அவை வந்தன

எனக்குப் பிடித்தவை
என்னோடு
நின்றன
மற்றவை
தூக்கி
எறியப்பட்டன

இப்பொழுது

நான்
வளர்ந்துவிட்டேன்
எண்ணங்களும்தான்

எப்பொழுதும்
பெரிய எண்ணங்கள்
அழகான எண்ணங்கள்
உயரிய எண்ணங்கள்

அவற்றை
நோக்கி
நேருக்குநேர்
சிரிக்கிறேன்
எப்பொழுதும்
ஆனால்
அவை
நான் மிகவும்
சோர்வாக இருக்கும்
ஒரு நாளில்
என்னை
பழி வாங்கவும்
தின்று
தீர்க்கவும்
எனக்காகக்
காத்திருக்கின்றன

நானும்
காட்டின்
ஓரத்தில்
அவற்றுக்காக
காத்திருக்கிறேன்

எண்ணங்களில்
கழுத்தை
நெரித்து

அவற்றின்
பசியைக்
கொல்வதற்காக

●

# ஆறு மணிக்கு வந்த அந்தப் பெண்

அந்த தள்ளு கதவு திறந்து கொண்டது. அந்த நேரத்தில் ஜோஸின் உணவகத்தில் யாரும் இல்லை. அப்போதுதான் ஆறுமணி ஆகியிருந்தது. அவனுக்குத் தெரியும் தினமும் வரும் வாடிக்கையாளர்கள் 6.30 மணிக்கு முன்னர் வரத் தொடங்கமாட்டார்கள் என்று. அவனது எல்லா வாடிக்கையாளர்களும் மாற்றம் விரும்பாதவர்கள், முறை தவறாதவர்கள் என்பது கடிகாரம் சரியாக ஆறுமுறை அடித்து முடிந்திராத பொழுதில், அந்த குறிப்பிட்ட நேரத்தில் தினந்தோறும் வரும் அந்தப்பெண் உள்ளே நுழைந்ததில் தெரிந்தது. எதுவும் பேசாது ஸ்டூலில் அமர்ந்து கொண்டாள். பற்ற வைக்கப்படாத சிகரெட் அவள் உதடுகளுக்கிடையே அழுத்தமாய் இருந்தது.

"ஹலோ, ராணி", என்று அவள் அமர்வதை பார்த்து ஜோஸ் அவளைச் செல்லமாக ராணி என்று விளித்தான். பிறகு கவுண்ட்டரின் அடுத்த பகுதிக்குச் சென்று கீறல் விழுந்திருந்த பரப்பை ஒரு கந்தல்துணி கொண்டு துடைத்தான். உணவகத்திற்கு யார், எப்பொழுது வந்தாலும் இதையேதான் செய்கிறான் ஜோஸ். சிவந்த பருமனான முதலாளி ஜோஸ் இப்படி கடும் உழைப்பாளி போன்ற தினசரி நடிப்பை தினமும் ஏற்படுத்திக் கொள்வான், இப்போது இந்தப் பெண் வந்த போதும்கூட. இவளிடம் ஜோஸ் ஒரு விதமான நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தான். கவுண்ட்டரின் மறு மூலையிலிருந்து பேசினான்.

எட்வர்ட் பர்ரா

## காப்ரியல் கார்சியா மார்க்வெஸ்

ஆங்கிலத்திலிருந்து தமிழில்:
ரங்கநாயகி.

*The Woman Who Came at Six O'clock,*

Gabriel Garcia Marques

Collected Stories,
Tr.Gregory Rabassa &
J.S.Bernstein, Jonathan Cape,
London, 1991.

"இன்று உனக்கு என்ன வேண்டும்?"

"முதலில் ஒரு கனவானாக நடந்து கொள்வது எப்படி என்று உனக்கு கற்றுத்தர விரும்புகிறேன்"

என்று அந்தப் பெண் கூறினாள். ஸ்டூல்களின் ஓரமாக அமர்ந்து கொண்டிருந்தவள் உதடுகளுக்கிடையில் தீர்ந்துபோன சிகரெட். பற்ற வைக்கப்பட வேண்டிய சிகரெட்டின் மேல் ஜோஸின் பார்வை விழுமாறு கவுண்ட்டரின் மேல் முழங்கைகளை ஊன்றிக்கொண்டு இறுக்கமாய், அழுத்தமாய் பேசினாள்.

"நான் கவனிக்கவில்லை" என்றான் ஜோஸ்.

"இன்னும் நீ எதையும் கவனிக்க கற்றுக் கொள்ளவில்லை" என்றாள் அந்தப் பெண்.

துடைத்துக்கொண்டிருந்த துணியை கவுண்ட்டரின் மேல் விட்டுவிட்டு, மரத்தூசி, தார் வாசனையுடனான இருண்ட அலமாரிகள் இருக்குமிடத்திற்குச் சென்று, உடனே திரும்பி வந்தான் தீப்பெட்டியுடன். கிராமப்புறத்திய, ரோமங்களடர்ந்த முரட்டுக் கைகள் பற்றித் தந்த நெருப்பை பெற்றுக் கொள்ள சாய்ந்தாள். மட்டமான வேஸ்லின் தைலம் தடவிய, வழவழவென்றிருந்த அடர்த்தியான, செழுமையான அவளின் கூந்தலைப் பார்த்தான் ஜோஸ். பூவேலை செய்யப்பட்ட பிரேஸியரின் மேலாக, மறைக்கப்பட்டிராத அவளது தோளைப் பார்த்தான். மங்கலாய்த் தெரிய ஆரம்பித்த அவளது மார்பை அவன் பார்த்தபோது, அந்தப் பெண், உதடுகளுக்கிடையில் இருந்த பற்ற வைத்த சிகரெட்டின் கடைசித் துண்டோடு, தலையை உயர்த்திக் கொண்டாள்.

"நீ இன்றிரவு அழகாய் இருக்கிறாய், ராணி" என்றான் ஜோஸ்.

"உன் முட்டாள்த்தனமான பேச்சை நிறுத்து" என்றாள் அந்தப் பெண். "இது போன்ற உன் பேச்சு என்னிடமிருந்து உனக்கு எதையும் பெற்றுத் தந்திடாது"

"நான் அப்படி ஏதும் உணர்த்தவில்லை, ராணி" என்றான். "பந்தயம் கட்டுகிறேன், உன் மதிய உணவு உனக்கு ஏற்றதாயிருக்கவில்லை".

அடர்த்தியான முதல் புகையை உறிஞ்சி இழுத்துவிட்டு கவுண்ட்டரின் மேல் முழங்கைகளை வைத்துக் குறுக்காக கைகளை கட்டிக்கொண்டு உணவகத்தின் பரந்த ஜன்னல் வழியே தெருவை பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த பெண். சோகமான முக வெளிப்பாடு கொண்டிருந்தாள். சலிப்பான, இழிவானதொரு சோகம்.

"உனக்காக ஒரு நல்ல ஸ்டீக் சமைக்கிறேன்" என்றான் ஜோஸ்.

"இன்னும் பணம் ஏதும் கிடைத்தபாடில்லை எனக்கு" என்றாள் அந்தப் பெண்.

"மூன்று மாதகாலமாய் உனக்கு பணம் கிடைத்தபாடில்லைதான். இருப்பினும், நல்லதாக நான் ஏதாவதொன்று உனக்கு சாப்பிடுவதற்குத் தந்து கொண்டுதானிருக்கிறேன்" என்றான் ஜோஸ்.

"இன்று வேறு மாதிரி" என்று

சொன்னாள் அந்தப் பெண் துயரத்துடன், இன்னும் தெருவை நோக்கியபடி.

"எல்லா நாட்களும் ஒரே மாதிரிதான்", என்றான் ஜோஸ். "தினந்தோறும் கடிகாரம் ஆறுமணி காட்டும் போது நீ வருகிறாய். நாய்ப்பசியுடன் இருப்பதாகச் சொல்கிறாய். நானும் உனக்கு நல்லதாக ஏதாவது உண்பதற்குத் தருகிறேன். நாய்போல பசிக்கின்றது என்று நீ சொல்லாதது ஒன்றுதான் இன்றைய வேறுபாடு. இருந்தாலும் இந்த நாள் மாற்றத்துடன்தான் இருக்கிறது".

"உண்மைதான்" என்றாள் அந்தப் பெண். கவுண்ட்டரின் மற்றொரு முனையில் குளிர்சாதனப் பெட்டியை சரிபார்த்துக் கொண்டிருந்த அந்த மனிதனைப் பார்க்கத் திரும்பினாள். இரண்டு, மூன்று வினாடிகள் அவனை ஆராய்ந்து நோக்கினாள். பிறகு அலமாரிக்கு மேல் இருக்கும் கடிகாரத்தைப் பார்த்தாள். ஆறுமணியாகி மூன்று நிமிடங்கள் கழிந்திருந்தன. "அது உண்மைதான், ஜோஸ்". அவள் சொன்னாள். "இன்று வேறு மாதிரிதான் இருக்கிறது" என்றாள் அவள். புகையை வெளியேற்றிக் கொண்டு, உணர்ச்சியூட்டும் துருதுருப்பான வார்த்தைகளில் பேசிக் கொண்டே போனாள், "இன்று நான் ஆறுமணிக்கு வரவில்லை. அதனால்தான் இன்று என்பது வித்தியாசமான நாள், ஜோஸ்".

அந்த மனிதன் கடிகாரத்தைப் பார்த்தான். "இந்த கடிகாரம் ஒரு நிமிடம் தாமதம் என்றாலும் நான் என் கையை வெட்டிக்கொள்வேன்" என்றான் அவன்.

"அதில்லை, ஜோஸ். நான் ஆறுமணிக்கு இன்று வரவில்லை" என்றாள்

"சரியாக ஆறு அடித்தது, ராணி" ஜோஸ் சொன்னான்.

"நீ வந்தபோது ஆறுமணி அடித்துமுடிந்து கொண்டிருந்தது" என்றான் ஜோஸ்.

"என்னிடமிருக்கும் கால்மணிநேரம் நான் இங்கே இருந்திருக்கிறேன் என்று சொல்கிறதே" என்றாள் அந்தப்பெண். அவள் இருந்த இடத்திற்குச் சென்றான் ஜோஸ். புடைத்திருந்த அவனது பெரிய முகத்தை அந்தப் பெண்ணை நோக்கி உயர்த்தி, தன் சுட்டு விரலால் ஒரு கண் இமையை இழுத்து விட்டு, "இங்கே, என்மேல் ஊது" என்றான்.

அந்தப் பெண் தலையைப் பின்னே சாய்த்துக் கொண்டாள். அவள் தீவிரமாகவும், எரிச்சலுற்றும், மென்மையாகவும் இருந்தாள், துயரமும் சோர்வும் மிக்க மேகத்தினால் அழகாக்கப்பட்டு.

"உன் முட்டாள்த்தனத்தை நிறுத்து, ஜோஸ். உனக்குத் தெரியும் நான் ஆறுமாதங்களாக குடிப்பதில்லை என்று"

"வேறு எவனிடமாவது இதைச் சொல்" என்றான் அவன். "என்னிடம் வேண்டாம். பந்தயம் கட்டுகிறேன் குறைந்தபட்சம் ஒன்றோ, இரண்டோ ரவுண்டுகள்".

"ஒரு நண்பனுடன் கொஞ்சம் குடித்தேன்" என்றாள்

"ஓ! இப்போது எனக்குப் புரிகிறது" என்றான் ஜோஸ்.

"புரிந்துகொள்ள ஒன்றும் இல்லை இதில்" எனக் கூறிவிட்டு, "இங்கே கால்மணி நேரமாக இருந்து கொண்டிருக்கிறேன்" என்று முடித்தாள் அந்தப் பெண். அம்மனிதன் தன்தோள்களை அலட்சியமாய் . குலுக்கிக் கொண்டான்.

"இப்படித்தான் நீ விரும்புகிறாய் என்றால், நல்லது. உனக்கான கால்மணிநேரம் நீ இங்கே இருந்து கொண்டிருப்பதை கூறுவதாகக் கொள்ளலாம்" என்றான் அவன். "பத்து நிமிடங்கள் இப்படி அப்படி என்றால் என்ன பெரிய மாற்றம் ஏற்பட்டுவிடப் போகிறது?"

"அது மாற்றம் உண்டாக்கும், ஜோஸ்" என்றாள் அந்தப் பெண், ஏதோ கைவிடப்பட்ட உணர்ச்சி வேகத்தோடு தன் கைகளை அந்தக் கண்ணாடி கவுண்ட்டரின் மேல் நீட்டிக் கொண்டு அவள் கூறினாள். "மேலும், இதனை இப்படியாக நான் விரும்பியிருக்கவில்லை. நான் இங்கு கால்மணி நேரமாக இருந்து கொண்டிருப்பதைத்தான். . ." என்றவள் கடிகாரத்தை மறுபடியும் பார்த்துவிட்டு திருத்திக் கொண்டு கூறினாள், "நான் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறேன் என்றால்-- இருபது நிமிடங்களாகி விட்டிருக்கிறது இப்போது"

"சரி, ராணி." அந்த மனிதன் சொன்னான். "நீ மகிழ்ச்சியாக இருப்பதைக் காண ஒரு முழுப்பகலையும் அதோடு சேர்ந்துவரும் இரவையும் தருவேன் நான்" என்றான்.

இத்துணை நாழியும் ஜோஸ் கவுண்ட்டரின் பின்புறம் நகர்ந்து கொண்டு, பொருட்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மாற்றி வைத்துக் கொண்டுமிருந்தான். அவன் தன் பங்கினை செயலாற்றிக் கொண்டிருந்தான்.

"நீ மகிழ்ச்சியுடன் இருப்பதை காணவே நான் விரும்புகிறேன்" என்று மறுபடியும் கூறினான். திடீரென நிறுத்திவிட்டு, அந்தப் பெண் இருக்கும் இடம் நோக்கித் திரும்பி, "உனக்குத் தெரியுமா நான் உன்னை மிகவும் நேசிக்கிறேனென்று?" என்றான்.

உணர்ச்சியற்று அவனை நோக்கினாள் அந்தப் பெண். "ஆ. . . மா. . . ம்?. என்ன ஒரு கண்டுபிடிப்பு, ஜோஸ்". அவள் சொன்னாள். "மில்லியன் பெஸோ தந்தாலும் உன்னுடன் வருவேன் என்று நினைக்கிறாயா?"

"நான் அதைச் சொல்லவில்லை, ராணி" என்றான் ஜோஸ். "மறுபடியும் பந்தயம், உன் மதிய உணவு உனக்கு ஏற்றதாக இல்லை".

ஜோஸ் வெட்கினான். அவளை நோக்கி முதுகைத் திருப்பிக் கொண்டு ஷெல்புகளில் இருந்த குடுவைகளை தூசி தட்டத் தொடங்கினான். தலையை திருப்பாமல் பேசினான்,

அதனால்தான் என்று இப்படிச் சொல்லவில்லை", என்றான் ஜோஸ். என்றாள் அந்தப் பெண். சோம்பல் சற்று குறைந்திருந்ததாக ஒலித்தது அவள் குரல். "உன் போன்ற பருமன் என்றால் எந்தப் பெண்ணும் தாங்க மாட்டாள் ஒரு மில்லியன் பெஸோ கொடுத்தாலும் கூட".

"ராணி, இன்று பொறுத்துக் கொள்ள முடியாதவளாக இருக்கிறாய் நீ". "உனக்கான உணவை சாப்பிட்டுவிட்டு, வீட்டிற்குச் சென்று உறங்கி விடுவதே உனக்குச் சாலச்சிறந்தது இப்போது என்று நினைக்கிறேன்".

"எனக்குப் பசியில்லை" என்றாள் அந்தப் பெண். தெருவை பார்த்தவாறும், இருள் சூழ்ந்திருக்கும் நகரத்தின் அந்தத் தெருவை கடந்து செல்பவர்களை கவனித்துக் கொண்டுமிருந்தாள். சிறிது நேரம் அந்த உணவகத்தில் ஒரு உவப்பற்ற அமைதி நிலவியது. அலமாரி அருகில் ஜோஸ் ஏற்படுத்திய சின்னச்சின்ன நகர்த்துதல்கள் அந்த அமைதியை உடைத்தன. திடீரென்று தெரு நோக்கிய பார்வையுடன், மென்மையான ஆதுரமான, மாற்றமடைந்த குரலில் பேசினாள், "நீ என்னை மெய்யாகவே நேசிக்கிறாயா, பெப்பில்லோ?"

அவள் மீதான பார்வையை தவிர்த்து, வறட்சியுடன் கூறினான் ஜோஸ், "ஆமாம்".

சற்று நேரம் அமைதி நிலவியது. இன்னும் அந்தப் பெண்மேல் பார்வை செலுத்தாமல், இழுப்பறை பெட்டிகளை நோக்கித் திரும்பிய ஜோஸ் இங்கும் அங்குமாய் நகர்ந்து கொண்டிருந்தான்.

கவுண்ட்டரின் மேல் மார்பின் மேற்பகுதி முழுவதையும் சாய்த்துக் கொண்டு, வாய் நிறைய இன்னும் புகையை ஊதித் தள்ளினாள். பிறகு, போக்கிரித்தனத்துடன் நாக்கைக் கடித்துக் கொண்டு, கவனமாய், பதுங்கிப்பதுங்கி, இரகசியம் பேசுவது போல கேட்டாள், "என்னுடன் படுக்கைக்கு நீ வரமுடியாது என்றாலுமா?"

அப்போதுதான் ஜோஸ் அவளை நோக்கித் திரும்பினான்.

"நான் உன்னிடம் கூறியிருப்பதை தெரிந்து கொண்ட பிறகுமா?" என்று அந்தப் பெண் கேட்டாள்.

"நீ என்னிடம் என்ன கூறினாய்?" என்று கேட்ட ஜோஸின் குரல் வேதனையற்று ஒலிக்க, அவள் மீதான பார்வையை மேலும் அவன் தவிர்த்தான்.

"அதுதான். அந்த ஒரு மில்லியன் பெஸோ விவகாரம் பற்றி" என்றாள்.

"நான் எற்கனவே மறந்துவிட்டேன்" என்றான் ஜோஸ்

"ஆக, நீ என்னை நேசிக்கிறாய், அப்படித்தானே?" அந்தப் பெண் கேட்டாள்

"ஆமாம்", என்றான் ஜோஸ்.

"உன்னை நான் மிக அதிகமாய் நேசிப்பதாலேயே உன் படுக்கையை பகிர்ந்து கொள்ள மாட்டேன்" என்றான் அவன். பிறகு அவளிருந்த இடம் நோக்கி நடந்தான். அவள் முகத்தை உற்று நோக்கியவாறு நின்றான். திடகாத்திரமான அவன் கைகள் கவுண்ட்டரின் மேல் அவளுக்கு முன்புறாய் சாய்ந்திருக்க, அவள் கண்களுக்குள் உற்று நோக்கினான். "ஒவ்வொரு இரவும் உன்னுடன் செல்லும் ஒவ்வொரு ஆண்மகனையும் கொன்றுவிடுமளவிற்கு உன்னை மிகவும் நேசிக்கிறேன் நான்", என்று கூறினான் அவன். முதலில் சற்று

குழப்பமடைந்தது போல அந்தப் பெண் தோன்றினாள். பிறகு, ஏளனமா, இரக்கமா என்ற நிச்சயமற்ற ஒரு· முகபாவத்துடன் கவனமாக அவனைப் பார்த்தாள். ஒரு கணப்பொழுது குழப்பமான மௌனம் சாதித்தாள். அதன் பின்னர் மிகவும் சத்தமாய் சிரித்தாள்.

உனக்குப் பொறாமை, ஜோஸ். அது முரட்டுத்தனமானது. உனக்குப் பொறாமை!

ஜோஸ் மீண்டும் முகம் சிவந்து போனான். கபடமற்ற ஏறத்தாழ வெட்கம் கலந்த பயத்துடன் தனது ரகசியங்களை எல்லாம் திடீரென வெளிக்காட்டிவிட்ட ஒரு குழந்தைக்கு நடந்து விட்டதைப் போல.

"இந்த மதிய நேரம் உன்னால் எதையுமே புரிந்துகொள்ள முடியவில்லை போல் தோன்றுகிறது, ராணி" சுந்தல்துணி கொண்டு சுத்தம் செய்து கொண்டே கூறினான்.

"இந்த மோசமான வாழ்க்கை உன்னை கொடுமைப்படுத்துகிறது" என்றான்.

ஆனால், இப்போது அந்தப்பெண் தன் முகத் தோற்றத்தை மாற்றிக் கொண்டிருந்தாள்.

"ஆக, அப்புறம்" என்றவள் அவன் விழிகளுக்குள் விநோத ஒளி கொண்ட அதே சமயம் குழப்பமும், சவாலும் நிறைந்த தன் விழிகள் கொண்டு உற்று நோக்கினாள்.

"ஆக, உனக்குப் பொறாமையில்லை".

"ஒரு வகையில் எனக்குப் பொறாமைதான்". ஜோஸ் சொன்னான். "ஆனால் நீ நினைக்கும் வகையில் அல்ல" என்றான் ஜோஸ்.

காலரை தளர்த்திக் கொண்டு, துணியால் தன் உடம்பையும், தொண்டையையும் துடைத்துக் கொண்டான்.

"அதனால்?" என்று என்று கேட்டாள் அந்தப் பெண்.

"உண்மை என்னவெனில், உன்னை நான் அவ்வளவு நேசிப்பதால் உனது இந்த செயல்கள் எனக்கு பிடிக்கவில்லை" என்று கூறினான் ஜோஸ்.

"என்ன?" என்று வினவினாள்.

"ஒவ்வொரு நாளும் வேறு வேறு ஆணுடன் நீ செல்லும் இந்த செயல்தான்" என்றான் ஜோஸ்.

"என்னுடன் வர இருப்பவனை தடுக்க வேண்டி நீ அவனை நிஜமாய் கொன்றுவிடுவாயா?" என்று கேட்டாள் அந்தப் பெண்.

"உன்னுடன் செல்பவனைத் தடுத்து நிறுத்த அல்ல." ஜோஸ் கூறினான். "உன்னுடன் சென்றிருந்தவன் என்பதால் அவனைக் கொல்வேன்"

"இரண்டும் ஒன்றுதான்", அந்தப் பெண் சொன்னாள்.

அந்த உரையாடல் உணர்ச்சி பூர்வமான செறிவை சென்றடைந்திருந்தது. தாழ்ந்த, மெல்லிய, வலுவற்ற உணர்ச்சிமிக்க குரலில் அந்தப் பெண் பேசிக் கொண்டிருந்தாள். அவள் சொற்களின் மந்திரத்தில் கட்டுப்பட்டாற்போல அசைவற்று நின்றிருந்த அவனது அமைதியான முகத்துடன் ஏறக்குறைய பதிந்துவிட்டிருந்தது அவளது முகம்.

"அது நிஜம்" என்றான் ஜோஸ்

"அப்படியானால்" என்றவள், தன் கரம் நீட்டி அம்மனிதனின் முரட்டுக்கரத்தை வருடியபடி, மற்றொரு கரத்தால் சிகரெட்டின் கடைசித்துண்டை சுண்டி எறிந்தாள். "ஆக, உன்னால் ஒரு மனிதனைக் கொல்ல இயலும், இல்லையா?" என்றாள்.

"நான் கூறிய காரணத்திற்காக, இயலும்" என்றான் ஜோஸ். அவன் குரல் வேகமான அழுத்தத்துடன் ஒலித்தது. வெளிப்படையான, நையாண்டி செய்யும் நோக்கத்துடனான கலக்கும் சிரிப்பில் வெடித்தாள் அந்தப் பெண்.

"என்ன விந்தை, ஜோஸ். என்ன விந்தை" என்றவள் தொடர்ந்து சிரித்துக் கொண்டிருந்தாள். "ஜோஸ் ஒரு மனிதனைக் கொல்வதா? எனக்காக தினந்தோறும் ஸ்டீக் சமைத்து அதற்காக என்னிடம் பணம் வாங்கிக் கொள்ளாமல், நான் ஒரு ஆளைப் பிடிக்கும் வரை என்னுடன் தமாஷாக பேசிக்கொண்டிருக்கும், பருமனான, புனிதம் வாய்த்தவன் போலிருக்கும் இந்த மனிதனுக்குள் ஒரு கொலையாளி ஒளிந்திருப்பது யாருக்குத் தெரிந்திருக்கும்! என்ன விந்தை, ஜோஸ். நீ எனக்கு அச்சமூட்டுகிறாய்!"

ஜோஸ் குழப்பமடைந்தான். ஒருவேளை அவன் சிறிது கோபமடைந்திருக்கக் கூடும். அல்லது அந்தப் பெண்ணின் சிரிப்பில் வஞ்சிக்கப்பட்டது போல உணர்ந்திருக்கலாம்.

"நீ குடித்திருக்கிறாய், முட்டாளே" என்றவன் "போ. சற்று உறங்கு. உனக்கு ஏதும் உண்பதற்குக்கூட தோன்றவில்லை இன்று".

ஆனால், அந்தப் பெண் சிரிப்பதை நிறுத்திவிட்டிருந்தாள் இப்போது. மேலும், தீவிரமான, சிந்தனைவயப்பட்டவளாய், கவுண்ட்டரின் மேல் சாய்ந்துகொண்டாள். அந்த மனிதன் செல்வதை கவனித்தாள். குளிர் சாதனப் பெட்டியை திறந்து அவன் எதையும் வெளியே எடுக்காது மீண்டும் மூடுவதை பார்த்தாள். பளபளக்கும் கண்ணாடியை முன்பு போல அவன் துடைத்து சுத்தம் செய்வதை கவனித்தாள். பிறகு, மிக அன்பான மிருதுவான தொனியில் "நீ மெய்யாகவே என்னை நேசிக்கிறாயா, பெப்பில்லோ?" என்று கேட்டாள்.

"ஜோஸ்" என்றாள் அவள்.

அந்த மனிதன் அவளை பார்க்கவில்லை.

"ஜோஸ்!"

"வீட்டுக்குப் போ. உறங்கு", என்றான் ஜோஸ் "மேலும் படுப்பதற்கு முன் நீராடு, உறக்கத்தில் மீண்டுவிடு இதிலிருந்து"

"நிச்சயமாய், ஜோஸ், நான் குடிபோதையில் இல்லை" என்றாள் அந்தப் பெண்.

"அப்படியானால் முட்டாளாக மாறிவிட்டிருக்கிறாய்" என்றான் ஜோஸ்.

"இங்கே வா, உன்னிடம் நான் பேசவேண்டியிருக்கிறது" என்றாள் அந்தப் பெண்.

அந்த மனிதன், உவகைக்கும் அவநம்பிக்கைக்கும் இடையே தடுமாறியபடி வந்தான்.

"அருகில் வா".

அந்தப் பெண்ணின் முன்னால் வந்து நின்றான். முன்புறமாக சாய்ந்தவள் அவன் தலைமுடியை வெளிப்படையான ஆதுரத்துடன் பிடித்திழுத்தாள்.

"தொடக்கத்தில் என்ன கூறினாய் என்று மீண்டும் சொல்"

"நீ என்ன சொல்கிறாய்?" என்று கேட்டான் ஜோஸ். தலைமுடி இழுக்கப்பட்ட நிலையில் திரும்பியிருந்த தலை உயர்த்தி அவளைக்காண முற்பட்டான்.

"அதாவது, என்னுடன் படுக்கைக்கு சென்ற ஒருவனை நீ கொன்று விடுவாய் என்று கூறியதை" என்றாள் அந்தப் பெண்.

"உன்னுடன் படுக்கைக்குச் சென்ற ஒருவனை கொன்று விடுவேன், ராணி. அது உண்மை" என்றான்.

அந்தப் பெண் அவனைப் போக விட்டாள்.

"அப்படியாயின் நான் அவனைக் கொன்றால் நீ எனக்கு வக்காலத்து, சரிதானே?" என்று ஜோஸின் பன்றித்தலையை ஒருவித காட்டுமிராண்டித்தனத்துடன், தளுக்காகத் தள்ளிவிட்டு, திட்டவட்டமாக கேட்டாள். அந்த மனிதன் பதிலேதும் அளிக்கவில்லை. அவன் புன்னகைத்தான்.

"பதில் கூறு, ஜோஸ்". அந்தப் பெண் கேட்டாள். "நான் அவனைக் கொன்றிருந்தால் எனக்காகப் பரிந்து பேசுவாயா?"

"நீ சொல்வதைப் போல அது ஒன்றும் அத்தனை எளிதானதில்லை. அது சிலவற்றைப் பொறுத்துதான்" என்றான் ஜோஸ்.

"உன்னைத் விட வேறு எவரையும் போலீஸ்காரர்கள் நம்ப மாட்டார்கள்" என்றாள் அப்பெண். மதிப்பாகவும், திருப்தியாகவும் உணர்ந்தவன், புன்னகை செய்தான். கவுண்ட்டரின் மேல் அவனை நோக்கி கவிழ்ந்து கொண்டு கூறினாள்.

"இது நிஜம் ஜோஸ். உன் வாழ்க்கையில் நீ இதுவரை ஒரு பொய் கூட சொல்லவில்லை என்று நான் பந்தயம் கட்டத் தயாராக இருக்கிறேன்". அவள் சொன்னாள்.

"இதனால் உனக்கு எந்தப் பயனுமில்லை" என்றான் ஜோஸ்.

"ஒன்றும் வித்தியாசமில்லை. போலீஸ்காரர்களுக்கு உன்னைத் தெரியும். மேலும் நீ கூறினால் மறுவிசாரணையின்றி அவர்கள் எதையும் நம்பி விடுவார்கள்"

என்ன சொல்வதென்று தெரியாமல் அவளுக்கு நேரெதிராக கவுண்ட்டரின் மேல் ஓங்கி குத்தத் தொடங்கினான். அந்தப் பெண் மீண்டும் சாலையை நோக்கினாள். பிறகு கடிகாரத்தை நோக்கியவள், தன் குரலை மாற்றிக் கொண்டு, பிற வாடிக்கையாளர்கள் வருவதற்கு முன்பு இந்த உரையாடலை முடித்துக்கொள்ள விருப்பமுற்றவள் போல கேட்டாள். "ஜோஸ், எனக்காக மனமாற ஒரு பொய் சொல்வாயா?" அவள் கேட்டாள். "நிஜமாகவே".

தலைதெறிக்கும்படியான, வலிமையானதொரு சிந்தனை வயப்பட்டவன் போல, கூர்மையான, ஆழமான பார்வையுடன் ஜோஸ் அவளை

நோக்கினான். ஒரு செவி வழி நுழைந்த ஒரு சிந்தனை, ஒரு சில கணங்கள் சுழன்றுவிட்டு, தெளிவற்ற, குழப்பமுற்ற நிலையில் இறுக்கமான, சான்றடையாளமற்ற ஒரு அச்சத்தை மட்டும் விட்டுவிட்டு, மற்றொரு செவி வழியே சென்றுவிட்டது.

"ராணி, எதிலாவது சிக்கிக் கொண்டுவிட்டாயா நீ?" என்று கேட்டான் ஜோஸ். கைகளை கட்டிக் கொண்டு கவுண்ட்டரின் முன்புறம் சாய்ந்து கொண்டான் மறுபடியும். கவுண்ட்டரின் மேல் வயிற்றை அழுத்திக் கொண்டிருந்த நிலையில்; அவனது அமோனியா நெடியுடனான, திடமான மூச்சிக்காற்றை புலன் பற்றிக் கொண்டாள் அவள். கவுண்ட்டர் அவன் வயிற்றின் மேல் ஏற்படுத்திய அழுத்தம் அவனது சுவாசத்தை சிரமப்படுத்தியது.

"இது மெய்யாகவே விபரீதமானது, ராணி. எதில் சிக்கிக் கொண்டுள்ளாய் நீ?" என்று கேட்டான்.

எதிர்த்திசை நோக்கி தலையை சுழலவிட்டாள் அந்தப் பெண்.

"ஒன்றுமில்லை". என்றாள் அவள். "என்னை உற்சாகப்படுத்திக் கொள்ள வேண்டி எதேச்சையாக பேசிக் கொண்டிருந்தேன்" என்று கூறினாள்.

மறுபடியும் அவனை நோக்கினாள்.

"உனக்குத் தெரியுமா நீ எனக்காக எவரையும் கொல்ல வேண்டியிராது என்று?"

"எவரையும் கொல்ல வேண்டுமென்று நான் எப்பொழுதுமே எண்ணியதில்லை" என்று கவலையுடன் கூறினான் ஜோஸ்.

"இல்லை, ஐயா". அந்தப் பெண் சொன்னாள். "என்னுடன் படுக்கைக்கு எவரும் வருவதில்லை என்பது பற்றி நான் சொல்கிறேன்"

"ஓஹோ", ஜோஸ் சொன்னான். "இப்பொழுதுதான் நேரடியாகப் பேசுகிறாய். நான் எப்பொழுதுமே எண்ணுவதுண்டு உனக்கு இதுபோன்ற ராத்திரி அலைச்சல்கள் தேவையில்லை என்று. இதையெல்லாம் நீ விட்டுவிட்டாயானால், சத்தியமாய், மிகப் பெரிய ஸ்டீக் சமைத்து தினந்தோறும் உனக்கு இலவசமாகக் தருவேன்

"நன்றி, ஜோஸ்", என்றாள் அந்தப் பெண். "ஆனால், அது எதனாலென்றால் என்னால் இனிமேல் எவன் ஒருவனுடனும் படுக்கைக்குச் செல்ல இயலாது".

"நீ மீண்டும் எல்லாவற்றையும் குழப்புகிறாய்," பொறுமையிழந்து போனான் ஜோஸ்.

"நான் எதையும் குழப்பவில்லை" என்றாள். அவள் தன் இருக்கையில் நீட்டி முறித்துக்கொண்டாள். பிரேஸியருக்கடியில் அவளது தட்டையான, கவர்ச்சியற்ற துயரார்ந்த மார்பகங்களை கண்டான் ஜோஸ்.

"நாளை நான் போகிறேன். சத்தியமாய் நான் இனி உன்னை தொந்தரவு செய்ய வரமாட்டேன். இனி நான் எவருடனும் படுக்கைக்குச் செல்ல மாட்டேன்.

என்று சத்தியம் செய்கிறேன்."

"எங்கிருந்து இந்த அவசரக் கிளர்ச்சி உனக்கு வந்தது?" ஜோஸ் கேட்டான்.

"ஒரு நிமிடத்திற்கு முன்பாகத்தான் முடிவு செய்தேன்". அந்தப் பெண் சொன்னாள். "சற்று முன், ஒரு நிமிடத்திற்கு முன், இது ஒரு கறைபடிந்த தொழில் என்று உணர்ந்தேன்" அந்தப் பெண் கூறினாள்.

ஜோஸ் அந்தத் துணியை எடுத்து மறுபடியும் அவன் முன் இருந்த கண்ணாடியை துடைக்க ஆரம்பித்தான். அவளைப் பார்க்காமல் கூறினான்: "நிச்சயமாய், நீ செய்துவரும் விதம் காரணமாக கறைபடிந்த தொழில்தான். இதை எப்போதோ நீ உணர்ந்திருக்க வேண்டும்."

"வெகு நாட்களுக்கு முன்பாகவே நான் புரிந்து கொண்டுதானிருந்தேன்". அந்தப் பெண் சொன்னாள். "ஆனால் சற்று முன்னர் தான் நம்பிக்கையூட்டப்பட்டேன். ஆண்கள் எனக்கு அருவருப்பூட்டுகிறார்கள். வெறுப்பு ஏற்படுத்துகிறார்கள்". ஜோஸ் புன்னகைத்தான். தலையை உயர்த்தி, புன்னகைத்தபடியே அவளைப் பார்க்க முற்பட்டான். ஆனால், அவன் பார்த்தது ஒருமுனைப்படுத்தப்பட்ட, குழப்பமடைந்த முகத்தை, தோள்களை உயர்த்திப் பேசிக் கொண்டிருந்த, மௌன முகபாவத்துடன், பருவமுறாத இலையுதிர்கால தானிய மெருகு ஏற்றப்பட்ட முகத்தை. ஸ்டூல் மேல் உட்கார்ந்தபடி சுழன்று கொண்டிருந்த அவள் முகத்தை.

"ஒருவனுடன் கூடித்தனித்திருந்த பின்னர் அவனிடம் ஏற்படும் அருவருப்பு காரணமாக அல்லது அவனுடனிருந்த எல்லோர் மீதும் ஏற்பட்ட வெறுப்பு காரணமாக, ஒருவனை கொன்று விட்டாள் என்றால் அவளை அனைவரும் நீக்கி வைத்து விடுவார்கள் என்று நீ நினைக்கவில்லையா?"

"அந்தளவிற்குப் போக அவசியமில்லை" நூலிழையாய் இரக்கம் தொனிக்க கலங்கிப்போய் கூறினான் ஜோஸ்.

"பகல் முழுவதும் ஒருவனோடு உருண்டு புரண்ட ஞாபகம் எந்த சவுக்காரமும் அந்த ஆண் வாசனையை அவளிடமிருந்து துப்புரவு செய்து நீக்கிவிடாது என்று உணர்த்துவதை, தன்னை அருவருக்கவைத்த ஆணிடம் அவன் மீண்டும் உடையணியும் சமயம் கூறிவிடுவதில் என்ன தவறு இருக்கிறது?"

கவுண்ட்டரை சுத்தம் செய்தவண்ணம் சிரத்தையற்றுக் கூறினான் ஜோஸ், "அவை அப்படியே போகட்டும் ராணி. அவனைக் கொல்வதற்கு காரணம் எதுவும் இல்லை. விட்டுவிடு அவனை". ஆனால், அவள் பேசிக் கொண்டே போனாள். அவள் குரல் சீராக, தங்கு தடையின்றி, கட்டுக்கடங்காத உணர்ச்சி ஓட்டமாக ஒலித்தது.

ஆனால், அருவருக்கச்செய்கிறான் என்பதை அந்தப் பெண் அவனிடம் கூறிக் கொண்டிருக்கும் போதே,

உடையணிவதை நிறுத்திவிட்டு, மீண்டும் அவள் மேல் விழுந்து, முத்தமிட்டு இயங்கினான் என்றால். . .?"

"நாகரிகமான எந்த மனிதனும் அதுபோன்று எப்போதும் செய்ய மாட்டான்," என்றான் ஜோவ்.

"அப்படி அவன் செய்திருந்தால்?" என்று கேட்டாள் அவள் எரிச்சலூட்டும் தவிப்புடன். "நாகரிகமற்றவனாக ஒரு ஆண் அதுபோன்று நடந்து கொண்டால் தான் என்ன? இன்னும் அதிகபட்ச அருவருப்பு கொள்ளும் அந்தப் பெண் செத்துப் போய்விடலாம் என்றுதான் நினைப்பாள். மேலும், அதற்கெல்லாம் முடிவு கட்டுவதற்கான ஒரே வழி ஒரு கத்தியை அவனுள் சொருகி விடுதல்தான்".

"அது கொடூரம்", என்றான் ஜோவ். "அதிர்ஷ்டவசமாக, நீ சொன்னது போல செய்யக் கூடியவன் எவனுமில்லை".

"நல்லது", மிகுந்த எரிச்சலுடன், பொறுமையிழந்து போய் சொன்னாள். "அதுபோல ஒருவன் செய்திருந்தான் என்றால்?"

"ஒருவேளை அப்படி ஒருவன் நடந்து கொண்டான் என்றால்?"

"எப்படியாயினும் அது அத்துணை மோசமானதில்லையே" என்றான் ஜோவ். அவன் இருக்கும் நிலையை மாற்றிக் கொள்ளாமல், கவுண்ட்டரை சுத்தம் செய்து கொண்டே, உரையாடலில் சற்று சுவாரசியமில்லாதிருந்தான்.

முஷ்டியால் கவுண்ட்டரில் ஓங்கி அடித்தாள். அழுத்தம் கூடியவளாய், வலியுறுத்தும் பாவனையில் மாறியிருந்தாள் அவள்.

"நீ ஒரு காட்டுமிராண்டி ஜோவ்" அவள் சொன்னாள். "உனக்கு எதுவும் புரியாது". அவள் சட்டையை பிடித்து இழுத்தாள். "வா. இங்கே. சொல். அந்தப் பெண் அவனைக் கொன்று போடவேண்டும் என்று சொல் என்னிடம்", என்றவள் இணங்கிவிட்டது போன்ற பாவனையில், ஒருதலைப்பட்சமாக. "சரி" என்றான். "எல்லாம் நீ சொல்வதுபடியே அந்த விதத்திலேயே இருக்கக் கூடும்தான்."

"அது தற்காப்பு இல்லையோ" அவன் சட்டைக்கையைப் பற்றி இழுத்துக் கொண்டே கேட்டாள் அந்தப் பெண். ஜோவ், அத்தகைய அக்கறையில்லாத ஆனால் உவகையான பார்வை ஒன்றை அவள் மேல் வீசியபடி, கூறினான்.

"கிட்டத்தட்ட அப்படித்தான்". உள்ளன்புடன் புரிந்து கொண்டதாகவும், குற்றம்புரிய உடந்தையாயிருக்கும் அதே சமயம் அச்சமூட்டும் இணக்கம் போன்ற ஒரு முகபாவத்துடன் அவளைப் பார்த்து கண்சிமிட்டினான்.

"அது போன்ற செயல்புரிந்த ஒரு பெண்ணை நீ ஒரு பொய் சொல்லி காப்பாற்றுவாயா?" அவள் கேட்டாள்.

"அது ஒன்றைப் பொறுத்து", ஜோவ் கூறினான்.

"எந்த ஒன்றைப் பொறுத்து", அந்தப் பெண் கேட்டாள்.

"அந்தப் பெண்ணைப் பொறுத்து"

"ஒருவேளை அது நீ மிகவும் நேசிக்கும் பெண்ணாக இருக்கலாம்?" என்றாள் அவள். "அவளுடன் நீ இணைவதற்காகவல்ல. ஆனால் நீ சொல்வது போல, நீ மிகவும் நேசிக்கும் பெண்"

"நீ எது சொன்னாலும் சரிதான், ராணி", தளர்ந்து, சலித்துப் போய் கூறினான் ஜோன்.

அவன் மீண்டும் சென்றுவிட்டான். கடிகாரத்தை நோக்கினான். 6.30 மணி ஆகிவிட்டிருந்ததை பார்த்தான். இன்னும் ஒரு சில நிமிடங்களில் அந்த உணவகம் மனிதர்களால் நிறைந்துவிடும் என்று நினைத்தான். அதனால்தானோ என்னவோ, தன்னிச்சையாய் அந்தக் கண்ணாடியை சற்று கூடுதல் கவனத்துடன், மெல்லமெல்ல, தேய்த்துக் கொண்டிருந்தான்.

சற்றே அமர்ந்து கொண்டு அமைதியாய், கவனமாய் அப்பணியின் அசைவுகளை, நடமாட்டத்தை ஒரு ஆறுதலுடனும் துயரத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள் அந்தப் பெண். அவளையும் தருவாயில் உள்ள விளக்கு ஒரு மனிதனை பார்க்கக் கூடும் சாத்தியத்தில் அவனை கவனித்துக் கொண்டிருந்தாள்.

திடீரென, எண்ணெய் வழுவழுப்பு குரலில், சத்தச் செயல் அற்று, அடக்கத்துடன் பேசினாள்.

"ஜோன்"

அழுத்தமான, சோகம் மென்மை சேர்ந்து கொள்ள ஒரு எருதின் தாய்மை உணர்வோடு அவனைப் பார்த்தாள். அவள் பேசுவதை கேட்பதற்காக அவன் அவளைப் பார்க்கவில்லை. பார்க்க வேண்டும் என்பதற்காகவும், அவள் அங்குதானிருக்கிறாள் என்று உணர்ந்து கொள்வதற்கும், சற்றுடைய ஒரு பாதுகாப்பு பார்வைக்காக காத்திருக்கிறாள் என்பதற்காகவும் மட்டும். வெறும் விளையாட்டுப் பொருளின் பார்வையுடன்.

"நாளை நான் கிளம்புகிறேன் என்று கூறினேன். நீ எதுவும் சொல்லவில்லையே" என்றாள் அந்தப் பெண்.

"சரி. எந்த இடத்திற்கு என்று நீ கூறவில்லையே" என்றான் ஜோன்.

"அங்கேதான் எங்கோ. எங்கே ஆண்களுக்கு படுக்கையில் எதாவதொரு துணை தேவையிருக்கோ அந்த இடத்திற்கு" என்றாள். ஜோன் புன்னகைத்தான்.

"மெய்யாகவே நீ போகிறாயா?", விரைவாக எதோ திடீரென்று வாழ்வு பற்றிய ஞானோதயம் ஏற்பட்ட உணர்வுடன் தன் முகபாவத்தை மாற்றிக்கொண்டு கேட்டான்.

"அது உன்னைப் பொறுத்து" என்றாள். "சரியாக இங்கே நான் எப்போது வந்தேன் என்று கூற உனக்குத் தோதாகுமேயானால், நான் நாளை போய் விடுவேன். மறுபடியும் இந்த மாதிரி எதிலும் சிக்கிக் கொள்ள மாட்டேன். என்ன சொல்கிறாய் நீ?"

ஆமாம் என்பதான தலையசைப்போடு, எளிமையாய் ஸ்நேகமாய் புன்னகைத்தான்.

அவளிருந்த இடம் நோக்கி

அவள் சாய்ந்தாள்.

"என்றாவது ஒருநாள் நான் மறுபடியும் இங்கு வருவேன் என்றால், இதே ஸ்டூலில், இதே நேரத்தில் உன்னுடன் யாரேனும் ஒரு பெண் பேசிக்கொண்டிருப்பாள் எனின் அவள் மீது நான் பொறாமை கொள்வேன்"

"நீ மறுபடியும் இங்கு வருவதாயிருந்தால் எனக்காக ஒன்று கொண்டு வரவேண்டியிருக்கும்' என்றான் ஜோஸ்.

"எங்கேயிருந்தாயினும் அந்த சாதுவான கரடி ஒன்றை தேடி, அதை உன்னிடம் சத்தியமாய் கொண்டுவருவேன்" என்றாள் அந்தப் பெண். ஏதோ கண்ணுக்குப் புலப்படாத ஒரு கண்ணாடி பலகணியை சுத்தம் செய்வது போல, அந்தப் பெண்ணிடமிருந்து இவனை விலக்கியிருந்த காற்றினூடாக கைத்துணியை அசைத்து, ஆட்டி புன்னகைத்தான்.

பொழுது போக்கிற்காக காதல் புரியும் முகத் தோற்றத்துடன், இதமாய் அந்தப் பெண் புன்னகைத்தாள். பிறகு அந்த மனிதன் கவுண்ட்டரின் வேறு பகுதிக்குச் சென்றான். கண்ணாடியை துடைத்து மெருகேற்றிக்கொண்டே.

"பிறகு, என்ன?" என்றான் ஜோஸ் அவளைப் பார்க்காமல்.

"நான் இங்கு ஆறுமணி ஆவதற்கு கால்மணிநேரம் முன்னதாகவே வந்தேன் என்று உன்னிடம் கேட்போரிடம் நிஜமாய்க் கூறுவாயா?" என்று கேட்டாள் அந்தப் பெண்.

அவளை நோக்கி இன்னும் பார்வை திருப்பாமல், அவள் பேசியதை மாத்திரம் கேட்டவன் போல, "எதற்காக?" என்றான் ஜோஸ்.

"அது ஒன்றுமில்லை". அந்தப் பெண் சொன்னாள். "விஷயம் என்னவெனில் நான் கூறியது நீ போலவே செயல்பட வேண்டும்" என்றாள் அந்தப் பெண்.

தள்ளு கதவினூடே வந்த முதல் வாடிக்கையாளர் மூலையில் இருந்த மேஜையை நோக்கிச் சென்றதை ஜோஸ் கண்டான். கடிகாரத்தைப் பார்த்தான். துல்லியமாய் 6.30 மணி ஆகியிருந்தது. கவனம் சிதைந்து போய், "சரி, ராணி". "நீ கூறுவது எதுவாயினும், நீ விரும்பிய வண்ணமே நான் எப்போதும் செயல்படுவேன்'

"நல்லது. அப்படியானால் எனக்கான ஸ்டீக் சமைக்க ஆரம்பி" என்றாள் அந்தப் பெண்.

குளிர் சாதனப் பெட்டியிலிருந்து மாமிசத்துண்டு இருந்த ஒரு தட்டை எடுத்து மேஜைமேல் வைத்தான். பிறகு அடுப்பைப் பற்ற வைத்தான்.

"சிறந்த பிரிவுபசார ஸ்டீக் உனக்காக சமைக்கப் போகிறேன்" என்றான் அவன்.

"நன்றி, பெப்பில்லோ", என்றாள் அவள். ஈரமண்குழைவில், முன்பின் அறிந்திராத வடிவங்களாய் மனிதர்கள் நிறைந்த புதுமையான பாதாள உலகத்தினுள் அமிழ்ந்து போய் விட்டதுபோல் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள் அவள்.

இறைச்சித்துண்டு எரிந்து, உருகிய கொழுப்பின் மேல் விழும்போது எழுந்த ஒலியை

கவுண்ட்டரின் மறுபக்கத்தில் கேட்க இயலவில்லை அவளால். மேலும், வறுக்கும் சட்டியில் புரட்டிப்போட்ட விலாப்பக்கத் துண்டு எழுப்பிய சடசடவென்ற ஓசையையும் அவள் கேட்டாளில்லை. கணங்களை கணக்கிட்டபடி அந்த உணவகத்தின் காற்று மண்டலம் உவகை தரும் வாசனையால் முழுவதுமாய் நிறைத்தது. கணநேர இறப்பிலிருந்து மீண்டு வருபவளைப் போல, திருதிருவென விழித்துபடி, தன் தலையை உயர்த்திக் கொள்ளும் வரை. இப்படியே ஆழ்ந்த, மிக ஆழ்ந்த நிலையில் இருந்தாள். பிறகு, கொழுந்துவிட்டெறியும் நெருப்புடனான அடுப்பின் அருகில் அவனைக் கண்டாள்.

“பெப்பில்லோ”

“என்ன?”

“நீ எதைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறாய்?” அந்தப் பெண் கேட்டாள்.

“நீ சொன்ன அந்த யந்திர கரடி பொம்மையை எங்கேனும் உன்னால் கண்டு பிடிக்க முடியுமா என்று வியந்து கொண்டிருந்தேன்”, என்றான் ஜோஸ்.

“வாஸ்தவமாக என்னால் முடியும்” என்றாள்.

“உன்னிடமிருந்து எனக்கானது என்று நான் வேண்டுவதெல்லாம் ஒரு விடைபெறும் நேரத்துப் பரிசுதான்”.

அடுப்பிலிருந்து பார்வையை அவள் மீது மாற்றினான். “எத்துணை முறை நான் உனக்குச் சொல்வது?”. அவன் சொன்னான். “என்னிடமிருக்கும் மிகச் சிறந்த ஸ்டீக்கை விட வேறு ஏதேனும் உனக்கு வேண்டுமா?” என்றான் அவன்.

“ஆமாம்” என்றாள் அந்தப் பெண்.

“என்ன அது?” ஜோஸ் கேட்டான்.

“கூடுதலாய் ஒரு கால்மணி நேரம் எனக்கு வேண்டும்”.

ஜோஸ் பின்னோக்கி நகர்ந்து கடிகாரத்தைப் பார்த்தான். பின்பு அந்த மூலையில் அமைதியாக காத்துக் கொண்டிருந்த வாடிக்கையாளரைப் பார்த்தான் இறுதியாக வறுபட்டுக் கொண்டிருந்த இறைச்சித் துண்டத்தை.

பிறகுதான் பேசினான் அவன்.

“எனக்குப் புரியவில்லை, ராணி, மெய்யாகவே”.

“முட்டாளாயிராதே, ஜோஸ்” என்றாள் அந்தப் பெண். “அப்படியே ஞாபகம் வைத்துக் கொள். நான் 5.30 மணியிலிருந்து இங்கே தான் இருந்து கொண்டிருக்கிறேன் என்பதை”. ●



# எமிலி டிக்கின்ஸன் கவிதைகள்

தமிழில்

லதா ராமகிருஷ்ணன்

ஒரு கவிஞர் நமக்குப் பரிச்சயமானவராக இருந்து அவருடைய கவிதைகளைப் படிப்பதற்கும், ஒரு கவிஞரின் வாழ்க்கை விவரங்கள் நமக்குத் தெரிந்து அவருடைய கவிதைகளைப் படிப்பதற்கும் ஒரு கவிஞரைப் பற்றி எதுவுமே தெரியாத நிலையில் அவருடைய கவிதைகளை நாம் படிப்பதற்கும் இடையே 'வாசிப்பனுபவத்தில்' கட்டாயம் வித்தியாசம் உண்டு. சில சமயங்களில் கவிஞன் நமக்குப் பரிச்சயமான மனிதன் என்ற அளவில், அவனுடைய மனோபாவங்களை, ஆசாபாசங்களையெல்லாம் அறிந்து கொண்ட நிலையில் அவன் கவிதைக்குள்ளிருந்து கேட்கும் குரலும், அதன் தொனியும், அது முன்வைக்கும் கருத்துக்களும் நமக்குப் 'பாவனை'யாகப் பிடிபட்டு எரிச்சலூட்டுவதும் நிகழும். சில சமயங்களில் ஒரு மனிதனாக அவனுடைய ஆளுமையில் ஆகர்ஷிக்கப் பட்டிருக்கும் நிலையில் அவனுடைய கவிதைகள் அந்த ஆளுமையை சரிவர உணர்த்தவில்லை என்பதாகவும் தோன்றும். அதே போல் தான் அதிகத் தகவல்கள் ஒரு கவிஞனைப் பற்றித் தெரியக் கிடைக்கும் வேளை அவற்றை அவன் கவிதையனி ஒவ்வொரு வரியிலும் தேடும் ஆர்வத்திலேயே வாசக மனம் அதிகம் மூழ்கி விடவும் கூடும். அப்படியின்றி, ஒரு கவிஞனைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகள் அதிகம் கிடைக்காத நிலையில் அவனுடைய கவிதைகளின் வழி புலப்படும் கவிஞன், அல்லது பிடிபடுவதாகத் தோன்றும் கவிஞன் நம் மனதுக்கு அதிகம் நெருக்கமான வனாகிறான் என்று தோன்றுகிறது.

எமிலி டிக்கின்ஸனின் ஏறத்தாழ முப்பது கவிதைகளை புது எழுத்துக்காய் மொழிபெயர்த்த போது அந்தக் கவிதைகளினூடாய் மட்டுமாய் காணக் கிடைத்த கவிமனம் பிரமிப்பூட்டுவதாய், மிகப் பிடித்தமானதாய் இருந்தது. ஒரு வித கூடு விட்டுக் கூடு பாயும் உணர்வை அவர் கவிதைகள் நமக்கு அளிக்கின்றன. அவர் தனிமைவிரும்பியாய் இருந்தார் எனவும், ஒரு வித ஏகாந்த வாழ்க்கையை விரும்பித் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தார் எனவும் தெரியவருகிறது. 1830, டிசம்பர் 10ம் தேதி மஸாசுஸெட்ஸிலுள்ள ஆம்ஹெர்ஸ்டில் பிறந்த எமிலி ஏறத்தாழ தனது ஐம்பத்தியாறு வருட வாழ்க்கையை அதிக வெளியுலகம் பரிச்சயம் இல்லாமலேயே கழித்தவர். அவருடைய தந்தை எட்வர்ட் டிக்கின்ஸன் ஒரு வழக்கறிஞர், தவிர ஆம்ஹர்ஸ்ட் கல்லூரியின் பொருளாளராகவும் இருந்தார். அத்த்

காலத்தில் சமூக ரீதியான, மற்றும் அறிவு சார்ந்த வாழ்க்கைக்கு இருந்திருக்கக் கூடிய வழிவகைகள் எமிலிக்கு கிடைத்தது. ஆனால் அவருடைய விருப்பத்தேர்வு என்பது ஏகாந்தமானதொரு வாழ்வு என்பதாகவே இருந்தது. 1853ம் வருடம், அவருக்கு 23 வயதாயிருக்கும் போது எழுதிய கடிதமொன்றில் 'நான் வீட்டிலிருந்து வெளியே செல்வதேயில்லை' என்று குறிப்பிட்டிருக்கிறார். Selected poems of Emily Dickinson என்ற தொகுப்பு நூலுக்கு முன்னுரை வழங்கியுள்ள புகழ்பெற்ற படைப்பாளி Conrad Aiken, எமிலியின் உறவினறொருவரிடமிருந்து பெறப்பட்ட விவரங்களிலிருந்து அவருக்கு உடல் ஊனமெதுவும் இல்லையென்று தெரிய வருவதாகவும், தவிர, அவருடைய சிறுமிப்பிராயம் உற்சாகமும், கலகலப்பும் நிறைந்ததாகவே இருந்ததும் தெரிய வருவதாகவும் குறிப்பிடுகிறார். மேலும், கன்னிப்பருவத்தில் எமிலிக்கு சில காதல் வயப்பட்ட அனுபவங்கள் இருந்திருக்கிற தென்றும் ஆனால் அவற்றின் காரணமாகத்தான் அவரிடம் அவருடைய கவிதைகளில் காணப்படும் துல்லியமான உளவியல் சார் துயர்களும், துயரர்களும் ஏற்பட்டதென்று சொல்வதற்கு எந்த ஆதாரமும் இல்லையென்றும் குறிப்பிடுகிறார்.

1862ல் நான்கு கவிதைகள் எமிலியிடமிருந்து தாமஸ் வெண்ட்வர்த் உரிக்கின்ஸனுக்கு வந்தது. அவர் அந்தக் காலகட்டத்தில் சிறந்த அறிஞராகவும், விமர்சகராகவும் அறியப்பட்டவர். அவருடைய அபிப்பிராயம் வேண்டி அந்தக் கவிதைகள் அனுப்பப்பட்டிருந்தன. பண்டைய பாணி கவிதை் வடிவத்தில் மட்டுமே பரிச்சயமும், நம்பிக்கையும் கொண்டிருந்த டிக்கின்ஸன் அந்தக் கவிதைகளின் மரபு வழுவிய சுயமான, சரளமான நடை காரணமாக அவற்றை நிராகரித்தார் என்றாலும் அந்தப் பெண்மணியிடம் தொடர்ந்து கடிதத் தொடர்பு கொண்டிருந்தார். இரண்டு முறை அவரை சந்திக்கவும் செய்திருக்கிறார். எமிலி இறந்த பிறகு அவருடைய நூற்றுக்கணக்கான கவிதைகள் அடங்கிய பெட்டியை அவருடைய சகோதரி ஏதேச்சையாக காண நேர்ந்து அவற்றை Mobel Loomis Todd என்ற உள்ளூர் பேராசிரியரொருவரின் மனைவியிடம் அவற்றை எடுத்துச் சென்றார். பர்க்க் , உறிக்கின்ஸனின் உதவியை நாட அவர், கவிதைகளின் எதுகை, மோனை முதலியவற்றை சீரமைத்து, வரிசைகளை தேவையான இடத்தில் மாற்றி போட்டு, வட்டார வழக்கிலிருந்தவற்றை திருத்தியெழுதி, பின் எமிலி கவிதைகளின் முதல் தொகுதி 1890ல் பிரசுரமானது. பெருத்த வரவேற்பை பெற்றது. அதன் காரணமாய் இரண்டாம் தொகுதியும், மூன்றாம் தொகுதியும் வெளியாகின. அவருடைய கவிதைகள் 'Collected Poems of Emily Dickinson' என்ற முழுத் தொகுப்பாகவும் வெளியாகியுள்ளன.

எமிலியின் கவிதைகள் வாழ்க்கை, காதல், இயற்கை மற்றும் காலமும், அகாலமும் என்ற நான்கு தலைப்புகளின் கீழ் வகை பிரிக்கப்பட்டுள்ளன. அவர், தன் காலத்தைய அரசியல் தளத்திலும், இலக்கிய தளத்திலுமான முக்கிய நிகழ்வுகளைத் தன் கவிதைகளிலோ, கடிதங்களிலோ பதிவு செய்யவேயில்லை என்று Cannad Aiken குறிப்பிடுகிறார். ஆனால் எமிலி என்றைக்குமான விஷயங்களையே தனது கவிதைக்களமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தார் என்றும் வேறுவிதமாகச் சொல்லலாம் என்று தோன்றுகிறது. எதுகை,மோனையும் மீ அவருடைய கவிதைகளில் தெரியும், படிம, குறியீடு முதலானவற்றிற்காக தனித்துவம் வாய்ந்த வெளிப்பாடுகளைப் பார்க்கையில் உறிக்கின்ஸினால் சீரமைக்கப்படாத அவருடைய மூல கவிதைப் பிரதிகளைப் படிக்க வேண்டும் என்ற

ஆர்வம் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. எமிலியின் கவிதைகளில் நல்லெண்மை கருதிச் செய்யப்பட்ட திருத்தங்களைப் பற்றி கூறும்போது கீழ்க்கண்டவாறு எழுதுகிறார். எமிலியின் கவிதைகளில் William Blake கவிதையின் பிரத்யேக குணாம்சங்கள் காணக் கிடைக்கின்றன. கச்சிதமான விவரிப்புத் திறனும், கற்பனா சக்தியும் கொண்டிருக்கின்றன. கவிதைகள் அதே சமயம் மண்ணிலும், நடைமுறை வாழ்க்கையிலும் அழுத்தமாகக் காலூன்றியிருக்கின்றன. வெறும் சில மேலோட்டமான மாற்றங்கள் மட்டுமே இக்கவிதைகளில் செய்யப்பட்டிருக்கின்றன. தலைப்புகள், பதிப்பாசிரியர்களால் தரப்பட்டிருக்கின்றன என்பதைக் குறிப்பிட வேண்டும். ஒரு சி·ந்தனையோட்டம் மூச்சையடைப்பதாய் வியாபிக்கும் போது இலக்கணம் பற்றிய பாடம் அடாவடித்தனமாகிறது என்பது இவர் கவிதையின் வழி புலப்படும் விஷயம்".

எமிலியின் காலகட்டத்தைய அதீத தனிமனிதத்துவ ஈர்ப்பும், கவனமும் எமிலியின் கவிதைகளிலும் பிரதிபலிக்கின்றன என்று கூறும் Conrad Aiken சமயங்களில் இந்தத் தனி மனிதத்துவக் கண்ணோட்டம் ஒரு தீவிரபற்றாகவே கவியிடத்தில் இருந்து வந்திருக்கிறது எனவும், அவ்வகையில், 'ஒதுங்கி வாழ்தல்' என்பது கூட ஒரு வகை கவனங்கோரலாகவே இருந்திருக்கக் கூடும் எனவும் குறிப்பிடுகிறார். தவிர, எமிலியின் கவிதைகளில் சம்பிரதாயக் கடவுள் பற்றிய எள்ளலும், மறுப்பும் தெரியக் கிடைக்கிறது. இது கூட, அவருடைய கவிதைகளின் பிரசுரத்திற்கு இடையூறு செய்திருக்கக் கூடும் என்கிறார் அய்க்கன்.

எமிலியின் கவிதைகளில் வாழ்க்கை பற்றிய ஒரு விவேகியின் அணுகுமுறையும், அதே சமயம் நகமும், சதையும், உடல், பொருள், ஆவியுமாய் வலியுணரும் தன்மையும் இரண்டறக் கலந்து காணப்படுகின்றன. இதனாலேயே அவருடைய கவிதைகள் போதனைகளாவதிலிருந்து தப்பித்து, கவிதைக்கசுறிய கவிதைகளாகத் திகழ்கின்றன என்று தோன்றுகிறது.

தான் வாழ்ந்த காலத்தில் எமிலி தனது கவிதைகளைப் பிரசுரிக்க ஆர்வம் காட்டவில்லையென்றாலும் அவருடைய வெகு சில நட்பினருக்கு அவ்வப்பொழுது கவிதைகள் அனுப்பித் தந்திருக்கிறார். ஹெலன் ஜாக்ஸன் என்ற அவருடைய தோழி எழுதிய கடிதமொன்றில், 'நான் உன்னைத் தாண்டி உயிர் வாழும்பட்சத்தில் நீ என்னை உன்னுடைய இலக்கிய வாரிசாக நியமிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அத்தனை அகல்விரிவானவை, ஆழமானவை உன்னுடைய கவிதைகள் முன்வைக்கும் விஷயங்கள்: வையர்கள். அவற்றிற்கு நீ வெளிச்சம் தர மாட்டாய் என்பது உன்னுடைய தலலமுறைக்கு நீ செய்யும் கடுந்தவறு! என்கிறார் ஹெலன்.

எமிலியின் உரைநடை கூட பெரும்பாலான பகுதி தாளலயத்துடன் இருந்ததாகக் கருதுவோரும் உண்டு. 1860 சமயத்தில் தான் அவர் எழுத ஆரம்பித்திருக்கிறார். தவிர, அவர் எழுதிய கவிதைகளில் பல நட்பினருக்கு எழுதிய கடிதங்களிலும் இடம்பெற்றிருக்கின்றன. அவருடைய கடிதங்களின் தொகுப்பும் பிரசுரமாகியுள்ளது. Collected Poems of Emily Dickinson -ல் காணக்கிடைக்கும் எமிலியின் 'கையெழுத்து' அவருடைய கவிதையை சரியாக வாசித்து அச்சாக்கம் செய்வதிலுள்ள சிரமத்தைப் புலப்படுத்துகிறது.

முன்பு எஸ்.வி. ராஜதுரையும், வ. கீதாவும் அன்னா அக்மதோவா கவிதைகளைத் தமிழில் அறிமுகப்படுத்திய போது அந்தக் கவிஞர் மேல் ஆர்வம் ஏற்பட்டு ஆங்கிலத்தில் அவருடைய கவிதைத்

தொகுதிகளைப் படித்ததில் அவை மனதிற்குள் பெரிதும் தாக்கமேற்படுத்தின. அவர் கவித்துவத்தின் பிரம்மாண்டத்தைப் புலப்படுத்த முப்பம், ஐம்பது கவிதைகளின் மொழிபெயர்ப்பு எப்படிப் போதும் என்பதாய் மனதிற்குள் ஒரு ஆதர்சம் ஏற்பட்டது. இன்று எமிலியின் கவிதைகள் ஏறத்தாழ முட் பத்தி மூன்றை நான் செய்து முடித்த போதும் அதே விதமான ஆற்றாமையே எனக்குள் ஏற்பட்டது. ஐந்நூறு கவிதைகளை வெறும் முப்பது கவிதைகளின் மொழிபெயர்ப்பு எவ்விதம் அடையாளம் காட்ட முடியும்? அதுவும் நிறைய நேரங்களில் கவிதையின் மொழிபெயர்ப்பு என்பது வெறும் இன்னொரு வாசிப்போன் பிரதியாகவே புரிபடுகிறது. அது எழுதுவோன் பிரதியை எத்தனை தூரம் சரியாக பிரதிபலிக்கிறது என்று உறுதியாகச் சொல்ல இயலவில்லை. தவிர. இரு மொழி சார் பிரச்சினைகள். சொற்பிரயோகங்களின் பிரயோகப் பயன்பாடுகள். வட்டார வழக்குகள் தொடர்பாய் எழும் சிக்கல்கள். மொழிபெயர்க்க தரப்பட்ட, அல்லது, கிடைத்த கால அளவை பொறுத்து ஏற்படும் குறைபாடுகள் என நிறைய இடைவெளி, எமிலி டிக்கின்ஸனுக்கும், அவருடைய மொழிபெயர்ப்பாளர்களுக்கும் இடையே இருப்பது தவிர்க்க முடியாதது என்றே தோன்றுகிறது. ஒரே கவிதையின் ஒன்றுக்கு மேற்பட்ட மொழி பெயர்ப்புகள் வருவது கூட அந்தக் கவிதை மீது அதிக வெளிச்சம் தரக்கூடும் என்று தோன்றுகிறது. எமிலியின் கவிதைகளை மொழிபெயர்ப்பதில் எந்த அளவுக்குத் திறமையாக அல்லது திறமைக் குறைவோடு செயல் பட்டிருக்கிறேன் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், தான் தோன்றித்தனமாக மொழிபெயர்க்கத் தலைப்படவில்லை - என்று சொல்லிக் கொள்ளத் தோன்றுகிறது.

1. **Collected Poems of Emily Dickinson Original editions edited by Mabel Lookis todd and T.W. Higginson.**

2. **Selected Poems of Emily Dickinson with an introduction by Conradaiken** - ஆகிய இரண்டு நூல்களிலிருந்து பெறப்பட்டவை.

# கவிதைகள்

இது என்னுடைய லிகிதம்
எனக்கு என்றுமே எழுதாத உலகிற்கு
எளிய தகவல்கள், மென்மையான
கம்பீரத்தோடு
இயற்கை யுரைத்தவை.

அவளுடைய செய்தி நான் காணவியலாத
கரங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது
அவளிடமான அன்பின பொருட்டு,
என்னினிய நாட்டினரே
என்னை இதமாக மதிப்பிடுங்கள்.

•

எனக்கு வெறுப்பதற்குப்
பொழுதிருக்கவில்லை
எனெனில்
கல்லறை தடுத்திருக்கும் என்னை.
என்னால் பகைமையை பூரணமாய்
நிறைவேற்று மளவு
வாழ்க்கை அத்தனை அபரிதமாகவும்
இல்லை.

நேசிப்பதற்கும் எனக்கு
நேரமிருக்கவில்லை, எனில்
ஏதாகிலும் உழைப்பு இருந்தாக
வேண்டும் என்பதால்
அன்பு செய்வதான சின்ன வேலை
எனக்குப் போதுமான அளவு பெரிதாக
இருந்ததாய் எண்ணினேன்.

•

உன்னை யிழத்தல், எனக்குத் தெரிந்த
இன்னுமெல்லா இதயங்களை யடைவதை விடவும்
இனிமையானது, அறிந்திருந்தேன்
உண்மை தான். வறட்சியென்பது அநாதரவானது
எனில் நான் பனித்துளியைக் கைக்கொண்டிருந்தேன்

●

★காஸ்பியன் கொண்டிருக்கிறது மணற் பகுதிகளையும்
அதன் மறுபிரதேசக் கடலையும்
கரம்பான அந்தக் கூடுதல் வரவில்லாமல்
எந்தவொரு காஸ்பியனும் இருக்க வியலாது.

★ஃகாஸ்பியன் - காஸ்பியன் கடல் ஆசியாவுக்கும், தென்கிழக்கு ஐரோப்பாவுக்கும் இடையே, ஈராக் நாட்டின் வடக்காய், உள் நாட்டிலுள்ள ஒரு உப்புக்கடலாகும்.

## பாடும் பறவை

மறைதலின் தடம்
சுழலுமொரு சக்காத்தோடு;
மரகத எதிரொலி
கருஞ்சிவப்பின் பாய்ச்சல்
புதர் மீதுள்ள ஒவ்வொரு பூவும்
தனது சரிந்த தலையை சரிசெய்து கொள்கிறது-
ட்யூனிஸ் துறைமுகத்திலிருந்து வந்த தபாலாக இருக்கலாம்
ஒரு கவலையற்ற காலையின் சவாரி.

●

ஒரு சிறிய சாலை மனிதனால் அமைக்கப்படாதது
இருவிழியால் சாத்தியமானது
ஏற முடிந்தது தேனீயின் ஏர்க்காலுக்கு
அல்லது பட்டுப்பூச்சியின் கைவண்டிக்கு

அது பட்டணம் கொண்டிருப்பின், தனக்கப்பால்
அதைத் தான் என்னால் சொல்ல வியலவில்லை
வெறுமே பெருமூச்செறிகிறேன் - எந்த வாகனமும்
அந்த வழியாய் என்னை சுமந்து செல்வதில்லை.

●

தேனின் வம்சாவளி யொரு
பொருட்டில்லை தேனீக்கு
ஒரு பூஞ்செடி யெந்நேரமும்
உயர் குலம் அதற்கு.

●

சித்திரங்கள் நித்தமுமான முகங்களுக்கு
மின்னொளி மென்பட்டாடை யிலான
அற்புத, பெருமிதக் கதிரொளிக்கு
அந்திமேற்கு போலும்.

●

குறிப்பு : 'பெட்ங் ஸன்ம்ம்ன்யஞ் ஆண்ழ்க்' என்பது ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ள தலைப்பு. உஷ்ணமண்டலப் பிரதேசத்தைச் சேர்ந்த வெகு சிறு பறவைக்கு அந்தப் பெயர் வழங்கப்படுகிறது. பளீரென ஒளிரும் வர்ணங்களோடு, பூக்களிலிருந்து மகரந்தம் உறிஞ்ச உகந்த வண்ணம் நீண்ட, மெல்லிய அலகும், படபடவென்று ஒருவித இசையொலியோடு அடித்துக் கொள்ளும் குறுகிய அலகுகளும் கொண்டு காணப்படுகிறது இந்தப் பறவை.

## விடைபெறல்

என்னுடைய வாழ்க்கை
இருமுறை மூடிக் கொண்டது
அதன் முடிவுக்கு முன்பு;
இனிமேல் தான் தெரியும்
அழிவின்மை என் மீது ஒரு
மூன்றாம் நிகழ்வைத் திரை விலக்குமா
என்று;
கற்பனைக் கெட்டாத அளவு
அதியகன்றது, அறவே நம்பிக்கையற்றது -
இருமுறை உற்ற இவற்றைப் போல
விடைபெறலொன்றே வானுலகைப் பற்றி நாமறிவது
பாதாளவுலகைப் பற்றி நாமறியப் போதுமானது.

•



ஏஞ்சல் பொட்டலேலா

## மெய்யான வளங்கள்

முத்துக்கள் எனக்கொரு பொருட்டே யில்லை
கத்தும் கடல் விரிவை உரிமை கொண்டிருப்பதால்
அன்றி ஆபரணங்களும், அந்தச் சக்கரவர்த்தி
கெம்புக் கற்களை என் மீது சொரிந்திருக்க
அல்லது பொன்னும், சுரங்கங்களின் இளவலாக இருக்கையில்
அல்லது வைரங்களும், ஒரு மணி மண்டபத்தில்
பொருந்துவதான மகுடம்
தொடர்ந்த ரீதியில் எனக்குக் கிரீடமாகிற போது.

•

நாம் காதலைத் தாண்டி வளர்ந்து விடுகிறோம்
மற்ற விஷயங்களைப் போலவே
பின் அதை இழுப்பறைக்குள் போட்டு வைக்கிறோம்
மூதாதையர்கள் அணிந்து கொண்ட ஆடையலங்காரங்களைப்
போல்
ஒரு புராதன மோஸ்தராகக் காணும் வரை.

•

நான் யாருமில்லை! நீ யார்?
நீயும் யாருமில்லை தானா?
அப்படியெனில் நாம் ஒரு ஜோடி யிருக்கிறோம் - அட!
அவர்கள் நம்மை நாடுகடத்தி விடுவார்கள் தெரியுமில்லையா!

அவரிவராக இருப்பது எத்தனை அயர்வூட்டும் விஷயம்
எத்தனை அம்பலமானது, ஒரு தவளை போல்
உன்னுடைய பெயரை நாள் முழுக்க
நயந்திருக்கும் சகதியிடம் சொல்லிக் கொண்டிருப்பது.

●

என்னால் மட்டும் ஒரு இதயத்தை உடையாமல்
நிறுத்த முடிந்தால்
என் வாழ்க்கை விரயமாகி விடாது.

என்னால் மட்டும் ஒரு வாழ்க்கையின்
வேதனையைக் குறைக்க முடிந்தால்
அல்லது ஒரு வலியை
குளிர்ந்து போகச் செய்ய முடிந்தால்
அன்றி, மயங்கி விழவிருக்கும் ஒரு 'ராபின்' பறவை
மறுபடி அதன் கூடடைய உதவ முடிந்தால்
என் வாழ்க்கை விரயமாகி விடாது.

●

மிகுதியான மனநோய் மேலதிக ஞானம்
பகுத்துணரும் பார்வைக்கு
முழு நிறைவான சித்தம் முற்றிய பித்தம்
மற்றெல்லாம் போல் இதிலும்,
பெரும்பான்மையே பிரதானம்
ஆமோதித்தால் நீ புத்திசுவாதீனமுள்ளவன்
தாமதித்தாலோ உடனே அபாயகரமானவன்
சங்கிலியால் கையாளப்படுவாய்.

●

## வெற்றி

வெற்றியென்பது அதிகபட்ச இனிப்பாகக்
கொள்ளப்படுகிறது
வெற்றி பெறாதவர்களால்
வானமுதொன்றை விண்டிடத் தேவை
ஆன மட்டும் துவர்ப்பான தேவை.

இன்று கொடியேந்திய எல்லா
ஊதாப் பெருந்திரளாலும்
தரலாகாது தெளிவாய்
வெற்றியின் விளக்கத்தை -
தடை செய்யப்பட்ட காதில்
தொலைவிலான வெற்றி முழக்கங்கள்
வலி கூடித் துல்லியமாக

## சொப்பனங்கள்

அந்த அப்பழுக்கற்ற சொப்பனத்தை நான்
மாசுபடுத்தாமல் இருப்பேனாக -
ஒரு விண்ணொளிக் கறையால்
மாறாக, அது மறுபடி வாய் பொருந்தும் விதமாய்
என் தினசரி இரவுகளை
சரிக்கட்டிக் கொள்வேனாக.

●

## வாழ்க்கையின் வர்த்தகங்கள்

விசும்பியழுதல் ஒரு வெகு சிறிய விஷயம்
பெருமூச்செறிதல் அத்தனை சுருக்கமானது
இருந்தும் இந்த அளவிலான பரிவர்த்தனைகளில் வழி தான்
நாம் ஆண்களும் பெண்களும் இறந்துபடுகிறோம்.

இது மட்டுமே இன்று நான் கொண்டு வர வேண்டியது
இதுவும், அருகில் என் இதயமும்
இதுவும் என்னுடைய இதயமும் மற்றும் எல்லா வயல்வெளிகளும்
இன்னும் விரிந்தகன்ற புல்வெளி யனைத்தும்
கணக்கெடுக்கத் தவறி விடாதே. ஒருக்கால் நான் மறந்து போனால் -
யாரேனும் சரியாக எண்ணிக்கை யுரைக்கக் கூடும்
இதுவும் என்னுடைய இதயமும் மற்றும் மலர்ச்செடியும்
உறையும் தேனீக்கள் எல்லாமும்.

●

வெடித்ததிர
தோற்கடிக்கப்பட்டு இறந்து
கொண்டிருப்பவனைப் போல்.

●

களிப்பு சித்திர வடிவம் பூணுகிறது
வலியினூடே காண -
அதிகப் பொலிவாய், ஏனெனில்
எந்த ஆகாயத்தையும் விட அசாத்தியமானதாய்

மலை ஒரு குறிப்பிட்ட தொலைவில்
மஞ்சள் பழுப்பில் தெரிகிறது.
அண்மையேகிட, அம்மஞ்சள் சற்றே இடம் பெயர
அதுவே ஆகாயங்களாக விரிகிறது!

●

## தத்துவம்

கண்ணில் தெரியும் மண்ணோடு தோல்வியுறல்
எளிதாகக் கூடும்
கோலாகலக் களிப்பில் அழிந்து பட
என் நீலநீபகற்பத்தைக் கைக் கொள்வதை விடவும்.

●

## ஒரு புத்தகம்

அந்தப் பொக்கிஷ வார்த்தைகளை அவன் அள்ளி யுண்டான்
அவனுடைய ஆன்மா ஆரோக்கியமாகியது
அவன் ஏழையென்பதை அதன் பின் அவன் அறிய மாட்டான்
அவனுடைய உருவம் புழுதி யென்பதையும்
அழுக்கடைந்த நாட்களினூடாய் அவன் நடனமாடிச் சென்றான்
சிறகுகளின் இந்த சாசனம்
ஒரு புத்தகம் மாத்திரமே
இறுக்கம் பிரிந்த அந்தராத்மா தான்
எத்தனை விடுதலையை அருள் புரிகிறது!

•

## வலியின் மர்மம்

வலி ஒரு வெற்றிட ஆக்கக்கூறைப்
பெற்றிருக்கிறது
அதனால் ஞாபகப்படுத்திக் கொள்ள வியலாது
எப்பொழுது அது ஆரம்பமானது என்பதை
அல்லது
எப்பொரு நாளேனும் அது இல்லாமலிருந்ததா
என்பதையும்

அதற்கு வருங்காலமென்று எதுவுமில்லை
தன்னைத் தவிர
அதனுடைய எல்லையற்ற சாம்ராஜ்யங்கள்
உள்ளடக்கியிருக்கின்றன

பரிசோதனை என்பது எனக்கு
நான் நேர்கொள்ளும் எல்லோரும்
அதனுள் விதையிருக்குமோ?
ஒரு கொட்டையின் வடிவம்
மரத்தின் மீது தன்னை
சம அளவு மெய்யாக
வெளிப்படுத்தி நிற்கிறது
எனில் உள்ளேயான இறைச்சியே அவசியம்
அணில்களுக்கும் எனக்கும்.

•

## நிரூபணம்

நான் எப்பொழுதுமே நேசித்து வந்தேன் என்பதற்கு
நிரூபணம் கொண்டு வந்திருக்கிறேன் உனக்கு:
நான் நேசித்திருந்த வரை
நிறைவான அளவு நேசிக்கவில்லை யெனவும்

நான் எப்பொழுதுமே நேசித்திருப்பதற்கும்
சமர்ப்பிக்கின்றேன் உனக்கு
நேசமே வாழ்வென்பதற்கும்
வாழ்வின் அழியாமைக்கும்

இதை நீ சந்தேகிக்கிறாயா அன்பே
என்றால் என்னிடம் ஏதுமில்லை
காண்பிப்பதற்கு

வலியின் புதுப்பருவங்களைக் கண்டுணரும்
விழிப்படைந்த
அதன் கடந்த காலத்தை.

•

ஞாபகம்

ஞாபகத்திற்கு ஒரு பின்னபக்கமும், முன்பக்கமும் உண்டு
அது ஏறத்தாழ ஒரு இல்லம் போன்றது
அதற்கொரு மேல்மாடி யறையும் உண்டு
குப்பை கூளங்களுக்கும் எலிக்குமாக
தவிர, எந்தக் கொத்தனாரும் வடிவமைக்காத
அடியாழத்திலான நிலவறையும் உண்டு
அதன் மேல் கவனமாயிரு. அதன் ஆழங்களின் அருகில்
நம்மை நாம் தொடராதிருப்போமாக.

•

பருவங்களை வழிநடத்தும்
எளிய நாட்களைப் போற்றிப் பரவ
நினைவுகூர்ந்தால் போதும் இதை:
உம்மிடமிருந்தோ எம்மிடமிருந்தோ
அவை எடுத்து விடக் கூடும்
அநித்தியம் எனப்படுவதை.

இருப்பிற்கொரு அற்புதத் தோற்றத்தைத் தர
நினைவு கூர்ந்தால் போதும் இதை.
அங்குள்ள பழக்கொட்டை
உயர்வெளிக்கான
ஆரம்பம் என்பதை.

•

'கல்வாரி' யைத் தவிர.

கல்வாரி : ஜெருஸலத்தில் ஏசு சிலுவையிலறையப்பட்ட இடம்.
அளப்பறிய வலி, வேதனைக்கும் இச்சொல் குறியீடாகிறது.

•

நான் மூச்சு விட்டேன்

அந்த செப்பிடுவித்தையைக் கற்கப் போதுமான அளவு
நான் சுவாசித்தேன்
இப்பொழுது, காற்றிலிருந்து விலக்கப்பட்ட நிலையில்,
மூச்சிழுத்தலை மிகச் சிறந்த முறையில்
பாவனை செய்கிறேன்,
அந்த ஒரு மூச்சு, நுரையீரல்கள் சலனமற்றிருக்கின்றன
என்பது உறுதியாகத் தெரிய
தந்திரம் வாய்ந்த உயிரணுக்களிடையே கட்டாயம்
இறங்கி
அந்த அபிநயத்தைத் தொட வேண்டும் தம் கைகளாலேயே
அந்த கர்ஜனைகள் தான் எத்தனை குளிர்ந்திருக்கின்றன!

•

## பேசாத ராஜா ஒருவர் என்னிடம் உண்டு

பேசாத ராஜா ஒருவர் என்னிடம் உண்டு
எனவே, வியந்தபடி சாதுவான மணித்துளிகளுடாய்
நான் சிரமத்தோடு நடந்து கடத்துகிறேன் நாளை
இரவு வந்ததில் பாதி மகிழ்ச்சியாகி நித்திரை கொள்கிறேன்
ஒருவேளை, அதிர்ஷ்டவசமாக, ஒரு கனவின் வழியாய்
பகலில் மூடப்பட்ட வரவேற்பறைக்குள் எட்டிப் பார்க்கிறேன்

அப்படி நான் செய்யும் பட்சத்தில், காலை வரும் போது
ஏதோ ஆயிரம் மத்தளங்கள்
என் தலையணையைச் சுற்றி உருள்வது போல் இருக்கிறது.
என் குழந்தைத்தனமான ஆகாயத்தைக் கூச்சல்கள் நிரப்புவது
போல் இருக்கிறது
என் ஆன்மாவிலுள்ள கோபுரத்திலிருந்து
மணிகள் 'வெற்றி' என்று ஒலித்தவாறிருப்பது போல் இருக்கிறது.

அப்படிச் செய்யாது போனால்
பழத்தோட்டத்திற்குள்ளான அந்தச் சிறுபறவையைக் கேட்க
முடிவதில்லை.
நான் பிரார்த்தனை செய்யாது விடுகிறேன் இன்று
'எந்தையே உன் விருப்பம் நடத்தி வைக்கப்படும்' என்று
ஏனெனில் என்னுடைய விருப்பம் எதிர்வழியில் செல்கிறது
என்பதால் அது பொய் சத்தியமாகியிருக்கும்.

●

மாறாத் தேனுக்கான ஆறாக் காதலில்,
ஹா! அந்த அபூர்வ ரகத்தைத் தயாரிக்கும் தேனீ
பறப்பதில்லை.

●

ஏஞ்சல் பொட்டல்லோ

## சர்ப்பமொன்று

சதுப்புநிலம் இனிமையானது தனது இரகசியங்களோடு
சர்ப்பமொன்றை நாம் சந்திக்கும் வரை;
அப்பொழுது தான் நாம் வீடுகளுக்காய் பெருமூச்செறிகிறோம்
குழந்தைப்பிராயம் மட்டுமே அறியும்
அந்த வசீகரப் பாய்ச்சலில்
நம்முடைய புறப்பாடு நிகழ்கிறது
ஒரு சர்ப்பம் கோடையின் சதி
வஞ்சகம் அது போகுமிடமெல்லாம்.

●

## நட்பினர்

நண்பர்கள் களியா, வலியா?
மிகுதி யெப்பொழுதும் உடனிருக்கு மெனில்
வளங்கள் நலமானவை.

ஆனால் அவை பறந்தோடி விடும் துணிவு பெருக
அருகிருந்து வருமெனில்
வளங்கள் அவலமானவை.

●

மிகவும் அண்மையிலுள்ள கனவு பின்வாங்குகிறது,
பூர்த்தியாகாமலே
நாம் துரத்தும் சொர்க்கம்
பள்ளிச் சிறுவன் முன்பான
ஜூன் மாத தேனீயாய்
பந்தயத்திற்கு அழைப்பு விடுக்கிறது
ஒரு சின்ன 'க்ளோவர்' பூவுக்காய் தழைகிறது
மூழ்குகிறது - மறைகிறது - பரிகசிக்கிறது - அணிவகுக்கிறது
பின் அந்த ராஜ மேகங்களுக்காய்
உயர்கிறது அதன் சன்னப் பாய்மரம்
வேடிக்கை செய்யும் வானத்தை அயர்ந்து போய்
வெறித்துக் கொண்டிருக்கும் சிறுவனை
சட்டை செய்யாமல்.

நாம் மாவுக்கலவையோடு விளையாடுகிறோம்
முத்துக்குத் தகுதியாகும் வரை
பின், அந்தக் கூழைக் கீழே எறிந்து
நம்மை ஒரு முட்டாளாகக் கருதுகிறோம்.
ஆனால், அந்த வடிவங்கள், ஒத்தமாதிரியே இருந்தன
நம்முடைய புத்தம் புதுக் கைகள்
பயின்றன ரத்தின - உத்திகளை
மணல்களைப் பழகி.

●

## தாகத்தால் கற்பிக்கப்படுகிறது தண்ணீர்

தாகத்தால் கற்பிக்கப்படுகிறது தண்ணீர்;
தரை, கடந்து சென்ற சாகரங்களினால்
பரவசம், பெரும் வேதனையால்
அமைதி, அதற்கான, சொல்லப்பட்ட, போர்களினால்;
நேயம், நினைவுச்சின்ன வார்ப்பினால்
பறவைகள், வெண்பனியினால்.

●

ரதம்

மாணத்திற்காய் என்னால் நிற்க முடியவில்லை யென்பதால்,
அவன் கருணை கூர்ந்து எனக்காக நிறுத்தினான்;
வண்டி கொண்டிருந்தது வெறும் எங்களை மட்டும்
மற்றம் அமரத்துவத்தையும்

நாங்கள் மெதுவாக ஓட்டினோம்; அவனுக்கு எந்த அவசரமும் - இருக்கவில்லை.

நானும் தள்ளிப் போட்டிருந்தேன்
என்னுடைய வேலையையும், ஓய்வையும் கூட,
அவனுடைய விநயத்திற்காய்.

நாங்கள் கடந்து சென்றோம் பாடங்களை முடிக்காத
பிள்ளைகள் விளையாடிய பள்ளிக் கூடத்தை;
நாங்கள் கூர்ந்து பார்த்திருக்கும் தானிய வயல்களைக் கடந்தோம்.
அஸ்தமான சூரியனைக் கடந்தோம்.

தரையின் வீக்கமெனத் தோன்றிய
ஒரு வீட்டின் முன்பு சற்றே நின்றோம்;
அதன் மேற்கூரை காணவேயில்லை,
தலைப்பக்க முகப்பு வெறும் ஒரு மேடாய்.

அது முதல் பல நூற்றாண்டுகளாகி விட்டன; ஆனால் அவை
ஒவ்வொன்றும் அளவில் சுருங்கியதாய் உணரப் பெறுகின்றன
குதிரைகளின் தலைகள் நிரந்தரத்தை நோக்கி என்று நான்
முதலில் ஊகித்த அந்த நாளை விடவும்.

•

நம்முடைய வாழ்வுகள் 'ஸ்விங்' தனமானவை
மிக இறுகி, மிகக் குளிர்ந்து
வழக்கத்திற்கு மாறான மதியமொன்றில்
ஆல்ஃப் மலைகள் தங்கள் திரைகளைப் புறக்கணிக்க
நாம் அப்பால் பார்க்கும் வரை.

இத்தாலி நிற்கிறது அந்தப் பக்கம்
இடையிலான ஒரு பாதுகாவலனாய்
கம்பீரமான ஆல்ஃப் மலைகள்
கிறுகிறுக்க வைக்கும் ஆல்ஃப் மலைகள்
எப்பொழுதும் குறுக்கிட்டவா றிருக்க.

•

ஸ்பிக்நியூ ஹெர்பர்ட்

# சரியான அர்த்தத்தில் ஒரு கவிஞன்

## மாரெக் ஆரமஸ் உடன் ஒரு உரையாடல்

ஆங்கில மொழியாக்கம் மைக்கேல் மார்ச்.

தமிழில் அசதா

ஆரமஸ் : போலந்தில் உங்களது இருப்பு உணரப்படவில்லை என்பதை அறிவீர்களா? நான் பொது நூலகம் ஒன்றுக்கு சென்று பார்த்தேன். உங்களது நூல்கள் ஒன்றுகூட அங்கு இல்லை. அவற்றைக் கடைகளில் பார்த்தும் நாளாகிறது. உங்களது நாடகங்களும் மேடையேற்றப் படுவதில்லை. அதிகமும் வெளி நாடுகளில்தான் உங்கள் புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன. உங்களது சொந்த நாட்டைவிட அங்கு நீங்கள் நன்கறியப்பட்டவர். அமெரிக்காவில் Mr. Cogito என்ற பெயரில் மன்றங்கள் இருப்பதாகக் கூட அறிகிறேன்.

ஹெர்பர்ட் : Mr. Cogito என்ற பெயரில் அமெரிக்காவில் இருந்து ஒரு பருவ இதழ் வெளிவருகிறது. அந்தப் பெயரில் மன்றங்கள் ஏதும் இருப்பதாக நான் கேள்விப்படவில்லை. என்னை நீங்கள் 'ப்ளேபாய்' உடன் சேர்த்து குழப்பிக் கொண்டிருக்க வேண்டும். போலந்தில் என்னுடைய இருப்பு உணரப்பட வில்லை என்பதை நான் அறிவேன். அதற்கு நான் ஒன்றும் செய்ய முடியாது. வெளியீட்டார்களையோ கலாச்சார சித்தாந்தங்களை உருவாக்கு பவர்களையோ நான் கெஞ்சுவதில்லை. நாங்கள் செய்வது என்னவென்று அவர்களுக்குத் தெரியும் அல்லது குறைந்தபட்டசம் அதை அவர்கள் தெரிந்து கொள்ளவாவது வேண்டும்.

ஆரமஸ் : ஒருதடவை உங்கள் படைப்புக்கள் பிரசுரத்திற்கு மறுக்கப்பட்டதுமே நீங்கள் மேசை இழுப்பறைக்கென எழுதியிருக்க முடியும் இல்லையா? ஆனால் நீங்கள் வெளிநாட்டிற்கு சென்றீர்கள்.

ஹெர்பர்ட் : ... ஒரு கோழையைப் போல, அப்படித்தானே?

ஆரமஸ் : இழுப்பறைக்கென எழுதுவதனால் நீங்கள் சலிப்புற்று விட்டீர்களா?

ஹெர்பர்ட் : இழுப்பறைக்கென எழுதுவது தொல்லையான விஷயம். அதுபற்றி நாம் இப்போது பேச வேண்டாமே. எந்தச் சூழ்நிலையிலும் ஒருவரை பாதிக்கப்பட்டவர் என்ற அடையாளத்துள் ஒதுக்கிவிடக் கூடாது என்பது என் கருத்து. ஒருபோதும் கூடாது. பகிரங்கக் கடிதங்களிலும், இலக்கியத்தோடு சிறிதும் தொடர்பில்லாத வழக்குகளின் முறையீடுகளிலும் கையொப்ப மிட்டதற்காக சில நேரங்களில் அதிகாரிகள் என்னை வசை கூறியுள்ளனர். இவை சமூகப் பிரச்சினைகள். நீதியற்ற செயல்கள். செயல்படவேண்டுமென முடிவெடுத்து விடும்போது அதன் விளைவுகளையும் சந்தித்தே ஆக வேண்டியுள்ளது. இங்கே ஒரு கலாச்சார ஏகாதிபத்தியம் இருக்கிறது. அதனோடு நான் உடன்பட்டதில்லை. எனவே அவர்கள் என்னைப் பிரசுரிக்கவில்லை. ஆனால் மேற்கில் என்னை பிரசுரித்தார்கள்.

நான் என்னையோ, எடுத்ததற்கெல்லாம் குற்றம் காணும் அதிகாரிகளையோ குறைகூறவில்லை. அரசியலது மொழியும், இலக்கியத்தினது மொழியும் வேறானவை. மனித சிந்தனைப் போக்குகளும் அவ்வாறே. அரசியல்வாதிகள் 'நீண்டகால இலட்சியங்களிலும்', சுயலாப விளையாட்டுகளிலும் கொள்ளையரது போன்ற தந்திரங்களிலுமே கவனம் கொண்டுள்ளனர். மானுட வாழ்வில் என்னை ஈர்ப்பது எது. எனக்கு நன்மையைத் தரும் ஒன்று அரசியல்வாதிகளுக்குத் தீமையளிப்பதாக உள்ளது. அவர்களுக்கு உகந்த ஒன்று எனக்குச் சற்றும் ஒவ்வாததாக உள்ளது. இரண்டு பானிகள் உள்ளன. நிபந்தனையின் பேரிலான ஒன்றையே நான் முயற்சித்திருக்கிறேன். நான் தயங்குகிறேன். மனசாட்சியை வினவுகிறேன்... கட்டளைகள், ஆச்சரியக் குறிகள், கறுப்பு - வெள்ளை பாகுபாடுகள் எனக்குப் பிடிப்பதில்லை. உண்மையிலேயே எனக்குப் பிடிப்பதில்லை.

ஆரமஸ் : உங்கள் கவிதைகளில் அதிகமும் நீங்கள் வரலாற்றையும், தொன்மத்தையும் கையாளுகிறீர்கள். ஆனால் நீங்கள் செய்வது உருமாற்றமும், மறுவாசிப்புமும்தான். நீங்கள் வரலாற்றையும், தொன்மைத்தையும் பின்பற்றியே தொடர்ந்து எழுதுகிறீர்கள். நீங்கள் யதார்த்தத்தில் அதிருப்தியுற்றதாலேயே வரலாற்றை வெறுக்கிறீர்கள் என்பது என் எண்ணம்.

ஹெர்பர்ட் : இது ஒரு நல்ல கேள்வி. உங்களுக்குத் தெரியும் என் வாழ்நாள் முழுவதும் - எனக்கு இப்போது அறுபது வயது - ஒரே இடத்தில்தான் இருந்திருக்கிறேன். ஆனால் என் குடியுரிமை நான்குமுறை மாறியிருக்கிறது. முதலில் நான் இரண்டாவது காமன்வெல்த்தான, போருக்கு முந்தைய போலந்தின் குடிமகன். பிறகு எல்வாவ் மேற்கு உக்ரைனுடன் இணைக்கப்பட்டது. நான் சோவியத் குடியரசில் பிறந்தவன் என்று இப்பொழுதும் என் பாஸ்போர்டில் ஒரு குறிப்பு உண்டு. பிறகு ஜெர்மன் தளபதி அவில் நான் ஒரு கென்கார்தே குடிமகன். கடைசியாக நான் மக்கள் போலந்தில் வசிக்க வந்தேன். நான் நான்கு வேறுபட்ட அரசு முறைகளினூடாக வாழ்ந்திருக்கிறேன். குறிப்பிட்ட இந்த மாறுதல்களே வரலாறு குறித்தான என் பார்வைக்கு அடிப்படை - அது அடுத்தவரது உணர்வுகளையும் அனுபவங்களையும் புரிந்து கொள்ளும் திறமை, பல்வேறு காலகட்டங்களில் வாழ்ந்த மனிதரைப் புரிந்து கொள்ளும் திறன் (...)

ஆரமஸ் : உங்களது கவிதைகளில் நீங்கள் பிறந்த எல்வாவைப் பற்றி எழுதுகிறீர்கள். நீங்கள் அதனோடு மிகவும் நெருக்கமான உறவு கொண்டிருக்க வேண்டும். அந்தப்

பழைய இடத்தை மறுபடி நீங்கள் பார்க்க விரும்புவீர்களா?

ஹெர்பர்ட் : இல்லை. நான் நேசித்தவைகள் இப்போது அங்கு இல்லை. அதோடு நம் நினைவுகளை நிரந்தரப்படுத்தும் சக்தி என்று ஒன்று இருக்கிறது. நான் வசித்த வீடு என் நினைவில் உள்ளதைப் போன்ற அழகுடன் இப்போது இருக்காது அதைப் பற்றிய ஏக்கம் அதிகரிக்காமல் இருக்கும் பொருட்டு அந்த நகரத்துடனான என் சிந்தனையை நான் கைவிட்டுவிட்டேன். இதைப் போன்ற ஏக்கங்கள் ஏற்கனவே மிகுதியும் உண்டு.

எல்லா இலக்கியவாதிகளுக்கும் அறிஞர்களுக்குமான ஒரு மையமாக இருந்தது. மூன்று வயதாக இருந்தபோது அப்பா 'ஒடிஸி' யை வாசித்துக் காட்டுவார். அப்போது 'Polis' என்ற வார்த்தையை அகராதியில் தேட வேண்டிய அவசியம் இருக்கவில்லை. அது வெளிப்படையாகவே இருந்தது. அதில் நான் வளர்ந்து கொண்டிருந்தேன்.

ஆரமஸ் : நீங்கள் தொகுத்த சமகாலக் கவிதைத் தொகுப்பு ஒன்றிலும் உங்களது கவித் தொகுப்பு ஒன்றிலும் உங்கள் புகைப்படம் அட்டையில் இடம் பெற்றுள்ளது. இரண்டு தொகுப்புகளின் வெளியீட்டுக்கு இடையே குறிப்பிடத் தகுந்த கால இடைவெளி உள்ளது. இருந்தும் இரண்டும் ஒரே புகைப்படமாகவே இருக்கின்றன. பக்கவாட்டுத் தோற்றத்தில் கிரேக்க அல்லது ரோமானிய சிற்பத்தை நினைவூட்டும் புகைப்படம் அது. அது வேண்டுமென்றே அவ்வாறு அமைக்கப்பட்டதா?

ஹெர்பர்ட் : நான் முழுப்படத்தையும் காட்டினால் நீங்கள் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள். அரசு கொள்முதல் நிலையம் ஒன்றுக்கு நான் சாக்குப் பைகளை கொண்டு சென்றபோது எடுக்கப்பட்ட புகைப்படம் அது. என் கால்கள் அருகே கோழிகள் மேய்ந்து கொண்டிருக்க ஒரு குட்டிச் சுவரின் கீழ் நான் சோர்ந்து அமர்ந்திருந்தபோது எடுக்கப்பட்டது அது. அதில் ரோமானிய சங்கதி எதுவுமில்லை. உண்மையில் அப்படியேதும் அதில் தோன்றுகிறதா?

ஆரமஸ் : உங்களது ஏக்க உணர்வுகள் பன்மடங்காகிக் கொண்டிருக்கின்றன. நிச்சயமாக ஒன்றுக்கு மேற்பட்ட ஏக்கங்கள் உங்களுக்கு உண்டு.

ஹெர்பர்ட் : நான் கிரீஸை நினைத்து ஏங்குகிறேன் - இத்தாலியையும் கூட. இங்கிலாந்தை நான் மிகவும் விரும்புகிறேன். அமெரிக்காவை - ஐரோப்பியரிடமிருந்து முற்றிலும் வேறுபட்ட அவர்களது வாழ்க்கை முறைக்காக விரும்புகிறேன். 1939ல் இருந்து தொடர்ந்து நான் இடம்பெயர்ந்த படியே இருக்கிறேன். சொல்லப் போனால் எனக்கு வியன்னாவினூடாக நடப்பது போன்ற கனவுகளும் வருவதுண்டு.

ஆரமஸ் : அவை வெறும் புவியியல் இடங்களாக மட்டுமே உங்களால் அறியப்படுவது சாத்தியமில்லையென எண்ணுகிறேன்.

ஹெர்பர்ட் : உண்மை. முதலில் நான் இழந்தது மனிதர்களை. முன்னை விட இப்போது என்னால் நெருங்கிப் பார்க்க முடிகிறது. நான் இப்போது காகிதங்களையும், கையெழுத்துப் பிரதிகளையும் வகைப் பிரித்துக் கொண்டிருக்கிறேன். என் தாயார் சமீபத்தில் தான் காலமானார்கள். இது அவருடைய அறை. இதை நான் சீரமைத்து அவர்களை நினைவூட்டும் ஞாபகப் பொருட்களை ஒழுங்குபடுத்த வேண்டியிருக்கிறது.

என்னால் ஏனோ அதைச் செய்ய இயலவில்லை. கடிதங்கள், மருந்துச் சீட்டுகள், ஈ.ஸி.ஜி படங்கள் இவற்றை

ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கிறேன். மீதமிருப்பவைகளிலிருந்து எனக்கான ஒன்றை நான் உருவாக்கிக் கொள்ள முயன்று கொண்டிருக்கிறேன். ஒருநோக்கு, கொஞ்சம் ஞானம், அறிவுரை. பேராசிரியர் எல்ஸன் பெர்கிடமிருந்து வந்த ஒரு கடிதத்தை நான் பார்க்க நேர்ந்தது. அவர் என் ஆசிரியராக இருந்தவர். அடைசலான எழுத்தில் இரண்டு பக்கங்களுக்கு எழுதியிருந்தார். என் 'Barbarian' தொகுப்பில் சில தவறுகளைச் சுட்டியிருந்தார். நான் அவருக்குக் கடுமையான பதிலொன்றை அனுப்பியதாக நினைவு.

ஆரமஸ் : விமர்சனங்கள் உங்களை பாதிக்கின்றனவா?

ஹெர்பர்ட் : இல்லை. என்மீது எனக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை உண்டு. எப்போதும் எழுதியாக வேண்டுமென்கிற கட்டாயத்துக்காகவோ அல்லது பணத்துக்காகவோ நான் எழுதியதில்லை. எனது ஆகச் சிறந்த படைப்பை தந்து விட்டபின், அது 'சாட்யூப்ரியன்ட்' ஐவிட மோசமானதாக இருப்பினும் கூட அது ஒரு விஷயமில்லை. என்னுடைய வாசகரது கருத்தே முக்கியம். ஒருமுறை 'தைகோத்னிக் பாவ்ஸெச்னி'யில் (போலந்தின் முன்னணி கத்தோலிக்க வார இதழ்) என் கவிதை ஒன்று பிரசுரமானது. கடவுளுக்கெதிரான என் எல்லா வருத்தங்களையும் அதில் பட்டியலிட்டிருந்தேன். ஒரு மதவிசுவாசியை அது பாதித்திருந்தது. நான் அவரைக் குறை கூறவில்லை.

ஆரமஸ் : கடவுளை நீங்கள் நம்புகிறீர்களா?

ஹெர்பர்ட் : போர்களுக்கு இடைப்பட்ட காலத்தின் மறுமலர்ச்சி கவிதை இயக்கத்தின் முக்கியப் பிரதிநிதியும், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினருமான ஜூலியன் பிரிஸிபாஸ் (இவர் 1970ல் காலமானார்) இதே கேள்வியை என்னிடம் கேட்டார்: எனக்கு அப்போது கடவுள் நம்பிக்கை இருக்கவில்லை. பெருத்த சந்தேகங்கள் இருந்தன. இருந்தும் 'ஆமாம்' எனப் பதிலளித்தேன். அப்போதுதான் கடவுளை நான் நம்பத் துவங்கினேன். பிரிஸிபாஸ் குழம்பிப் போனார். 'நீங்கள் பெரிய அறிவுஜீவி. நீங்களுமா இந்த சிலுவையில் அறையப்பட்ட அடிமையை விடுவிக்கிறீர்கள். எல்லாரிலும் நீங்கள் ஒரு அழகியலாளர், கிரேக்க கடவுள்களை நேசிப்பவர் என்றார். அவர் எந்த அளவுக்கு பழித்தும் அநியாய விமர்சனமும் செய்து பேசினாரோ அந்த அளவுக்கு என் நம்பிக்கையும் வளர்ந்தது. கடவுளே இல்லையென்று சொல்வதைக் காட்டிலும், கடவுளின் இருப்பை ஏற்றுக் கொள்வதால் நமக்கு உண்டாகும் நன்மைகள் அதிகம் என பாஸ்கல் சொன்னது சரிதான் எனத் தோன்றுகிறது. நம்புவதன் மூலம் ஒருவர் எதையும் இழந்துவிடுவதில்லை. ஆனால் நம்பாமல் இருப்பதன் மூலம் நிறைய இழப்புக்கு ஆளாகிறோம்.

ஆரமஸ் : மிலோஸ் கவிதையை ஒரு சமுதாயப் பணி என்றும் உன்னதமான ஒரு விஷயம் என்றும் குறிப்பிட்டார். அவரைப் பொறுத்தவரை கவிதையோடு ஒப்பிடுகையில் நாவல் என்பது இரண்டாம்பட்சம்தான். உங்களது கருத்தும் அதுதானா?

ஹெர்பர்ட் : நான் மிகச் சில நாவல்களையே வாசித்திருக்கிறேன். நாவல் பற்றி சொல்லும்போது மிலோஸ் நாவல் நமக்குள் ஏற்படுத்தும் ஒரு பொய்த் தோற்றத்தை மனதில் கொண்டிருக்க வேண்டும். அது ஒரு திரித்துக் கூறல், நம்ப வைக்கும் உத்தி. அது வெகு சாதாரண உண்மைகளைச் சொல்லி முடிகிறது. அதில் ஏராளமான வார்த்தைகள். ஆனால் கவிதை என்பது அனுபவத்தின் சாரம். மிலோஸ் ஒரு இரட்டைக் கவிஞர். செவ்வியல் அடிப்படையிலான ஒரு கற்பனாவாதி மற்றும் மிகு உணர்வும் அறிவார்த்தமும் கலந்த ஓர் ஆளுமை. நாங்கள் காடு

வழியே நடந்து போக நேர்கிறது. அவர் காணும் பறவைகளுக்கெல்லாம் பெயரிட்டபடியே வருகிறார். நானோ அமர்ந்து கொஞ்சம் மது அருந்த ஒரு மரத்திண்டை தேடுகிறேன். அவர் ஆந்தை போல அலறல் ஒலி எழுப்பியபடியும், பறவைகளை அழைத்தபடியும் இயற்கையோடு ஒன்று கலந்தபடி போய்க் கொண்டே இருக்கிறார்.

ஆரமஸ் : தன்னைப் பற்றிக் குறிப்பிடுகையில் கவிஞன் முரண்பாடுகளின் மீதாக வாழ்பவன் என்கிறார் மிலோஸ்.

ஹெர்பர்ட் : அது மிகவும் சரி. எனக்குப் பழங்கலைப் பொருள்களை மிகவும் பிடிக்கும். அது சலிப்பூட்டத் தொடங்கும்போது நான் யதார்த்த ஓவியங்கள் பக்கம் திரும்புகிறேன். உள்ளபடியே நான் இரண்டு குதிரைகளில் சவாரி செய்கிறேன். உங்களுக்குத் தெரியும் நான் சளசளவென்று பேசக்கூடிய ஆள். ஆனால் எழுதும்போது எவ்வளவு சுருக்கமாக இயலுமோ அவ்வளவு சுருக்கமாக எழுதுகிறேன். இது ஒரு முரண்பாடு இல்லையா.

ஆரமஸ் : ஒரு கவிஞராக நீங்கள் சின்னச் சின்ன விஷயங்களை மெருகேற்றுவதில் கவனம் செலுத்துகிறீர்கள். சிறு வட்டங்களுக்குள் விளையாடுகிறீர்கள். ஒரு புல்டோசரைக் கொண்டு பெரிய மேடுகளை உடைத்துத் தள்ளும் வேகம் உங்களுக்கு வந்ததில்லை? விமானத்திலிருந்து பார்க்கக் கூடிய அளவுக்க பிரம்மாண்டமான ஒன்றை நிர்மாணிக்க வேண்டுமென்று உங்களுக்குத் தோன்றவில்லை? சுருங்கச் சொன்னால், உங்களுக்கு நாவல் எழுதும் திட்டம் ஏதும் உண்டா?

ஹெர்பர்ட் : இதுவரை யாருக்கும் சொல்லாத ரகசியம் ஒன்றை உங்களுக்குச் சொல்கிறேன். நான் ஆரம்பித்தது உரைநடை எழுதுவதில்தான். நாஜி ஆக்கிரமிப்புகள் அகன்ற பின்னர் திரைமறைவு உலகம் மற்றும் சூழ்ச்சண்டைகள் குறித்த அனுபவங்களை 'The Lite shell' என்ற பெயரில் தொடர் சிறுகதைகளாக எழுதினேன். கடந்த காலத்துடனான கணக்கை சரிசெய்து கொள்ளும் கசப்பான வேலையாக இருந்தது அது. என் நண்பர்கள் சிறைப்படுத்தபட்ட போது (போருக்கும் பிந்தைய போலந்து கம்யூனிஸ்ட் அரசால்) நான் எழுதியதை வெளியிடக் கூடாதென முடிவு செய்தேன். ஏனென்றால் அப்போது உண்மையான, நடுநிலையான இலக்கிய விவாதங்களுக்கான சூழல் இருக்கவில்லை. பேசும் ஒவ்வொரு வார்த்தையும் ஓர் அரசியல் செயல்பாடாகவே கருதப்பட்டது.

ஆரமஸ் : கவிஞனது படைப்பின் ஆதாரம் மொழி. மொழி வார்த்தைகளால் ஆனது. ''மரியாதை, விசுவாசம், மாறாத்தன்மை'' இவ்வார்த்தைகளுக்கு தற்போது என்ன அர்த்தமிருக்கிறது? அவைகள் ஒரு கவிதையை உருவாக்க முடியுமா?

ஹெர்பர்ட் : முடியும். ஆனால் அதற்கு மிகுந்த திறமை வேண்டும். அதையும் மறைமுகமாகவே செய்ய முடியும். அதாவது 'மரியாதை' என்ற வார்த்தையைப் பயன்படுத்தாமலேயே செய்ய முடியும். வார்த்தையின் அர்த்தம் முக்கியமானது. மற்ற வார்த்தைகளையும் கூட குறுக்கு வழியாகக் கடந்துவிட முடியும். அவை உடைக்கப்பட்டவொரு விழுமியங்களின் மேசையைச் சேர்ந்தவை. நம் காலத்திலும் இவைகளைக் கோடி - காட்டமுடியும். விவாதிக்க முடியும். குறிப்பிட்ட ஒரு சூழலில் இவ்வார்த்தைகள் எந்த அர்த்தத்தைத் தருகின்றன என விளக்கி அவை இன்னமும் நம்மைக்

கட்டுப்படுத்துகின்றன. நமக்கு முக்கியமானவைகளாக இருக்கின்றன என ஒருவர் நிரூபிக்க இயலும். பெரும் வார்த்தைகளை விட்டுவிட வேண்டும். வார்த்தைக்கும், வார்த்தைக்கும் இடையிலான உறவை அறிய முயல வேண்டும்.

ஆரமஸ் : சமீபத்தில் மரேக் கிரேட்சுதா நம் காலத்துக்கு இனியும் கவிஞர்கள் தேவையில்லை எனப் பாடினார். அந்த வரிகளை எழுதியவர் ஒரு கவிஞர். கவிதைக்கான தேவை இன்னமும் இருக்கிறதா?

ஹெர்பர்ட் : கவிதை எப்போதுமே கட்டாயம் தேவைப்படுகிற ஒன்றாக இருந்ததில்லை. இப்போது மட்டும் ஏன் அது தேவைப்படுகின்ற ஒன்றாக இருக்க வேண்டும்? மானுட விழுமியங்கள் தங்களைக் காத்துக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளன. இருத்தலின் அபத்தம் சமகால இலக்கியத்தின் முக்கிய விஷயமாக மாறி இருக்கிறது. தொழில் நுட்பமும், அரசியலும் மட்டுமே கொண்ட ஓர் உலகம் மிகப் பயங்கரமானதாக இருக்கும். அப்படிப்பட்ட உலகினின்றும் நான் வெளியேறுவதையே விரும்புகிறேன். நான் சொல்வது உங்களுக்குப் புரிகிறது இல்லையா?

ஆரமஸ் : உலகம் மற்றும் வாழ்வில் ஏற்படும் மாற்றங்களை நீங்கள் வரவேற்பதில்லை. அவை உங்களை செயலிழக்கச் செய்கின்றன. ஒருவர் பரிதாபகரமாக பழைய சித்தாந்தங்களையே பிடித்துக் தொங்கிக் கொண்டிருக்கலாமா? ஒருவர் மாற்றங்களை தொடர்ந்து கவனித்து வர வேண்டுமா?

ஹெர்பர்ட் : அடிக்கடி மாறிக் கொண்டேயிருக்கும் மனிதன் என் நட்புணர்வைத் தூண்டபவனாக இருக்க மாட்டான். மாற்றங்கள் முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டவை. நமக்கு நிறைய கொடுப்பிணைகள் இருந்தும் நம் செயல்பாடுகளில் ஒரு தொடர்ச்சி இருக்கவும், ஒரே மாதிரியான தன்மை இருக்கவும் நாம் போராட வேண்டியுள்ளது. நாம் என்ன செய்தாலும் எழுதுவதோ, ஓவியம் தீட்டுவதோ, இசையமைப்பதோ - நாம் ஒவ்வொருவரும் நம் சொந்த ஆளுமையையே உருவாக்குகிறோம்.

ஆரமஸ் : இது வாழ்க்கைக்கு பொருந்துமா?

ஹெர்பர்ட் : வாழ்க்கையில் ஒருவர் தொடர்ந்து ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஆனால் அதுவொன்றும் வெட்கப்படக்கூடிய விஷயமும் இல்லை. ஒருவரது அடிப்படை விஷயங்களான அவரது நம்பிக்கைகள் மற்றும் ஒழுக்கநெறிகள் என்று வரும்போது அவர் சமரசம் செய்து கொள்ளக் கூடாது. நாம் ஒவ்வொருவரும் இப்பிரபஞ்சத்தின் ஒரு பகுதியை உருவாக்குகிறோம் - இது முழுமையின் ஒரு அர்த்தமுள்ள பாகமாக மாறுவதற்கான முயற்சி. அது அவ்வளவு சுலபமானதல்ல. போலந்து சமுதாயத்தின் எந்த பாகத்தை நான் உருவாக்குகிறேன் என என்னையே கேட்டுக் கொள்கிறேன். உண்மையிலேயே அது அர்த்தமுள்ளதா, விபத்துப் போன்றதா அல்லது தவிர்க்க முடியாத ஒன்றா?

ஆரமஸ் : ஆனால் கேள்விக்கு பதில்?

ஹெர்பர்ட் : என் வாழ்க்கைக்கு அர்த்தமூட்ட முயற்சி செய்தாக வேண்டிய அல்லது செய்ய வேண்டிய ஆள் நானேதான் என்பதுதான் பதில். நான் முழுமையின் ஒரு அர்த்தமுள்ள பாகமாக இருக்கிறேன் என்பதை நிரூபிக்க முயற்சிப்பேன் செஸ்டர்டனின் நாவல்களில் ஒன்று கடவுளின் இருப்பு குறித்த பிரச்சனை பற்றியது. அவநம்பிக்கை குரல் சொல்கிறது. "உண்மையிலேய கடவுள் இருக்கலாம். ஆனால் நாம் அவரது சீனத் தோட்டத்தில் வெறும் விளையாட்டு பொம்மைகள். அவர் நம்மோடு விளையாடுகிறார். நாம்

வெற்றி பெறும் போதும், தோற்றுப் போகும் போதும், நமது நோக்கங்களைப் பார்த்தும் இலக்குகளைப் பார்த்தும் அவர் சிரிக்கிறார். அவரைப் பொறுத்தவரை அது வெறும் விளையாட்டு", மற்றொரு குரல் சொல்கிறது" அது நீ சொல்கிறபடி இருக்கலாம் ஆனால் துன்பப்படுதலின் வழியாக அந்த விளையாட்டுக்கு அர்த்தத்தை - என் சொந்த அர்த்தத்தைத் தந்தேன். நான் இந்த உலகின் ஒரு அர்த்தமுள்ள பாகமாக என்னை அமைத்துக் கொண்டேன். உண்மையில் இந்த உலகம் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இல்லாமல் இருக்கலாம். நம் எல்லாருக்கும் தெரியும் வாழ்வு தொடர்ந்து கொண்டே இருக்காது. எல்லாமே ஒரு முடிவுக்கு வந்துவிடும், இலியட், தேவாலயங்கள் - பிகாஸோ - எல்லாமே. இனியும் என்னால் துன்பப்பட முடியும். இன்னும் சிறப்பானதொரு ஒழுக்க நெறிக்காக நான் போராட இயலும். கவிதை எழுதுவது என்பது போன்ற வேடிக்கையான விஷயம் மூலம் எனக்கு உன்னதமென்று தோன்றுகிற விஷயங்களுக்காக வாதிட விரும்புகிறேன். இப்போதும் வார்த்தைகளை ஒருங்கிணைத்து எழுதுவதும், அவற்றை வாசிப்பதும் சாத்தியம் தான். அந்த சாத்தியம் ஓரளவே இருக்கிறது. துயரமும் யதார்த்தமும் மோதிக்கொள்வதான எண்ணமே எல்லாமுமாக இருக்கிறது. என் தேசத்தையோ என் குடியிருப்பில் வசிப்போரையோ என்னால் காப்பாற்றவியலாது என்பது எனக்கு எனக்குத் தெரியும். ஆனால் அது சாத்தியம் - தான் என்பது போல நான் போராட வேண்டும். முயற்சிக்க வேண்டும். இந்த உலகில் எந்த அரசாங்கமும் அந்தப் போராட்டத்தை என்னிடமிருந்தும் பறித்துவிட முடியாது. அர்த்தத்தைப் பிரித்தெடுப்பதே நம் தலையாய பணி.

ஆரமஸ் : உங்கள் கவிதைகளில் மிதமிஞ்சிய கசப்பு காணப்படுவதேன்? கவிதைகளின் உள்ளமைந்த கேலியும் கசப்புணர்வை ஈடு கட்டுவதில்லை. உங்களது Prologue கவிதையில் சொல்கிறீர்கள்:

சகதி நிறைந்த ஆறுபாயும் பள்ளத்தை
நான் விஸ்டுலா என்கிறேன்
அவர்கள் எங்களை எப்படிப்பட்ட
வொரு
அன்புக்குத் தீர்ப்பிட்டார்கள்
எப்படிப்பட்டவொரு தந்தை
நாட்டைக் கொண்டு
எங்களை ஊடறுத்தார்கள்
சொல்வது கடினம்

ஹெறாபர்ட் : ஒரு கசப்பான உண்மை இனிப்பான ஒரு பொய்யைக் காட்டிலும் கசப்பானது. நீங்கள் குறிப்பிட்ட கவிதை 'தேசபக்திக் கவிதைகளைச் சேர்ந்தது. தேசபக்தி குறித்த என் படிமம் பின்வருமாறு :

ஜெர்மானியர்களோ, பிரெஞ்சுக்காரர்களோ அவர்கள் தேசத்தில் முட்டாள்தனமாக நடந்து கொண்டால் அதுபற்றி எனக்கு அக்கறையில்லை. அதே முட்டாள்தனத்தையோ, கேடுகெட்ட தனத்தையோ போலந்தில் வாழும் போலந்துகாரர்களிடம் காண்கையில் நான் கோபம் கொள்கிறேன்.

என்னுடைய தேசம் ஒன்றும் தனிச்சிறப்புமிக்க தேசம் இல்லை. ஆனால் அது எனக்கு மிகவும் நெருக்கமானது. அதனாலேயே அது பூரணத்துவம் அடையப் பாடுபட வேண்டுமென கனவு காண்கிறேன். எனவேதான் அதன் தவறுகள் சமூக அநியாயங்கள் என்னை ஆழமாகப் பாதிக்கின்றன. நானோ அல்லது நீங்களோ, சமுதாயத்தின் மீது நமது தாக்கம் ஒரு எல்லைக்குட்பட்டது. ஒருவர் அதை முழுமையாக உணர வேண்டும். மேலும் ஒருவர் சமுதாயப் பிரச்சினைகளில் தலையிடும்போது அவர் யதார்த்தத்தை மறுப்பவரென்றோ, சமுதாயத்தோடு ஒத்துப்போகத் தெரியாதவரென்றோ அல்லது ஒரு சமுதாய எதிரியாகவே கூட கருதப்பட இடமுண்டு. குறிக்கோள்களோடு செயல்படும் ஒருவர் ஒருபோதும் யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ளக் கூடாது. மிகச் சரியான ஒரு சமுதாயம் என்றோ, அறிவு, நியாய உணர்வு இவையிரண்டையும் கொண்ட சமுதாயம் என்றோ எங்குமே இல்லை. நமது ஒரே கடமை ஒவ்வொரு தனி மனிதனுக்கெதிரான அநியாயத்துக்கு எதிராகவும் போராடுவதுதான். ஒரு எழுத்தாளன் இதைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறான். இதனாலேயே அரசுடனான அவனது போராட்டம்...

ஆரமஸ் : நீங்கள் வேடிக்கையான சில வேலைகளில் இருந்திருக்கிறீர்கள், இல்லையா? ஒரு தொழிற்சங்க செய்திதாளின் ஆசிரியர், கடை உதவியாளர், கணக்காளர், கழிவறை மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் வடிவமைப்பாளர், வங்கி எழுத்தர் ஆகியன. ஆனால் உங்களது படைப்புகளில் இவை சார்ந்த அனுபவங்கள் கரணக்கிடைப்பதில்லை. அந்த அனுபவங்களை முக்கியமற்ற, உபயோகமற்ற, கால விரயம் ஏற்படுத்துகிற ஒன்று என நீங்கள் எண்ணுகிறீர்களா?

ஹெர்பர்ட் : நான் அப்படி எண்ணவில்லை. எனக்கு சுயசரிதைகள் பிடிப்பதில்லை. அவ்வளவே.

ஆரமஸ் : இந்த வேலைகளில் இருந்ததால் நீங்கள் அடைந்த லாபமென்ன?

ஹெர்பர்ட் : இந்த வேலைகள் உடல் ரீதியான என் இருப்பை உறுதி செய்தன. அதுவே முக்கிய லாபம். நான் வெகு கீழ்மட்டத்தில் இருந்தேன். எதற்கும் வளைந்து தரமாட்டேன். அந்த அனுபவங்கள் என் எழுத்தில் வெளிப்பட்டன - கிரேக்க தொல்லியல் பற்றி நான் எழுதியதும் கூட. Gdansk பணியாளர்கள் தோன்றுவதற்கு ஒரு வருடம் முன்பே எழுதப்பட்ட 'அட்லஸி'ல் உடல் உழைப் பாளர்களுடனான என் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தி யிருந்தேன். நான் என சொந்த அனுபவங்களிலிருந்தே அறிந்தேன். புத்தகங்கள் வாயிலாக அல்ல. மேலும் உலகளாவிய ஒரு கவனத்தைப் பெறும் என்ற வகையிலேயே என் அனுபவங்களை தொன்மங்களோடு கையாண்டேன்: என்னை மிரட்டிய செயலரைக் கேலி செய்து நான் எழுதியிருக்க முடியும்; ஆனால் செயலர் மறைந்துவிட்டதும் அந்தக் கேலியும் தனது கனத்தை இழந்துவிட்டிருக்கும்.

நம் சொந்த அனுபவத்தைக் கிளறிப் பார்க்காமல் எல்லாருக்குமான, பொதுவான அறிக்கைகள், செய்திகள் இவற்றையே நம்பத் தலைப்படுகிறோம்.

ஆரமஸ் : வெளிநாடுகளில் நீங்கள் புகழ் பெற்றிருப்பதன் ரகசியம் என்ன? உங்களை மொழிபெயர்ப்பது எளிது என்பது மிலோஸ் கருத்து.

ஹெர்பர்ட் : நான் ஒருபோதும் மொழிபெயர்ப் பாளர்களுக்கென்றோ, குறிப்பிட்ட வாசகர்களுக்கென்றோ

எழுதியதில்லை. மக்களை நாம் கறுப்பு வெள்ளை என்று பிரிக்க முடியாது. ஏன் அவர்கள் சிரிக்கிறார்கள், அவர்களை அழ வைப்பது எது என்பதே முக்கியம். ஒரு அமெரிக்கர் என்னை மொழிபெயர்த்த போது எனக்கு உற்சாகமூட்டும் கடிதங்களை எழுதினார். நான் பைபிளில் இருந்து மேற்கோள் காட்டியிருந்தது அவருக்கு ஆச்சரியமாயிருந்தது. மிகவும் நிஜமான அக்கறையோடிருந்த படைப்புகளில் கேலி இடம் பெற்றிருப்பது அவருக்கு வருத்தம் தந்தது. தான் கருதியபடி கவிதைகளில் மறைந்திருந்த கேலிகளை அவர் வெளிப்படுத்த விரும்பினார். அப்போது அதைப்படித்து அவரது மாணவர்கள் விழுந்து விழுந்து சிரிப்பார்கள் என்றார்.

ஆரமாஸ் : உங்கள் படைப்புகள் உங்களையும் மீறிச் செல்கின்றன. அவற்றின் மீது உங்கள் கட்டுப்பாட்டை நீங்கள் இழந்து விடுகிறீர்கள்;

ஹெர்பர்ட் : நிச்சயமாக அதுபற்றி நான் கவலைப்படுவதில்லை. என் தொண்டைவற்றிப் போகும்படிக்கு அடுத்தவர்கள் சிரிக்கும்போது சில நேரம் நான் கோபம் கொள்கிறேன். (அந்தோனி) ஸ்லோனிம்ஸ்கி (1895 - 1976,புகழ்பெற்ற துண்டுப்பிரசுரக்காரர், மனித நேயர்) சொன்னது போல "வித்தியாசமாக இருங்கள்" அமெரிக்கர்கள் யதார்த்தமானவர்கள். ஆனால் நம்மை விடவும் வரலாற்றுணர்வு அவர்களுக்குக் குறைவு.

ஆரமஸ் : அதனால்தான் அவர்கள் நம்மைவிட சிறப்பாக செயலாற்றுபவர்களாக உள்ளனரோ... நாம் எப்போதும் சுற்றி வளைத்துப் போகிறோம். அவர்கள் நேரடியாக செயல்படுகிறார்கள்:

ஹெர்பர்ட் : நாகரிகம் என்பது பெயரளவில் மட்டும் இருக்கக் கூடாது. நாங்கள் போலந்துக்குத் திரும்பிக் கொண்டிருந்தோம். எல்லையையும் கடந்துவிட்டோம். நமது மக்களோடு சேர்ந்து வாழப் போகிறோம் என்ற எண்ணம் பெரும் மகிழ்ச்சியைத் தந்து கொண்டிருந்தது - ஆனால் சாலையில் இருந்த பெரிய விரிசலொன்றில் கார் மோதி கிட்டதட்ட நசுங்கி விட்டது - அந்த நொடியே மகிழ்ச்சியும் போய்விட்டது. ஒரு நகரத்தில் நாங்கள் தங்கிய விடுதியில் ஜன்னலை மூடவே முடியவில்லை. கடைசியில் அதை ஆணியடித்து மூடினார்கள். என்னுடைய மனம் ஒரு நாகரிகமடைந்த மனம். அது வலிக்கிறது. ஏன் இந்த நாட்டில் சிந்தனையும் செயலும் ஒன்றாக இருப்பதில்லை. என் முதல் வேலை இங்கே மொழியிலிருந்தும் போலித்தனத்தை அகற்றி பொருட்களின் தருக்கத்தை திரும்பக் கொண்டு வருவதுதான். அப்போதுதான் பொருட்கள் அழாதிருக்கும்.

ஆரமஸ் : நீங்கள் பொருட்களை விசேஷ கவனத்தோடு கையாளுகிறீர்கள். உங்கள் கவிதைகளை நாற்காலிகள், கூழாங்கற்கள், கதவு - தட்டிகள் ஆகியவற்றுக்கு அர்ப்பணிக்கிறீர்கள். பொருட்களுக்குள்ளாக நிகழும் ஒரு உலகை நீங்கள் நம்புகிறீர்களா? பொருட்களும் ஒருவித வாழ்க்கை முறையை மேற்கொள்கின்றன என எண்ணுகிறீர்களா?

ஹெர்பர்ட் : எனக்குப் பொருட்களைப் பிடிக்கும். புலனுணர்வு நீதியாக அவற்றோடு நான் தொடர்பு கொண்டுள்ளேன். தெருவில் நடந்து கொண்டிருக்கையில் பழங்கலைப் பொருட்களுக்கான கடையில் அலங்காரமான உறையில் வைக்கப்பட்ட குறுவாளொன்றைப் பார்க்கிறேன் என வைத்துக்கொள்வோம். நான் கடையில் நுழைகிறேன். அந்த வாளை வாங்குகிறேன் - எல்லாம் அந்த வாளின் உலோகப் பரப்பின் குளிர்ச்சியை

அனுபவிக்கத்தான் - கையில் வைத்து எடை பார்க்கிறேன். இது எப்படி ஆரம்பித்தது என்று நீங்கள் தெரிந்து கொள்ள விரும்பலாம். நான் சிறுவனாக இருந்தபோது ஜன்னல் வழியே தெருவை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பேன். கடந்து போகும் மக்களை, ஒரு செங்கல் சுவரை, அஸ்தமிக்கும் சூரியனை - பார்த்துக் கொண்டேயிருப்பேன். என் மனதில் நானே தெருவில் நடக்கும் மக்களாகவும், சூரியனை விழுங்கிக் கொண்டிருக்கும் அந்த செங்கல் சுவராகவும் மாறியிருப்பேன்.

நம் வாழ்க்கை பொருட்களுக்கு நடுவேதான் கடந்து கொண்டிருக்கிறது. அதனாலேயே நாம் அவற்றோடு தொடர்பு கொண்டிருக்கிறோம். நான் தூசுகளை எதிர்க்கிறேன். அவை பொருட்களை அழித்துவிடுகின்றன. பைண்ட் செய்யப்படாத ஒரு புத்தகம், புத்தகத்தினின்றும் தனியே பிரிந்த ஒரு தாள் என்னைத் துன்பத்துக்கு ஆளாக்கிவிடும் உடைந்த காலுடன் இருக்கும் ஒரு நாற்காலி காலிழந்த ஒரு மனிதனைப் போலவே நகர இயலாமையின் துக்கத்தில் இருக்கிறது.

ஆரமஸ் : கடைசிக் கேள்வி : 1948ல் ஏன் நீங்கள் போலந்து எழுத்தாளர்கள் கூட்டமைப்பிலிருந்தும் விலகினீர்கள்?

ஹெர்பர்ட் : சமூக யதார்த்தவாதம் ஒரு பொய்யெனத் தோன்றியதே காரணம். நான் எழுதியவைகளை வெளியிட அப்போது எனக்கு வாய்ப்பில்லை. சமூக யதார்த்தத்தினின்றும் விலகுவதன் மூலம் கூட்டமைப்பிலிருந்து வெளியேற்றப்படுவதை எதிர்பார்த்தேன். ஒரு முறை 'குலக்கு'களை அழிக்கும் ஒரு நிகழ்ச்சியைக் காண நான் அழைத்துச் செல்லப்பட்டேன். ஆயுதம் தாங்கிய 'தொழிலாளர்கள்', . உண்மையில் அவர்கள் தொழிலாளர்கள் அல்ல, ஏழைப்பங்காளரான தினக்கூலிகளின் எதிரிகளது சொத்துக்களை அபகரித்தனர். எல்லவற்றையுமே அவர்கள் எடுத்துக் கொண்டனர். தானியங்கள் குதிரை வண்டிகளில் ஏற்றப்பட்டன. அந்த வண்டிகள் மழையிலும், பனியிலும் நின்று எல்லா தானியங்களுமே வீணாகிப் போகும். ஒரு வரலாற்றுப் பரிசோதனைக்கு அவர்கள் தந்த விலை அது. நான் ஒரு எழுத்தாளன். என்னைப் போல சுயபார்வை கொண்ட ஒரு குழுவோடு சேர்ந்து உண்மையை நானே நேரில் கண்டறிய இயலும். எது சரி, அன்றைய தினத்தின் உணர்வா, பொதுப் புத்தியா இல்லை மனசாட்சியா.

ஒரு 'குலக்'கிடம் வேலையில் இருந்த மால்கோவா என்ற பெண்ணிடமிருந்தும் அவர்கள் தானியங்களை எடுத்துக் கொண்டனர். அவள் கதறிஅழுதாள். என்ன செய்வது. அவளுக்கு நூறு எடை தானியம் தரவேண்டும். இல்லையென்றால் அவளும் அவள் மகனும் வரும் குளிர்காலத்தில் பட்டினியால் செத்துப் போவார்கள். அவளுக்காகப் பரிந்து ஒரு விண்ணப்பம் எழுதிக் கொண்டு இந்த செயல்பாடுகளின் ஒருங்கிணைப்பாளரை சென்று பார்த்து. ஒரு மூட்டை தானியத்தை அவருக்குத் தர கேட்டுக் கொண்டேன். வரலாறு நிகழ்த்தும் உண்மை மீதான பரிசோதனையை நான் புரிந்து கொள்ளவில்லையென அவர்கள் என்னைக் குறை கூறினர். சில நாட்கள் கழித்து மால்கோவா தூக்கிட்டு தன்னை மாய்த்துக் கொண்டாள் என அறிந்தேன்.

கூட்டமைப்பின் உறுப்பினர் அட்டையில் இருந்த என் புகைப்படத்தைக் கிழித்து விட்டு அட்டையை அவர்களுக்கே திரும்ப அனுப்பிவிட்டேன். நான் கீழ்மட்டத்துக்குத் திரும்பிவிட்டேன்.

# ஏன் கிளாசிக்குகளைப் படிக்க வேண்டும்?

இடாலோ கால்வினோ

L'Espresso (Rome),June,28,1981

தமிழில்
பிரம்மராஜன்

சில தெரிவிக்கப்பட்ட வரையறைகளிலிருந்து நாம் தொடங்கலாம்.

(1) கிளாசிக்குகள் என்னும் புத்தகங்கள் பற்றி நாம் பொதுவாக மக்கள் இப்படிச் சொல்லக் கேட்டிருக்கிறோம்: நான் வாசித்துக் கொண்டிருக்கிறேன். . . " என்று சொல்வதற்குப் பதிலாக 'நான் மறுபடியும் வாசித்துக் கொண்டிருக்கிறேன். . . "

இது குறைந்த பட்சம் "மெத்தப் படித்தவர்கள்" என்று தங்களைக் கருதிக் கொள்பவர்களிடத்தில் நடக்கிறது. முதன் முதலாக இந்த உலகினை எதிர்கொள்ளும் நிலையிலிருக்கும் இளவயதுக்காரர்களுக்கு இது பொருந்தாது. மேலும் கிளாசிக்குகள் அவர்களின் அந்த உலகின் ஒரு பாகமாக இருக்கும்.

வாசித்தல் என்ற வினைச் சொல்லின் முன்னால் இடம் பெறும் அழுத்தத்திற்காக முன்னிடை வேண்டுமானால் ஒரு பிரபலமான புத்தகத்தினை படிக்கவில்லை என்பதை ஒப்புக் கொள்வதற்கு அவமானமாக உணர்பவர்களின் பங்கில் இருக்கும் ஒரு சிறிதளவேயான பாசாங்காக இருக்கக் கூடும். அவர்களுக்கு மறுஉறுதிப் பாடளிக்க, நாம் அவதானிக்க வேண்டியது இவ்வளவுதான்: ஒரு மனிதனின் அடிப்படைப் படிப்பென்பது எந்த அளவு விரிவானதாக இருப்பினும் அவனால் படிக்கப்பட்டிராத அடிப்படைப் புத்தகங்கள் ஏராளமான

எண்ணிக்கையில் இன்னும் பாக்கி இருக்கும்.

தூஸிடைடிஸ்[1] மற்றும் ஹெரோடோட்டஸ்[2] எழுதியவற்றினை முழுமையாகப் படித்தவர்கள் யாராவது இருந்தால் கையை உயர்த்துங்கள். மேலும் செயின்ட்-சைமன்[3]? அப்புறம் கார்டினல் ரெட்ஸ்? அந்த மகத்தான பத்தொன்பதாம் நூற்றாண்டு நாவல் தொடர்கள் கூட அடிக்கடி பேசப்படுகின்றனவேயொழிய படிக்கப்படுவதில்லை. பிரான்ஸ் தேசத்தில் அவர்கள் பால்ஸாக்கை பள்ளிக் காலங்களிலேயே படிக்கத் தொடங்கி விடுகின்றனர். சுற்றில் இருந்து கொண்டிருக்கும் பிரதிகளின் எண்ணிக்கையை வைத்துப் பேசும் பொழுது, பள்ளி முடிந்த பிறகும் அவர்கள் தொடர்ந்து படிக்கிறார்கள் என்று எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் ஒரு அரசாங்க கணக்கெடுப்பு நடத்தப்படுமானால், பால்ஸாக்[4] கடைசி இடத்தில்தான் இருப்பார் என்று நான் அஞ்சுகிறேன். டிக்கன்ஸின் விசிறிகள், இதாலியில் படித்தவர்களின் ஒரு சிறிய குழுவாக இருக்கின்றனர். அந்தக் குழுவின் அங்கத்தினர்கள் சந்திக்கத் தொடங்கிய உடனேயே பாத்திரங்களையும் நிகழ்ச்சிகளையும் ஏதோ அவர்களுக்கு தெரிந்தவர்கள் போல பேசத் தொடங்கி விடுகின்றனர். பல ஆண்டுகளுக்கு முன்னால், மிஷல் ப்யூட்டர்[5] (**Michel Butor**) அமெரிக்காவில் ஆசிரியராகப் பணியாற்றிய சமயம், எமிலி ஸோலா[6] (**Emile Zola**) பற்றி திரும்பத் திரும்ப கேட்கப்பட்டதால் மிகவும் வெறுத்துப் போனார். ஸோலாவை அவர் அதுவரை படித்ததில்லை. ஆகவே ரூகன்-மாக்வா(**Rougon-Macquart**)[7] தொடர்ச்சி முழுவதையும் படிக்க வேண்டுமென்று தீர்மானித்தார். அதைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருந்தாரோ அதிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக அந்த அனுபவம் இருப்பதைக் கண்டார். ஒரு நம்புவதற்கியலாத புராணிக மற்றும் இயலுலகத் தோற்ற அமைப்பாக அது இருந்தது. பிறகு இதை ஒரு அற்புதமான கட்டுரையில் அவர் விவரித்தார்.

வேறு வார்த்தைகளில் சொல்வதானால், ஒரு மகத்தான புத்தகத்தினை முதல் முறையாக ஒருவரின் முதிர் பிராயத்தில் படிப்பதென்பது அபாரமான சந்தோஷமாக இருக்கும். இது ஒருவருடைய இளவயதில் படித்திருப்பதற்கான அனுபவத்திலிருந்து (கூடுதலானது குறைச்சலானது என்று ஒரு கூற முடியாதெனினும்) வேறுபட்டது. வேறு எந்த அனுபவத்திற்கும் போலவே, வாலிபம் வாசிப்பிற்கும் ஒரு விதமான சுவையைக் கொண்டு வருகிறது. மாறாக முதிர் பிராயத்தில் ஒருவர் கூடுதலான பல நுண்தகவல்களையும் அர்த்த அடுக்குகளையும் சிலாகிக்கிறார் (அல்லது சிலாகிக்கத்தான் வேண்டும்). ஆகவே நாம் அடுத்த வரையறையினை முயன்று பார்க்கலாம்:

(2) சிலரால் படிக்கப்பட்டு, நேசிக்கப்பட்டு, பாதுகாக்கப்படும் அந்தப் புத்தகங்களைக் குறிப்பதற்காக நாம் கிளாசிக் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறோம். ஆனால் அவற்றை முதல் தடவையாக மிகச் சிறந்த சூழ்நிலைகளில் படித்து சிலாகிக்க முடிந்தவர்களாலும் இதே அளவுக்கு அவை பாதுகாக்கப்படுகின்றன.

பொறுமையின்மையின் காரணமாக இளமையில் படிப்பதென்பது பயனற்றதாக இருக்கக் கூடும், கவனத் திசைதிருப்பல்களால், எப்படிப் படிப்பது என்ற நிபுணத்துவமின்மையால், அல்லது வாழ்வனுபவமே கூட குறைவாக இருப்பதால். அப்பொழுது படிக்கப்படும் புத்தகங்கள் (சாத்தியத்தில் ஒரே சமயத்திலேயே)

எதிர்கால அனுபவங்களுக்கு ஒரு வடிவம் கொடுக்கின்றன என்ற அர்த்தத்தில், முன்னுதாரணங்கள், ஒப்பிடுதலின் வரையறைகள், வகைப்படுத்துதலின் திட்டங்கள், மதிப்பீடுகளின் அளவுகள், அழகின் உச்சபட்ச முன்னுதாரணங்கள் ஆகிவற்றைக் கொடுத்தபடி -இந்த எல்லா விஷயங்களும் தொடர்ந்து இயங்கும் ஒருவருடைய இளமையில் படிக்கப்பட்ட புத்தகம் முழுமையாக மறந்து போனாலும். ஒரு முதிர் பிராயத்தில் நாம் ஒரு புத்தகத்தை மறுவாசிப்பு செய்யும் போது, அப்பொழுது நாம் இந்த மாறாத மதிப்பீடுகள் இருப்பதைக் கண்டு பிடித்துக் கொள்ளும் வாய்ப்பிருக்கிறது, இந்த காலகட்டத்திற்குள்ளாக நமது உள்ளியல் இயக்கத்தின் அங்கங்களாக மாறியிருக்கும் அவற்றின் தோற்றுவாய்கள் பற்றி நாம் நீண்ட காலத்திற்கு முன்னரே மறந்திருப்போம். அது இருக்கிறபடியே ஒரு இலக்கியப் படைப்பானது நம்மை வெற்றிகரமாக மறக்கச் செய்யும், ஆனால் அது நமக்குள் அதன் விதையை விட்டுச் செல்கிறது. ஆகவே நாம் இப்போது கொடுக்கும் வரையறை இதுதான்:

*(3)* கிளாசிக்குகள் என்பவை ஒரு விநோதமான தாக்கத்தினை ஏற்படுத்துபவை, மனதிலிருந்து அகற்றியழிக்கப்பட மறுக்கும் போதும், ஞாபக மடிப்புகளில் தங்களை மறைத்துக் கொள்ளும் சமயத்திலும், கூட்டு அல்லது தனிமனித நினைவிலி (collective and individual unconsciousness ) என்று தங்களுக்கு மாறு வேடம் போட்டுக் கொண்டு உலவும் போதும்.

ஆகவே முதிர் பிராயத்தில் நமது வாலிப பருவத்தின் மிக முக்கியமான புத்தகங்களை மறு வருகை செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் ஒதுக்க வேண்டும். புத்தகங்கள் மாறுதலடையாமலிருந்த போதிலும் கூட (மாறுதலடைந்த வரலாற்று உள்பார்வையின் புதிய வெளிச்சத்தில் அவை கண்டிப்பாக மாறியிருப்பினும் கூட), நாம் கண்டிப்பாக மாறியிருப்போம், நம் எதிர்கொள்ளலும் முழுமையான புதிய விஷயமாக இருக்கும்.

எனவே, வாசிக்கிறேன் என்ற அல்லது மறுவாசிப்பு செய்கிறேன் வினைச் சொல்லைப் பயன்படுத்தினாலும் அது முக்கியமில்லை. வாஸ்தவமாக நாம் இப்படிச் சொல்லலாம்:

*(4)* கிளாசிக்கின் ஒவ்வொரு மறுவாசிப்பும் முதல் வாசிப்பின் கண்டுபிடிப்பு பயணம் போன்றதே.

*(5)* கிளாசிக்கின் ஒவ்வொரு வாசிப்புமே நிஜத்தில் மறுவாசிப்பே.

நான்காவது வரையறை இந்த அடுத்த வரைறைக்குப் பின்விளைவானதாக இருக்க முடியும்:

*(6)* ஒரு கிளாசிக் என்பது தனது வாசகர்களுக்குச் சொல்ல வேண்டியதனைத்தையும் என்றுமே சொல்லித் தீர்க்காதிருப்பது.

நம்முடையதிற்கு முந்தியதான வாசிப்புகளின் தடயங்களைத் தாங்கியபடி வந்து சேர்கின்ற புத்தகங்கள்தான் கிளாசிக்குகள். இந்தத் துலக்கமுட்டலின் சமயத்தில் அவை கலாச்சாரத்தின் மீது விட்டிருக்கிற தடயங்களை அல்லது அவை கடந்து வந்திருக்கின்ற கலாச்சாரங்களின் தடயங்களை (அல்லது மிக எளிமையாக, மொழியின் மீதும் பழக்க வழக்கங்களின் மீதும்) கொண்டு வருகின்றன.

இது எல்லாமே புராதன மற்றும் நவீன கிளாசிக்குகளுக்கும் சரிசமமாகப் பொருந்தும். நான் ஒடிசியைப் படித்தால் ஹோமரின் பிரதியைப் படிக்கிறேன், ஆனால் இந்த நூற்றாண்டுகளின் காலத்தில் யூலிசிஸின் சாகசங்கள் என்ன

அர்த்தம் கொடுக்க வந்திருக்கின்றன என்பதை என்னால் மறக்க முடியாது. மேலும் இந்த அர்த்தங்கள் மூலப் பிரதியிலேயே உள்ளொளிக்கும்படி இருந்தனவா என்பதையும். அல்லது அவை பின் வந்த உறைபடிவுகளா, திரிபுகளா, அல்லது விரிவாக்கல்களா என்பதையும் என்னால் வியக்காமல் இருக்க முடியாது. காஃப்காவைப் படிக்கும் பொழுது, என்னால் காஃப்காத் தன்மையான என்கிற குணச் சொல்லின் நியாயத்தன்மையை நிராகரிக்கவோ அல்லது ஏற்கவோ செய்யாமலிருக்க முடியாது. தவறாகப் பிரயோகிக்கப்படும் இந்த அடைமொழியை ஒவ்வொரு கால் மணி நேரத்திற்குள்ளும் ஒருவர் கேட்க வாய்ப்பிருக்கிறது. நான் தாஸ்தாயெவ்ஸ்கீயின் The Possessed அல்லது துர்கனேவின்[9] Fathers and Sons நாவலைப் படித்தால் எப்படி அந்த பாத்திரங்கள் நமது காலம் வரை தொடர்ந்து மறு பிறப்பெடுத்திருக்கிறார்கள் என்பதை என்னால் சிந்திக்காமல் இருக்க இயலாது.

(7) நாம் அது பற்றிக் கொண்டிருந்த கருத்திற்கு நேர் எதிராக ஒரு கிளாசிக்கை வாசித்தல் என்பது நமக்கு ஒன்று அல்லது இரண்டு ஆச்சரியங்களைத் தர வேண்டும்.

இந்த காரணத்திற்காக, என்னால் வேண்டிய அளவுக்கு பிரதியை நேரடியாகப் படித்தலை உயர்வாகப் பரிந்துரைக்க முடியாது. எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு உரைகளையும், குறிப்புகளையும், துணை நூற்பட்டியல்களையும் தவிர்த்துக் கொண்டு. வேறு ஒரு புத்தகத்தை விவாதிக்கும் ஒரு புத்தகம் விவாதத்திலிருக்கும் மூலப் புத்தகத்தை விட அதிகம் சொல்லி விட முடியாது என்பதை பள்ளிகளும் கல்லூரிகளும் நமக்கு உணர்த்த வேண்டும். ஆனால் இதற்கு மாறாகத்தான் அவை மெத்தவும் நம்மை முரணாகச் சிந்திக்க வைக்கின்றன [illegible] மதிப்பீடுகளின் தன்மை மிகவும் பரவலாக நிலவுகிறது. அதன்படி முன்னுரை, விமர்சன அணுகல், நூற்பட்டியல் போன்றவை பிரதி என்ன சொல்ல வருகிறதோ அதை மறைப்பதற்கான ஒரு புகைமூட்டத் திரையைப் போலப் பயன்படுத்தப்படுகின்றன. பிரதியை விடக் கூடுதலாகத் தங்களுக்குத் தெரியுமென்று கோருகிற இடையீட்டாளர்களின்றி பிரதி சொல்ல வந்ததை சொல்ல அனுமதிக்க வேண்டும். எனவே நாம் இப்படி முடிக்கலாம்:

(8) நமக்கு ஏற்கனவே தெரிந்திருக்காத எதையும் நமக்கு அவசியமாக கிளாசிக்குகள் சொல்லித் தருவதில்லை. ஒரு கிளாசிக்கில் நாம் எப்போதும் அறிந்திருந்ததை சில சமயம் கண்டுபிடித்துக் கொள்கிறோம் (அல்லது நமக்குத் தெரியும் என்று நாம் நினைத்ததை), ஆனால் இந்த ஆசிரியர்தான் முதலில் அதைச் சொன்னார் என்பது தெரியாமல், அல்லது குறைந்தபட்சம் அதனுடன் ஒரு பிரத்யேக வழியில் எப்படி சம்மந்தப்பட்டிருக்கிறார் என. மேலும், இதுவும் கூட, நமக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடிய ஒரு ஆச்சரியம்தான், ஒரு தோற்றுவாயைக் கண்டுபிடித்ததில் நமக்கு எப்போதும் கிடைக்கும் சந்தோஷத்தைப் போல, ஒரு உறவினைப் போல, ஒரு பிணைப்பினைப் போல.

இவ்வ எல்லாவற்றிலிருந்தும் நாம் கீழ்வரும் வரையறையினைப் போன்ற ஒன்றினைப் பெறலாம்:

(9) படிக்கப்படும் சமயத்தில் கிளாசிக்குகள் இன்னுமே கூட புத்துணர்ச்சி கூடியவையாக, அதிகம் எதிர்பார்த்திராத, மேலும் அவை பற்றி நாம் கேள்விப்பட்ட போது நாம் எண்ணியிருந்ததை விடவும் அதிகம் அற்புதமாமானவையாக இருக்கின்றன.

இயல்பாக, ஒரு கிளாசிக் நிஜமாகவே, கிளாசிக் பிரதியாக இயங்கும்பொழுதுதான் நடக்கிறது அது--அதாவது, அது வாசகனுடன் ஒரு தனிப்பட்ட மனோபாலத்தை ஏற்படுத்தும்போதுதான். பொறி கிளம்பவில்லை என்றால், அது பரிதாபம். ஆனால் நாம் கடமையுணர்ச்சியினாலோ அல்லது மரியாதையினாலோ கிளாசிக்குளைப் படிப்பதில்லை. காதலினால் படிக்கிறோம். பள்ளிக்கூடத்தில் தவிர. சிறப்பாகவோ அல்லது மோசமாகவோ பள்ளிக்கூடம் குறிப்பிட்ட கிளாசிக்குகளை தெரிந்து கொள்வதற்கு ஏது செய்ய வேண்டும், அவற்றுடன்--அல்லது குறிப்புகளை--பிறகு நீங்கள் உங்கள் கிளாசிக்குகளைத் தேர்ந்தெடுக்கலாம். ஒரு தேர்ந்தெடுப்பினைச் செய்வதற்குத் தேவையான உபகரணங்களை உங்களுக்குத் தர வேண்டிய கட்டாயத்திலிருக்கிறது பள்ளிக் கூடம். ஆனால் நாம் கருதக்கூடிய தேர்ந்தெடுப்புகளெல்லாமே பள்ளிக் கூடத்திற்குப் பிறகும் வெளியிலும் நடப்பதுதான். ஒருபக்க மனச்சாய்வின்றிப் படித்தால் மாத்திரமே உங்களுடைய புத்தகமாகும் ஒரு புத்தகத்தினை நீங்கள் சந்திக்கும் சாத்தியமுள்ளது. மெத்தப் படித்த, ஒரு அபாரமான கலை வரலாற்றாசிரியர் ஒருவரை எனக்குத் தெரியும். இருக்கிற சகல புத்தகங்களிலும் அவர் தனது பிரத்யேகக் காதலை பிக்விக் பேப்பர்ஸ்[10] மீது குவித்திருந்தார். அவருக்குக் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் டிக்கன்ஸின் புத்தகத்திலிருந்து ஒரு சொற்புதிரைக் கொணர்வார். வாழ்வின் ஒவ்வொரு நிகழ்வினையுமே பிக்விக்தனமான வேறு சில நிகழ்வுகளுடன் இணைப்பார். சிறிது சிறிதாக அவரும், இந்தப் பிரபுஞ்சமும் அதன் நிஜமான தத்துவமும், ஒரு முழுமையான அடையாளப்படுத்திக் கொள்ளல் எனும் வகையில் பிக்விக் பேப்பர்ஸின் வடிவத்தை எடுத்துக் கொண்டுவிட்டன.

இந்த விதத்தில் நாம் மிகவும் உயர்வான, அதிகம் எதிர்பார்ப்புமிக்க கிளாசிக் பற்றிய கருத்துக்கு வந்து சேர்கிறோம்:

(10) பிரபஞ்சத்திற்கு இணையான தொரு வடிவத்தை எடுத்துக் கொள்ளக் கூடிய புத்தகம் ஒன்றுக்காக நாம் கிளாசிக் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறோம், புராதன காலத்து தாயத்துக்களுக்கு சமமாக. இந்த வரையறையுடன் நாம் முழுமுற்றான புத்தகம் என்னும் கருத்துருவாக்கலை நெருங்குகிறோம், மல்லார்மே[11] கருக்கொண்டதைப் போல.

ஆனால் ஒரு கிளாசிக் ஒரே அளவுக்கு வலுவான மனோ பாலத்தை எதிர்ப்படுத்துதல் வகையில் அல்லது நேர்முறன் வகையிலும் நிறுவுகிறது. யான் யாக்விஸ் ரூஸோ* சிந்திக்கிற, செய்கிற சகலமும் என் மனதிற்கு இனிமையானதாய இருக்கிறது. இருப்பினும் எல்லாமும் அவனை எதிர்க்க வேண்டும், விமர்சிக்க வேண்டும், அவனுடன் சண்டை போட வேண்டும் என்கிற அடக்க முடியாத ஆர்வத்தை எனக்குள் நிறைக்கிறது. மனரீதியான தளத்தில் ஏற்படும் தனிப்பட்ட எதிர்ப்புணர்வு இது. இதன் காரணமாக நான் அவனைப் படிப்பதைத் தவிர வேறு தேர்வுகள் எனக்கு இல்லாமல் போக வேண்டும். இருந்தாலும் என்னுடைய ஆசிரியர்கள் பட்டியலில் அவனை

வைப்பதை என்னால் தவிர்க்க இயலாது.
எனவே நான் சொல்வேன்:

(11) உங்களுடைய கிளாசிக் ஆசிரியர் யாரென்றால் நீங்கள் அவரிடம் பாராமுகமாக இருந்து விட முடியாத ஒருவர், உங்களை அவருடைய உறவின் வாயிலாக வரையறுக்க உதவுபவர், அவருடன் தகராறு செய்வதிலும் கூட.

பழமை, மொழிநடை, அதிகாரத்துவம் இதில் எந்த விதமான வித்யாசப்படுத்தல்களுமின்றி நான் கிளாசிக் என்ற சொல்லைப் பயன்படுத்துவதை நியாயப்படுத்த வேண்டிய கட்டாயமில்லை. (இந்த சொல்லின் அனைத்து அர்த்தங்களின் வரலாற்றுக்கும் கிளாசிகோ (Classico) என்ற பிரிவில் ஃபிரான்கோ ஃபோர்ட்டினி என்பவரால் எழுதப்பட்ட வரையறை என்சைக்ளோபீடியா என்னவ்டி (Encyclopaedia Enaudi)யின் மூன்றாம் தொகுதியில் காணப்படுகிறது) நான் மேற்கொள்ளும் விவாதத்தில் ஒரு கிளாசிக்கை எது தனித்தன்மையுடையதாக ஆக்குகிறது என்றால் ஒரு விதமான எதிரொலி விளைவாகும். ஒரு கலாச்சாரத் தொடர்ச்சியில் தன்னுடைய இடத்தை ஏற்கனவே சாதித்துக் கொண்ட நவீனமானவற்றுக்கும் புராதனமானவற்றுக்கும் சரிசமமாக இது பொருந்தும். நாம் இப்படி சொல்லலாம்:

(12) ஒரு கிளாசிக் ஆனது மற்ற கிளாசிக்குகளுக்கு முன்னால் வந்து விடக் கூடிய புத்தகமாகும். மற்றவற்றினை முதலில் படித்து விட்ட ஒருவர் பிறகு இதைப் படிக்கும் போது, உடனடியாக அதனுடைய இடத்தினை குடும்ப மரத்தில் அடையாளம் கண்டு கொள்கிறார்.

இந்தப் புள்ளியில் கிளாசிக்குகளைப் படிப்பதை கிளாசிக்குகள் அல்லாத பிற நூல்களைப் படிப்பதுடன் எப்படித் தொடர்புபடுத்த வேண்டும் என்பதை நான் இனியும் தள்ளிப் போட முடியாது. "நமது காலங்களை மேலும் அதிக ஆழமாகப் புரிந்து கொள்வதற்கு உதவக்கூடிய நூல்களில் நாம் கவனம் செலுத்துவதை விட்டு விட்டு ஏன் கிளாசிக்குகளைப் படிக்க வேண்டும்?" அல்லது "நாம் எங்கே போய்க் கண்டுபிடிப்பது காலத்தையும் மன அமைதியையும் மலையளவு சரிந்து கொண்டிருக்கும் சமகால நடப்புகளினால் நாம் அமிழ்ந்து போயிருக்கும் போது?" போன்ற கேள்விகள் தொடர்பானது இந்தப் பிரச்சனை.

வாஸ்தவமாக, தன்னுடைய படிக்கும் நேரத்தை முற்றிலுமாக லூக்ரெஷியஸ்[12], லூசியன்[13], மான்டெய்ன்[14], எராஸ்மஸ்[15] க்வெவேடோ[16], மார்லோ[17], Discourses on Method, Wilhelm Meister[18], கோல்ரிட்ஜ்[19], ரஸ்கின்[20], ப்ரூஸ்(ட்)[21], மற்றும் வெலரி[22] படிப்பதிலும் இவற்றுடன் துணிவான தாக்குதல்களை முராஸாகி[23] மற்றும் ஐஸ்லாந்து சாகாக்களிலும்[24] செய்யக் கூடிய ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட மனிதனை நாம் கற்பனை செய்யலாம்தான். இது எல்லாமும் கூட சமீப காலத்து வெளியீடுகளுக்குப் புத்தக மதிப்புரை எழுத வேண்டிய கட்டாயமின்றி, அல்லது பல்கலைக் கழகப் பதவிக்குப் போட்டியிட ஆய்வுக்கட்டுரை எழுத வேண்டிய அவசியமின்றி, அல்லது பத்திரிகைகளுக்கு கறாரான காலக் கெடுவில் கட்டுரைகள் எழுத வேண்டிய அவசியமில்லாமல். எவ்வித தொற்றுக்களும் இல்லாத இப்படிப்பட்ட ஒரு உணவினை நிலையாக வைப்பதற்கு, இந்த ஆசீர்வதிக்கப்பட்ட மனிதர் செய்தித்தாள்கள் படிப்பதிலிருந்து தன்னை விலக்கிக் கொள்ள வேண்டியிருக்கும், என்றுமே ஒரு சமகால நாவலினாலோ சமீப சமூகவியல் ஆய்வுகளினாலோ

சபலமடையக் கூடாது. ஆனால் அப்படிப்பட்ட ஒரு கறாரத்தன்மை எந்த வகையில் நியாயப்படுத்தப்படக் கூடியது அல்லது பயனுள்ளது என்பதை நாம் பார்க்க வேண்டும். மிகச் சமீப செய்தியானது சாதாரணமானதாயும் இழிவுபடுத்தக்கூடியதாகவும் இருக்கலாம். ஆனால் அது நாம் நின்று முன்னும் பின்னும் பார்த்துக் கொள்ளக் கூடிய ஒரு முக்கியமான புள்ளியாக இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. கிளாசிக்குகளை படிக்க நீங்கள் எங்கிருந்து படிக்கிறீர்கள் என்பதைத் தெரிந்திருக்க வேண்டும். இல்லையானால் புத்தகமும் வாசகனும் ஒரு வித காலாதீத புகைமூட்டத்தில் மறைந்து போய்விடக் கூடிய ஆபத்திருக்கிறது. அப்படியானால், சமகால நடப்புகளைப் படித்தலையும் ஒரு சரியான அளவுக்கும் கிளாசிக்குகளைப் படித்தலையும் மாற்றி மாற்றி செய்யக் கூடிய ஒருவர் கிளாசிக்குகளைப் படிப்பதினால் கிடைக்கக் கூடிய மாபெரும் விளைச்சல்களை அடைகிறார். இது ஒரு இடைஞ்சலுறாத மனஅமைதியை அவசியமாக உள்ளுணர்த்துவதில்லை. அது நரம்புத் தளர்ச்சியின் பொறுமையின்மையின் கனியாகக் கூட இருக்கலாம், மனதின் தொடர்ந்த வெடுவெடுத்து சிடுசிடுக்கும் திருப்தியடையாத்தன்மையாகவும்.

லட்சியமானதொரு நடவடிக்கை எதுவாக இருக்குமென்றால், நிகழ்காலத்தை நம் அறையின் ஜன்னலுக்கு வெளியிலிருந்து கேட்கும் இரைச்சலைப் போல கேட்பது--இது நமக்கு போக்குவரத்து நெரிசல்களையும் தட்ப வெப்ப நிலையில் ஏற்படும் மாறுதல்களையும் பற்றி எச்சரிக்கும்--அதே சமயத்தில் கிளாசிக்குகளின் குரல் நம் அறைக்குள் தெள்ளத் தெளிவாக எதிரொலித்துக் கொண்டிருப்பதை நாம் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருப்போம். ஆனால், அறைக்குள் நிகழ்காலமானது, முழு ஒலியில் வைக்கப்பட்ட டிவியைப் போல நிறைந்திருக்கையில் அறையின் வெளிப்புறத்திற்கு மிகவும் அப்பால் கிளாசிக்குகளின் குரலை ஒரு தூரத்து எதிரொலியாகக் கேட்பதென்பதே பலருக்கு ஒரு சாதனையாகத் தோன்றுகிறது.

ஆகவே நாம் இதைச் சேர்த்துக் கொள்வோம்:

(13) ஒரு கிளாசிக் என்பது எதுவென்றால் இந்த கணத்தின் பிரச்சனைகளை பின்னணி இரைச்சலின் நிலைக்குத் தள்ளிவிடக் கூடிய தன்மை வாய்ந்தது. ஆனால் அதே சமயம் இந்தப் பின்னணி இரைச்சல் இல்லாமல் நம்மால் இருந்து விட முடியாது.

(14) ஒன்றுபட்டுப் போகாத அந்த கணத்துப் பிரச்சனைகள் நமது சூழ்நிலையை முழுமையான கட்டுப்பாட்டில் வைத்திருக்கிற சமயத்திலும் கூட ஒரு கிளாசிக் என்பது பின்னணி இரைச்சலாக தொடர்ச்சியாய் இருக்கக் கூடிய ஒன்று.

(15) இனியும் நீண்ட காலப் பொழுதுகளையோ, விஸ்தாரமான மனிதத்துவ ஓய்வு நேரங்களையோ அளிக்காத நமது அன்றாட வாழ்வின் லயங்களுடன் கிளாசிக்குகளைப் படிப்பதென்பது மோதுகிறது என்ற உண்மை நிலவுகிறது. அது நமது கலாச்சாரத்தின் விரிந்த மனப்பாங்குடன் முரண்படுகிறது. இக்கலாச்சாரம் என்றைக்குமே நமது காலத்தின் தேவைகளுக்கேற்ற கிளாசிக்கலான விஷயங்களைப் பற்றிய ஒரு அட்டவணையை தொகுத்துத் தர தகுதியற்றதாகவே இருக்கும்.

மாறாக இரண்டாவதாகக் குறிப்பிட்ட அம்சங்கள் லியோபார்டி[25]யின் வாழ்க்கையில் முழுமையாக

உணரப்பட்டிருந்தன. அவரது தந்தையின் வீட்டில் (patermo ostello) இருந்த தனிமையான வாழ்க்கையை வைத்துப் பார்க்கும் போது, அவரது கிரேக்க மற்றும் லத்தீன் தொடர்பான பழமை குறித்த ஆராதனை, மற்றும் அவருடைய விருப்பத்திற்கு அவரது தந்தை மோனால்டோவால் விடப்பட்டிருந்த ஒரு வலுவான நூலகம் ஆகியவற்றுடன் இதாலி மற்றும் பிரெஞ்சு இலக்கியங்களின் முழுமையான தொகுதிகளை நாம் சேர்க்கலாம்--நாவல்களையும், பொதுவான லேட்டஸ்ட் ஹிட்களையும் தவிர்த்து. இவை அவருடைய சகோதரி பாவோலினா (அவளுக்கு அவர் ஒரு முறை எழுதினார் உன்னுடைய ஸ்டெந்தால்[26] என்று) வின் ஓய்வு நேரத்தை திசைதிருப்ப விடப்பட்டன. அறிவியலிலும் வரலாற்றிலும் அவருக்கிருந்த உக்கிரமான ஈடுபாட்டினை மிஞ்சியும் கூட அவர் முழுமையாய் அந்த நிமிஷம் வரை நவீனமாக்கப்படாத பிரதிகளின் மீது சார்ந்திருக்கத் தயாராக இருந்தார். ஃப்பூஃபனிடமிருந்து[27] பறவைகளின் பழக்கங்கள் பற்றியும், Fontanelle[28] இடமிருந்து Frederik Ruysch யின் மம்மிகளைப் பற்றியும் ராபர்ட்ஸணிடமிருந்தும் கொலம்பஸின் பயணங்களைப் பற்றியும் வாசித்துக் கொண்டார்.

இன்றைய நாட்களில் லியோபார்டி அனுபவம் கண்டதைப் போன்ற பேரிலக்கியப் படிப்பு நினைத்துப் பார்க்கவே முடியாதது. குறிப்பாக, பிரபு மோனால்டோவின் நூலகமானது மிகவும் பாழாகிவிட்ட நிலையில். பழைய தலைப்புகளின் தலைமைகள் அழிக்கப்பட்டுவிட்டன.எல்லா நவீன இலக்கியங்களிலும், கலாச்சாரங்களிலும் புதியன பல்கிப் பெருகிவிட்டன. நாம் ஒவ்வொருவரும் செய்யக்கூடியதெல்லாம் அவரவருடைய கருத்தியலான கிளாசிக்குகளின் நூலகத்தினைக் கண்டுபிடிப்பதுதான். அதன் ஒரு பாதி நாம் படித்துவிட்ட புத்தகங்களை கொண்டதாகவும், மறுபாதி நாம் படிக்க நினைத்திருக்கும் புத்தகங்களாலும் நிரம்பியிருக்க வேண்டும். நாம் காலிப் பகுதிகள் நிறைந்த ஒரு பிரிவினை ஆச்சரியங்களுக்கும், தற்செயலான கண்டுபிடிப்புகளுக்குமாக விட்டு வைக்க வேண்டும்.

லியோபார்டியின் ஒரு பெயரை மாத்திரமே இதாலிய இலக்கியத்திலிருந்து குறிப்பிட்டிருக்கிறேன் என்பதை என்னால் கவனிக்க முடிகிறது. இதுதான் நூலகம் சீரழிந்ததன் விளைவு. இப்பொழுது நான் இந்தக் கட்டுரையை மறுஆக்கம் செய்ய வேண்டும். செய்து நாம் யார் என்பதையும் நாம் எந்தப் புள்ளியை சென்றடைந்திருக்கிறோம் என்பதையும் புரிந்து கொள்வதற்கு கிளாசிக்குகள் உதவும் என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும். மேலும் இதன் விளைவாக இதாலிய கிளாசிக்குகள் வேற்று நாட்டு கிளாசிக்குகளுடன் ஒப்புமைப்படுத்த தவிர்க்க முடியாத தேவையாக இருக்கின்றன. அந்நிய கிளாசிக்குகள் சரிசமமான முக்கியத்துவமுள்ளவையாகின்றன இதாலிய கிளாசிக்குகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு.

அதன் பிறகு நான் நிஜமாகவே அதை மூன்றாவது தடவையாக திருத்தி எழுத வேண்டும்——ஏதோ ஒரு காரியத்திற்குப் பயன்படுவதால் கிளாசிக்குகளைப் படிக்க வேண்டும் என்பதை மக்கள் நம்பாமலிருக்கும் பொருட்டு. அவற்றின் சார்பாக எடுத்துச் சொல்லக் கூடிய ஒரே காரணம் என்னவென்றால் கிளாசிக்குகளைப் படிப்பதென்பது அவற்றைப் படிக்காமலிருப்பதை விட மேலானது.

மேலும் எவர் ஒருவராவது அந்த அளவுப் பிரயத்தனங்களுக்கு அவை

தகுதியற்றவை என்று ஆட்சேபித்தால் நான் சியோரான் என்பவரை மேற்காட்டுவேன். (ஒரு கிளாசிக் அல்ல, குறைந்தபட்சம் இன்னும் அப்படியாகவில்லை, ஆனால் தற்போது இதாலிய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு சமகால சிந்தனையாளர்) : ஹெம்லாக் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது புல்லாங்குழலில் சாக்ரடீஸ் ஒரு புதிய மெட்டினைக் கற்றுக் கொண்டிருந்தார். "அதனால் என்ன பயன் வரும் உனக்கு?" அவர்கள் கேட்டனர்: "குறைந்தபட்சம் நான் இறக்கு முன்னர் இந்த மெட்டினை கற்றுக் கொண்டிருப்பேன்."

குறிப்புகள்:

1.தூசிடைடிஸ்(471?-400கி.மு)

கிரேக்க வரலாற்றாசிரியர். தூசி[illegible]ஸ் தளபதியாக இருந்த கடற் படை ஆம்ஃபியோபோலிஸ் என்னுமிடத்தில் தோற்கடிக்கப்பட்டவுடன் அவர் நாடுகடத்தப்பட்டார். அவர் நாடுகடத்தப்பட்ட 20 வருடங்களை பெலோப்னீசியப் போர் பற்றிய ஆய்வில் ஈடுபட்டார். அவருடைய ஒரே நூல் **History of the Pelopnnesian War.** **"I lived through the whole war"** என்று அந்தப் புத்தகத்தில் அவர் எழுதினார். போர்களின் காரணங்களையும், கிரேக்க வரலாற்றினையும், அதில் வேண்டிய ஆவணங்களை ஆராய்ந்தும், நேரில் பார்த்தவர்களைச் சந்தித்தும், வருடாந்திர ஒழுங்கில் கோடை காலங்களையும் குளிர் காலங்களையும் அலசி அவரது தோல்விக்கான காரணங்களுக்கு வந்து சேர்கிறார். போரின் முழு 27 வருடங்களையும் **History of the Pelopnnesian War** இல் அவர் எடுத்துக் கொண்டிருந்த போதிலும் நூல் முடிவுக்கு வருமுன் இறந்து போனார்.

2.ஹெரோடோட்டஸ்(484-425 கி.மு)

கிரேக்க வரலாற்றாசிரியர். வரலாற்றின் தந்தை என்றழைக்கப்படுகிறார். ஏறத்தாழ கி.மு 457இல் பாரசீக ஆட்சிக்கு எதிராக சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு நாடு கடத்தப்பட்டவர். ஆசியா மைனர், பாபிலோனியா, எகிப்து வழியாக கிரேக்க நாடுகளைச் சென்றடைந்திருக்க வேண்டும். ஏதென்ஸ் நகரில் இறுதியாகக் குடியேறினார். வாழ்நாள் முழுவதையும் *ஹிஸ்டரி* என்ற தலைப்பிலான தனது உன்னதப் படைப்பை எழுதுவதில் செலவிட்டார். உரைநடையில் எழுதப்பட்ட முதல் படைப்பாக்கம் ஹிஸ்டரி என்று சொல்லலாம். எல்லாக் காலத்திய விமர்சகர்களின் பாராட்டினையும் பெற்ற இந்தப் படைப்பை பின்னாளில் வந்த புத்தகாசிரியர்கள் ஒன்பது பகுதிகளாகப் பிரித்தனர். முதல் ஆறு தொகுதிகள் உலக மக்களின் சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்கள், மற்றும் வீரதீரக் கதைகள், சரித்திரம் மற்றும் கலாச்சாரங்களைப் பற்றிப் பேசுகின்றன. கடைசி மூன்று தொகுதிகள் கி.மு. 5ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கிரேக்க நாட்டிற்கும் பாரசீகத்திற்கும்

நடந்த ஆயுதப் போர்களைப் பற்றிப் பேசுகின்றன.

## 3.ஸெய்ன்ட் சைமன் (1675-1755)

பாரிஸ் நகரில் பிறந்த பொதுவுடைமைவாதி. பதினாறாவது வயதில் அமெரிக்கப் புரட்சியில் பங்கேற்றுப் போரிட வேண்டி அமெரிக்க நாட்டிற்குச் சென்றார். மீண்டும் பிரான்சுக்குத் திரும்பியவர் தனது பட்டத்தைத் துறந்து பிரெஞ்சுப் புரட்சியை ஆதரித்தார். நவீன பொதுவுடைமைக் கோட்பாட்டின் நிறுவனர்களில் ஒருவராகக் கருதப்படும் இவரது படைப்பாக்கங்கள் அறிவியல் துறையிலும், பிற அறிவுத் துறைகளிலும் சிறந்து விளங்குபவர்களால் மொத்த சமூகத்தின் நலனுக்காகவுமாய் வழிநடத்தப்படும் ஒரு சமூக அமைப்பை ஆதரித்து அதற்கான வாதப் பிரதிவாதங்களை முன் வைக்கின்றன. "தொழில்மயமாதல்"(Industrialization) என்ற பதம் அவர் அறிமுகப்படுத்தியதுதான். போர் ஒழிப்பு, வறுமையை நீக்குதல், சமூகத்தை மேம்படுத்துதல் ஆகிவற்றுடன் கிறித்துவத்தையும் தொழில்மயமாக்கலையும் இவரால் இணைத்துச் சிந்திக்க முடிந்தது. ஸெயின்ட் சைமனின் மாணவர்கள் அவர் இறந்த பிறகு அவரது கருத்துக்களை ஒன்று திரட்டி பிரபலப்படுத்தினார்கள். புதிய கிறித்தவம் (Le Nouveau Chritianisme)1825 அவரது முக்கிய படைப்பாகும்.

## 4.பால்ஸாக் ஹொனொரே த (1799-1850 )

பிரெஞ்சு நாட்டு யதார்த்த நாவலாசிரியர். அவரது வாழ்க்கை புதினம் போலவும் புதினம் வாழ்க்கை போலவும் சில சமயங்களில் அமையப் பெற்றது. பால்ஸாக்கின் புதின உலகம் அவரது நிஜ உலகம் தரத்தவறியவற்றுக்கான ஒரு பதிலீடாக இருந்தது. பணம் பற்றிய கருத்தோட்டம் நாவல்கள் முழுக்கவும் இடம் பெறுகிறது-பிரதான பாத்திரங்கள் அவரைப் போலவே பணத்தையும் சமுதாய அந்தஸ்தைத் தேடியபடியும் சென்று கொண்டிருப்பவர்களாக இருக்கின்றனர். கடன் பட்டு கடன்காரர்களுக்குப் பணம் தர வேண்டியிருக்கும் பொழுது எழுதும் பழக்கம் பால்ஸாக்கிடம் உண்டு. ஒரு வார்த்தை கூட எழுதாமல் வெளியீட்டாளர்களிடமிருந்து பெருந்தொகையை முன்பணமாக வாங்கிவிடுவார். வியாபாரம் குறித்து தனது நாவல்களில் எல்லோரும் நம்பும்படியாக சிறப்பித்து எழுதியபோதிலும் அவரது தனிப்பட்ட பண விவகாரங்களை அவரால் சமாளிக்க இயலவில்லை. அவரது முதல் நாவலான The Last Chouan, The Human Comedy என்ற நாவல் தொடரின் முதல் நாவலாக அமைந்தது.The Human Comedy என்கிற தலைப்பே மறுமலர்ச்சிக்கால இதாலியக் கவிஞர் தாந்தேவின் டிவைன் காமெடி என்ற காவியத்திற்கு எதிரிடையாகத் தலைப்பிடப்பட்டிருக்கிறது என்பது கவனிக்கப்பட வேண்டும். The Human Comedy யின் பல கதைகள் 1820களில் பாரிஸ் நகரப் பின்னணியில் அமைந்துள்ளன. பல கதாபாத்திரங்கள் நாவல் தொடர்களில் மறுபடி வருகின்றன. அவை இந்தத் தொடர்ச்சியின் வேறு ஒரு நாவலில் உள்ள கதாபாத்திரங்களை அறிந்து வைத்திருப்பது நாவல்களுக்கிடையேயான ஒருமையைத் தருகிறது. இமானுவெல் ஸ்வீடன்போர்க் என்ற ஸ்வீடன் தேசத்திய விஞ்ஞானி-இறையியல்வாதியின் கோட்பாடுகளினாலும், ஆஸ்திரிய நாட்டு மனோவியல் அறிஞரான ஃபிரான்ஸ் மெஸ்மர் என்பவரின் கோட்பாடுகளினாலும் பால்ஸாக்குக்கு ஏற்பட்ட பாதிப்பு

அவரது தாயாரிடமிருந்து பெறப்பட்டதாக இருக்கலாம். பால்ஸாக் படிப்பில் நாட்டமில்லாதவராகயிருந்தார். தத்துவர்த்த விசாரணை மிக்க புத்தகங்களைப் படிப்பதில் மனதைப் பறிகொடுத்தார். யதார்த்த இலக்கியத்தின் முன்னோடியாக விளங்கிய பால்ஸாக் அறிவியலில் மிகுந்து ஈடுபாடு கொண்டவராக இருந்தார். பிரெஞ்சு விஞ்ஞானிகளின மிகச் சீரிய விஞ்ஞானக் கோட்பாடுகளின் தாக்கத்தினை அவரது படைப்புகள் எடுத்துரைக்கின்றன. Madame Hanska என்ற போலந்து நாட்டு சீமாட்டி அவர் வாழ்வில் அவருக்குக் கிடைத்த காதலிகளில் சிறந்தவராகத் திகழ்ந்தார். இறுதியாக அவரது மரணத்திற்கு சிறிது காலம் முன்பாக அவர்கள் மணம் புரிந்து கொண்டனர். பிரெஞ்சு சமூகத்தை விவரிப்பதாகவும், பிரதிபலிப்பதாகவும் தனது புதினங்கள் அமைய வேண்டுமென பால்ஸாக் விரும்பினார். அதற்கேற்ற வகையில் 17 நாவல் தொகுதிகளாலான படைப்பொன்றை உருவாக்கினார். அவரது காலகட்டத்தினைச் சேர்ந்த மனிதர்களின் வகைமாதிரிகளையும், பழக்க வழக்கங்களையும் பதிவு செய்யும்படி தனது புதினங்களை அமைத்தார் பால்ஸாக்.

## 5. மிஷல் ப்யூட்டர்(1936--)

நவீன பிரெஞ்சு புனைகதையாளர். மரபுசார்ந்த பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பாணி புதின இலக்கியத்தை மாற்றியமைப்பதற்கு பெரிய மாற்றங்களைக் கொண்டு வந்தவர்களில் மிக முக்கியமானவர். சோதனைப் புதின எழுத்துக்களில் அதிகம் ஈடுபட்டவர். சார்ஸ் பாதெலர் பற்றியும் மாண்ட்டெய்ன் பற்றியும் நீண்ட கட்டுரைகளை எழுதியிருக்கிறார். மிக இறுக்கமாகவும், புறவய வஸ்துக்களை மையப்படுத்தியும் (Object-Centereed), மானுடஉருவியல் எதிர்ப்புமிக்க(Anit-Anthropomorphic) சிக்கனத்துடன் எழுதிய பிரெஞ்சு நிவோவ் ரொமான்ஸ் வகை நாவல்களை எழுதிய அலென் ராபகிரியே, நதாலி சரோ ஆகியோரின் வரிசையில் முக்கிய இடத்தைப் பெறுகிறார் மிஷல் ப்யூட்டர்.

## 6.ஸோலா, எமிலி (1840-1902)

பிரெஞ்சு நாவலாசிரியர், கட்டுரையாளர் மற்றும் விமர்சகர். பிரான்ஸ் தேசத்தில் தோன்றிய நேச்சுரலிசம் என்ற இலக்கிய இயக்கத்தை ஆதரித்துப் பின்பற்றியவர்களில் முதன்மையானவர். பால்ஸாக் எழுதிய The Human Comedy அளித்த தூண்டுதலில் அதைப் போலவே 20 நாவல்கள் அடங்கிய ஒரு தொடரினை Le Rougan Macquart தனது நேச்சுரலிச கோட்பாட்டின் பின்னணியில் உருவாக்கினார். ஸோலாவின் நேச்சுரலிஸம் பற்றிய கருத்துக்களை The Fortune of the Rougans(1871) என்ற நாவலுக்கு எழுதிய முன்னுரையிலும் The Experimental Novel (1880) என்ற புத்தகத்திலும் காணலாம். ஒரு ஆய்வுக் கூடத்தின் அணுகல்களையும் ஆய்வுகளையும் நாவலானது பிரதிபலிக்க வேண்டும் என்றார் ஸோலா. கதாபாத்திரங்கள் சமூகவியல், மனோவியல் மற்றும் பாரம்பரியத்தின் விதிகளை அனுசரித்து படைக்கப்பட வேண்டுமென்றார். தன்னுடைய புத்தகங்களில் இடம்பெறும் பகுதிகளுக்கு நேரில் சென்று மனிதர்களின் நடத்தைகளை ஆராய்ந்து குறிப்பெடுத்துக் கொள்வது இவர் வழக்கம். Le Rougan Macquart தொடரில் உள்ள நாவல்களில் The-Dram Shop (1877) Germinal(1885) ஆகிய இரண்டும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மிகச் சிறந்த புதினங்களாகக் கருதப்படுகின்றன. Nana என்கிற நாவல் அதன் போர்னோகிராஃ

பித்தன்மைகளுக்காகப் அவர் காலத்தின் பெரிது படுத்தப்பட்டாலும் இன்று அது சாதாரணமாகத்தான் தெரிகிறது. ஒரு வேசியின் வாழ்க்கையை மிகவும் கருணைமிக்க புரிதலுடன் இதில் ஸோலா படைப்பாக்கினார். இதுவும் 1928இல் எழுதப்பட்ட **Drunkard** நாவலும் பாரிஸ் சேரி வாழ்க்கையை தத்ரூபமாகப் பிரதிபலிக்கிறது.

### 7.ரூகன்-மாக்வா(Rougon-Macquart) தொடர்ச்சி

எமிலி ஸோலாவின் நாவல் தொடர்ச்சியான **Rougon-Macquart (1871-93)** பிரெஞ்ச நேச்சுரலிச இயக்கத்தின் பிரதான நினைவுச் சின்னமாக விளங்குகிறது. நாவலுக்கு அவர் அளிக்க நினைத்த அறிவியல்பூர்வமான கண்ணோட்டமும், மனித நடத்தையை பாரம்பரியம் மற்றும் சூழ்நிலைகளால் தீர்மானித்து கணிக்கும் விதமும் இதில் ஸோலாவின் பிரதான அக்கறைகளாக இருந்தன.

### 8.தாஸ்தாயெவ்ஸ்கி ( 1821-1881 )

தலைசிறந்த ரஷ்ய நாவலாசிரியர். அவரது மரணத்திற்குப் பிறகே அவரை ஆங்கிலம் பேசும் உலகம் அவரை அறிந்து கொண்டது. இலக்கிய உலகில் அவரது தாக்கம் நின்று நிலைத்திருக்கிறது. இருபதாம் நூற்றாண்டின் உலகத்தை, லட்சியக் கனவிற்கு எதிரிடையான பூமியை இவரது எழுத்துக்கள் தீர்க்கதரிசமாக முன்வைக்கிறார். பெயர் பெற்ற உளவியல் நிபுணர் ஸிக்மண்ட் ஃபிராய்ட் தாஸ்தாயெவ்ஸ்கியின் படைப்புலகம் முன்வைக்கும் நனவிலி மனதின் இயக்கங்கள், மற்றும் மனித மனதின் நுட்பங்கள், சிடுக்குகள் முதலியவற்றால் ஈர்க்கப்பட்டவர் என்பவர் மிக முக்கியமான செய்தி. எங்ஙனம் ஒரு அறிவுத்துறையை ஒரு படைப்பாளனின் எழுத்துக்கள் பாதிக்கச் செய்ய முடியும் என்பதற்கு மிக முக்கிய எடுத்துக்காட்டாக விளங்குகின்றன தாஸ்தாயெவ்ஸ்கியின் எழுத்துக்கள். கடவுளில்லாத உலகத்தின் இன்னொரு பரிமாணமும் இவரது எழுத்துலகில் காணக்கிடைக்கிறது. 19ஆம் நூற்றாண்டினைப் பின்னணியாக வைத்து உருவானவை என்ற போதிலும் அவரது எழுத்துக்கள் 20ஆம் நூற்றாண்டிற்கும் பொருந்தக் கூடியவையாக இன்றும் விளங்குகின்றன என்பது அவரது படைப்பாக்கத்திற்கு ஒரு சான்று. அந்நியமாதல், சமூகம்சார்ந்த சீர்குலைவுகள், யதேச்சதிகாரம், மனித விடுதலை மீதான அதன் தாக்கங்கள் என அவருடைய படைப்புகள் தற்காலத்திய வாழ்வுச் சிக்கல்கள் பலவற்றை அலசுவதாகத் தெரிகின்றன. **The Crime and Punishment, The Posseseed, Brothers Karamazov**ஆகியவை அவரது முக்கிய நாவல்களாகும். சிறு கதை எழுத்துக்களிலும் தன் முத்திரையைப் பதித்திருக்கிறார் தாஸ்தாயெவ்ஸ்கி. பெரும்பாலும் மிகுந்த நெருக்கடியில்தான் அவரது எழுத்துக்கள் உருவாயின. கடன்காரர்கள் நெட்டித் தள்ளும் போதுதான் அவர் எழுத்தை உத்வேகத்துடன் எழுதத் தொடங்கினார். பண நெருக்கடியில் எழுதப்பட்டவை என்ற காரணத்தினால் அவை என்றும் கிஞ்சித்தும் தரம் தாழ்ந்து போய்விடாதவை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். பணத்துக்காக எழுதுதலும் பணநெருக்கடியில் எழுதுதலும் ஒன்றல்ல.

### 9:துர்கனேவ், இவான் ஸெர்கயேவிச் (1818-1883)

ரஷ்ய எழுத்தாளர், ரஷ்ய எழுத்து நடைக்குப் பெயர் பெற்றவர். தனித்துவமிக்க 'பாணி'யின் முன்னோடி என்று கூறலாம். அவருடைய புதினங்கள், கவிதைகள், நாடகங்கள் எல்லாமே நயங்கூடிய

செய்நேர்த்தியாலும், விரிந்த, சமனப்பட்ட கண்ணோட்டத்தினாலும், தெளிவான புரிதலாலும் சிறப்புப் பெறுகின்றன. 1818ஆம் ஆண்டு நவம்பர் 9ஆம் தேதி மத்திய ரஷ்யாவில் உள்ள ஓரெல் பகுதியில் பிறந்த துர்கனேவ், செயின்ட் பீட்டர்ஸ்பர்க் மற்றும் மற்றும் பெர்லின் பல்கலைக் கழகங்களில் படித்துப் பட்டம் பெற்றார். தனது பிள்ளைப் பிராயத்தில் அடிமைத் தொழிலாளிகளின் கஷ்டங்களை நேரில் பார்த்ததால் அதுவே அவரது பெரும்பாலான படைப்புகளின் முக்கியக் கதைக் கருவாகியது. முழு நேர இலக்கியவாதியாக மாறுவதற்கு முன் சிறிது காலம் அரசுப் பணியில் இருந்தார். முதலில் கவிஞராக அறிமுகமாகிய துர்கனேவ் நாடகங்களையும் எழுதியிருக்கிறார். பிறகுதான் புதின எழுத்தில் கவனம் செலுத்த ஆரம்பித்தார். **First Love** *(1850)*, **Torrents of Spring** *(1872)* ஆகிய நாவல்கள் காதலைப் போற்றிப் பரவும் அற்புதப் படைப்புகள். எனினும் அவரது தலைசிறந்த படைப்பாகக் கருதப்படுவது 1862ஆம் ஆண்டு வெளிவந்த **Fathers and Sons**. 1883ஆம் ஆண்டு காலமான துர்கனேவின் அனைத்துப் படைப்புகளும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

## 10. மல்லார்மே, ஸ்டெபன் *(1842-1898)*

பிரெஞ்சு சிம்பாலிஸக் கவிஞர்களில் (ஆர்தர் ரைம்போ, பால் வெலேரி, பாதெலர்) மிக முக்கியமானவர். எட்கர் ஆலன் போ என்கிற அமெரிக்க எழுத்தாளரின் எழுத்துக்களைப் படிப்பதற்கு வேண்டி ஆங்கிலம் கற்றுக் கொண்டார். அவரது பிரதான வாழ்க்கையை இங்கிலாந்தில் ஒரு ஆசிரியராகக் கழித்தார். 1800ஆம் ஆண்டு காலத்தில் சிறிய இலக்கியக் குழுக்களில் குரு ஸ்தானம் தரப்பட்டவர். பாதெலெர் என்ற பிரெஞ்சுக் கவிஞரின் பாதிப்பலிருந்து மீண்டு தனக்கான ஒரு கவிதை எழுதுதல் முறையை உருவாக்கிக் கொண்டார். குறிப்பாக கவிதையின் மொழிக்கும் இசையின் மொழிக்குமான சில இடைவெளிகளில் தனது கவிதைகளில் முழுமுற்றாக அகற்றப்பார்த்தார். எனவே அவரது கவிதைகள் பல புரியாமல் போயின. அவரது கொள்கைப்படி வார்த்தைகளுக்கான பிரத்யேக இசையை ஒரு கவிஞன் கண்டடைய வார்த்தைகளையும் இசையையும் அவன் தெரிந்திருத்தல் வேண்டும் என்று நினைத்தார் மல்லார்மே. அவரது கருத்துக்களுக்கு விளக்கமூட்டும்படி சிறிய கட்டுரைகளையும் எழுதினார். அவருடைய **Afternoon of a Faun** *(1876)*க்கு டெபுஸி என்ற இசை மேதை ஒரு சாகியத்யத்தை எழுதியதை இங்கு குறிப்பிட வேண்டும்.

## 11. பிக்விக் பேப்பர்ஸ்

பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆங்கில நாவலாசிரியரான சார்ல்ஸ் டிக்கன்ஸ் எழுதிய மிகவும் நகைச்சுவையான நாவல். திருவாளர் பிக்விக் என்பவரின் சாகசங்களை விரிவாகச் சொல்லும் நாவல் இது.

## 12. லுக்ரெஷியஸ் *(95- 55.கி.மு)*

ரோமானியக் கவி. அவரது **On the Nature of Things** ஆறு தொகுதிளாலான கவிதைகள். கிரேக்க நாட்டு தத்துவாதியான டெமாக்கிரட்டஸ் மற்றும் எப்பிக்யூரஸ் ஆகிய இருவரின் தத்துவார்த்த மெய்ம்மைகளை விரித்துரைக்கிறது. லுக்ரெஷியஸ் கடவுள்களின் இருப்பை மறுக்கவில்லை என்றாலும் கூட அவர்களுக்கு மனிதர்களின் விவகாரங்களிலோ அல்லது வாழ்வுப் போக்குகளிலோ அக்கறையில்லை என்று கருதினார். **On the Nature of Things** என்ற அவரது படைப்பின் மிகப் பெயர் பெற்ற பகுதிகளில் ஒன்று.

கூர்கால மனிதனின் வாழ்க்கையையும் படிப்படியான மனித நாகரீக வளர்ச்சியையும் பதிவு செய்கிறது.

## 13. லூஸியன் (120-180 ஏறக்குறைய)

கிரேக்க எழுத்தாளர் மற்றும் பேச்சாளர். அங்கதச் சுவை மிகுந்த உரையாடல் பாணியை கிரேக்க இலக்கியத்தில் கொண்டு வந்ததற்காக பெயர் வாங்கியவர். துருக்கியலுள்ள ஸமோஸோட்டாவில் பிறந்தவர். பேச்சாற்றல் மற்றும் தத்துவம் ஆகியவற்றில் ஆரம்பத்திலிருந்து தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். அவரது அங்கதச் சுவை மிகுந்த எழுத்துக்கள் குறிப்பாக மூடநம்பிக்கைகளையும், போலியான தத்துவார்த்தப் போதனைகளையும் நையாண்டி செய்தன. **Dialogue of the Gods , Dialogues of the Dead The Sale of Lives** முதலியவை அவரின் மிகச் சிறந்த படைப்புகள். லூஸியனின் எழுத்து ஆற்றொழுக்கான, மணிப்பிரவாளமான கிரேக்க உரைநடையாகத் திகழ்ந்தது குறிப்பிடத்தக்கது.

## 14. மாண்ட்டெய்ன் மிஷல் எக்வீம் (1553-1592)

கட்டுரையை ஒரு இலக்கிய வடிவமாக அறிமுகப்படுத்தி அதற்குரிய இலக்கிய அந்தஸ்தத்தைப் பெற்றுத் தந்தவர் மாண்ட்டெய்ன். அவரது இலக்கியப் பங்களிப்பின் பெரும்பகுதி கட்டுரைகளாகவே இருக்கின்றன. 1580இல் அவரது எழுத்துக்களின் முதல் இரண்டு தொகுதிகள் வெளியாகின. பிறகு மூன்றாவது கட்டுரைத் தொகுதி ஒன்றையும் வெளியிட்டார். இவை யாவும் **Essays** தலைப்பிலான அவரது நூல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

## 15. எராஸ்மஸ், டெஸிடெரியஸ் (1466?-1563)

டச்சு நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர், அறிஞர் மற்றும் மனிதநேயவாதி மற்றும் இதாலிய மறுமலர்ச்சியின் முக்கிய அறிவார்த்தப் போக்குகளை வடக்கு ஐரோப்பாவிற்கு பொருள்பெயர்த்துத் தரும் பிரதான மொழிபெயர்ப்பாளரும் கூட. எராஸ்மஸின் எழுத்துக்கள் வட ஐரோப்பா முழுவதிலுமாய் வழக்கத்திலிருந்து வந்த கலாச்சாரத்தின் மீது தாக்கம் ஏற்படுத்தி மாற்றங்களைக் கொண்டு வந்தது. **The Praise of Folly** (1509).**Quentin Massys** என்ற **Flemish** ஓவியரின் ஓவியத்திற்குத் தூண்டுகோலாய் அமைந்தது. இது எராஸ்மஸ் பிற படைப்பாளிகளிடம் ஏற்படுத்திய பாதிப்பிற்கு ஒரு சிறந்த உதாரணம்.

## 16. க்யூவெடோ, வில்லாகாஸ் ஃபிரான்சிஸ்கோ (1580-1645)

ஸ்பெயின் தேசத்து எழுத்தாளர். 1613 முதல் 1620 வரை இத்தாலிக்கான ராஜதந்திர பணிகளில் ஈடுபட்டிருந்தார். 1623 இல் ஸ்பெயினுக்குத் திரும்பி வந்ததும் 1632இல் நான்காவது ஃபிலிப் மன்னரின் செயலராக நியமிக்கப்பட்டார். ஆனால் மன்னருக்கு எதிராக அரசியல் அங்கத எழுத்துக்களை எழுதியதற்காக 1639 முதல் 1643வரை வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார். அவருடைய காலத்தின் மிகச் சிறந்த இலக்கியவாதிகளில் ஒருவராய்த் திகழ்ந்த க்யூவெடோ அங்கதச் சுவை மிகுந்த எழுத்துக்களுக்கும் ஒழுக்கவியல் சார் எழுத்துக்களுக்கும் பெயர் பெற்றவர். .. என்றழைக்கப்படும் அணியலங்கார எழுத்து நடையில் சிறந்த தேர்ச்சி பெற்றவராயிருந்தார். இதில் முரண்களும் சிலேடைகளும் கலந்திருந்தன. **Life and Adventures of Buscon**(1626) மற்றும் **Visions**(1657) ஆகியவை க்யூவெடோவின் முக்கியப்படைப்புகளில் சிலவாகும்.

## 17. மார்லோ, கிறிஸ்டோபர் *(1564-1693)*

ஷேக்ஸ்பியரின் சமகாலத்தவர், ஆங்கிலக் கவி, நாடகாசிரியர். ஒரு நாடகாசிரியராக ஆறு வருடங்கள் மாத்திரமே இயங்கி வாழ்ந்த போதிலும் அவருடைய அளப்பரிய படைப்பாற்றல் காரணமாக தலைசிறந்த நாடகாசிரியராகக் கருதப்படுகிறார். அவருக்கு முந்திய நாடகாசிரியர்கள் நகைச்சுவையில் கவனம் செலுத்தினார்கள். ஆனால் மார்லோ அவலச்சுவையைக் கையிலெடுத்துக் கொண்டு அதை சிறந்த நாடக ஊடகமாக வளர்த்தெடுத்தார். **Doctor Faustus** என்ற அவருடைய நாடகத்தில் வரும் கதாநாயகன் சகல துறை அறிவினையும் அடைவதற்காய் சாத்தானிடம் தனது ஆன்மாவை அடகு வைக்கிறான். எல்லாவற்றையும் கண்டு, அனுபவிப்பவன் இறக்கும் தருணம் நெருங்க நெருங்க, உயிர் வாழும் ஆசையில் துடித்துப் புலம்புகிறான். இந்தப் பின்புலத்திலான நாடகத்தில் வாழ்க்கை பற்றி தத்துவங்களும் விசாரணைகளும் மிக நுட்பமான கவித்துவத்தோடு இடம்பெற்றிருக்கின்றன. இந்தப் படைப்பு மார்லோவின் எழுத்தாற்றலின் உச்சமாகக் கருதப்படுகிறது.

## 18. ரஸ்கின், ஜான்: *(1819-1900)*

பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆங்கில விமர்சகர் மற்றும் உரைநடை எழுத்தாளர். ஆங்கில ஓவியரான வில்லியம் டர்னர் என்பவரின் ஓவியங்களால் பாதிக்கப்பட்டவர். காந்தியைப் பாதித்த பொருளாதார சிந்தனையாளர். கலையை மதத்திற்கு பதிலியாக ஆக்க முயன்றவர்களில் முக்கியமானவர் ரஸ்கின். அவரது முக்கியமான உரைநடை எழுத்துக்கள்: **Modern Painters, The Seven Lamps of Architecture, The Stones of Venice, Unto this Last.**

## 19. சாமுவெல் டேலர் கோல்ரிட்ஜ் *(1772-1834)*

ஆங்கிலக் கவி, விமர்சகர், மற்றும தத்துவவாதி. ரொமாண்டிக் இலக்கியத்தின் தந்தை என்று இவரைக் கூறலாம். 1795இல் வொர்ட்ஸ்வொர்த் மற்றும் அவரது சகோதரி டோரதியுடன் ஏற்பட்ட நிலைத்த நட்பு காரணமாக இரு கவிஞர்களுமாக **Lyrical Ballads** என்ற பின்னாளில் ஆங்கில கவிதை வரலாற்றில் மைல்கல்லாக மாறிய கவிதைத் தொகுதியை வெளியிட்டனர். 1797-98 வருடங்களின் காலகட்டத்தில் குப்ளைகான் மற்றும் கிரிஸ்டபல் போன்ற அற்புதமான கவிதைகளை எழுதினார். இலக்கியம் மற்றும் தத்துவம் சார்ந்த சொற்பொழிவுகளையும் 1808-1819 வருடங்களின் போது ஆற்றினார். போதைப் பொருள் சாப்பிடும் பழக்கத்தால் குடும்பத்திலிருந்து பிரிந்து வாழ நேர்ந்த போது தனது வாசகரும் மருத்துவருமாகிய ஜேம்ஸ் கில்மேன் வீட்டில் தங்கி **Biographia Literaria***(1817)* என்ற அற்புதப் படைப்பை எழுதினார். ஏறத்தாழ மிகச் சிறந்த சமூகவியல் விமர்சனம் முதன் முதலாக இங்கிலாந்தில் உருவாவதற்கு இந்த நூலே காரணமாக இருந்தது எனலாம்.

## 20. Wilhelm Meister

ஜான் கதே(1749-1832) என்ற பத்தொன்பதாம் நூற்றாண்டு ஜெர்மானியக் கவிஞரின் அதிகம் சுயசரிதமாகத் தெரியக் கூடிய முக்கியமான நாவல். வெளிவந்த வருடம் 1795.

## 21. மார்செல் ப்ரூஸ்(ட்) *(1871-1922)*

பிரெஞ்சு நாவலாசிரியர். பல தொகுதிகளால் ஆன, சோதனைப் புதினத்திற்கு எடுத்துக் காட்டாகக் காட்டப்படும் **Remembrance of Things Past** என்ற படைப்பை எழுதியவர். இந்த பலதொகுதி நாவல் உலக

இலக்கியத்தின் மிகப் பெரிய சாதனைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. 1871ஆம் ஆண்டு பிரான்சில் ஒரு வசதியான குடும்பத்தில் பிறந்த ப்ரூஸ்ட் சட்டம் பயின்றாலும் இலக்கியத்தையே தனது முழு நேர வேலையாக எடுத்துக் கொண்டார். சிறு வயதிலிருந்தே ஆஸ்துமாவினால் பாதிக்கப்பட்டிருந்த அவர் தனது 35வது வயதில் நோய் முற்றி படுத்த படுக்கையாகினார். எஞ்சிய வாழ்நாள் முழுவதும் அவரது மகோன்னத படைப்பான **Remembrance of Things Past** எழுதுவதில் முனைந்தார். உயர் சமூகத்தில் ஓய்வாக இருக்கும் ஒரு மனித மூளையின் இயக்கங்கள் மிக நுண்மையாக இவரது படைப்புகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஏழு தொகுதிகளான இந்த படைப்பில் உளவியல் மற்றும் தத்துவார்த்த கண்ணோட்டங்கள் முனைப்பட்டுத் தெரிகின்றன. பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது இந்தப் புதினம். 1922ஆம் ஆண்டு ப்ரூஸ்ட் இறந்த போது மேற்சொன்ன படைப்பின் இறுதி மூன்று புத்தகங்கள் கையெழுத்துப் பிரதிகளாகவே இருந்தன.

## 22. பால் வெலேரி (1871-1945)

நவீன பிரெஞ்சுக் கவிஞர் மற்றும் விமர்சகர். கவிதைக் கொள்கையாளர். கவிதை வடிவிலும் சரி, உரைநடையிலும் சரி, மிகச்சிறந்த நவீன தத்துவார்த்தப் படைப்பாளிகளில் ஒருவராகக் கருதப்படுபவர். சிந்தனைக்கும் செயலுக்குமிடையிலான மோதல் கலாபூர்வமாக தீர்க்கப்படுவதன் மூலம் வாழ்க்கையின் அர்த்தத்தை நாம் பெறும் விதத்தில் அவருடைய படைப்புகள் இயங்குகின்றன. வெலேரி 1892இல் பாரிசில் குடியேறினார். அங்கே சிம்பாலிசக் கவிஞர்களில் முக்கியமானவரான ஸ்டெபென் மல்லார்மே என்பவரின் வட்டத்தில் இணைந்து கொண்டார். 1889-1898 ஆகிய வருடங்களுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் எழுதப்பட்ட வெலேரியின் கவிதைகளில் சிம்பாலிஸ்டுகளின் தாக்கத்தைக் காண முடிகிறது. கவிதையை மிகச் சிறந்த படைப்பாக்க உத்தியாக வெலேரி கருதினார். அரூப சிந்தனைகளுக்கு தனது கவிதைகளில் உருவம் தர முயன்றார். எனவே வெலேரியின் எழுத்துக்கள் அடர்வு கூடியதாய், எளிய புரிதலுக்கு அப்பாற்பட்டவையாக இருக்கின்றன.

## 23. லேடி முராஸாகி (அ) முராஸாகி ஷிபுகு (978?-1026)

ஜப்பானியப் பெண் எழுத்தாளரான முராஸாகி ஷிபுகு உலகின் முதல் நாவல் என்று கருதப்படுகிற **The Tale of Genji** எழுதியவர். இந்த நாவல் 1925-32விற்கு இடைப்பட்ட காலகட்டத்தில் ஆர்தர் வாலே என்பவரால் முதன் முதலாக ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. முராஸாகியின் வாழ்க்கை பற்றி அதிக விவரங்கள் அறியக் கிடைப்பதில்லை. ஃப்யூஜிவாரா நோபுடாக என்பவரை மணந்திருந்தார் என்பதும் அரசவை வாழ்க்கை பற்றிய விவரங்களடங்கிய நாட்குறிப்பு ஒன்றை பராமரித்து வந்திருந்தார் என்பதும், தன் கணவரின் இறப்புக்குப் பிறகு அந்த விவரங்களை புதினமாக வடிவமைத்ததாகவும் தெரிய வருகிறது. அரசி அகிகோவின் ஆட்சிக் காலத்திலான அரசவை வாழ்க்கையைப் பற்றிய துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டுகிறது இந்த நாவல். இளவரசர் ஜெஞ்சியின் வாழ்க்கையில் இடம் பெறும் பெண்கள் தனித்தனியளவில் நுட்பமாகப் படம் பிடித்துக் காட்டப்படுகிறார்கள். நாவல் இறுதிப் பகுதியை நோக்கி வர வர கதையின் தொனி முதிர்வும், தீவிரமும் கூடியதாகிறது. இக வாழ்க்கையின் கணநேர சந்தோஷங்களைப் பற்றிய பௌத்தமதக் கண்ணோட்டங்கள் கதையின் பிற்பகுதியில் இடம் பெறுகின்றன. இன்றளவும் முராஸாகி

ஜப்பானிய இலக்கியத்தின் மிகச் சிறந்த படைப்பாளிகளில் ஒருவராகப் போற்றப்படுகிறார்.

## 24.சாகாக்கள்(Sagas)

சாகாஸ் என்பவை மத்தியகால கட்டத்தில் ஐஸ்லாந்தில் நூற்றுக் கணக்காகத் தோன்றிய வாய்மொழிக் கதைகள். சாகா என்ற வார்த்தைக்கு "சொல்லுதல்" என்று பொருள். நார்வீஜிய மன்னர்கள் மற்றும் வீரபராக்கிரமங்கள் நிறைந்த நிஜ அல்லது கற்பனைக் கதை மாந்தர்கள், ஐஸ்லாந்து மற்றும் ஸ்காண்டிநேவியாவைச் சார்ந்த மன்னர்களைப் பற்றி உரைநடையில் எழுதப்பட்டவை. இவற்றின் ஆசிரியர்கள் அடையாளம் காணப்படவில்லை. பல கதை சொல்லிகளின் மூலமாகச் சொல்லப்பட்ட பிறகே இவை எழுத்து வடிவத்திற்கு வந்திருக்க வேண்டும். மூலக் கையெழுத்துப் பிரதிகள் ஒன்று கூட மிஞ்சவில்லை. திருத்தங்களும், இடைச்செருகல்களும் கூடிய பிரதிகள் 13ஆம் நூற்றாண்டிலிருந்து பெறக் கிடைக்கின்றன

## 25.லியோபார்டி, கியோகோமா (1798-1837)

இதாலியக் கவிஞர், அறிஞர் மற்றும் மாபெரும் படிப்பாளி. இவரது படைப்பாக்கங்களில் நம்பிக்கையின்மை என்கிற அம்சம் தீவிரத்தன்மையுடன் இடம் பெறுகிறது. கூடவே இவரது கவிதைகளில் கச்சிதமான வடிவமைப்பும் நுட்பமான அறிதலும் காணக்கிடைக்கின்றன. ரெக்காண்ட்டி என்னுமிடத்தில் பிறந்த லியோபார்டி பள்ளிக்கு அனுப்பப்படாமல் வீட்டிலேயே ஆசிரியர் வரவழைக்கப்பட்டு கல்வி கற்பிக்கப்பட்டார். ஒரு எல்லைக்குப் பிறகு தனக்குத் தானே லியோபார்டி பயிற்றுவித்துக் கொண்டார். அவரது பலவீனமான உடல்நலம் எல்லையற்ற படிப்பினால் மேலும் சீர் குலைந்தது. லியோபார்டியை தாமதமாக ரொமாண்டிக் காலத்தில் வந்து சேர்ந்த கிளாசிசிஸ்ட் என்று கூறுவது பொருந்தும். காரணம் அவரது எழுத்துக்களில் கட்டுப்பாடும், தெளிவும், உத்திரீதியான பூரணமும் இருந்தது. இவர் தனது தேசப்பற்று மிக்க கவிதையான **All Italia** *(1818)* மூலம் எழுத்துலகத்தின் கவனத்தை ஈர்த்தார். பின் தனது கவித்துவத்தின் மூலம் 19ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த உணர்வெழுச்சிக் கவிஞராக உயர்ந்தார். இடைக் கால கவிதையமைப்பை ஒற்றி எழுதப்பட்ட அவரது தீர்க்கதரிசனக் கவிதையான **Approach of Death** *(1816)* அவரது மகிழ்ச்சியற்ற குழந்தைப் பிராயத்தின் அவலமான தனிமையை வெளிப்படுத்துகிறது. காதலில் ஏற்பட்ட 'ஏமாற்றம் 'ஸில்வியாவுக்கு' என்ற ஆரம்ப காலக் கவிதையைத் தோற்றுவித்தது. காதலில் ஏற்பட்ட தோல்வி பின்னாளில் அவரது மிகத் துயரமான கவிதைகளுக்குக் காரணமாகியது. கவிதைகளில் வெளிப்படுத்திய சிந்தனைகளையே சற்றும் குறைக்காமல் தனது கட்டுரைகளிலும் வெளிப்படுத்தினார். அவை **Operette morali** *(1827)* என்ற பெயரில் வெளிவந்தன.

## 26.ஸ்டெந்தால் (1783-1842) (Stendhal)

இது மேரி ஹென்ரி பெய்ல் என்ற பிரெஞ்சு நாவலாசிரியர் மற்றும் இலக்கிய விமர்சகரின் புனைப் பெயராகும். 1800களின் மிக முக்கிய பிரெஞ்சு நாவலாசிரியர்களில் ஸ்டெந்தாலும் ஒருவர். அவரது முக்கிய ஆக்கங்களாக **sThe Red and the Black** *(1830)* மற்றும் **The Charter House of Parma***(1839)* ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இரண்டிலுமே அந்நியமாக்கப்பட்ட கதாநாயகர்கள் ஒடுக்குமுறை கூடிய சம்பிரதாயங்கள், பழக்கவழக்கங்களை எதிர்த்தபடியே மகிழ்ச்சியைத் தேடிச் செல்கின்றனர். ரொமாண்டிக் இயக்கத்தின் ஒரு

அங்கத்தினராக ஸ்டெந்தால் கருதப்பட்டாலும் இந்த இரு படைப்புகளும் அவரை பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் வரிசை யதார்த்தவாதிகளில் ஒருவராக நிறுவுகின்றன. பெரும் சக்திகளுக்கு எதிராய் தனிமனிதனின் கையறுநிலை பற்றிய அவரது சிந்தனைகள் அவரது படைப்புகளை செழுமைப் படுத்தின. நீட்ஷே முதலான தத்துவவாதிகள், மார்செல் ப்ரூஸ்ட், ஆல்பெர் காம்யூ முதலான படைப்பாளிகளும் ஸ்டெந்தாலின் எழுத்துக்களாலும் சிந்தனைகளாலும் பெரிதும் எழுச்சியூட்டப்பட்டவர்கள். ஸ்டெந்தாலின் கதாபாத்திரங்கள் அவர் வாழ்ந்த காலத்தை பிரதிபலிப்பவையாக அமைந்தன.

★ரூஸோ ழீன் ழாக் *(1712-1778)*

பிரெஞ்சு தத்துவஞானி, சமூக மற்றும் அரசியல் கருத்தியலாளர், இசைக் கலைஞர், தாவரவியலாளர். என்லைட்டன்மென்ட் காலகட்டத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவர். பிரதானமாக ரூஸோ அரசியல் சிந்தனைப் பாங்கான எழுத்துக்களுக்கு பெயர் பெற்றவர் **On Social Contract** *(1762)* என்ற நூலில் மக்கள் தங்களுக்கிருக்கும் சுதந்திரத்திற்கான, பிரிக்கவியலாத உரிமைகளைத் தக்க வைத்துக் கொண்டிருக்கும் நேரடி ஜனநாயக ஆட்சி நிலவும் ஒரு கற்பனை உலகத்தைச் சிருஷ்டிக்கிறார். எமிலி(1762) என்ற சீரிய நாவலில் சுய சிந்தனையும், மனச் சமன்நிலையும் உள்ள குழந்தைகளை உருவாக்கவென ஒரு புதிய கல்விக்கோட்பாட்டினை முன் வைக்கிறார். அவருடைய புதுமையான கருத்துக்கள் அவரை பிரெஞ்சு மற்றும் ஸ்விஸ் நாடுகளின் அதிகார வர்க்கதினரின் அதிருப்திக்கு ஆளாக்கின.

*27.ஃபொன்டெனெல், பெர்னார்ட் (1657-1757)*

பிரெஞ்சு எழுத்தாளர், விஞ்ஞானி. சட்டம் பயின்ற போதிலும் இலக்கியத்தை தனது முழு நேரப் பணியாகத் தெரிவு செய்து கொண்டார். முப்பது வயதை எட்டுவதற்குள் அவர் பல நாடகங்கள், இசைநாடகங்கள், சிறுகதைகள், உரையாடல்கள் மற்றும் விஞ்ஞானம் மீதான ஆய்வலசல் கட்டுரைகள் ஆகியவற்றை எழுதியிருந்தார். **Dialogues of the Dead***(1683)* என்ற அவரது படைப்பு அவரை எழுத்துலக மேதையாக நிறுவியது. 1699 முதல் 1739 வரை அறிவியல் கழகத்தின் செயலராகப் பணிபுரிந்த ஃபான்டெனெல் அகாதெமியின் வரலாறு சம்மந்தமான பல ஆக்கங்களை எழுதினார். **Discourses on the Plurality of Worlds***(1686)* என்ற அவரது மிகச்சிறந்த படைப்பில் அவர் கோபர்னிக கோளியங்கு கோட்பாட்டினை மிகச்சிறந்த இலக்கிய வடிவில் வழங்கியிருந்தார்.

*28.பஃபன், ஜார்ஜ் (1707-1788)*

பிரெஞ்சு நாட்டின் இயற்கையியல்வாதி. (**Naturalist**) பைபிளை அடிப்படையாகக் கொள்ளாத, உடலியல் மற்றும் பூமி அமைப்பியல் பற்றிய உலகளாவிய வரலாற்றின் மிக ஆரம்பகால எழுத்துக்களை எழுதியவர். மருத்துவம், தாவரவியல் மற்றும் கணிதம் பயின்றவர். 1749க்கும் 1789க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் பிரசுரமான 36 தொகுதிகள் கொண்ட அவரது **History Naturelle (Natural History)** பஃபனின் தலை சிறந்த படைப்பாகும். பூமியின் வரலாறு பற்றிய முதல் நேச்சுரலிச விவரணைக் குறிப்பேடு இது. தாவரவியல், கனிமவியல், விலங்கியல் போன்றவற்றின் உற்பத்திகளை முழு விவரங்களை இந்தப் புத்தகம் அகல்விரிவாகத் தருகிறது.

# ஒருபாத்திரம் இரு சிறுகதைகள்

ஆங்கிலத்தில் தந்தவர்

## ஜெய் ரதன்

Inidian Literature, இதழிலிருந்து தமிழ்வடிவம்

## சா. தேவதாஸ்

பகலில் கதை கேட்டால் பயணிகள் வழி தவறிவிடுவர் என்னும் நம்பிக்கை பஞ்சாப், வங்காளம் போன்ற பகுதிகளில் நிலவுகிறது. இதை வைத்து உருதுவில் இரண்டு சிறுகதைகள் எழுதப்பட்டன. இரண்டிலும் ஒரு சிறுவனே முக்கிய பாத்திரம்.

முப்பதுகளில் எழுதப்பட்ட ராஜீந்தர் சிங் பேதியின் சிறுகதை, பகலில் கதை கேட்டதால், வழி தவறிப்போன தன் மாமாவைத் தேடிப் போகும் போலாவின் கள்ளங்கபடமற்ற உலகைச் சித்தரிப்பது.

ரஜிந்தர் சிங் பேதியின் *போலா* தேடிச் சென்றதிலிருந்து தன் கதையைத் தொடங்கும் அடுத்த தலைமுறை எழுத்தாளர் ஸுரேந்திர பிரகாஷ், பஞ்சாபின் சிக்கிய தீவிரவாத சம்பவம் ஒன்றினால் போலாவின் மாமா வழி தப்பியது மட்டுமல்ல, உயிர்த் தியாகமும் ஆக நேரிடுகிறது என்பதை விவரிக்கிறார்.

# போலா

## ராஜீந்தர் சிங் பேதி

தன் வேலைகளில் மாயா மும்முரமாயிருப்பதைக் கவனித்தேன். சிறிய ஜாடியிலிருந்த வெண்ணெய் உருண்டையிலிருந்து புளிப்பு வாடையைப் போக்குவதற்காக மீண்டும் மீண்டும் நீரால் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தாள். வெண்ணெய் மீது அவள் இப்படித் தனிக் கவனம் செலுத்தும் போதெல்லாம் அது விருந்தாளியின் வரவுக்குக் கட்டியம் கூறுவதாயிருந்ததை அறிவேன். ஆம், நினைவுக்கு வருகிறது. அடுத்த இரு தினங்களில் அவளின் அண்ணன் வரவிருந்தான். அது சாதாரண வருகையில்லை. தன் விதவைத் தங்கை மூலம் கையில் ராக்கிக் கயிறு கட்டிக் கொள்ள வரப்போகிறான். சகோதரியர் தம் சகோதரரைப் போய்ப் பார்ப்பது வழக்கம். ஆனால் மாயாவின் அண்ணன், இதனை மாற்றி, அவளைப் பார்க்க வருவதாக முடிவெடுத்தான். இதன் மூலம் அவனது குட்டி மருமகளையும் பார்க்க முடியும். அவன் வருவது மாயாவுக்கு தெம்பூட்டுவதாயிருந்தது. விதவையாகிவிட்ட தனக்கு, ஆதரவு அளிக்கவும் உதவி செய்யவும் இன்னும் ஒருவர் இருந்ததை உணர்ந்து கொண்டாள்.

என்க்கருகில் அமர்ந்து கரும்பு தின்று கொண்டிருந்த போலாவும் என் மனப்பதிவுவை உறுதிப் படுத்தினான். "பாபா, நாளைக்கு மாமா வரப்போகிறார், இல்லையா?" என்றான்.

என் பேரனை மடியில் இருத்திக் கொண்டேன். தாமரையின் மிருதும் பரிசுத்தமும், ரோஜாவின் சிவப்பும், புல்புல் பறவையின் மாயக் குரலும் யாரோ ஒருவரால் திரட்டப்பட்டு அவனிடம் சேர்க்கப்பட்டது போல மிருதுவாயும் இளமையாயும் மிகச் சிறயவனாயும் தோன்றினான். எனது நீண்ட சாம்பல் நிறத்தாடியால் கலவரம் கொண்டு, என்னை முத்தமிட விடமாட்டான். எதிர்பாராத வகையில் அவனைப் பற்றி அவன் கன்னத்தில் முத்தமிட்டு புன்னகைத்தேன்.

"போலா, உன் மாமா உன் த்ாய்க்கு என்ன உறவு?" என்று கேட்டேன்.

சிறிது நேரம் யோசித்துவிட்டு "அவர் அவளது மாமா என்றான்.

எங்களருகே அமர்ந்து கீதை படிப்பதில் மூழ்கியிருந்த மாயா சிரித்துவிட்டாள். அவள் சிரிப்பதைப் பார்த்தது என்னைக் குளிரச் செய்தது. விதவை மருமகளான மாயா, நல்ல துணிமணிகள் அணிவதையும் உற்சாகப் பேச்சுக்களையும் தவிர்த்து வந்தாள் - மற்றவர்கள் பழிப்பை ஏற்க வேண்டும் என்பதற்காக. மற்றவர் சொல்வதற்காக கவலைப்படத் தேவையில்லை என்று கண்டிப்பேன் - அவர்கள் புருவத்தை உயர்த்தட்டும், பரவாயில்லை என்று. ஆனால் ஒருவித தன்னலமறுப்பாக, ஆன்மாவைக் கொல்வதான இச்சமூகச் சட்ட திட்டங்களுக்கு மாயா தலை வணங்கினாள். விலையுயர்ந்த தனது துணிமணிகளையும் நகைகளையும் பெட்டியில் வைத்தப் பூட்டி, சாவிகளை குளத்தில் எறிந்து விட்டாள்.

மாயா தன் காலைப் பிரார்த்தனையைத் தொடர்ந்தாள்:

'ஹர ஹர ஹரி, ஹர ஹரி ஹர, என்முறை வரும் போத ஏன் என்னை ஒதுக்கி விட்டாய்?

பிரார்த்தனையை முடித்து விட்டு, போலாவைத் தன்னிடம் அழைத்தாள்.

"போலா, இந்தச் சின்னதுக்கு நீ என்ன உறவு?" என்று கேட்டாள்.

"அவள் என் தங்கை"

"அது போலத்தான் உன் மாமா, என் அண்ணன்"

இது மிகவும் குழப்புவதாயிருந்தது. ஒருவர் ஒரே நேரத்தில் எப்படி மாமாவாகவும், அண்ணனாகவும் இருக்க முடியும்? தன்மாமா, தன் தாத்தாவுக்கும் மாமா என்றுதான் இது வரையிலும் போலா நினைத்திருந்தான். அவன் உண்மையிலேயே குழப்பத்தில் இருந்தான். ஆனால் அவன் இதில் மாட்டிக் கொள்ள விரும்பவில்லை. தாயின் மடியிலமர்ந்து, புனித கிரந்த சாகிப்பை வாசித்துக் காட்டுமாறு வேண்டினான். ஒவ்வொரு அத்தியாயத்தின் இறுதியிலும் அதன் சாரத்தின் சுருக்கம் கொண்டிருந்த கீதைப் பதிப்பொன்றை மாயா வைத்திருந்தாள். கவனத்துடன் கேட்கும் போலா அப்புறம் குளத்தருகேயுள்ள புல்லில் அமர்ந்திருக்கையில் அந்த வார்த்தைகள் அவன் காதுகளில் எதிரொலித்துக் கொண்டிருக்கும்.

பிற்பகலில் எனது ஊரிலிருந்து ஆறு மைல் தொலைவிலுள்ள என் வயலின் வாரதாரருக்கு கலப்பை ஒன்றை எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது. இளமையில், எவ்வளவு சுமையானாலும் துரிதகதியில்போய் சேர்த்து விடுவேன். இப்போது முதுமை ஏறிவிட்ட என் உடல் உலகியல் கவலைகளால் தளர்ந்து போய்விட்டது. இப்போது இருபது படி எடையைத் தூக்குவது கூட சோதனையாயிருந்தது. கலப்பையை தூக்கிப் போகையில் எங்கே பாரம் த்தாங்காது கழுத்து முறிந்து விடுமோ என்று பயந்தேன். பிராயத்திலேயே மகன் இறந்து போனது

என்னை நிலைகுலையச் செய்துவிட்டது. கவலைகள் என் வல்லமையை உறிஞ்சி எடுக்க, என் முதுகெலும்பு முறிந்து விட்டதோ என்று உணர்ந்தேன். நான் பிரியம் காட்டும் போலாவைத் தவிர நான் வாழ்வதற்காக யாரும் இல்லை.

போய்வந்தது மிகவும் சோர்வாயிருந்தது. தலையணையில் சாய்ந்ததுதான் தாமதம், தூங்கி விட்டேன். சற்று நேரத்திலேயே பால் தம்ளருடன் மாயா வந்தாள். அவளது அர்ப்பணிப்பால் ஈர்க்கப்பட்ட நான், மௌனமாய் அவளை ஆசீர்வதித்தேன். "என்னைப் போன்ற கிழவனுக்காக நீ பெரிதும் அல்லல்பட வேண்டாம்" என்றேன்.

போலா இன்னும் விழித்திருந்தான். ஒரே தாவலில் என் படுக்கைக்கு வந்தவன், என் வயிற்றின் மீது கால் போட்டு அமர்ந்து கொண்டான். "பாபாஜி, கதையொன்று சொல்ல மாட்டீர்களா?" என்றான்.

"வேண்டாம், இன்றைக்கு இரவு வேண்டாம். அலுப்பாயிருக்கிறது. நாளைக் காலையில் கதை சொல்வேன்" - தூக்கக்கலக்கத்திலுள்ள என் கண்கள் வானிலுள்ள நட்சத்திரங்களை சுற்றியபடி கூறினேன்.

"பாபாஜி, அப்படியானால் நான் பாபாஜியின் போலா இல்லை. அம்மாவின் போலா மட்டுமே" என்றான் கோபத்துடன்.

அது என் உணர்வுகளைப் புண்படுத்துமென்பதை போலா அறிவோனா. அவன் எனக்குரியவனேயொழிய தாய்க்குரியவனல்ல என்று கூறப்படுவதை நான் விரும்பினேன்.

அன்று பிற்பகலில் கலப்பையை சுமந்து கொண்டு ஆறுமைல் தூரம் போய், திரும்பி வந்தேன், கால் வலிக்க. என் புதுச் செருப்புகள் கடிக்காது போயிருந்தால் அவ்வளவு சோர்ந்திருக்கமாட்டேன். காலில் புண் வந்து சமயங்களில் குதி கால்களில் பெரும் வலியை அனுபவித்தேன். போலாவின் குழந்தைத்தனத்தால் கோபப்பட்டாலும் அவனுடன் வழக்குப் பண்ண விரும்பவில்லை. மேற்கு வானிலுள்ள நட்சத்திரங்களை பார்த்துக் கொண்டு மட்டும் இருந்தேன். கலங்கரை விளக்கமாய் பிரகாசித்துக் கொண்டிருந்த தாரகை ஒன்றில் என் கண்கள் பதிந்திருந்தன. பார்வை பதிந்திருக்கையில், அது பிரகாசத்தை இழக்கத் தொடங்கிற்று, தூங்கிவிட்டேன்.

காலையில், போலாவுக்காக வருந்தினேன். நான் அவனுக்காக அக்கறைப்படுவதை நிறுத்திவிட்டதாக அவன் எண்ணியிருக்கலாம். அதன் காரணமாகவே என் மடிக்கு வர மறுத்திருக்கலாம். "நான் வரமாட்டேன்" என்று வெடுக்கெனச் சொல்லியிருந்தான்.

"ஏன் போலா?"

"இனிமேல் போலா, பாபாஜிக்கு உரியவன் அல்ல, மாதாஜிக்கே உரியவன்".

இனிப்புகள் தருவதாய் உறுதியளித்து அவன் மனதை மாற்றினேன். சில நிமிடங்களுக்குள் பாபாஜியின் போலாவாகி, மடிக்கும் வந்துவிட்டான். மாயா இன்னும் மந்திரங்களை உச்சரித்தக் கொண்டிருந்தாள் பூஜை முடிந்ததும் பெரிய வெண்ணெய் உருண்டையை ஜாடியில் போட்டு, தூய நீரால் அடித்து சுத்தம் பண்ணினாள். இப்போது தன் அண்ணனுக்காக கணிசமான அளவு வெண்ணெய் தயாரித்திருந்தாள். அண்ணன் - தங்கைக்கிடையேயான இப்பாசப்பிணைப்பை உணர்ந்து என் விழிகளில் கண்ணீர் தளும்பிற்று. பெண்ணின் இதயம் எல்லைகளற்ற காதல்சாகரம் என்பதையும் அது பேதாபேதமின்றி தாய், தந்தை, சகோதரி, குழந்தைகள், கணவன் என

அனைவரையும் அரவணைத்துக் கொள்ளக்கூடியது என்பதையும் உணர்ந்து கொண்டேன். ஒரு இதயமே கொண்டுள்ள அவள் மற்றவர்களிடம் பாசங்காட்டுவதில் குறையே வைப்பதில்லை. சுருக்கங்கள் விழுந்த என் கன்னங்களை போலா வருடினான். "பாபா, நீங்கள் சொன்னது நினைவிருக்கிறதா?" என்றான்.

"எதைப் பற்றி?"

"பிற்பகலில் கதை சொல்வதாக உறுதியளித்தீர்களே".

"நினைவிருக்கிறது." அவன் கன்னத்தில் முத்தமிட்டேன்.

பிற்பகல் வருவதற்காக போலா பெரிதும் காத்திருக்க வேண்டும். பாபாவிடமிருந்து கதையைத் தருவிக்கச் சரியான தருணம், பகலுணவு முடிந்து அவர் படுக்கையில் சிறிது ஒய்வெடுக்கும் நேரமே என்பதை அவன் அறிவான். பகலுணவுக்கு அரை மணி நேரத்திற்கு முன்பாகவே, எனக்கு உணவு ஏற்பாடு செய்யுமாறு தன் தாயைத் தொந்தரவு பண்ணத் தொடங்கினான். எனக்குப் பசி என்பதால் இல்லை, செய்ய வேண்டிய வேலைகளை முடித்துக் கொண்டு அவனுக்கு கதை சொல்ல தயாராக வேண்டுமென்பதற்காகவே.

சாப்பிட அமர்ந்தேன். கடைசி வாய் உணவு முடிவதற்குள், மணியகாரர் கதவைத் தட்டினார். தன் கையில் அளக்கும் சங்கிலி வைத்திருந்தார். கிணற்றுக்கு அருகாமையிலுள்ள என் பங்கு நிலத்தை அளப்பதற்காக என்னைக் கூட்டிச் செல்ல விரும்பினார். தனக்கு வேலைகள் மண்டிக்கிடப்பதாகவும், அளப்பதற்கு இதுதான் சரியான நேரமென்றும் தெரிவித்தார். இப்போதில்லை என்றால் எப்போதுமில்லை என்னும் அணுகுமுறையைக் கொண்டவராய்த் தோன்றினார்.

முற்றத்துப்பக்கமாய் நோட்டமிட்டேன். என் கயிற்றுக்கட்டில் மேல் படுக்கை விரிப்பை விரிக்க சிரமப்பட்டுக் கொண்டிருந்தான் போலா. அது முடிந்ததும் தலைமாட்டில் தலையணை ஒன்றைப் போட்டுவிட்டு கட்டிலில் ஏற தவித்துக் கொண்டிருந்தான். தன் சுயலநலத்திற்காகத்தான் இந்நேரம் சாப்பாட்டு வேலையை முடிக்க துரிதப்படுத்தினான் என்னும் அவனது சாதுர்யத்தை என்னால் பாராட்டாது இருக்க இயலவில்லை. அவனது பிடிவாதத்தை கருத்தில் கொண்டு "தாயைப் போலவே பிள்ளையும், நீண்ட நாள் வாழ்வானாக" என்று எனக்குள்ளே சொல்லிக் கொண்டேன்.

கிணற்றடிக்குப் போகுமாறும் ஒரு நிமிடத்தில் வருவதாகவும் மணியக்காரரிடம் சொன்னேன். நான் வெளியேவர ஆயத்தமாவதைக் கண்ட போலாவின் முகம்,நேற்றிரவு என் நிலைகுத்திய பார்வையால் மங்கத் தொடங்கிய நட்சத்திரத்தைப் போல மங்கி விட்டது.

"பாபா, எங்கே இந்த அவசரம்? நிலம் செடிவிடப்போவதில்லை. கிளம்புவதற்குள் சிறிது ஓய்வெடுப்பது நல்லது" என்றாள் மாயா.

"இல்லை, இப்போது நான் மணியக்காரரைப் பிடிக்காது போனால், ஒரு மாதம் தாமதமாகிவிடும்" என்று தலையசைத்தான்.

மாயா அமைதியாக, போலா முகத்தை திருப்பிக் கொண்டான். "பாபா, என் கதை" என்றான். கண்ணீர் சிந்தி விடுபவனைப் போன்றிருந்தான்.

"போலா பையா, பகலில் கதை சொன்னால் வழி போக்கர்கள் வழிமாறி விடுவார்கள்" என்று ஆறுதல்படுத்தும் விதமாகக் கூறினேன்.

"அப்படியா? வழிபோக்கர்கள் திசை மாறிவிடுவார்களா? பாபா பொய் சொல்லுகிறீர்கள். இனிமேல் நான் பாபாவின் போலா இல்லை" என்றான்.

இந்த ஓய்வு எனக்கு உற்சாகம் அளித்தது. வேலையைத் தொடங்கு முன்பாக எனக்கு 15 நிமிடங்கள் இருந்ததால், போலாவை ஏமாற்ற மனம் வரவில்லை. துண்டினைப் படுக்கையில் போட்டுவிட்டு, செருப்புகளின் இரும்புப் பிடியிலிருந்த பாதங்களை விடுவித்தது சற்று ஆறுதலாயிருந்தது. கட்டிலில் சாய்ந்து கொள்ளவும் போலாவின் பாபாவாகிவிட்டேன்.

"போலா, யாராவது வழிபோக்கர் வழி தவறிவிட நேர்ந்தால், நீ தான் பொறுப்பு" என்று தீவிரமான தொனியில் சொல்வது போல சொன்னேன்.

பிற்பகல் ஏற்கனவே வந்து விட்டிருந்தது. ஒரு இளவரசர் மற்றும் ஏழு இளவரசியர் கடைசியில் அவர்கள் மணமுடித்தக் கொள்வதான நீண்ட கதையினைச் சற்று சுவாரஸ்யத்துடன் விவரித்தேன். திருமணத்தில் முடிவுறும் கதைகளை போலா ரசித்தான். ஆனால் இக்கதை போகப்போக சிறுவனின் முகத்தில் உற்சாகத்தைக் காணோம். முகவாட்டத்துடன் கதையைக் கேட்டுக்கொண்டிருந்தான்.

அளக்கும் சங்கிலியுடன் மணியக்காரர் போய் விடக்கூடாதே என்று கிணற்றடிக்கு விரைந்தேன். செருப்புகள் மிருதுவாக மாயா கடுகெண்ணெய் தேய்த்திருந்தாலும் குதிகால்கள் வலிக்க நடந்து போனேன்.

மாலையில் திரும்பியபோது, போலாவை முற்றத்தில் பார்த்தேன். கால்களுக்கி _யே சிறு கோலொன்றை இடுக்கி துள்ளிச் செல்லும் குதிரையில் சவாரி செய்வதாய் பாவனை பண்ணினான்.

"ஏ குதிரையே மாமாவின் தேசத்திற்கு பாய்ந்து போ, மாமாவின் தேசத்திற்கு, குதிரையே" என்று உற்சாகத்துடன் பாடினான்.

முற்றத்தில் நான் கால் வைத்ததும், பாடுவதை நிறுத்தினான் போலா. "பாபா, இன்றைக்கு மாமா வருகிறார், இல்லையா?" என்று எனது உறுதிப்படுத்தலை எதிர்பார்த்துக் கேட்டான்.

"ஏன் இவ்வளவு பரபரப்பாய் இருக்கிறாய்?"

"மாமா எனக்கு விசைப்படகு வாங்கிவருவார். கறுப்பு நாய்க் குட்டி ஒன்று. மக்காச்சோளக் கதிர் கட்டாக எடுத்து வருவார். சரியா, பாபா? நிச்சயம் அவர் மக்காச் சோளக் கதிர்கள் கொண்டு வருவார். இங்கே மக்காச்சோளம் பயிரிட மாட்டேன் என்கிறார்கள். அவர் கொண்டு வரும் இனிப்புகளை உங்கள் கனவிலும் சுவைத்திருக்க மாட்டீர்கள்".

அவன் சொன்னது உண்மையிலேயே எனக்கு சந்தோஷமளித்தது. 'உங்கள் கனவிலும்' என்று எவ்வளவு பொருத்தமாக கூறியிருந்தான். நான் சொல்லியிருந்த கனவின் மூலம் அவ்வார்த்தைகளை நினைவில் வைத்திருந்தான். புத்திசாலிப் பையன் கடவுள் அவனுக்கு நீண்ட ஆயுளை வழங்கட்டும்!.

மாலையானதும் போலா வாசலிலேயே நின்றிருந்தான் - மாமா வருவதைத் தொலைவில் கண்டவுடனேயே எங்களுக்கு கூற வேண்டும் என்பதற்காக. கிளர்ச்சியுடன் அவன் முதலில் தாயிடம் ஓடிப் பின்னர் என்னிடம் வருவானென அறிவேன்.

விளக்குகள் ஏற்றப்பட்டன. இருள் கவியவும் அவை பிரகாசம் கூடின.

"பாபாஜி அண்ணன் ஏன் தாமதம்?" கவலையுடன் கேட்டாள் மாயா.

"ஏதாவது அவசர வேலை அவனை இருத்தி வைத்திருக்கும்" என்றேன்.

"இருக்கும். அப்படியான சமயத்தில் ராகி அன்பளிப்பை அஞ்சலில் அனுப்பினாலும் அனுப்புவான். ஆனால் என்னால் ராகி கயிற்றை கட்ட முடியாது போவது எவ்வளவு

மோசமாயிருக்கும்."

"ஆம். இந்நேரம் அவன் இங்கே வந்திருக்க வேண்டும்" என்றேன். போலாவை வாயிற்படியிலிருந்து தூக்கிக் கொண்டேன். தாயைவிடவும் அவன் சோர்ந்திருந்தான். "மாமா ஏன் வரவில்லை?" ஏன்று பதட்டத்துடன் வினவினான்.

போலாவை என்னிடமிருந்து வாங்கிக் கொண்டாள் மாயா. "நாளை வந்தாலும் வருவான், உன் மாமா" என்று அவனைத் தழுவிக் கொண்டாள்.

தன் கைகளால் தாயின் கழுத்தைச் சுற்றிக் கொண்டு, "என் மாமா உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான் போலா.

"உன் தங்கைக்கு என்ன நீ உறவோ அதேதான்"

"அண்ணன்?"

"உனக்கு நன்றாகவே தெரிகிறதே"

"பன்ஸி (போலாவின் சிநேகிதன்) நமக்கெல்லாம் என்ன உறவு?"

"நமக்கு எவ்விதத்திலும் உறவில்லை"

"சகோதரனாகக் கூட கிடையாதா?"

"கிடையாது"

உறவுமுறை குறித்த சிக்கல்களை யோசித்தவனாய் போலா தூங்கிப் போனான்.

படுக்கையில் சாய்ந்ததும், வானத்தை ஏறிட்டேன். கலங்கரை விளக்கம் போன்ற பிரகாசமான தாரகை இன்னும் அங்கிருந்தது, ஆனால் உற்று நோக்கும் என் பார்வையால் இருண்டு வருவதாய் தோன்றிற்று. கிணற்றடிக்குப் போகிறேன் என்று போலாவிடம் பிற்பகலில் கூறியபோது களை இழந்து காணப்பட்ட அவன் முகம் நினைவில் தட்டிற்று.

"மாயாவின் அண்ணன் வரப்போவதில்லை" என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன். தன் தங்கையை வந்து பார்க்கும் எண்ணத்தையே கைவிட்டிருப்பான். அவனுக்காக அவன் தங்கை தயாரித்திருக்கும் வெண்ணெயினை அவன் ருசிக்க முடியாது போவது, பரிதாபமே.

நட்சத்திரங்களைப் பார்த்தபடி தூங்கியிருந்தேன். மாயாவின் குரல் கேட்டு விழித்தேன். ஒரு தம்ளரில் பாலுடன் வந்திருந்தாள்.

"எனக்காகச் சிரமப்பட வேண்டாம் என்று பலமுறை சொல்லியிருக்கிறேன்" என்றேன் அவளின் பாசத்தில் நெகிழ்ந்து. நீண்ட திருமண வாழ்க்கையைப் பெற வேண்டும் என அசீர்வதிக்க நினைத்தவன், போனவருடம் அவள் விதவையாகி விட்டதை சட்டென்று ஞாபகப் படுத்திக் கொண்டேன்.

திடீரென்று பக்கத்து கட்டிலில் தன் தங்கையுடன் தூங்கிக் கொண்டிருந்த போலா எழுந்து கொண்டான்.

"பாபா, மாமா ஏன் வரவில்லை?" விழிகளைத் தேய்த்தவாறு வினவினான்.

"தூங்கு, காலையில் வந்து சேருவான்" என்றேன்.

இன்னொரு மெழுகுவர்த்தியிலிருந்து பற்றிக் கொள்ளும் மெழுகுவர்த்தியாய் தன் மகனைப் போலவே மாயா தூக்கக் கலக்கம் கொண்டாள். இளமையில் தூக்கம் வருவதாய் வந்துவிடும். நாள் பூராவும் வேலைகள் செய்து அலுத்துப் போயிருந்த மாயா, ஆழ்ந்து தூங்கினாள். முதியவனுக்குரிய தூக்கத்தை நான் தூங்கினேன். அரைமணி நேரம் தூங்குவதும் பின் விழிப்பதும், அப்புறம் கவலைகளிலிருந்து மனம் விடுபட்டதும் மீண்டும் தூங்குவதுமாய் விட்டு விட்டு தூங்கினேன். உண்மையில் இரவின் பெரும்பகுதியை நட்சத்திரங்களை

எண்ணுவதில் செலவிட்டேன்.

"மாயா போய்த் தூங்கு. என் அருகிலேயே போலாவைத் தூங்க வைக்கிறேன். விளக்கை அணைக்க வேண்டாம். திரியை தணித்து வைத்தால் போதும். சந்தை நடக்கும் நாட்களில் சந்தேகப் பேர்வழிகளின் நடமாட்டத்தை ஊரில் பார்க்க முடிகிறது. கவனமாய் இருக்க வேண்டும்" என்றேன்.

பீதி தரும் செய்திகள் நிலவின. சிறுவரைத் தூக்கிச் செல்வோர் சந்தையில் திரிவதாகக் கூறப்பட்டது. பக்கத்து ஊர்களில் ஓரிரு சம்பவங்கள் இப்படி நிகழ்ந்திருந்தன. எனவேதான் எச்சரிக்கையாய் போலாவை என்னருகில் படுக்க வைத்தேன். போலா இன்னும் விழித்திருப்பதைக் கவனித்தேன். அப்புறம் தூங்கி விழுந்தேன்.

சிறிது நேரம் கழித்து நான் விழித்த போது மாடத்திலிருந்த விளக்கை காணவில்லை. கை நீட்டிய போது போலாவும் பக்கத்திலில்லாததைக் கண்டேன். இருளில் தட்டுத்தடுமாறும் குருடனைப் போல, அங்கிங்காகப் போய் சுவரில் மோதினேன். கலவரமுற்று, மாயாவை எழுப்பினேன். வீட்டின் மூலைமுடுக்கெலலாம் தேடினோம். போலா இல்லை.

"மாயா மோசம் போனோம்" வேதனையில் தலையில் அடித்துக் கொண்டேன்.

மாயா ஒரு தாய். பெரிதும் அதிர்ந்து போய் கூந்தலைப் பிடித்து இழுத்துக் கொண்டாள். தன் மகனைக் காணவில்லை என்று கண்டறிந்ததும் இதுவரையிலுமில்லாத வருத்தத்தை அடைந்தாள். அவளது அரற்றலைக் கேட்டுக் கூடிவிட்ட அக்கம் பக்கத்துப் பெண்டிர், போலாவைக் காணவில்லை என்று அறிந்ததும் அவர்களும் மாயாவின் சோகத்தில் சேர்ந்து கொண்டனர்.

அழுது கரையிட்டதில் பெண்டிரைவிடவும் எனது குரலே உரத்து ஒலித்தது. காலையில் எங்கள் வீட்டு மீது நாடோடி ஒருவன் சந்தேகப்பார்வை செலுத்தியதைக் கண்டிருந்தேன். அப்போது நான் அவனை அவ்வளவாக கவனிக்கவில்லை. அவனைக் கவனிக்காது விட்டது தப்பு. இப்போது வருந்திப் பயனில்லை. போனது போனதுதான். எனது முற்பிறவியின் ஏதேனும் ஒரு நற்காரியத்திற்காக அவனைத் திரும்ப பெற்றாக வேண்டுமென ஆவேசத்துடன் பிரார்த்தித்தேன். அவன் எங்கள் வீட்டின் ஒளியாய், கண்களின் மணியாய் இருந்தான். நானும் மாயாவும் உயிர்த்திருப்பது அவன் பொருட்டே; அவனில்லாது போனால் எங்கள் வாழ்க்கைக்கு அர்த்தமில்லை.

இன்னும் நான் பிரார்த்தனையை முணுமுணுத்துக் கொண்டிருக்கையில், மாயா மயங்கி விழுவதைக் கண்ட திடுக்கிட்டேன். அவளது கைகள் திருகி இழுத்துக் கொண்டன. அவளது தாடைகள் பூட்டிக் கொள்ள, கண்களில் மிரட்சி தென்பட்டது. இறுக்கிக் கொண்ட பற்களின் வழியாக தேக்கரண்டி மூலமாக எதையோ அவளுக்கு ஊட்ட சில பெண்கள் முயன்றனர்.

என் காலடியிலிருந்து பூமி நழுவிப்போக கண நேரம் போலாவைக் கூட மறந்து போனேன். நம் கண்களுக்கு முன்பாக என் குடும்பத்தவர் இருவர் நழுவிப்போக, எதுவும் செய்ய முடியாதவனாய் நான் இருந்தேன். தெய்வத்தின் மீது வெகுண்டேன். எனக்கு இத்தகைய துயரம் தருவதற்குப் பதிலாக என் உயிரை எடுத்துக் கொண்டிருக்க வேண்டும் அவன்.

அப்போதுதான் மாயா நினைவு பெற்றாள், நான் சற்று ஆசுவாசம் கொண்டேன்.

"மாயா, என் வேதனையை அதிகரிக்காதே. தைரியமாய் இரு, சிறிது தேடினால், போலாவை நிச்சயமாய் கண்டுபிடித்து விட முடியும். நாடோடிகள் சிறுவரைக் கூட்டிச் சென்று கொல்வதில்லை. தம் தொழிலில் ஈடுபடுத்தவே கூட்டிப் போவார்கள்" என்றேன்.

இந்த வார்த்தைகள் மாயாவுக்கு எந்த அர்த்தத்தையும் தரவில்லை. அவற்றில் உறுதிப்பாடு குறைந்திருந்ததால், என் காதுகளுக்கே உள்ளீடற்றனவாய் ஒலித்தன.

நள்ளிரவு தாண்டிவிட்டது. பத்து மைல் தாண்டியுள்ள காவல் நிலையத்தில் புகார் செய்ய என் அண்டை வீட்டார் போயிருந்தனர். காலையில் ஒன்று சேர்ந்து போலாவைத் தேடுவதற்கான வழி வகையினை உருவாக்கலாம் என்பதற்காக இப்போது ஒதுங்கியிருந்து காத்திருந்தோம்.

திடீரெனக் கதவு திறக்க, போலாவின் மாமா, தோள்களில் தொற்றியிருக்கும் போலாவுடன், முற்றத்தில் நுழைவதைக் கண்டோம். மாமாவின் ஒரு கையில் விளக்கும், தலையில் இனிப்புக் கூடையும் இருந்தன. திடுமென உலகின் செல்வமெல்லாம் கிடைத்து விட்டதாய் தோன்றியது. விரைந்து சென்ற மாயா, போலாவை தூக்கிக் கொண்டு முத்தமிடத் தொடங்கினாள்.

போலாவின் மாமா கூறினான்: "எதிர்பாராத வேலையால் இருத்தி வைக்கப்பட்டேன். இரவில் தாமதித்துப் புறப்பட்டு, வழி மாறிவிட்டேன். பின்னர் வெளிச்சம் வந்த திசை நோக்கி நடக்கத் தொடங்கினேன். இருட்டாயிருந்ததால், அப்போது துணிமணிகளில் முள் குத்தியிருக்க, கையில் விளக்குடன் போலா நிற்பதைக் கண்ட அதிர்ந்து போனேன். இரவில் அந்த நேரத்தில் அங்கே என்ன செய்து கொண்டிருந்தாய் என அவ்னைக் கேட்டதற்கு, அன்று பிற்பகலில் தாத்தா ஒரு கதை கூறினாரென்றும் பகலில் கதை சொன்னால் வழிபோக்கர் திசை மாறிப் போய் விடுவார்கள் என்றும் குறிப்பிட்டதைத் தெரிவித்தான். நீண்ட நேரம் ஆகியும் நான் வராததால், வழி தவறியிருக்க வேண்டும் என்று மாமா வழி தவறினால் தான் பொறுப்பேற்க வேண்டுமென்றும் அவன் பெரிதும் பயந்திருக்கிறான்".

# இரவுக்குள் ஒரு பயணம்

## சுரேந்திர பிரகாஷ்

போலா தனது வலது கையில் வைத்திருந்த லாந்தர் விளக்கு மின்மினி போலப் பிரகாசித்தது. மெல்ல அசைந்தவாறு இருளைக் கிழித்துக் கொண்டு ஞானியின் சமாதியை நோக்கி முன்னேறிற்று. ஒளிவளைவில் தென்பட்ட போலாவின் கால்கள் உடைந்து போன பொம்மையின் கால்கள் போல யந்திரகதியில் நகர்ந்தன. பூமி மீது விழுந்த அவற்றின் நீண்ட நிழல்கள் இருளில் காணாது போயின.

சமாதியை அடைந்த போலா, லாந்தரை அதன் மேடையில் வைத்தான். சூன்யமாய் குறைக்கப்பட்டுவிட்ட ஒளி லாந்தரின் அடிப்பகுதியில் திரண்டது. போலா பெருமூச்செறிந்தான்.

உலகின் மீது நாசத்தினைக் கட்டவிழ்த்து விடுவதற்கு சதி செய்வன போன்று, பிசாசுத்தனமான நிசப்தத்தில் அருகாமையில் அசைந்தாடிக் கொண்டிருந்த வேலமரக் கூட்டங்களுக்கு அவன் பார்வை

பயணித்தது. அந்தி வேளையில் புதையல் தேடும் யாரோ ஒருவன் சமாதி மேடையில் வைத்திருந்த அகல் விளக்கு அணைந்து போய் நெடுநேரமாகிவிட்டது. சில்லென்ற காற்று வேலமரங்களின் வழியாய் வீசிற்று. மரங்கள் ஆடி அசைய, லாந்தரின் சுடர் நடுங்கியது. போலாவின் முதுகுத்தண்டில் நடுக்கத்தை உண்டுபண்ணும் விதத்தில், அவன் முகத்தில் காற்றடித்தது. கலவரமுற்ற அவன் விழிகள் எதனையோ தேடுவன போல இருளிலி சுழன்றன.

கிராமத்திலிருந்து வரும் குறுகலான பாதையில் ஒரு கிணற்றுக்குப்பக்கத்தில் ஞானியின் சமாதி இருந்தது. வயல்களின் வழியே சுற்றிவந்த அப்பாதை நெடுஞ்சாலையில் போய்ச் சேர்ந்தது. கிராமத்தை இணைக்கும் ஒரே சாதனமாய் தென்பட்டது. இப் பாதை வழியேதான், மாட்டு வண்டிகள் தானியங்களையோ தீவனத்தையோ ஏற்றிக் கொண்டு பட்டணத்துச் சந்தைக்கு ஊர்ந்து போக வேண்டும்.

ஒருமுறை தீவனப்பாரத்தின் மீது அமர்ந்தபடி போலா தன் தந்தையுடன் பட்டணம் போனான் - அங்கே தான் அவன் தந்தை சுகா சிங்கின் ஜீவிதம் நடந்தது. தேஸ்ராஜின் தள்ளு வண்டியிலிருந்து ஐஸ்கிரீம் வாங்கித் தின்று குதூகலமானான். உத்தமின் குளிர்பானக் கடையில் லெமனேட் வாங்கி குடித்தான். அப்புறம் கணவன் மனைவியாக கருதப்பட்ட ஆண் பெண் குரங்குகள் எஜமானனுடன் சண்டையிடும் குரங்கு வேடிக்கை பார்த்து மகிழ்ந்தான்.

எப்போதும் நித்திரை புரிகின்ற ஞானியின் சமாதியை கடந்து செல்லும் கிராமத்தார், தலை வணங்கினர். அவர் மகத்தான அற்புதங்கள் நிகழ்த்தக் கூடியவரென அறிவர். போலா பெரிதும் பயந்தான். சமாதியை நோக்கி முகத்தை திருப்பி, கைகளை குவித்து, தலை வணங்கினான். தன் உடலெங்கும் அச்சம் பரவ, புனித கிரந்த சாகிப்பின் ஆரம்ப வரிகளை உச்சரிக்கத் தொடங்கினான்.

பயம் கவ்வும்போது அவன் வயதுச் சிறுவன் பிரார்த்தனை ஒன்றை முணுமுணுக்காது வேறென்ன செய்வான்?

இருண்ட பாதையில் சுழன்ற அவன் பார்வை இருளுடன் கலந்தது. தன் தாய் மாமன் பல்வந்தின் காலடிச் சுவடுகளின் சப்தத்தைக் கேட்க பதற்றத்துடன் காத்திருந்தான். ஆனால் சப்தமெதுவும் கேட்கவில்லை. அவன் உண்மையிலேயே வழி தவறிவிட்டானா? பகலில் தன் தாயிடம் கதை சொல்லுமாறு கேட்டதற்காக வருந்தினான். பயணம் செய்யும் தன் மாமா வழி தப்ப நேரும் என்னும் தாயின் எச்சரிக்கையினையும் மீறி கதை சொல்லுமாறு பிடிவாதம் பண்ணியது எவ்வளவு மோசமானது! பகல்வேளையில் கதை சொன்னால், மூட நம்பிக்கைப்படி, பொதுவாக அப்படி நிகழ்ந்துவிடுகிறது.

இருந்தாலும் அது அழகிய கதை. ஆனால் விசிறியால் விசிறியபடி கதை சொல்லிக்கொண்டிருந்த அம்மா, கதை முடிவிற்குள் தூங்கி விழுந்தாள். பிற்பகல் வேளைகளெல்லாம் அப்படித்தான் இருந்தன - சோம்பலில் ஆழ்த்தி, வலுவானவரையும் சோர்ந்து போக வைத்துவிடும். அவன் தாயோ நலிவுற்ற பெண்மணி.

அது குளிர்காலத்து இரவு. குளிர்காற்று போலாவைத் தூக்கத்தில் ஆழ்த்திற்று. லாந்தர் விளக்கின் வட்டத்திற்கருகே முகத்தை நகர்த்திக் கொண்டு, சமாதியின் சில்லிட்ட மேடையில் படுத்து தூங்கினான். ஏற்கனவே சமாதியில் துயின்று கொண்டிருக்கும் ஞானியின் - அற்புதங்கள் நிகழ்த்துபவராக அறியப்பட்ட ஞானியின் - புனித உதாரணத்தையே அவன் பின்பற்றினான்.

அவனது தூக்க மயக்கத்தில், தீவனப்பாரத்தின் மேலமர்ந்து தந்தையுடன் மாட்டு வண்டியில் நகரத்திற்குப் போன காட்சி, நினைவுக்கு வந்தது. கிராமத்துப் பாதையில் பெருத்த சப்தத்துடன் பிரதான சாலையை அடைந்த வண்டி, இடப்புறமாக திரும்பிற்று. தந்தை சுகாசிங் சொன்னது ஞாபகத்திற்கு எட்டியது; "மகனே இந்தச் சாலை எங்கே தொடங்குகிறது, எங்கே முடிகிறதென யாரும் அறியார். அது போய்க் கொண்டே இருக்கும். இதுதான் பியாஸ் நதிக்கரையில் சென்று, அப்புறம் ஸட்லஜ் நதியின் திசை நோக்கிப் போகிறது என்பார்கள். பின்னர் ... மாட்டேன், மற்ற நதிகளின் பெயர்களை நாவால் உச்சரிக்க மாட்டேன். அது என் நாவை சுட்டெரித்து விடும். அந்நதிகளின் நீர் நம்மீது சீற்றங்கொண்டுள்ளன. ஆம் மகனே, அவை நமக்கெதிராய் முகத்தை திருப்பிக் கொண்டுள்ளன".

தந்தையின் வார்த்தைகள் அவன் சிந்தையில் ஒலித்துக் கொண்டேயிருந்தன; ஆற்றிலிருந்து ஆவியெழுவதாய் உணர்ந்தான். தூக்கத்தில் ஆழ்ந்து போனான்.

பல்வந்த் டிக்கெட் கவுண்ட்டருக்கருகே முகத்தை வைத்துக் கொண்டு கேட்டான்: "பாபு சாஹெப், சனியன்பிடித்த இந்த இரயில் எப்போது வந்து சேரும்?".

விற்ற டிக்கெட்டுகள், வசூலான பணம் போன்ற விபரங்களை பதிவேட்டில் குறித்துக் கொண்டிருந்த குமாஸ்தா, திடுக்கிட்டு நோக்கினார். ஒழுங்கற்ற தாடி, மெலிதான மீசை, இரு பிரகாசமான வைரங்கள், சிவப்பு தலைப்பாகை மற்றும் இரு சிவப்பு உதடுகள், புன்னகைக்குப் பின்னே தெரிவதைக் கண்டார்.

பெருமூச்செறிந்த குமாஸ்தா பதிவேட்டை மூடி விட்டு மெல்லிய குரலில் கூறினார். "இளைஞனே, என்னிடம் பதில் இல்லாத வினாவைக் கேட்கிறாய்".

பல்வந்த் அவர்மீது வியப்பார்ந்த பார்வையை ஓடவிட்டான். நீடித்த புன்னகையுடன், "பாபு சாஹெப், முட்டாள் தனமாய் ஏதேனும் கேட்டுவிட்டேனா?" என்றான்.

"இல்லை, அப்படியில்லை. மிகமிகப் புத்திசாலி கூட இக்காலத்தில் ரயில் வருமா, வராதா என்று சொல்ல முடியாது. உண்மையில், எல்லா ரயில்களும் ஓடுவதை நிறுத்திவிட்டன".

"சனியன் பிடித்தவை இந்த ரயில்கள், ஏன்?"

"அரசாங்கத்தின் போக்குகள் யாரால் அறியக் கூடும்? நான் இவ்விடத்திற்குப் புதிது." வறட்டுப் புன்னகை செய்த குமாஸ்தா, பதிவேட்டினை அலமாரியில் வைத்தார்.

அங்கிருந்து நகர்ந்து, பிளாட்பாரத்திற்கு வந்தான். ஆளரவமற்றிருந்தது. டீக்கடை மூடிக் கிடந்தது. அதனருகே கிடந்து தூங்கிய பரிதாபமான நாயொன்று உலகத்தைப் பற்றி கவலைப்படாததாக காணப்பட்டது. எப்பொழுதும் அடுக்கடுக்கான கவலைகளால் அரித்துத் தின்னப்படும் தன்னைக் குறித்து அவமானப்பட்டான். இப்போதைக்கு ஓடுவதை நிறுத்திவிட்ட ரயில்கள் பற்றியும், தங்கை சத்வந்த் கௌரின் ஊருக்கு எப்படிப் போய்ச் சேருவது என்பது பற்றியும், எல்லாவற்றுக்கும் மேலாக, அவள் கணவன் சுக்கா சிங்கிடம் எப்படி பணத்தைச் சேர்ப்பது என்பது பற்றியுமே கவலைபட்டுக் கொண்டிருந்தான். நிறையப் பணமிருந்தது, அதனை அவன் குர்தாவின் கீழே இடுப்பில் கட்டியிருந்தான்.

சுக்கா சிங் திடீரென பணம் திரட்டும் தேவையை உணர்ந்தான். அவனது ஊரின் இந்து ஜமீன்தார் ஒருவர் நிலத்தை

விற்றுவிட்டு, பஞ்சாபிலிருந்து வெளியேறிட விரும்பினார். தான் பிறந்த மண்ணில் உயிரும் சொத்தும் பாதுகாப்பாக இல்லாது போனதாக உணர்ந்தார். இது சுக்கா சிங்கிற்கு நல்ல சந்தர்ப்பம், ஒவ்வொரு புத்திசாலியையும் போலவே இச்சந்தர்ப்பத்தை தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள அவன் விரும்பினான்.

தூங்குகின்ற நாயின் காதுகளைச் சுற்றி ஈக்கள் மொய்க்கத் தொடங்கின. சட்டெனத் தலை உயர்த்தி, ஈக்களை விரட்டிட காதுகளை ஆட்டியது. அப்புறம் சூரிய ஒளிக்கற்றைகள் அதன் விழிகளை வதைக்கத் தொடங்கின. சோம்பலாய் அமர்ந்து சூழலை மதிப்பீடு செய்வதாக சுற்று முற்றும் நோட்டம் விட்டது. பிளாட்பாரம் முழுவதும் ஆளரவமற்று வெறிச்சோடிக் கிடந்தது. சீக்கிய இளைஞன் ஒருவன் திகைப்பில் நின்று கொண்டிருந்தான். இவ்விளைஞனின் திகைப்பினைக் கவனிக்காதபடி அந்நாய், சுற்றிலும் ஈரமாயும் குளிர்ந்துமிருந்த குடிநீர் குழாயடிக்குப் போனது.

"என்ன சனியன் பிடித்த ரயில்! கோதுமை விதைத்த நான் எதனை அறுக்கப் போகிறேன்? முட்குத்தும் களைகளை!..." பல்வந்த் முணுமுணுத்தான்.

சலவை செய்யப்படாத நீலச் சீருடையிலிருந்த ரெயில்வே தொழிலாளி தன் திசைநோக்கி வருவதைக் கண்டான். குமாஸ்தாவைவிடவும் இவர் விஷயமறிந்தவராகத் தென்பட்டார். குறைந்தபட்சம், நான்கு சுவர்களுக்குள் அடைப்பட்டுப் போனவராய் இருக்க மாட்டார். எச்சரிக்கையுடன் அவரை அணுகிய பல்வந்த், "ரயில் பற்றிய செய்தியேதும் உண்டா?" என வினவினான்.

குமாஸ்தாவை விடவும் புத்திசாலியாய் தோற்றமளித்த, நீல உடைத் தொழிலாளி, த்ன் தலையில் இலேசாக தட்டிக் கொண்டு, கையை உயர்த்தி விரல்களை வரித்து கற்பிதமான முரசை அடிப்பவராகத் தெரிவித்தார். ரயில் பற்றித் தனக்கொன்றும் தெரியாது என்று அதற்குப் பொருள்.

தன் ஞானத்தை வெளிப்படுத்திவிட்டு ஞானி நடந்து போய்விட்டார். ஞானம் பெறாதவனாகத் தோன்றிய பல்வந்த் அங்கே நின்று கொண்டிருந்தான்.

அந்த ரயில் நிலையத்தின் பெயர் தம்புவால்; ஆனால் அப்பெயரில் அப்பகுதியில் கிராமமோ, நகரமோ எதுவும் கிடையாது. அங்கே புதிய இரயில்பாதை நிர்மானித்த பொறியாளர்கள் தாம் பணிவதற்கான கூடாரங்களை அங்கே அமைத்திருந்ததால் 'கூடாரங்களுள்ள இடம்' என்ற பொருள் படுவதான 'தம்புவால்' (தம்பு - கூடாரம்) என்னும் பெயர் பெற்றுவிட்டது. அதற்கு சற்று தூரத்தில் தொழிலாளர்கள் குடிசைகளைக் கட்டியிருந்தனர் - கிராமத்து மக்கள் வேலைதேடி அங்கே மொய்த்து விடுவார்கள். தொடர்ந்து நடந்து வந்த அவர் தம் பாதங்கள் இத்தற்காலிக இருப்பிடத்திற்கு ஒரு பாதையையேற்படுத்திவிட்டன. இரயில் பாதை அமைக்கும் பணி முற்றுப் பெறுகையில், அப்பகுதி கிராமத்தவரின் வசதிக்கான இரயில் நிலையமாக இருக்கும் விதத்தில் சிறியதொரு சிவப்பு செங்கல் கட்டிடத்தை கட்டிக் கொடுத்தனர்.

முதன் முறையாக நோக்கும் பல்வந்திற்கு, எந்தவொரு கிராமம்/நகரத்தின் மீது பூமியில் காலூன்றி நிற்காதபடி, அந்தரத்தில் தொங்க விடப்பட்ட பலூனாகத் தோன்றியது இந்த ரயில் நிலையம். இரயில் நிலையத்திலிருந்து வெளிப்பட்ட பல்வந்த், கடைவீதி என்று அங்கு அழைக்கப்பட்டதான கடைகளின்

குவியலை நோக்கி நடந்தான். கடைவீதியும் ஆளரவமற்றிருந்தது. தனக்கென அது ஜீவனெதுவும் இல்லாதிருந்தது அது, இரயில் வரும் போது உயிர்த்து, சுவாசிக்கத் தொடங்கிற்று. இல்லாது போனால், கட்டிலில் கிடக்கும் நோயாளி போல கவனிப்பாரின்றி கிடக்கும்.

இனிப்புகள் விற்பனை செய்யும் சரண்தாஸின் கடையில்தான் நடவடிக்கைகளின் அடையாளம் காணப்பட்டது. அடுப்பில் தேயிலை கொதித்துக் கொண்டிருக்க, ஜிலேபி, பர்பி இருந்த தட்டுகளில் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. சமோஸாக்களிலிருந்து எண்ணெய் வடிய வடிய அவற்றின் நிறம் மங்கிக் கொண்டிருந்தது. கடைக்கு முன்னுள்ள கட்டிலிலமர்ந்து, சமோஸாக்கள் தின்றும் தேநீர் அருந்திக் கொண்டும் சிலர் இருந்தனர்.

"எனக்கு ஒரு தம்ளர் தேநீரும் சனியன் பிடித்த சமோஸா ஒன்றும்" - கட்டில் ஒன்றில் அமர்ந்த பல்வந்த் சீறும் சப்தத்தை வெளியிட்டபடி கூறினான். அடுத்த கணம், ஒருதட்டில் புளிப்பும், இனிப்பும் கொண்ட சட்னியுடன் இரு சமோஸாக்கள் ஒரு தட்டில் வைத்து அவன் முன் வைக்கப்பட்டிருந்தன. அடுத்து ஆவி பறக்கும் தேநீர்.

அவனுக்கு முன் உள்ள கட்டிலில் வயதானவர் ஒருவர் தேநீர் குடித்துக் கொண்டிருந்தார். சாம்பல் நிறத் தாடியும் அடர்ந்த மீசையும் நீல நிறத் தலைப்பாகையும் வைத்திருந்தார். தேநீரில் மீசை அமிழ்ந்து சலப்சலப்பென்று உறிஞ்சிக் குடித்தார்.

உதடுகளெல்லாம் பூட்டப்பட்டது போல எல்லாரும் நிசப்தமாயிருந்தனர். கடை வீதி என்று அழைக்கப்படுவதன் வழியாய் நொண்டி மாடு ஒன்று தள்ளாடிச் சென்றது. அவன் யாரையும் பார்க்கவில்லை; யாரும் அவனைப் பார்க்க வில்லை.

அழுக்குத் துணியால் ஜிலேபி, பர்பியில் மொய்க்கும் ஈக்களை விரட்டிய சரண்தாஸ், பாத்திரத்தில் கொதிக்கும் தேநீரில் கையளவு தேயிலையைப் போட்டான்.

நீலநிறத் தலைப்பாகையிலிருந்த வரிடம் "ஸத் ஸ்ரீ அஹால்!" என்று வணக்கம் தெரிவித்த பல்வந்த், "சனியன்பிடித்த இந்த இரயில் ஓடவில்லை. சித்பூருக்குப் போக வேறு உபாயமுண்டா?" என்று வினவினான்.

"GT சாலையில் பஸ் பிடித்தால், பாக புரணா வரை போகலாம், அங்கிருந்து சித்பூருக்கு நடந்து போய் விடலாம். சிறிது தூரம்தான்."

"நல்ல யோசனைதான். அங்கு நான் போயாக வேண்டும். எனக்காகக் காத்திருப்பார்கள்".

தேநீருக்கும், சமோஸாக்களுக்கும் சரண்தாஸிடம் காசு தந்து விட்டு GT சாலை நோக்கிக் கிளம்பினான்.

GT சாலை தம்புவால் ரயில் நிலையத்திலிருந்து அவ்வளவொன்றும் தொலைவில்லை. கடைவீதியிலிருந்து சென்ற அப்பாதையின் இருமருங்கிலும் சூரிய ஒளியில் நனைந்த நெல் பயிர்கள் நிறைந்திருந்தன. தரை இன்னும் ஈரமாயிருந்தது. காற்றில் குளுமை காணப்பட்டது. இவ்வழகிய காட்சிக்கு சாட்சி, பல்வந்த் மட்டுமே. வலது கையில் லுங்கி நுனியைப் பற்றிய படி எட்டி நடை போட்டான்.

சில வயல்களில் பூமி நிறத்திலான பூச்சிகள் விமானத்தைப் போல கோதுமைப்பயிரின் தண்டுகளில் ஏறிக் கொண்டிருந்தன. பசிய இலைகளில் ஒட்டிக் கொண்டு அவை வாடி உதிரும் வரை துளையிடுகின்ற மற்ற பூச்சிகளை இரையாக்கிட முனைந்திருப்பதாகத் தோன்றின.

சட்டென்று வந்த நாற்றத்தால் மூக்கைப் பிடித்துக் கொண்டு 'சனியன்' என முணுமுணுத்தான்.

நடந்து கொண்டிருக்கையில் நாய்கள் குரைப்பதைக் கேட்டான். தலை உயர்த்தி இருளில் நோட்டம் விட்ட போது, நாயெதுவும் தென்படவில்லை. சுற்றும் முற்றும் பார்த்தபோது பட்ட மரத்திலிருந்த சில வல்லூறுகள், ஒன்று மாற்றி இன்னொன்றாக, தரையில் கிடந்த எதனையோ கொத்தியபடி காணப்பட்டன. பின்னர் மண் மேடு ஒன்றில் அதிகப்படியான வல்லூறுகளையும் அவற்றைச் சுற்றிக் குரைக்கின்ற நாய்களையும் கண்டான்.

"சனியன்கள்!" பல்வந்த் தரையில் காறி உமிழ்ந்தான்.

அவன் மண்மேட்டை நெருங்கிய போது றெக்கை கொண்ட மிருகங்கள் சண்டையிட்டுப் பறித்துக் கொண்டிருந்த சடலத்திலிருந்து சதைப் பகுதி முழுதும் பிய்க்கப்பட்டிருந்ததைப் பார்த்தான்.

"சனியன், சடலத்தை அடக்கம் பண்ண எப்படிப்பட்ட வழிமுறை!" எனப் பல்வந்த் முணுமுணுத்தான்.

அருகாமையிலிருந்த ஒரு வயலில் கிழக்கு உ.பி.யிலிருந்து வந்த பண்ணையாட்கள் பணிபுரிந்தனர்.

"இது யாருடைய பிரேதம்?" தான் நிற்குமிடத்திலிருந்து உரத்த குரலில் அவர்களைக் கேட்டான் பல்வந்த்.

"வன்முறையிலான முடிவை அடைந்திருக்க வேண்டும். இங்கே எறிந்தது யார்?"

சர்தார்ஜி நாங்கள் எப்படிக் கூறமுடி... உலகம் கேடுகாலத்தை நோககிப் போய்க் கொண்டிருக்கிறது" என்றான் ஒருவன் அலட்சியமாய்.

"பிரேதத்திற்குப் பெயர் இருந்ததுண்டோ?" யோசித்துப் பார்த்தவனாய் அவனே குறிப்பிட்டான். மேலும் அவனிடம் கவனம் செலுத்தாமல் பல்வந்த் தன் பயணத்தைத் தொடங்கினான்.

சிறிது தூரம் நடந்ததும் ஒரு கிணறு வர, தன் தாகத்தை அது நினைப்பூட்டியது. யந்திரம் வழியாக கயிற்றைச் சுழற்றி வாளிளை இறக்கிய பல்வந்த், நீரில் அமிழ்கின்ற சப்தமேதும் கேட்காது போகவே, எட்டிப்பார்த்தபோது, பால் மாடு ஒன்று பாதிஉடல் தெரிய மூழ்கிக்கிடந்தது அதன்மடி சிவந்து காணப்பட்டது. கிணற்றுத்தண்ணீர் அதன் குருதியால் சிவந்துவிட்டது.

பல்வந்த் உதடுகளில் நாவை அசைத்து ஏதோ முணுமுணுத்தான்.

ஜி.டி. சாலையில், தமது லக்கேஜ் காலடிகளில் இருக்க, பேருந்துக்காகச் சிலர் காத்துக்கொண்டிருந்தனர். இரு திசைகளிலிருந்தும் விரைந்த பேருந்துகள் அவற்றை நிற்கச் சொல்லும் இப்பயணிகளின் கையசைப்புகளை கவனிக்காதவையாக போய்க் கொண்டிருந்தன.

"சனியன், என்ன நடந்து கொண்டிருக்கிறது, இங்கே?" சிடுசிடுப்புடன் குறிப்பிட்ட பல்வந்த் ஜி.டி. சாலையில் உமிழ்ந்தான்.

நீண்ட நேரமாய் எந்தப் பேருந்தும் நிற்காது போகவே, எல்லாரும் சேர்ந்து பக்கத்திலுள்ள பேருந்து நிலையத்திலிருந்து பேருந்து பிடிக்கப் போயினர். பெரும் பாலானவை அங்கிருந்துதான் புறப்படுவதால், அங்கே இடம் பிடிப்பது சிரமமில்லாது இருக்கும் என எண்ணினார்.

தங்களுக்குள்ளே பேசிச் சிரித்துக் கொண்டு நடந்த அவர்கள் கராம்பூர் பேருந்து நிலையம் வரை உள்ள தூரத்தை சீக்கிரமே கடந்து வந்தனர். கூட்டமாயிருந்த அங்கு வெவ்வேறு இடங்களில் துப்பாக்கி ஏந்திய போலீஸார் நிற்பதைக் கண்டனர். பேருந்தில் ஏறுமுன் அவர்கள் பயணிகளைப் பரிசோதித்தனர். அவர்களின் நம்பகத் தன்மையை

பரிசோதித்தறிய நுட்பமாய் கேள்வி கேட்கவும் செய்தனர். குறிப்பிட்ட நேரத்தில் கிளம்பும் வகையில் பேருந்துகளுக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது.

பாகபுராணா செல்லும் பேருந்துகள் நிற்குமிடதில் பல்வந்து நின்றான். அவனது முறை வந்ததும் போலீஸ் ஹவில்தார் ஒருவர், அவனைச் சோதனையிட்டார். பல்வந்த் ரூபாய் நோட்டுகள் மறைத்துள்ள இடத்தை அவரது கை ஸ்பரிசித்தது. அந்த இடத்தில் அவன் இடுப்பு புடைத்திருந்தது.

அதிகாரத் தோரணையில் "இது என்ன?" என்று அவன் வினவினார்.

"ஓ, ஹவில்தார் சாஹேப், மனிதர்களிடம் அவரவர் ரகசியங்கள் இருக்கவே செய்யும், அரசாங்கப் பரிசோதனைக்காக நானெப்படி எல்லாவற்றையும் சொல்லக்கூடும் ?" என்று கிசுகிசுத்தான் பல்வந்த்.

"இளைஞனே, அரசாங்கத்திடமிருந்து மறைத்துக் கொள்வதற்கான நேரமல்ல இது. உன் முடிச்சில் என்ன இருக்கிறதென்று சொல்லி விடு" ஹவில்தாரின் தொனி கடுமையாயிருந்து.

பல்வந்த் எச்சரிக்கையுடன் சுற்றுமுற்றும் பார்த்தான். அப்புறம் ஹவில்தாரின் காதோடுகாதாக " அது, சனியன் பிடித்தபணம், வேறென்ன ? சித்பூரிலிருக்கும் என் மைத்துனன் சுக்கத சிங்கிடம் அதனை நான் சேர்ப்பிக்க வேண்டும்" எனக்கிசுகிசுத்தான்.

ஹவில்தார், பல்வந்த் முகத்தை தீவிரமாய் ஆராய்ந்தார். "சரி, வைத்துக்கொள். பேருந்தில் சீட்டு பெற்றுக் கொள்" திடீர்முடிவெடுத்தவர் போலக் குறிப்பிட்டார்.

பேருந்தில் இடமொன்று பிடித்து விட்ட பல்வந்த் நிம்மதிப் பெருமூச்செறிந்தான். ஆண், பெண், குழந்தைகளென ஒவ்வொருவராக இடம்பிடித்த அவர்களில் பெரும் பாலோனோர் கிழக்கு உ.பி. மற்றும் பீஹாரைச் சேர்ந்த பண்ணைக்கூலிகள். நடப்பு அரசியல் குறித்து உரத்த குரலில் தங்களுக்குள் பேசிக்கொண்டனர். இனந் தெரியாத முகங்களுக்கிடையே, அரைகுறைப்பரிச்சயம் கொண்டவை ஒன்றிரண்டைக்கண்டு கொண்டான் பல்வந்த். நோயாளியாய்த்தோன்றிய ஒருவன் தலையில் துணியைச் சுற்றிக்கொண்டு, வாசலுக்கருகேயுள்ள இருக்கையில் அமர்ந்திருந்தான். பயனிகளையெல்லாம் நோட்டம் விட்டுவிட்டு, சன்னல் வழியாக வெளியே பார்த்தான் - இரைகின்ற வியாபாரிகள் நிம்மதிகொண்ட பயணிகள், நடவடிக்கைகளின் பரபரப்பினை.

"டிக்கெட்ஸ், டிக்கெட்ஸ்!"

பல்வந்த் ஏறிட்டுப்பார்த்தான், பஸ்கண்டக்டர். நோயாளியிடம் வந்து கேட்கும்வரை ஒவ்வொரு இருக்கையாக போய்வந்தார். பணம் எடுப்பதற்காக அவன்தன் இருக்கையை சற்றுப்பின் தள்ளினான்.

பல்வந்தின் மனத்தில் ஏதோ பளிச்சிட்டது. அது தெரிந்த முகமே, ஆனால் யாரென்று உணர முடியவில்லை. யாராயிருக்ககூடும்? - நினைவைச் சீண்டி தன்னையே கேட்டுக் கொண்டிருந்தான். விடை காண முடியவில்லை இன்னொரு முறை அவனை நோக்கினான் - நெருக்கி வாரிவிடப்பட்ட முடி, குறுகலான நெற்றி, உட்குழிந்த கண்கள் ஆனால் பிரகாசமானவை அலகு போன்ற மூக்கு, மெல்லுதடுகள் நாவிதன் தன் தேர்ச்சியால் திருத்தியதாய் தோன்றும் பென்சில் போன்ற மீசை. இரு நாள் வளர்ச்சி கண்டிருந்தது தாடி.

இல்லை, அவனுக்குத்

தெரிவந்தவனாய் தோன்றவில்லை. பல்வந்த் மீண்டும் சன்னல் வழி நோக்கினான்.

திடீரென ஒரு அலைகழிப்பை உணர்ந்தான். தன் மூளையின் நரம்பொன்று பிசகிவிட்டதாய் எண்ணினான். துர்தகதியில் துடித்து, பின் சட்டென்று மட்டுப்படும். அவன் இருதயம் அமிழ்வதாய் தோன்ற்று, தூக்கி எறியப்படுவதாய் உணர்ந்தான். காறி உமிழ்ந்தான். சமோஸாவின் வாசம் அவன் தொண்டையிலேயே நிற்க, கரிப்பு - இனிப்புச் சுவை நாவில் பரவியது.

"சனியன்பிடித்த சரண்தாஸ், எப்படிப்பட்ட சமோஸாவை அவன் தயாரித்திருக்கிறான்?" எரிச்சலுடன் கூறினான். முகத்தைச் சுளித்துக் கொண்டவன், செய்வதற்கு வேறொன்றும் இல்லாததால், பயணிகளை மீண்டும் ஒரு முறை நோட்டம் விட்டதும், அவன் மனத்தை இம்சித்துக் கொண்டிருந்த அதே பயணியிடம் பார்வையை பதித்தான். சன்னலில் தலையை சாய்த்து அவன் உட்கார்ந்திருந்தான்.

கண்டக்டர் விசில் ஊதவும், டிரைவர் எஞ்சினை இயக்க, முன் சென்ற பஸ் வேகம் கொண்டது.

போலீஸ்காரர் பேருந்து நிலையத்தில் நின்றிருந்தார், பேருந்து கிடைக்காத பயணிகள் பின்னோக்கி வருகின்ற வண்டிகளைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

"டிக்கெட், இளைஞனே!" கண்டக்டரின் குரல் பலவந்த்தின் காதுகளில் சம்மட்டி அடியாய் விழுந்தது.

பல்வந்த் சீட்டு வாங்குதவற்காக, பையில் கையை துளாவினான்.

"எங்கே போக வேண்டும்?" பதில் சொல்ல வேண்டிய பல்வந்த் திருக திருக விழித்தான். "சனியன், ஆம்! ஆனால் .... எங்கே போகவேண்டுமென்பதை திடீரென மறந்து விட்டான். நெற்றிப் பொட்டை அழுத்தினான், நினைவை வாட்டியெடுத்தான்.

"கண்டக்டர் சாஹேப், - சனியன் பிடித்த இடம், மன்னிக்கவும், மறந்து போய் விட்டது"

கண்டக்டர் அவனை ஆச்சரியத்துடன் பார்த்தார். "நீங்கள் எங்காவது போக வேண்டுமே, நிச்சயமாக". டிக்கெட்டுகளின் விளிம்பில் விரல்களை ஓட விட்டவர், "சரி, ஞாபகப்படுத்திப் பாருங்கள்" என்று கூறிவிட்டு அடுத்த பயணியிடம் சென்றார் அலட்சியமாய்.

முன்னிருக்கையிலிருந்த சீக்கிய போலீஸ்காரர் ஒருவர் துப்பாக்கியின் பிடிப்பை இறுக்கியபடி, திரும்பிப் பல்வந்தைக் கடுமையாக நோக்கினார். தலையை உதறி காற்றில் விரல்களை அலைய விட்டவனாக பல்வந்த் இருக்கையில் ஒட்டிக்கொண்டான். போலீஸ்காரர் சன்னல் வழியாய் சாலையைப் பார்க்கத் தொடங்கினார்.

பல்வந்த் தைரியத்தை இழந்தவனாய்த் தோன்றினான். நினைவுகளைக் கிளறி ஞாபகப்படுத்திட படாதபாடுபட்டான். கடிகாரத்தின் நகர்வாய் ஒரு கணம் கழிந்தது, அடுத்து இன்னொரு கணம். பொறு, பொறு, ஏதோ சிந்தையில் பளிச்சிட்டது - எல்லாம் நினைவுக்கு வந்துவிட்டன.

அவன் பல்வந்த் சிங். அவன் தந்தை ரட்டன் சந்த், சாதியில் அவர்கள் கலால்கள். ஸெரு கிராமத்தில் வசித்தனர். ஆரம்பத்தில் சொந்த ஊரில் மளிகை வியாபாரம் செய்த அவன் அப்பா, அப்புறம் விவசாயத்தில் இறங்கினார். மக்கள் பிரியத்துடன் 'அன்பானது' என்று பொருள்படுவதான 'லடோர்' என்றழைக்கும் சிறு கால்வாய் அவர்கள் ஊருக்கு அருகே ஓடியது. தன்

இளமையில் இக்கால்வாயில் அவன் அம்மணமாய் குளிப்பதுண்டு. பிற்பகலில் அவனது தாய் ராம்பியாரி, தந்தைக்கு சாப்பாடு எடுத்துக் கொண்டு வயலுக்குப் போவது வழக்கம். "பில்லி, ஓ பல்வந்த், வாடா மகனே, சாப்பிட வா" என்று அவள் அழைத்ததும் கால்வாயிலிருந்து அம்மணமாய் வருவான். அவன் தாய் அவன் முடியை வாரிக் கட்டிவிட்டதும், மூவரும் சாப்பிட உட்காருவார்கள் - கத்தரிக்காய், உருளைக் கிழங்கு சேர்ந்த பதார்த்தமும், சாமை மாவில் செய்த ரொட்டிகளும், பெரிய கலயத்தில் கொண்டுவரப்பட்ட மோரும் வைக்கப்பட்டிருக்கும். பின்னர் அவனது மூத்த அக்கா சித்பூரைச் சேர்ந்த சுக்கா சிங்கிற்கு நிச்சயிக்கப்பட்டாள். அப்பா ரட்டன் சந்த் அவளை இந்துக் குடும்பத்தில் மணம் செய்து தரவே விரும்பினார். ஆனால் அம்மா பிடிவாதமாயிருந்தாள். "புனித குருவே" என்ன பேசுகிறாய்! முடியாது, என் மகள் குரு வீட்டிற்குத்தான் போவாள்" என்றாள். கடைசியில் ரட்டன் சந்த் இணங்கினார். தன்னைப் பொறுத்தவரை அது ஒன்றும் பெரிய வித்தியாசமானதில்லை, என்றார். ஒரே தெய்வம்தான் இருக்கிறது. இந்துக்களானாலும், சீக்கியரானாலும் எல்லா மார்க்கத்தினரும் அவருக்குப் பிரியமானவர்களே.

சீக்கிய சம்பிரதாயப்படி திருமணம் நிறைவேறிற்று. கிளம்புவதற்காக மணப்பெண் பல்லக்கில் அவனது அக்கா அமர்ந்ததும், பல்வந்த் அவளைக் கட்டிக் கொண்டு அழுதான். அவனது கிராமத்து நண்பர்கள் பலர் திருமணத்தின் போது உடனிருந்தனர். அவர்களுள் ஒருவன் தர்ஸீம்.

பல்வந்தின் மனதில் ஓர் எண்ணம் உதித்தது. சன்னலருகே உட்கார்ந்திருக்கும் நோயாளியைப் பார்த்தான். வெளிச்சத்தில், இப்போது அவன் முகத்தை தெளிவாய்ப் பார்க்க முடிந்தது. பால்ய நண்பனான தர்ஸீம்தான் அவன். கிராமத்திலிருந்து வெளியேறிய பின், அவனைச் சந்திக்க எண்ணியதே கிடையாது. இவ்வளவு காலமும் அவன் எங்கே வாழ்ந்து வந்திருந்தான்? - பல்வந்த் ஆச்சரியமுற்றான்.

அவனிடம் போய் ஆரத்தழுவிக் கொள்ள வேண்டுமென்பதாய் உணர்ந்தான். ஆனால் தர்ஸீமின் முடி? தாடி, மீசையை என்ன செய்தான்? அவற்றை மழித்திருந்தான். 'புனித குருவே! அது முடியைக் 'கொலை' செய்ததாகும்.

தன்னைக் கட்டுப்படுத்தியவனாய், பல்வந்த் கண்டக்டரிடம் திரும்பினான். "ஞாபகம் வந்துவிட்டது, அது சனியன் பிடித்த சித்பூர். அங்கேதான் போக வேண்டும்" என்று கத்தினான்.

கண்டக்டர் சிரித்துவிட்டு டிக்கெட்டை தந்தார். "பாகபுராணா வில் இறக்கி விடுகிறேன். அங்கிருந்து சித்பூருக்கு நடந்து போகவேண்டும். மண் பாதை நேராய் அங்கே கொண்டு சேர்த்து விடும்" என்று உதவுகின்ற தன்மையில் கூறினார்.

தர்ஸீமை சந்திக்கும் தன் எண்ணத்தை அடக்கிக் கொண்டான் பல்வந்த். தன் குருவுக்கும் மார்க்கத்திற்கும் விசுவாசமில்லாத ஒருவன், நண்பனுக்கு எப்படி விசுவாசமாயிருப்பான் என எதிர்பார்க்க இயலும்?

தர்ஸீமின் ஊடுருவும் பார்வை பேருந்தினை நோட்டம் விட்டுவிட்டு, முன்னிருக்கையில் இருந்த சீக்கிய போலீஸ்காரரிடம் திடுமென நின்றது. தலையில் மூடியிருந்த துணியை வேகமாக விலக்கிவிட்டு, முகத்தை முழுதாய் வெளிக்காட்டினான். அவனது இடது தோளில் பெரும் கட்டு போடப்பட்டிருந்தது. சன்னல் வழியே தொலைவில் நோக்கியவன் தோளிலிருந்த கட்டை அவிழ்க்கத் தொடங்கினான்.

"சனியன் தோளில் அடிபட்டிருக்கிறது!"

பல்வந்த்தின் சிந்தையில் அனுதாப உணர்வு தற்காலிகமாய் எழுந்தது. அவனது பால்ய நண்பன்!

கட்டை அவிழ்த்ததும் பருத்தியிழைப்பட்டைகளை அகற்றி முடிக்கையில் ரிவால்வர் தென்பட்டது. அதன் பளபளப்பையும் நேர்த்தியையும் பார்க்கையில் அது உள்நாட்டுத் துப்பாக்கியாகத் தோன்றவில்லை. பெரும்பாலும் பிரிட்டீஸ் தயாரிப்பாய் இருக்க வேண்டும்.

பல்வந்த் வியந்து உட்கார்ந்தான். தர்ஸீமின் முகம் கடுமையாகியது. அவனது தோட்சதைகள் பிளந்து காணப்பட்டன. வலது கையில் ரிவால்வரை திண்மையாகப் பற்றியிருந்தான். என்ன நிகழ்கிறத எனப் பல்வந்த் புரிந்து கொள்வதற்குள், தனக்கு முன் அமர்ந்திருக்கும் போலீஸ்காரர் தலை மீது குறி வைத்துவிட்டான் தர்ஸீம். அடுத்த கணம், சுடும் சப்தம் அதிர்ந்தது, அதனுடன் பல்வந்த்தின் கூச்சல் கலந்திருந்தது.

"ஓ, தர்ஸீம், சனியன், என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

போலிஸ்காரரது தொப்பி சிவப்பாகி, அவரது தலை ஒரு பக்கம் சாய்ந்தது.

"யாரும் தமது இருக்கையை விட்டு அசையக் கூடாது!" தர்ஸீம் கர்ஜித்தான். ரிவால்வர் இன்னும் கையில் இறுக்கமாய் இருக்க, நின்று கொண்டிருந்தான். பயணிகளெல்லாம் அடங்கிய கூச்சலுடன், கலவரத்துடன் தம் இருக்கைகளில் ஒட்டிக் கொண்டனர்.

"டிரைவர் சாஹேப், பஸ்ஸை நிறுத்து!" தர்ஸீம் மீண்டும் கர்ஜித்தான்.

டிரைவர் வண்டியை நிறுத்தினான். வயலுக்குள் குதித்து, திரும்பிப் பாராதபடி, காணாது போனான். கால்களுக்கிடையே முகத்தை மறைத்துக் கொண்ட கண்டக்டர், கைகளால் தன் தலையைப் பற்றிக் கொண்டான். அதிர்ந்து போனவர்களாய் பயணிகள் தர்ஸீமின் முகத்தை நோக்கினர். குருதி வற்றிப் போன அவர்களது முகங்களெல்லாம் வெளுத்துப் போயின.

சாலையின் இருபுறங்களிலும் ஓடிக் கொண்டிருந்த இருவர் திடீரெனப் பேருந்தை நெருங்கினர். அவர்களது கைகளில் சிறிய சுழல் துப்பாக்கிகள் இருந்தன. தலைப்பாகைகள் அணிந்திருந்த அவர்தம் முகங்கள் துணியால் மறைந்திருந்தன.

பேருந்திலிருந்த குழந்தைகள் அழத் தொடங்கின.

பெண்கள் அவர்களைத் தம் மாரில் மறைத்துக் கொள்ள முயன்றனர்.

ரிவால்வர் கையிலிருக்க, தர்ஸீம் இன்னும் பேருந்தில் நின்று கொண்டிருந்தான். ஆயுதந்தாங்கிய இருவரும் தம் துப்பாக்கிகளால் வெளியேறும் வழிகளை மறித்தனர்.

"எல்லாரும் ஒருவர் பின் ஒருவராக இறங்கவும்" தர்ஸீம் கட்டளையிட்டான்.

பயணிகள் ஒவ்வொருவராய் இறங்கத் தொடங்கினர். அவர்கள் மிகவும் பீதியுற்றிருந்தனர். அடுத்து என்ன நிகழும் என்பதை பல்வந்த்தால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தடுமாற்றம் கொண்டாலோ, தயங்கினாலோ அந் நபர் தர்ஸீமின் ரிவால்வரின் குறிபார்ப்புக்கு ஆளாக வேண்டியதுதான். பேருந்தில் குண்டு ஒன்று பாயும், அதனுடன் பல்வந்தின் இக் கூரலும் கலந்து விடும் :

"ஓ தர்ஸீம், என்ன செய்து கொண்டிருக்கிறாய், முட்டாளே? கள்ளங்கபடமற்ற இவர்களை ஏன் கொன்று குவிக்கிறாய், சனியனே?"

கூச்சல்கள் அடங்கிப் போயின. கையில் ரிவால்வருடன் தர்ஸீம்

பல்வந்த்தின் முன் நின்றான்.

"என் பெயரை வெளிப்படையாக உச்சரிக்கும் நீ யார்?" தர்ஸீம் வினவினான்.

அவனுக்குப் பதிலளிப்பதற்கு பதிலாக, பேருந்துக்கு வெளியே நோக்கினான் பல்வந்த். கிழக்கு உ.பி. மற்றும் பீஹாரிலிருந்து தம் மனைவி மக்களுடன் பண்ணைக் கூலிகளாக வந்திருந்தவர்களின் சடலங்கள் சாலையெங்கும் சிதறிக் கிடந்தன. தம் இருப்பிடம் நோக்கிப் போய்ச் சேர ஆவல் கொண்டிருந்தோர் இப்போது இறந்து கிடக்க, சாலை அவர்களது குருதிக்கறைபட்டிருந்தது.

"நாய்க்குப் பிறந்தவனே, ஏன் பேசமாட்டேன்கிறாய்?" திரும்பவும் தர்ஸீம் கர்ஜித்தான்.

தர்ஸீம் பக்கம் திரும்பிய பல்வந்த், உற்று நோக்கினான் அவனது கடுமையான பார்வைக்கு பின் வாங்கினான்.

"யார் நீ? சொல்லாவிட்டால் செத்துப் போவாய்" தர்ஸீமின் குரலிலிருந்த பொறி அனைந்து போனதாய் தோன்றிற்று.

பல்வந்த் பதிலளிக்கவில்லை. அலட்சியமாய் நடந்து பேருந்திலிருந்து இறங்கினான். வெளியே நின்றிருந்தவன் தன் துப்பாக்கியால் பல்வந்த்தை மறித்தான். தர்ஸீம் விரைந்து வெளியேறினான். பல்வந்த்தின் தோள்களை பற்றிக் கொண்டு, அவன் முகத்தை வலுக்கட்டாயமாகத் திருப்பினான். "நீ ஏன் பேச மாட்டேன்கிறாய்? சாவது பற்றி பயப்படவில்லையா? சொல்லு, யார் நீ?" உரத்த குரலில் தர்ஸீம் கேட்டான்.

சுற்றிலும் பதுங்கு குழிகள் இருக்க, சடலங்கள் சுற்றிக் கிடக்க யுத்த களத்தில் நின்றிருப்பவனாக பல்வந்த் உணர்ந்தான் கண நேரம். பதுங்கு குழிகளில் வெடி மருந்துகள் மறைக்கப்பட்டிருந்தன. பாதுகாப்புக்காக இவற்றை அவன் தாண்டிச் செல்ல வேண்டியிருந்தது.

"சொல்லு' என் பெயர் உனக்கெப்படித் தெரியும்? நான் தர்ஸீம் என உனக்கெப்படித் தெரியும்?" தர்ஸீமின் குரல் பலவீனமாகியிருந்தது.

"உன்னை நன்றாகத் தெரியும் சனியனே. ஒருவேளை; உன்னைத் தெரியாமலே இருக்கலாம். முதலில் நான் யாரென்று கூறு? என்னை அடையாளம் தெரிகிறதா? என் தாடி ரோமம் ஒன்றில் ஸெரூவின் மண்ணில் விளைந்த கோதுமை மணியினைக் கண்டு கொள்ளக் கூடும். லடோ என்று நாமமைக்கும் கால்வாயின் நீர்த்துளி தன் அடையாளத்தைப் பதித்து உன்னுடைய/என்னுடைய முகத்தில் இன்னும் ஒட்டிக் கொண்டிருக்கலாம். மணப்பெண் பல்லாக்கில் அமர்ந்த அக்காவிற்கு விடை தருகையில் அழுத முகத்தை ஞாபகப்படுத்தி பார்க்க முடிகிறதா? நான் பல்வந்த், ஒரே கிராமத்துப் பள்ளிக்குப் போனதும், ஒரே கால்வாயில் அம்மணமாய் குளித்ததும் நினைவில்லையா? உனது முடியை ஏன் மழித்திருக்கிறாய், சனியனே? குரு மகாராஜிற்கு துரோகியாகிவிட்டாய். வெளிநாட்டுத் துப்பாக்கியால் அப்பாவி ஜனங்களை கொன்றுபோட்டுக கொண்டிருக்கிறாய்".

பல்வந்த்தின் குமுறலைக் கேட்டு கொண்டிருந்த தர்ஸீம் சகாக்களும் பார்வைகளைப் பரிமாறிக் கொண்டனர்.

"இந்த போக்கிரி நமக்கு தொல்லை தரக்கூடும். இவனை வெளியே விடக்கூடாது" என்றான் தர்ஸீமின் சகாக்களில் ஒருவன். அவனது வார்த்தை ஒவ்வொன்றும் நஞ்சில் தோய்த்திருந்தது. திகைப்படைந்திருந்த தர்ஸீம் திடுமென நிதானத்திற்கு வந்தவனாய்த் தோன்றினான்.

"சந்தோக் நீ சொல்வது சரி, நீயே முடித்து விடு. சபாஷ்!" என்றவன்

விழிகளைத் தாழ்த்திக் கொண்டான்.

யந்திர பொம்மை போலத் தாவிய சந்தோக் சிங் பல்வந்த் மீது தன் துப்பாக்கியை குறி வைத்தான்.

"வேண்டாம், தர்ஸீம்! சனியனே நீ என்னைக் கொல்ல வேண்டும், அவனல்ல!" பல்வந்த், தர்ஸீமிடம் கூச்சலிட்டான்.

மின்னல் வேகத்தில் சந்தோக்கிடமிருந்த துப்பாக்கியை பறித்து, தர்ஸீமை நோக்கி குறிவைத்து விட்டான் பல்வந்த். "புனித குரு மேல் ஆணையாகக் கூறுகிறேன், எந்தச் சனியனையும் நான் விட்டு வைக்கப் போவதில்லை. போலிஸிடம் விஷயத்தைக் கூறுவேன்".

தர்ஸீமின் சகா நகர இருந்த தருணத்தில் பல்வந்த்தின் துப்பாக்கி குண்டுகளைச் சிதறியது. துப்பாக்கி அவன் கைகளிலிருந்து விழ. கைகளைப் பற்றியபடி தரையிலமர்ந்தான்; அக்கைகளிலிருந்து குருதி சொட்டியது. தர்ஸீமும் சந்தோக்கும் திகைத்து நோக்கினர் பல்வந்த்தை.

"என்னைச் சுடு, தர்ஸீம், என்னைச் சுடு, சனியனே! ஸெஹ்ருவின் பூமியைச் சுடு, லடோவின் நீரைச் சுடு. எந்த ஓசை கேட்டு வகுப்புக்கு விரைந்து தார்பாய் மீது நம் இருக்கைகளில் அமர்வோமோ அது எழுப்பும் பித்தளை மணியைச் சுடு. மாலையில் நம் தலைகளின் மேலே பைகளிருக்க, முடித்து விடப்பட்ட நம் முடி அவிழ்ந்து தோள்களில் சரிந்திருக்க, நம்மை வீடு நோக்கிச் சேர்த்ததும் அதே மணிதான்". பல்வந்த் சீறினான்.

தமது சகா வேதனையில் தரை மீது சுருண்டு கொண்டிருக்க, தர்ஸீமும், சந்தோக்கும் நின்ற நிலையில் அப்படியே இருந்தனர். "அவனைக் கொல்லுங்கள்! தீர்த்துக்கட்டுங்கள், என் கையை முடமாக்கிவிட்டான், பயனற்றதாக்கிவிட்டான்!"

"அப்படியானால் என்னைக் கொல்லுங்கள். துப்பாக்கி ரவைகளால் என்னைப் பிளந்து விடுங்கள், சனியன்களே! என்னைக் கொல்லவில்லையானால், நான் உங்களைக் கொல்வேன். யார் முதலில் கொல்கிறாரெனப் பார்க்கலாம். ஐந்துவரை எண்ணுவேன்".

தர்ஸீமும் சந்தோக்கும் கலக்கத்துடன் பார்த்தனர்.

"ஒன்று!"

"இரண்டு!" பல்வந்த்தின் குரல் அதிர்ந்தது.

"மூன்று!"

"நான்கு!"

ஒரு குண்டின் சப்தம் காற்றைப் பிளந்தது. பல்வந்த்தின் கால்கள் இலேசாய் தரையிலிருந்து எழுந்தன. அவன் மாரிலிருந்து குருதி கொட்டியது. அவன் முணுமுணுத்தான் : "புனித குருவின் நாமத்தையே நா உச்சரிக்கட்டும்"

அப்புறம் அவன் சாலையில், ஜி.டி.சாலையில் சாய்ந்தான் - அச்சாலை பியாஸ் நதியைத் தொட்டவாறு ஸட்ஸெஜ் போய், அதற்கு அப்பாலும் செல்கிறது. "புனிதகுரு" என முணுமுணுத்தான் பல்வந்த், பின்னர் அவன்கண் முன்னே மூடுபனி கவியத் தொடங்கிற்று. அம்மூடுபனியினின்றும் தர்ஸீம் மற்றும் சகாக்களின் பீதி தரும் முகங்கள் வெளிப்பட, சாலையெங்கும் பிரேதங்கள் சிதறிக்கிடப்பதையும், இப்போது காலிப்பெட்டியாக தோன்றுகின்ற பேருந்து, அநாதையாய், நிசப்தமாய், நிற்பதையும் கண்டான். தொலைதூரத்தில் கரைந்து போகும் வரை எங்கு பார்த்தாலும் வயல்கள் விரிந்து கிடந்தன.

"சமாதி மீது தூங்கிக் கொண்டிருக்கிறாய், பைத்தியக்கார பையா!" காலை மூட்டத்தினூடாக சுகாசிங்கின் குரல் வந்தது. சத்வந்த்,

போலாவைத் தூக்கிக் கொண்டான். லாந்தர் இன்னும் எரிந்து கொண்டிருந்தது. அதன் ஒளிவட்டம் சமாதி மேடை மீது விரிந்திரிந்தது.

போலா தூக்கக் கலக்கத்தில் முணுமுணுத்தான். அவன் தலையை வருடிக் கொடுத்த சத்வந்த், "போலா, வீட்டிலிருந்து நள்ளிரவில் ஏன் இங்கு வந்தாய்?" என்று பாசந்ததும்ப கேட்டாள்.

இப்போது போலா நன்றாக விழித்துவிட்டான். அவன் முடியைப் பிணைத்திருந்த முடிச்சு தளர்ந்து போயிருந்தது. "மாமா வந்துவிட்டாரா?" தலையை முடிந்தபடி கேட்டான்.

"ஓ, மாமாவைக் கூட்டி வர லாந்தரும் கையுமாக வந்திருந்தாயா? என்று கேட்டான் சத்வந்த்.

"ஆம், பகலில் ஒரு கதையை கேட்டிருந்தேன். மாமா வழிதப்பியிருக்க வேண்டும் என்று பயந்தேன்."

"ஆமாம் சத்வந்த், பல்வந்த் வரமாட்டான். சாதாரணமாக நேற்று மாலையில் அவன் நம்முடன் இருக்க வேண்டும்" சுகாசிங் சிந்தனை வயப்பட்டவனாக ஆனான்.

அவர்கள் அமைதியாகி, வீடு நோக்கிப் போகத் தொடங்கினர். லாந்தரைக் கையில் எடுத்த சுகாசிங், சிம்னியை உயர்த்தி அணைத்து விட முனைந்தான்.

"வேண்டாம், லாந்தரை அணைத்து விட வேண்டாம். மாமா இன்னும் வரவில்லை" என்று கத்தினான் போலா.

கவலை தோய்ந்தவர்களாய், அக்குழந்தையின் முகத்தை அலசி ஆராய்ந்தனர். போலாவின் கண்கள், பிரதான சாலையிலிருந்து பிரியும் மண்பாதையில் பதிந்திருந்தன. ●

# தூங்கும் அழகிகள் இல்லம்

## யசுநாரி கவபட்டா

*(ஜப்பானிய நாவல்)*

*தமிழில் : லதா ராமகிருஷ்ணன்*
*வெளியீடு : உன்னதம்,*
*4/3, முத்து வேலப்பா வீதி, ஈரோடு லி 1*
*96 பக்கங்கள் விலை ரூ. 40/- (மே-2001)*

ஜப்பானிய எழுத்தாளர்களில் முதன்முறையாக நோபல் பரிசு பெற்றவரான கவபட்டா (1899 - 1972)வின் குறுநாவல் இது. அறுபதுகளின் துவக்கத்தில் வெளியாகியுள்ளது. குழந்தைப்பருவத்திலேயே பெற்றோர்களையும், பாட்டியையும், ஒரே சகோதரியையும் இழந்து 'வீடோ, குடும்பமோ' இல்லாதவராகி, நிரந்தர பயணியாக வாழ்க்கையை நடத்தியிருக்கிறார் கவபட்டா. தனிமை உணர்வு இவருடைய எழுத்துக்களின் (ஆறு நாவல்கள்) ஆதாரப் பண்பாக உள்ளதாக சொல்லப்படுகிறது.

ஒரு இந்திய வாசகனுக்கு - தமிழ் வாசகனுக்கு என்று சொன்னால் கூடுதல் வலு கிடைக்கும் - இந்த நாவல் ஒரு பிரத்யேக . முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது. வெளியாகி நாற்பது வருடங்களான பிறகு தமிழ் மொழி பெயர்ப்பில் வருவது தற்செயலான ஒரு நிகழ்வு என்று சொல்லமுடியாது. பின் நவீனத்துவம் ஏற்படுத்திய சூழல் கனிந்து இப்படிப்பட்ட எழுத்தை வாசகர்களுக்குக் கொண்டுவ்து சேர்த்திருக்கிறது - அதுவும் ஒரு பெண் எழுத்தாளரின் மொழிபெயர்ப்பில். இது தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் ஒரு செயல்பாடு. மனித இருப்பின் அடிப்படை இயக்கு சக்தியான பாலுணர்வு தொடர்பான பல உளவியல் மற்றும் சமூக ஒடுக்குமுறைகளுக்கு ஆளாகியுள்ள சமூகம் நம்முடையது. போலி மதிப்பீடுகளை வேண்டா வெறுப்பாகக் கட்டிக் காப்பதிலேயே அது தன்னுடைய படைப்பூக்கத்தை பின்னப்படுத்திக் கொண்டு விட்டது. இந்த நாவலில் சித்தரிக்கப் பட்டிருப்பதைப் போன்ற ஒரு இல்லம் ஜப்பானில் இல்லாமலிருக்கலாம். இருந்தாலும் அப்படிப்பட்ட இடத்தைக் கற்பனையில் நிறுவுவதற்கே ஆரோக்கியமான மனநிலை தேவைப்படும். பிரத்யட்ச நிஜத்தை விட படைப்பு நிஜம் அதிகம் தீவிரமானது, மேலானது - பாசாங்கற்றது கனவில் வரும் நிஜத்தைப் போல, மனித மனத்தின் மறைந்திருக்கும் பிரதேசங்களைக் காட்சிப்படுத்தும் சக்தி அதற்கு இருக்கிறது. தேர்ந்த எழுத்தாளனின் கையிலிருந்தே இவ்வகை எழுத்து பிறக்கும். அதற்கு ஒரு ஆன்மீக வலிமையும் ஏறிவிடும்.

தன்னுடைய நண்பர் ஒருவரால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு இல்லத்திற்கு பிரதான கதாபாத்திரமான அறுபத்தேழு வயது எகுச்சி ஐந்து தடவை விஜயம் செய்வதை நாவல் ஐந்து பாகங்களில் விவரிக்கிறது. தூங்கும் இளம் அழகிகளின் இல்லம் அது. அதாவது, அழகிகள் சில மருந்துகள் மூலம் வலிய தூங்க வைக்கப்பட்டிருக்கும் இடம். ஆடையில்லாமல் தூங்கும் ஒரு அழகியுடன் வயது முதிர்ந்த ஆண் ஒருவர் ஒரு இரவைக் கழிக்கலாம். இந்த ஏற்பாட்டிற்கு சில கறாரான விதிமுறைகள் உண்டு. ஆணாக இனி செயல்பட முடியாத முதியவர்கள் மட்டுமே அந்த இல்லத்திற்குள் அனுமதிக்கப்படுகிறார்கள். குறிப்பிட்ட பெண் தூங்க வைக்கப்பட்ட பிறகே ஒரு முதியவர் அந்த அறைக்குள் அனுப்பப்படுகிறார். முயற்சி செய்தாலும் அவளைத் தூக்கத்திலிருந்து அவரால் எழுப்ப முடியாது. அவள் யாரென்று தெரிந்துக் கொள்ள அவர் முயலக்கூடாது. அவளை பிறகு வெளியில் தெருவில் பார்த்தால் கூட பேசக்கூடாது. அவளுக்குத் தன்னுடன் படுத்திருக்கும் ஆண் யாரென்று தெரியப்போவதேயில்லை. அடுத்த நாள் காலை அவள் எழும் முன்னரே முதியவர் அனுப்பப்பட்டு விடுகிறார். இப்படி தங்குவதற்கு அந்த முதியவர்கள் பரத்தையர்களுக்குத் தருவதை விட அதிக பணத்தைத் தரவேண்டியிருக்கிறது. முதியவர்கள் தூங்க விரும்பினால் அவர்களுக்கு தூக்க மாத்திரைகளும் தரப்படுகின்றன. இந்த விதிகள் மீறப்பட்டால் அந்த இல்லம் சாதாரண கேளிக்கை விடுதி ஆகிவிடும் என்று கருதும் ஒரு நடுத்தர வயதுப் பெண் அந்த இல்லத்தை நிர்வகிக்கிறார்.

'மூப்பெய்திய ஒரு மனிதனுக்கு வாழ்வின் மீட்சியாக' அந்த இல்லத்திற்கு மேற்கொள்ளப்படும் விஜயம் அந்த முதியவர்களால் கருதப்படுகிறது ... (அந்த) வயோதிகர்களுக்கு இத்தகையதொரு பெண்ணின் அருகில் உறங்குவது என்பது வேறொரு அற்புத உலகைச் சேர்ந்த ஆனந்தமாக, அனுபவமாக ஆகும் என்பதில் எந்தவித சந்தேகமுமிருக்க முடியாது. அந்தப் பெண் விழித்தெழ மாட்டாள் என்பதால் அந்த மூப்படைந்த விருந்தினர்கள் தங்கள் வயதின் அவலத்தை அவமானத்தை உணர வேண்டியதில்லை. அவர்களால் பெண்களைப்பற்றிய வரையறையற்ற கனவுகளிலும், நினைவுகளிலும் எந்தத் தடையுமின்றி மூழ்கித் திளைக்க முடியும். (ப.37)

மூன்று மகள்கள் மூலம் பேரக் குழந்தைகளையும் பெற்றுவிட்ட அறுபத்தேழு வயது எகுச்சியின் அனுபவங்களாகவே சம்பவங்கள் விவரிக்கப்படுகின்றன. தூங்கும் அழகிகளோடு ஒவ்வொரு முறையும் அவருக்கு ஏற்படும் தொடர்பு உடல்ரீதியான தொடுதல்களோடு துவங்கி ஆன்மீக அனுபவம் வரை விரிவதைச் சொல்வதே இந்த நாவலின் சிறப்பு. ஒவ்வொரு விஜயத்தின் போதும் வெவ்வேறு பெண்களைக் காண்கிறார். எகுச்சி இன்னும் ஆணாக இயங்கக் கூடிய சக்தி படைத்தவர் என்பதே அவருக்குள்ள பிரச்சினை. அப்பெண்களின் தலைமுடி, கண்ணிமைகள், காதுகள், உதடுகள், விரல்கள், பற்கள், நகங்கள், முலைகள் என்று மிக துல்லியமான வர்ணணைகள் எகுச்சியின் பார்வையில் சொல்லப்படுகின்றன. முதல் விஜயத்தின் போது சாதாரண தூங்கும் அழகியையும், இரண்டாவது விஜயத்தின் போது அனுபவப்பட்ட ஒரு மாயஜாலக்காரியையும், மூன்றாவதாக 'பயிற்சி மேற்கொண்டிருக்கும் பதினாறு வயதுப் பெண்ணையும்', நான்காவதாக கதகதப்பான பெண்ணையும், ஐந்தாவது

தடவை ஒரு வெள்ளைப் பெண் ஒரு கருப்புப் பெண் என்று இரண்டு பெண்களையும் படுக்கையில் காண்கிறார்.

ஒவ்வொரு பெண்ணும் எகுச்சியின் பழைய ஞாபகங்களைக் கிளர்த்துகிறாள். இளம் பருவம் தொட்டே அவர் பல வகை பெண்களுடன் கொண்ட தொடர்புகள் மற்றும் அவை ஏற்படுத்திய புரிதல்கள் ஆகியவை ஒவ்வொன்றாக அவருடைய மனதில் மீள்கின்றன. அவருடைய இளமைக்கால காதலி தொடங்கி, தான் காதல் கொண்ட தன்னிலும் மூத்த பெண், ஜப்பானிய பணிப் பெண்களான 'கெய்ஷாக்கள்' என்று பெண்கள் சார்ந்த பலமான அனுபவப் பின்புலம் கொண்டவர் அவர். பால் குடித்த தன் பேரக்குழந்தையைத் தூக்கி வைத்திருந்து விட்டு ஒரு பரத்தையிடம் போனபோது அவள் அவருடைய கோட்டிலிருந்து பால்வாசம் வீசுவதைக் கண்டு அவர் செய்வது தகாத செயல் என்று அவரை வெறுத்துத் துரத்துகிறாள் ; இரண்டு குழந்தைகளுக்குத் தாயான ஒரு பெண்ணோடு ஒரு இரவைக் கழிக்கும் அவர், தாறுமாறாகக் கலைந்து கிடந்த தன்னுடைய உடமைகளைச் சீர்ப்படுத்திய அவளுடைய நேர்த்தியைக் கண்டு வியக்கிறார்; ஒரு முறை ஒரு பதினான்கு வயதுப் பெண் திருவிழா ஒன்றின் சத்தத்திலேயே கவனம் கொண்டிருந்ததால் அவளை உடனே திருவிழாவுக்கு அனுப்பி வைக்கிறார்; சூத்தத்தை ஒரு நெறியாகப் பேணிய அவருடைய காதலி, குடும்பத்தாரின் கட்டாயத்தால் அவரிடமிருந்து பிரிக்கப்பட்டு வேறொருவருக்குத் திருமணம் செய்விக்கப்பட்டாள்; சில வருடங்கள் கழித்து அவளை ஒரு குழந்தையின் தாயாகப் பார்க்கிறார்; குழந்தை தன்னுடையதா என்று கேட்க அவள் பலமாக மறுக்கிறாள்; பிறகு அவள் இறந்துவிட்டதை அறிந்து கொள்கிறார். அவர் வெறும் பெண் பித்தர் அல்லர் என்பதற்கு இவை நிரூபணங்கள்.

முதல் விஜயத்தின் போது அவர் தூக்க மாத்திரையைச் சாப்பிட்ட பிறகு இரண்டு கனவுகள் காண்கிறார். நான்கு கால்கள் கொண்ட ஒரு பெண்ணின் இன்பம் தரும் அணைப்பு ஒன்றில் வருகிறது. இன்னொன்றில் அவருடைய மகள்களில் ஒருத்தி உருக்குலைந்த ஒரு குழந்தையைப் பெற்றெடுத்திருந்தாள். அந்தப் பயங்கர கனவு குற்ற உணர்வின் விளைவா? இரண்டாவது ஒரு பெண் கனவு கண்டு சில வார்த்தைகளை உச்சரிக்கிறாள். அவளுடைய அம்மாவைக் குறித்த கனவாக அது எகுச்சிக்கு படுகிறது. அவரும் அவரைத் தன்னுடைய அம்மாவாகக் கருதி இறுக அணைத்துக் கொள்கிறார். "மரணத்தின் விளிம்பு வரை தேய்மானமடைந்து விட்ட ஒரு வயோதிக மனிதனுக்கு யௌவனம் கொப்பளிக்கும் ஒரு இளம் பெண்ணின் மேனியால் போர்த்தப்பட்டுக்கிடக்கும் போது கிடைப்பதை விட, 'தன்னை மறந்த நிலை', ஒரு சொர்க்க மறதி வேறெப்போதும் கிடைக்க வழியில்லை. ஆனால் தங்களுக்காய் பலியாக்கப்படும் இளம் பெண்களுக்கான பணத்தை அந்த வயோதிக மனிதர்கள் குற்ற வுணர்வுகள் ஏதுமின்றித்தான் அளித்துக் கொண்டிருந்தார்களா?" என்ற கேள்வியை கவபட்டா எழுப்புகிறார். அந்த இல்லத்திற்கு வரும் முதியவர்களுக்கு மரணங்குறித்த பயம், இழந்துவிட்ட தங்களுடைய யௌவனப் பருவம் குறித்த வருத்தம், ஏக்கம், மனசாட்சி, உறுத்தல் என பலவித துயரச் சிந்தனைகள் இருக்கும். ஆனால் அவர்கள் மண்டியிட ஏதுவாய் அவர்களுக்கு எந்த புத்தனும் கிடைக்கப் போவதில்லை. அவர்கள் அழுதாலும், குரலெடுத்துக் கரைந்தாலும் அந்த நிர்வாணப் பெண் எதையும் அறியப்போவதில்லை என்பதால்

அவர்கள் அவமானமாக உணரவேண்டியதில்லை. இந்த தூங்கும் அழகியே ஒருவகை புத்தர்தான். அவளுடைய இளம் மேனியும், வாசமும் அந்த சோகம் நிரம்பிய முதியவருக்கு தரப்பட்ட மன்னிப்பாக இருக்கலாம் என்றெல்லாம் எழுதி கவபட்டா தன் படைப்பபை ஆன்மீக தளத்துக்குக் கொண்டு சேர்த்துவிடுகிறார். எகுச்சி மூன்றாவது விஜயத்தின்போது சந்திக்கும் பதினாறு வயதுப் பெண்ணைத் தன்னுடைய புத்தராகப் பார்க்கிறார்.

அந்த இல்லத்தில் இருந்தபோது இறந்துவிட்ட ஃபகுரா என்பவரைப் பற்றி கேள்விப்பட்ட எகுச்சிக்கு ஐந்தாவது விஜயத்தின் போது தன்னுடைய மரணம் பற்றிய எதிர்பார்ப்பு கலந்த பயம் வந்துவிடுகிறது. இரண்டு இளம் பெண்கள் மத்தியில் இறந்து போவது ஒரு பேறு என்று நினைக்கிறார். காசநோய் கண்டு இறந்து போன தன்னுடைய தாயின் மரணக் காட்சி அவருக்கு நினைவு வருகிறது. எதிர்பார்ப்புக்கு மாறாக இரண்டு பெண்களில் ஒருத்தி இறந்து போகிறாள்.

மாய உலகம் போன்ற ஒன்றை உருவாக்கி ஒரு முதியவரின் வாழ்க்கையை நிகழ்காலம், இறந்தகாலம், என்று ஊடாடி கவபட்டா அற்புதமாக சித்தரிக்கிறார். எந்த மனிதச் செயல்பாட்டையும் சரி, தவறு என்று அறுதியிட்டுச் சொல்லாமல் போவதே இந்த நாவலின் விசேஷ அம்சம்.

ஆங்கில மொழிபெயர்ப்பின் சுவை சிதையாமல் லதா ராமகிருஷ்ணன் சிறப்பாக தமிழாக்கம் செய்துள்ளார். மூலப் பிரதியை வைத்துக் கொண்டு சிரத்தை எடுத்து மெய்பார்ப்பைச் செய்திருந்தால் தவிர்த்திருக்கக் கூடிய சில பிழைகளும் உள்ளன. 'அற்பமான' என்று வரவேண்டிய இடத்தில் 'அற்புதமான' (ப.17) என்று வருகிறது. (ஆங்கில வார்த்தை 'trivial' ) இரண்டாவது தடவையாக எகுச்சி அந்த இல்லத்திற்கு இரண்டு வாரங்கள் கழித்துப் போவதாக (ப.26. ஆங்கிலத்தில் 'fortnight') சரியாக சொல்லப்பட்டு அடுத்த பக்கத்திலேயே (ப. 27) 'இரண்டு மாத கால அவகாசத்தில்' என்று வருகிறது. மொழிபெயர்ப்பாளர். அல்லது பதிப்பாளர் கவனக்குறைவாக செய்த பிழைகளாக இவை இருக்கலாம். Editor என்ற மிக இன்றியமையாத ஒரு நபரின் பணியை தமிழ் பதிப்புலகம் அங்கீகரித்து ஏற்றுக் கொள்ள வேண்டிய தருணம் வந்துவிட்டது. ஒரு பிரதியை பதிப்பிப்பது என்றால் வெறும் அச்சுப்பிழைகளை சரிசெய்வது (அதுவும் இப்போதெல்லாம் அரைகுறையாகத்தான்) என்ற ரீதியில்தான் மெய்பார்ப்பு நடக்கிறது. ஒரு பிரதி செம்மையாக வெளிவர தேவையான மொழி, இலக்கணம், வாக்கிய அமைப்பு, தகவல்களின் துல்லியம் போன்ற பலவற்றை சரிபார்ப்பதே ஒரு Editor ன் வேலை. பன்மையில் தொடங்கி ஒருமையில் முடிக்கும் நல்ல எழுத்தாளர்கள் குறிப்பாகக் கவிஞர்கள் தமிழில் உண்டு. Editing என்பது தங்களுடைய படைப்புச் சுதந்திரத்திற்கு விடப்படும் சவால் என்று எழுத்தாளர்கள் சிலர் வீறாப்புடன் நினைக்கக் கூடும். மொழிபெயர்ப்பாக இருந்தாலும் சரி, சுய படைப்பாக இருந்தாலும் சரி மேற்கில் Editing க்கு உட்பட்டே எல்லா நல்ல அல்லது மோசமான (இதற்கு Editor காரணமாக இருக்க மாட்டார்) படைப்புகளும் பிரசுரிக்கப்படுகின்றன என்பதை நாம் அடக்கத்துடன் நினைவில் கொள்ள வேண்டும்.

- ஆர். சிவக்குமார்

# விமர்சனம் என்னும் மொழி

## மொழிபெயர்ப்புக் கட்டுரைகள்
### தெ. கலியாண சுந்தரம்

வாணி பதிப்பகம்,
402, அளகேசன் சாலை, கோவை 641 011
தொலை பேசி: 0422 - 448686
விலை ரூ. 50.

வழக்கமாக நமது தமிழ் விமர்சகர்கள், மேற்கத்தியக் கருத்துக்களைத் தம் சொந்தக் கருத்துக்காளகவே மூலத்தைக் குறிப்பிடாமல் சொல்லி வந்துள்ளனர். முக்கியமான மூல நூல்களின் மொழி பெயர்த்துத் தரும் வாய்ப்பும் வசதியும் இல்லாததால், கட்டுரைகளையாவது வெளிக் கொண்டுவர வேண்டும் என்ற நினைப்பிலும் பல புதிய விமர்சன விஷயங்களை நேரடியாக வாசகர்கள் பெற வேண்டும் என்ற ஆர்வத்திலும் பல்வேறு கட்டுரைகள் என்னால் தேர்ந்தெடுக்கப்பட்டு பிறரைக் கொண்டு மொழி பெயர்க்கப்பட்டு 'லயம்', 'உன்னதம்' பத்திரிக்கைகளில் பிரசுரம் பெற்றன. இவற்றை முறையாகவும் தொடர்ந்தும் நிறைவாகவும் செய்ய வாய்ப்புகள் இல்லாததால், உதிரியாகவே இவை வெளிவந்தன.

'லயத்'தில் இவை பிரசுரத் தொடக்கம் கொண்டன. எனக்கு கவிதை, கதைகளை மொழி பெயர்ப்பதில் உள்ள ஈடுபாடு கட்டுரைகளில் இல்லாததாலும் நல்ல மொழிபெயர்ப்பாளர்களைக் காண்பது துர்லபமாக இருந்தாலும், நான் அப்போது பணிபுரிந்து வந்த கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவராக இருந்த பேராசிரியர் தெ. கலியாண சுந்தரம் அவர்களை இம் மொழிபெயர்ப்பில் ஈடுபடுத்தினேன். ஆங்கிலத்தில் புலமையும், ஆர்வமும், அக்கறையும் இனிய பண்புகளும் கொண்டவர் அவர். நான் தேர்ந்து தந்தவற்றை ஈடுபாட்டுடன் தமிழாக்கினார். நான் அவற்றை மேலும் செப்பம் செய்து வெளியிட்டேன். பரவலான கவனத்தையும் ஈர்ப்பையும் இவை பெற்றன. லயம் நின்ற பிறகு 'உன்னதத்தில்' தொடர்ந்து வெளிவர கௌதம சித்தார்த்தன் உறுதுணை புரிந்தார். அதிலும் கலியாண சுந்தரம் மொழியாக்கங்களைச் செய்தார். நான் வழக்கம் போல் தேர்ந்தெடுத்த கதைகளை மட்டுமே தொடர்ந்து மொழியாக்கம் செய்து வந்தேன். அதிகம் கட்டுரைகள் வரவேண்டும் என்பதாலும் கௌதம சித்தார்த்தன் நான் தேர்ந்து தந்தவற்றை தகுந்தவர்களைக் கொண்டும் கிடைத்தவர்களைக் கொண்டும் மொழியாக்கம் செய்து வெளியிட்டார். இவ்வகையில் வெளிவந்தவகைளாக கீழ்க்கண்டவற்றை குறிப்பிடலாம். ஃபூக்கோ (படைப்பாளி என்பவன் யார்?) ரோலண்ட் பார்த் (படைப்பாளியின் மரணம்), ஜான் பார்த் (தீர்ந்து போனதன் இலக்கியம்) டி.ஆர். நாகராஜ் (பற்றியெரியும் பாதங்கள்). ஆண்டனி ஈஸ்தோப் (சொல்லாடல் கோட்பாடு), சூஸன் ஸோண்டாக் (விமர்சனத்திற்கு எதிராக), பிராய்டு (படைப்பாக்க எழுத்தாளர்களும் பகல் கனவு - தமிழ் அமிழ்தம்) மற்றும் வில்லியம் பர்ரோஸ், நபக்கவ் பேட்டிகள் ஆகியன முக்கியமானவை. பிற கட்டுரைகளும் தொடர்ந்து வெளிவரலாம்.

பணி ஓய்வு பெற்ற பின் - தொடர்ந்து இயங்கும் நோக்கத்தில் - பேரா. தெ. கலியாண சுந்தரம் தாம் மொழிபெயர்த்த கட்டுரைகளைத் தற்போது ஒரு நூலாகத் தொகுத்து தந்திருக்கிறார். நூலின் ஆரம்பத்தில் சம்பிரதாயமாகவும் திருஷ்டி பரிகாரமாகவும் உள்ள - அசட்டுத்தனமான அணிந்துரையையும் அதை விட மோசமான ஒரு

பேராசிரியையின் முகவுரையும் மானசீகமாகக் கிழித்தெறிந்து விட்டு - வாசகர்கள் நூலைப் படித்து பயன்பெறலாம்; நிறைவு கொள்ளலாம்.

'விமர்சனம் என்னும் மொழி' என்ற கவனத்தை ஈர்க்கும் தலைப்புடன் கூடிய இந்நூலில் ஆறு கட்டுரைகள் உள்ளன. முதலாவது மற்றும் இறுதிக் கட்டுரைகள் தவிர மீதியுள்ள நான்கும் இலக்கியம் தொடர்பானவை ; David Lodge தொகுத்த, புகழ்பெற்றதும் பாடப் புத்தகமாக விளங்குவதுமான 20th Century LIterary Criticisam என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டவை. இவரே இத்தொகுப்பைத் தொடர்ந்து தொடுத்த அடுத்த நூலிலிருந்து பல கட்டுரைகளையும் நான் தேர்ந்தெடுத்திருக்கிறேன்.

அமைப்பியல் பின் அமைப்பியல்/ பின்நவீனத்துவ இலக்கிய விமர்சகர்களில் முதலிடம் பெறும் ரோலண்ட் பார்த்தின் விமர்சனம் என்னும் மொழி என்ற கட்டுரை அவரது முதல் கட்டத்தைச் சேர்ந்தது. விமர்சனத்தை ஒரு தனித்த வகை மொழியாடலைக் கண்டு சொன்ன முக்கியமான ஒரு கட்டுரை இது.

பிராங்க் கெர்மோட், நவீன இலக்கிய விமர்சகர்களில் பல்துறைப் பலன் பெற்று அமைப்பியலைப் பரவலாக்குவதற்குக் காரணகர்த்தாவாகவும் விளங்குபவர். விரல்விட்டு எண்ணத்தக்கவர்களுள் ஒருவர் இவரது 'செய்பொருட்கள், பரிகாசங்கள் கலை' என்ற கட்டுரை 'நவீனத்துவம்' என்ற நீண்ட கட்டுரையின் ஒரு பகுதி. நவநவீனத் தளத்தில் ஒழுங்கின்மை, வடிவமின்மை பற்றிப் பேசி வெறும் பரிகாசங்களுக்கும் கலையாக நிற்பவைகளுக்கும் உள்ள வித்தியாசத்தை விவரிக்கிறது இக்கட்டுரை.

ஜனரஞ்சகப் பத்திரிகைகள், இலக்கியம் பற்றி செய்முறை ஆய்வு ரீதியில் தமது புகழ் பெற்ற நூல்களை எழுதிய ரிச்சர்டு ஹோகார்த், ஜனரஞ்சகம் பற்றிய ஆரம்ப கட்ட விளக்கங்களைப் பதியவைத்தார். அவரது 'ஜனரஞ்சகக் கலை சித்தரித்துக் காட்டும் யதார்த்த உலகம்' என்ற கட்டுரை, மேற்கத்தியப் பத்திரிகைகளைப் பற்றிக் கூறினாலும் இங்கேயும் பொருத்திப் பார்க்கத் தகுந்ததே.

யுங்கின் புகழ்பெற்ற கட்டுரை 'உளவியலும் இலக்கியமும்' கலைப்படைப்பே கலைஞனை விளக்க வேண்டுமன்று அவர் தனி வாழ்வின் குறைபாடுகளும் போராட்டங்களும் அல்ல என்கிறது கட்டுரை. கூட்டு நனவிலி மனம், தொல்படிமம் போன்ற அவரது பிரசித்தமான 'பகுப்பாய்வு உளவியல்' கருத்துக்களின் வழி இக்கட்டுரை விளக்கி செல்கிறது.

பி. ஜோசப்பின் 'சிந்து சமவெளி மொழி' பற்றிய கட்டுரை, அவரது திராவிடக் கூறுகள் பற்றிய நூலின் ஒரு பகுதி மட்டுமே. இதை லயத்தில் வெளியிட வற்புறுத்தியவர் பிரமிள். எந்த மொழி என்று இன்னும் நிர்ணயம் பெறாத சிந்து வெளியின் மொழியில் உள்ள திராவிட மொழிக் கட்டமைப்பை இக்கட்டுரை விளக்குகிறது.

கடைசியாக, ஆனால் முதலாவதா உள்ள சல்மான் ருஷ்டியின் 'என் தனியொரு உயிரின் மதிப்பென்ன?' கட்டுரை, 'ஃபட்வா' விதிக்கப்பட்டிருந்த ருஷ்டி, பாதுகாப்புடன் ரகசியமாக வழங்கிய ஒரு சொற்பொழிவு. மனித மனசாட்சி, எழுத்தாளனின் மதிப்பு, தனிமனித சுதந்திரம், மதத்தின் அதிகாரம் பற்றிய கேள்விகளை எழுப்புவது இது.

இப்படி குறைவான கட்டுரைகளைக் கொண்டிருந்தாலும், நிறைவான விஷயங்களை கொண்டதாக விளங்குகிறது இந்நூல்.

- கால சுப்ரமணியம்

# யான் காப்லின்ஸ்கி கவிதைகள்

தமிழில் பிரம்மராஜன்

கிழக்கு ஐரோப்பியக் கவிஞர்களில் மிக விசேஷமான அந்தஸ்து பெறக்கூடியவர் காப்லின்ஸ்கி. கட்டுரையாளர் மொழிபெயர்ப்பாளர் மற்றும் சூழல்சமன்நிலையாளர். 1996 ஆம் ஆண்டு நோபல் பரிசு பெறக்கூடியவர்களின் இறுதிப் பட்டியலில் காப்லின்ஸ்கியின் பெயர் இருந்தது. எஸ்டோனிய நாவலாசியர் யான் க்ராஸ் (Jaan Kross) என்பவரின் பெயரும் இந்தப் பட்டியலில் இருந்தது சற்றுக் குழப்பத்தை அளித்திருக்க வேண்டும். 1941ஆம் ஆண்டு எஸ்டோனியாவின் டார்த்து(Tartu) பகுதியில் பிறந்தார் காப்லின்ஸ்கி. அவரது தாயார் எஸ்டோனியாவைச் சேர்ந்தவர். ஸ்டாலினிச உழைப்பு முகாமுக்கு அனுப்பப்பட்டு ஆனால் திரும்பவே வராமல் தொலைந்து போன அவரது தந்தை போலந்தைச் சேர்ந்தவர். டார்த்து ஸ்டேட் பல்கலைக் கழகத்தில் வடிவவியல் மற்றும் பிரெஞ்சு மொழிஆய்வியல் பயின்றார் காப்லின்ஸ்கி. அவர் முக்கியமாகப் பயின்ற ஆசிரியர்கள் லெவி ஸ்டராஸ்(Levi Strauss), பெஞ்சமின் லீ வோர்ஃப்(Benjamin Lee Whorf) மற்றும் பால் ரேதான்(Paul Radin). கிழக்கு நாடுகளின் தத்துவங்களில் தீவிர ஈடுபாடு கொண்டவர். காப்லின்ஸ்கியின் தாய்மொழி எஸ்டோனிய மொழியாக இருப்பினும் ரஷ்ய ஆக்கிரமிப்புக்குப் பிறகு அரசாங்க மொழியாக ரஷ்ய மொழி மாறிற்று. டார்த்து பகுதியில் வசிக்கும் யான் காப்லின்ஸ்கியின் முதல் கவிதைத் தொகுதி On Dust and Colours (1967). இரண்டாவது தொகுதி The Same Sea In Us All (1985). The Wandering Border (1992). Through the Forest (1996) This and Other (1996). Several Summers and Springs (1995)

Iceland Titanic என்ற தொகுதியும் 1995லேயே வெளியிடப்பட்டது. எஸ்டோனியக் கப்பல் விபத்தொன்றினைப் பற்றிய ஒரு புனைவைப் போல எழுதியிருக்கிறார் காப்லின்ஸ்கி. பட்ங் நஹம்ங் நங்ஹ ஒய் ம்ள் ஆப்ப் (1985). The Wandering Border (1992) ஆகிய இரண்டு தொகுதிகளும்

மேற்கத்திய இலக்கிய உலகில் அதிகம் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன. சமூகவியலாளராக டார்த்து நகரிலும் பிறகு சூழல்சமன்நிலையாளராக டாலின் பொட்டானிகல் கார்டனில் (Tallinn Botanical Garden)6வருடங்களும்(1974லி80) வேலை பார்த்தார். பெரிஸ்த்ரோய்காவிற்குப் பிறகுதான் அவரால் உலகின் பிறநாடுகளுக்கும் பிற பகுதிகளுக்கும் பயணம் செய்ய முடிந்தது. மொழி ரீதியான பிரக்ஞைக்குக் காரணம் குறைந்த பட்சம் காப்லின்ஸ்கியால் நான்கு ஐரோப்பிய மொழிகளில் சர்வ சகஜமாக எழுத முடிந்தது. ஸ்வீடிஷ், ஃபின்னிஷ் மொழிகளிலும் எஸ்டோனிய மொழியிலும் அவரால் தடங்கலின்றி புழங்க முடிந்தது. ஓ ஹம் ற்ட்ங் நல்ழ்ண்ய்ஞ் ண்ய் பஹழ்ற்ன் என்ற கவிதையை(தொகுதியை) அவர் ஆங்கிலத்தில் நேரடியாக எழுதியிருக்கிறார். ஒரு மொழி பெயர்ப்பாளர் என்ற வகையிலும் அவரது பங்களிப்பு சாதாரணப்படுத்திவிட முடியாதது. சீனக் கவிதையிலிருந்து லிபோ மற்றும் துபோ ஆகியோரை எஸ்டோனிய மொழியில் பெயர்த்திருக்கிறார்.

அடிப்படையில் வேறு எந்த நவீன ஐரோப்பியக் கவிஞரை விடவும் மாறுபட்டுத் தெரிவதற்குக் காரணம் காப்லின்ஸ்கியின் சூழல்சமன்நிலை குறித்த அக்கறைகளும் கீழை தேசங்களின் தத்துவம் மற்றும் இலக்கியங்களில் அவர் கொண்டுள்ள ஈடுபாடுமாகும். ஸ்டாலினியப் பனி உறைவு இளகுவதற்குக் காரணமாக இருந்த அறிவுவாதிகளின் முன்னணிப்படையிலும் மிக முக்கியப் பங்கு வகித்திருக்கிறார் காப்லின்ஸ்கி.

மீண்டும் எஸ்டோனியாவின் பூகோள அமைப்பு மற்றும் ஆக்கிரமிப்பு வரலாற்றுக்குத் திரும்புவோம். ஃபின்லாந்து தேசத்து வளைகுடாக் கடற்கரையின் கிழக்குப் புறத்தில் அமைந்திருக்கும் ஒரு சிறிய நாடு எஸ்டோனியா. எஸ்டோனிய தேசத்தின் தாய்மொழி ஃபின்னோலிவுக்ரிக் (Finno Ugric)ஆகும். நிறைய அம்சங்களில் ஃபின்னிஷ் மொழியைப் போலவே இருக்கக் கூடியது. 800 வருட சுமத்தப்பட்ட அரசாங்கங்களை வீழ்த்திய எஸ்டோனியா ஜாரிஸ்ட் ரஷ்யாவின் வீழ்ச்சிக்குப் பிறகு சுதந்திரமடைந்தது. ஆயினும் ரஷ்யாவும் ஜெர்மனியும் 1940களில் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் உடனடியாக ரஷ்யா எஸ்டோனியாவில் ராணுவத் தளங்களை அமைத்துக் கொண்டு விட்டது. 1941□1944க்கு இடைப்பட்ட வருடங்களில் ஜெர்மனி எஸ்டோனியாவைக் கைப்பற்றி தன் காலனியாக்கிக் கொண்டது. மூன்றாம் ரைக்கின் வீழ்ச்சிக்குப் பின் மீண்டும் ஸ்டாலினிய ரஷ்யாவிடம் அதன் சுதந்திரம் அடமானம் வைக்கப்பட்டது.

காப்லின்ஸ்கி தனது கவிதை சிருஷ்டிக்கான தோற்றுவாய்களாக இந்த வாழ்க்கையின் ஆழ்ந்த துயரங்களை, ஞாபகம் கொள்ளுதலின் துக்கங்களை, விலங்குகள் கொன்று அழிக்கப்படுவதை, வனங்கள் அழிபடுவது போன்ற விஷயங்களைக் குறிப்பிடுகிறார். சொர்க்கம் என்ற ஒன்று கண்டிப்பாக இருக்கத்தான் வேண்டும், ஏனெனின் இந்த நம்மின் வாழ்வுலகு மிக நிச்சயமாக நரகமாக இருக்கிறது. என்பினும் வாழ்வின் இருண்ட

விஷயங்களைப் பற்றி மாத்திரமே கவிதையில் வெளிப்படுத்துபவரல்ல காப்லின்ஸ்கி. அவரது ஆரம்ப கட்டக் கவிதைகள் தெரிவிப்பது என்னவெனில் இந்த உலகம் துன்புறுவதற்குக் காரணம் அறிவுரீதியாக அறிவதற்கியலாத உந்தங்களே. மனிதனுக்கு மனிதன் இழைக்கும் காட்டுமிராண்டித்தனத்தையும் குரூரங்களையும் நாம் பொறுத்துக் கொள்ள முடிந்தாலும் பிரபஞ்சத்தின் அறிவிலித்தன்மை அதிகமான சேதாரங்களை உண்டாக்குவதாக அமைகிறது. அவரது இரண்டாம் கட்டக் கவிதைகள் மேற்குலகின் இருமைவாத கருத்துருவங்களைத் துறந்து கிழக்கு நாடுகளின் நிவாரணம் மிகுந்த ஆறுதலுக்குத் திரும்பிவிடுகின்றன. காப்லின்ஸ்கிக்கு கிடைத்த புத்தமதப் பயிற்சியே இதற்கு முக்கியமான காரணம்.

ஒரு மனிதனின் சொர்க்கமானது அவனது சொந்த நற்குணத் தன்மைகளே என்றார் எஸ்ரா பவுண்ட். இதே கருத்தை காப்லின்ஸ்கி இயற்கையோடியைந்த வாழ்வில் மனிதன் பெறும் இயல்பான ஒருங்கமைவின் மேல் ஏற்றிச் சொல்கிறார். சொல்லப் போனால் இந்த அளவு இயற்கைக்கான இடத்தை இன்றைய காலகட்டத்தில் வேறு எந்த ஐரோப்பியக் கவிஞரும் தருவதில்லை.

எஸ்டோனிய நாவலாசிரியர் யான் க்ராஸ-ம் காப்லின்ஸ்கியும் எஸ்டோனியப் பாராளுமன்றத்தின் எம்.பிக்களாகவும் இருந்திருக்கின்றனர்.

காப்லின்ஸ்கியின் கட்டுரைகள் அவரது நாட்டில் வெளியாவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே ஸ்வீடிஷ் மொழியிலும், ஃபின்னிஷ் மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்தன. 1992ஆம் ஆண்டில்தான் அவரது முதல் கட்டுரைத் தொகுதியான Politics and Anti-politics எஸ்டோனியாவில் வெளியிடப்பட்டது. 1996 இல் வெளிவந்த கட்டுரைத் தொகுதியான This and Other இதை விடக் கனமான தத்துவக் கட்டுரைகளடங்கியது. அவரது சூழல்சமன்நிலை பற்றிய பார்வைகள் இக்கட்டுரைகளில் தாவோயிஸம் மற்றும் கீழைநாட்டு சிந்தனைகளால் வலுப்பெற்றன. ஷ-மேக்கர் காந்தியலிலிபௌத்தப் பொருளாதாரம் பற்றி உரக்கச் சிந்தித்ததை இங்கு நினைவு கூர்வது பொருந்தும்.

கம்யூனிசத்திற்குப் பிறகான கலைஞர்களின் உலகினைப் பற்றி From Harem to Brothel என்ற கட்டுரையை எழுதினார். கலையை, ஓவியத்தை, இசையை உண்டாக்குவதென்பது காதல் செய்வதற்கிணையானது. இந்த செயல்பாடுகள் இடையூறு செய்யப்படலாமே தவிர நிறுத்தப்பட முடியாதவை. இதற்கப்பால் இவற்றைக் கட்டுப்படுத்த நினைப்பதும், ஆள நினைப்பதும்லி லிஇப்படிச் செய்ய நினைப்பவர்கள் அரசர்களாக இருந்தாலும் சரி, போப்புகளாக இருந்தாலும் சரி, கட்சி செயலாளர்களாக இருந்தாலும் சரி, இயலவே இயலாத காரியங்கள். மதகுருக்களும், கட்சி செயலர்களும், பிற ஆட்சியாளர்களும் அழகிய பெண்களையும் நுட்பமான கலைஞர்களையும் தங்களுக்கே என்று வைத்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். கலைஞர்களும் அழகிய பெண்களும் தங்கள் இஷ்டப்பட்டவர்களுடன் காதல்

செய்வது தடை செய்யப்படுகிறது. இப்படி தனிப்பட்ட அந்தப்புரங்களில் வைக்கப்படுகிறவர்களுக்கு சுதந்திரம் தவிர மற்றெல்லாம் வழங்கப்படுகிறது. கம்யூனிச உலகமானது கலைஞர்களுக்கான ஒரு வித தனிப்பட்ட அந்தப்புரமாகத்தான் இருந்திருக்கிறது. கட்சியும் ரஷ்ய உளவுத்துறையுமான கேஜிபியும் இவர்களை பத்திரமாக, மேற்கத்திய உலகின் பாதிப்புக்களிலிருந்து பத்திரமாக வைத்திருந்தன. எவர் ஒருவர் கட்சிக்கு மிக விசுவாசியாக இருக்கிறாரோ இருந்தாரோ அவர் மாத்திரமே முதலாளித்துவ நாடுகளுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டார். எனினும் அத்தகைய விசுவாசிகளினுடனும் கூட உளவுத்துறையின் ரகசியப் பிரிவினர் உடன் சென்றனர். பழைய காலங்களில் சுல்த்தான்களின் ஹேரத்தில் இருந்த பெண்கள் நகரத்திற்குள் செல்லும் போது கூடவே அலிகளும் அவர்களுடன் சென்றதைப் போல.

எனினும் முரண்நிலையாக கலைஞர்கள் தாம் மிக முக்கியமானவர்கள் என்பதை உணர்ந்தே வந்தார்கள். மிக நுணுக்கமான தணிக்கைகள், கேஜிபியிடமிருந்து கிடைத்த பிரத்யேக கவனிப்பு, கட்சியின் உயர் பதவிகளிலிருந்தவர்கள் கொடுத்த அக்கறை ஆகியவை கலைஞர்கள் தம் இன்றியமையாத்தன்மையை மேலும் உணர வைக்கவே உதவிற்று.

கம்யூனிசத்திற்கு ஏற்பட்ட குலைவிற்குப் பிறகு எல்லாமே மாறிப் போயிற்று. ஹேரத்தின் கதவுகள் விரிந்து அகலத் திறந்தன. யார் வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம் என்றாகி விட்டது.

அடுத்த காப்லின்ஸ்கியின் வேறு ஒரு முக்கியக் கவிதை முயற்சியை அதுவும் சோதனை முயற்சியை அவசியம் குறிப்பிட வேண்டும். Several Summers and Springs (1995). மிக அழகிய புத்தகமாக வெளியிடப்பட்ட இதில் காப்லின்ஸ்கியின் ஒரிஜினல் கவிதைகளும், பதினோறாம் நூற்றாண்டின் சீனக் கவிஞரான டுசோங் போவின் மொழிபெயர்க்கப்பட்ட கவிதைகளும் எகிப்திய புனித மறை எழுத்துக்களைக் கொண்டு அச்சிடப்பட்டுள்ளன. இந்த வகையில் மூலங்கள் மொழிபெயர்ப்புகளாக எப்படி வளைந்து கொடுக்கின்றன என்பதைப் பார்க்க முடிகிறது.

காப்லின்ஸ்கி கவிதைகளின் இன்னொரு தனித்தன்மை என்னவென்றால் அது என்ன இலக்கிய வகைமையைச் சேர்ந்ததென்று அவருக்கே சில சமயம் தெளிவாவதில்லை என்னும் விஷயம். இது கவிதைதானா, இல்லை தியானமா, ஒரு வேளை இந்த உலகிற்கான அறுதியிடப்பட்டு அறிவிக்கப்பட்ட காதலா, இல்லை அதன் முரண்கள் மற்றும் கசடுகளிலிருந்து விடுதலையா? காப்லின்ஸ்கியின் கவிதைகள் இலக்கிய வகைமைகளின் கொடுங்கோன்மையிலிருந்து விடுதலை பெற்றவையாகவும், நாகரீகங்களின் பீதிக்கனவுகளிலிருந்து கட்டறுத்துக் கொண்டவையாகவும், சிந்தாந்தங்களிலிருந்து தப்பித்துக் கொண்டவையாகவுமிருக்கின்றன.

The Evening Brings Everything Back என்ற தொகுதி காப்லின்ஸ்கியின் முதிர்ந்த கவிதைகளை உள்ளடக்கியது

எனலாம். சம்பிரதாயமாக கவிதை வடிவங்கள் என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவங்களின் எல்லைகளும் புதிய கவிதைக்கான வடிவங்களின் எல்லைகளும் இதில் மங்கிப் போகின்றன. ஒரு சமக்கிடைக்கயான படிமத் தொடர்ச்சியை இதில் காப்லின்ஸ்கி உருவாக்கியிருக்கிறார். அவரைப் பொருத்தவரை நிஜமானதென்பது நமது முன்னோர்களின் அதி தூரத்து கடந்த காலத்தில் இருக்கிறது அவைதான் நமது அடித்தளங்கள், நமது சுண்ணாம்புப் பாறைகள் இன்னும் நாகரீகங்களால் நாசமாக்கப்படாமல் மிச்சமிருப்பவை. முதிர்ச்சியான கவிதைகளில் அவர் கவிதையின் குவி மையத்தை மாற்றியிருக்கிறார். இவற்றில் அவர் மேலோட்டமான சரித்திரம் மற்றும் நாகரீகத்தின் தோற்றங்களை மறுதளித்து விட்டு தன்னை ஒரு கிராமப்புற தான்யக்கிடங்கொன்றில் தூங்கிப் போய்விடுபவராகச் சித்தரிக்கிறார். இன்னொரு கவிதையில் கைவிடப்பட்ட கிராமத்து வீடொன்றின் பழைய பெட்டியில் காணப்படும் தேனீக்களின் கூடு. நித்தியமான பிற ( Eternal Other )என்பதில் காப்லின்ஸ்கி ஏற்பட்ட ஈடுபாட்டுக்குக் காரணம் கார்ல் குஸ்தாவ் யூங்தான். நித்தியமான பிற என்ற கருத்துருவாக்கத்தைக் கொண்டுதான் சமரசப்படுத்த முடியாத பல நவீன தொழில்நுட்பத்தால் விளைந்த வாழ்க்கை மாற்றங்களை காப்லின்ஸ்கியால் ஜீரணித்துக் கொண்டு தொடர்ந்து இயற்கைக்கான தியானநிலைக் கவிதைகளை இன்று எழுத முடிகிறது. இந்த மாதிரி இடங்களில் மனிதனின் சாதனைகள் என்று வரலாறு நம்மை நம்ப வைத்திருக்கும் . விஷயங்களை சந்தேகிக்கிறார் காப்லின்ஸ்கி. எனவே அவரால் சீஸரைப் புகழ முடியாது. மாறாக சீஸரை எதிர்த்து மரணத்தைச் சந்தித்த வெர்சின்ஜெட்ரோரிக்ஸ் என்ற எதிர்க்குரலோனைப் பற்றி சிலாகித்து எழுதுகிறார். மேலும் வெர்சின்ஜெட்ரோரிக்ஸின் கடைசி வாக்கு மூலம் மாதிரி எழுதப்பட்டிருக்கும் கவிதை காப்லின்ஸ்கியின் எஸ்டோனியாவுக்கே பொருந்தக்கூடியதுதான்.

காப்லின்ஸ்கியின் கவிதைக் கலை சிறிய கவிதைகளிலும், நீண்ட கவிதைகளிலும் சரிசமமாகப் பரிணமிக்கிறது. சிறிய கவிதைகளை எந்த அளவு அடர்த்தியாகவும் இறுக்கமாகவும் எழுதுகிறாரோ அதே அளவு நீண்ட கவிதைகளை தளர்த்தியும் விளக்கியும் எழுதுகிறார். கவிதையின் எடுப்பும் தொடுப்பும் முடிப்பும் தளர்வாக இருக்கின்றனவே அன்றி அவற்றின் தாக்கம் உக்கிரமாகவே இருக்கிறது. நிறைய தொழில்நுட்பப் பிரயோகங்களும், அந்நிய மொழிச் சொற்களும் (சீன, மற்றும் கீழைநாட்டு) இவர் கவிதைகளில் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

காப்லின்ஸ்கி டார்த்து ஸ்டேட் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிகிறார்.

இங்கு இடம் பெறும் கவிதைகள் யாவும் The Same Sea In Us All (Collins Harvill:1990) தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. ஆங்கில மொழிபெயர்ப்பாளர் Sam Hamill ஒரு அமெரிக்கக் கவிஞர்.

## வார்த்தைகள் சிந்தனைகள்

வார்த்தைகள் சிந்தனைகள்
திரைகள்
எவற்றின் முன்புறமாக
அவை அர்த்தப்படுத்தியாக
வேண்டும்
வியாக்கியானங்கள்
நியாயப்படுத்தல்கள்
தத்துவங்கள்
செயற்கை
சோப்புத் துகள்கள்
ஒவ்வொருவரும் அவரவருக்காக
தத்துவத்தில் தப்பித்தல்
தத்துவத்திலிருந்து தப்பித்தல்
பாதை
மீண்டும்
மௌனத்திற்கு
பரிசுத்தத்திற்கு
வீடு

●

## வார்த்தைகள் வார்த்தைகள் மாத்திரம்

வார்த்தைகள் வார்த்தைகள்
மாத்திரம்
காலியான கலன்கள் காலியான
வெளியில்
மற்ற எல்லாமே
ஒன்றுதான் அதேதான்லிலிஓர்
உலகம்
என்றுமே இருந்ததில்லை
மேலும் என்றுமே
இருக்கப் போவதில்லை

எவர் ஒருவருமே கூட எதுவுமே
ஆக முடியாதுலிலிஎதை
அர்த்தப்படுத்துகிறது இந்தத்
தனிமை

●

## அதே கடல்தான் நம் எல்லோருக்குள்ளும்

அதே கடல்தான்
நம் எல்லோருக்குள்ளும்
சிவப்பாக
அடர்த்தியாக
வெதுவெதுப்பாக

ஒவ்வொரு மூலையிலிருந்தும்
துடிக்கும் காற்றுக்கள்
இதயத்தின் பாய் மரங்களுக்குள்

வெண்ணிற
வெளியின் ஊடாய்
நுரையின்
வரி

கேள்வியானது துடுப்பிலிருந்து
விழுந்த வண்ணம்
அலையின் மீது மீண்டும்
சுருள்கிறது
பயம்
இருளுக்குப் பின்புறம்

அல்லது அதே
கடல்
வேறு ஒருவருக்காகக்
காத்துக் கொண்டு

●

## கொஞ்சம் கொஞ்சமாக

கொஞ்சம் கொஞ்சமாக
ஒரு கவிதை மறைந்து போகிறது
கனவு கண்டேன் நான் ஒரு
கவிதையை
ஒளிரும் திரீன் அப்பாலுள்ள
பக்கத்தில்
வெண்ணிற மணலின் மீதிருந்த
ஒரு அழகிய பெண்ணைப் பற்றி

அது எழுதப்பட்டது
மற்றும் படிக்கப்பட்டது
வேறு எவரோ ஒருவரால்
மற்றும் அவளது கால்களின் மீது
மணல் போன்று வழிய
வேண்டுமென்கிற ஏக்கமும்
வேறு எவருக்கோ சொந்தமானது

உன்னுடையதோ
உன்னால் தொலைக்கவே
முடியாதிருக்கும்
அந்தக் கனவு மாத்திரம்தான்

•

## மை இன்னும்

மை இன்னும்
உலரவில்லை
ரொட்டி
இன்னும்
உண்ணப்படவில்லை

வசந்தம்
வந்து
போய் விட்டது

வர்ணங்கள்
மீண்டும்
மீண்டும்
வளர்கின்றன
எனது எரிந்து போன
சந்தோஷமான சிறகுகளின் மீது

அவற்றுக்குத்
தெரிவதில்லை

அவை ஒரு தத்துவவாதிக்கா
அல்லது
பட்டாம் பூச்சிக்கா
யாருக்கு சொந்தம் என

•

## வெண்ணிற பூ ஜாடி

வெண்ணிற பூ ஜாடி
வெண்ணிற பியானோவின் மீது
அந்தி மயங்கும் நேரத்து
நீல நிறக் கீற்றொளியில்
ஒளிர்கிறது
அது என்னை
என்னுடன் தாங்கிச் செல்கிறது
இந்த வீட்டுடன்
இந்த அறையுடன்
இந்த உன்னுடன்

நான் தயாராக
இருக்கிறேன்
போவதற்கு
வழிவதற்கு
அது சிறப்பானது
நான் குளிர் காலத்திற்காக
விறகுகளையும் தீக்குச்சிகளையும்
சேகரித்து விட்டேன்
என்பதை நினைவு கூர்வதைப்
போல

•

## இரவும் பூமியும்

இரவும் பூமியும்
கடந்து போன நாளின் கதகதப்பில்

சுவாசித்துக் கொண்டிருக்கின்றன

உன்னுடையதோ
உலகிலேயே விடப்பட
முடியாததாக இருக்கும்

ஒரு நாள் ஒரு சிந்தனை ஒரு
வாழ்வு
கைநிறைய கடல் நுரை
மணல் மீது நடுங்கியபடி.
காற்றில் காற்றுக்குள்ளாக

ஏழாவது பூட்டின் அடியில்
ஒரு பறவையின் குரல்
பாடுகிறது
வேறு எதையோ பற்றி

ஆனால் எந்த மனித
மொழியிலும்
எந்தத் திறவுகோலுமில்லை
அதற்கு

காற்றே
சத்தமாக நக்கி சுத்தப்படுத்து
கற்களையும்
எமது கண்களையும்
உனது வெதுவெதுப்பான
ஈரமான
உப்பு நாக்கினைக்கொண்டு

•

## தூக்கம் மூடுகிறது

தூக்கம் மூடுகிறது நம்மை.
ஒருவருக்கு கூடுதலாக, இருவருக்கு
மிகவும் குறைவாக.
உனது பெருவிரல்கள் குளிர்கால
இரவினை எதிர்ப்பது போல
அம்மணமாக இருக்கின்றன.
சிவப்பு நிற நரிகள் மலைப்
பிரதேசங்களில் பிழம்பு போல
நகர்கின்றன.
ஐந்து தொனிகள். உனது சுண்டு
விரல் சிறியதாக இருக்கிறது.
மேலும் மூடிய உன்

விரிப்புகளின் மீது நடு மற்றும்
மூத்த சகோதரர்கள்
சறுக்கி மீண்டும் மேஜைக்
கதைக்குள்.

ஆனால் நிறைய காலத்திற்குப்
பிறகு எதோ ஒரு நாள், நான்
அந்தக் கடற்கரையை நினைவு
கூர்வேன்,
ஒரு கனவில் மரணத்திற்குப் பிறகு
உள்ளறையில் விழித்தெழுந்தபடி.
அங்கே உடைந்த மரங்கள் மற்றும்
கப்பல்களின் சுக்கலான பகுதிகள்,
விடைபெற்றுச் சென்றோருக்கான
சிலுவைகள், ஒரு வேளை
அவர்கள் வந்து சேர்ந்து
விட்டிருக்கலாம்.
ஒரு முறை போர்வை
நம்மிடமிருந்து நழுவும். ஒரு
முறை கண்கள் இறுக்கமாக ஆகும்
மேலும் ஒரு பொது சவக்குழி
சகோதரர்களைக் கொண்டுவிடும்.
அப்படியானால், கூட,
அப்படியானால் கூட, அப்புறம்
என்ன என்ன என்ன என் காதலி

•

## ஒவ்வொரு இறக்கும் மனிதனும்

ஒவ்வொரு இறக்கும் மனிதனுமே
ஒரு குழந்தைதான்.
பதுங்கு குழிகளில், படுக்கையில்,
ஒரு அரியாசனத்தில், நரிக்கு
அருகில்
நாம் தனுக்காக,
பாதுகாப்பில்லாதவர்களாக
இருக்கிறோம்
கறுப்பு வெல்வெட் நமது
கண்களை வளைக்கும் பொழுதும்
பக்கங்களிலிருந்து எழுத்துக்கள்

சரியும் போதும்
பூமி எவர் ஒருவரையும் இழுக்க
விடுவதில்லை. அவை யாவும்
திருப்பித் தரப்பட
வேண்டியவைவிலிஸ்வாசம்,
கண்கள், ஞாபகம்.
நம்முடன் சேர்ந்து இரவின் ஊடாக
காலையை நோக்கி
பூமி சுழலும் போது நாம்
யாவரும் குழந்தைகளே
அங்கே குரல்கள், காதுகள்,
வெளிச்சம், கதவு போன்ற
எதுவுமிருப்பதில்லை
வெறும் இருளும் இயக்கமும்
மண்ணில் இருக்கிறது மற்றும்
அதன் ஆயிரக்கணக்கான வாய்கள்,
முகவாய்கள், தாடைகள்
மற்றும் கைகால்கள்
சகலத்தையும் வகுத்தபடி
எந்தப் பெயர்களும், எந்த
சிந்தனைகளும் இல்லாமல்
போகுமாறாக
இருளில் மௌனமாகக் கிடக்கும்
ஒருவனில்
அவனது வலது புறம், அவனது
முட்டிகளின் மீது தலை
சரிந்திருக்க.
அவனருகே
அவனுடைய குத்தீட்டி,
அவனுடைய கத்தி
அவனுடைய மேல்கைப்பட்டி
மற்றும் ஒரு உடைந்த பானை.

•

## சகலமும்

சகலமும் உருகுகிறது
எரிந்தழிகிறது.
விளக்கு - விளக்கு - மறைப்பு
வெளிச்சமே கூட
எந்த ஒரு நிழலும் விடுபடாமல்

எந்த உலகமும்
சொந்தமில்லை உங்களுக்கு மற்றும்
நீங்கள் எந்த உலகினையும்
சார்ந்தவரில்லை
நீங்கள் இழுக்கப்படுகிறீர்கள்
மழையினாலும் ஒளியினாலும்
சாலைகளின் மீது வந்தவாறும்
சென்றவாறும்
சகல இடத்திலிருந்தும்
சகல இடங்களுக்கும்

•

## வீடு நிச்சலனமாக

வீடு நிச்சலனமாக இருக்க
நீர் சொட்டிக் கொண்டிருக்கிறது
அசைப்பட்ட குழந்தைத்
துணியிலிருந்து
ஒரு காலியான பேசினுக்குள்
எல்லோரும் ஏற்கனவே
உறங்கியாயிற்று.

நான் மறந்தேன்
என் மனதில் உதித்த
சிறிய கவிதையை
ஆடும் நாற்காலியில்
அமர்ந்து கொண்டு
என் குட்டி மகளை மடியில்
அமர்த்தியபடி

நான் ஒரு பென்சிலை
எடுக்கத் துணியவில்லை
அதை எழுதும் பொருட்டு
இந்த நிச்சலனமும்
தூங்கும் குழந்தையும்
வார்த்தைகளை விட ஆழமான
ஒரு அர்த்தமுள்ளவை
என உணர்ந்து

•

## எறும்புச் சுவடு

எறும்புச் சுவடு
திருகல் மருகலானதொரு
பாப்லர் விருட்சத்தின்
அடிப்புறத்தின் மீது

ஞாபகம்
சிறிய வெளிச்சம்
ஈரம் நனைந்த
மேகத்தில்

பிறகு இரு உலகங்களுக்கிடையில்
நீ திசை தவறுகிறாய்

உன்னை மேலே இழுப்பது
எதுவோ
அது
உனது பாரம்

உன்னைக் கீழ்நோக்கி
இழுப்பதெதுவோ
அது உன் சிறகுகள்

இன்னும் கூட வளராமல்
எனினும் வளர்ந்தபடி

•

## ஒரு படகினைத் தீட்ட

ஒரு படகினைத் தீட்ட
நீ தண்ணீரை
வரைய வேண்டியதில்லை

ஒரு புன்னகையைத் தீட்ட
நீ ஒரு முகத்தினைத்
தீட்டத் தேவையில்லை

மலர்வினைத் தீட்ட
நீ ஒரு மலரைத்
தீட்ட வேண்டியதில்லை

மேலும் நீ சொல்லலாம்
உலகின் அளப்பரிய
எடையின்மையிலிருந்து
ஒரு தூசியைத்
தாங்க வேண்டியிருக்கிறதென்று

•

## தூய எரிக்கும் தாகம்

உனக்கானதொரு
தூய எரிக்கும் தாகம்
உன்னதமானதும்
ஆழத்தில் ஆழமானதுமான ஏக்கம்
உனது கையைத் தருகிறது
எனதிற்குள்
உன் இரண்டு
சொற்றொடர்களுக்கிடையில்
காற்று
காட்டின் மீது சலசலக்கிறது

•

## சகலமும் ஒன்றினுள்

சகலமும் ஒன்றினுள்
ஒன்றே அனைத்திலும்
உடலில் மனம்
மனதில் உடல்
விநோதம் சாதாரணத்தில்
சாதாரணம் விநோதத்தில்
கைவிடப்பட்ட பண்ணை வீட்டின்
அட்டாலில்
ஒரு பழைய பெட்டியில்
தேனீக்கள் கூட்டம்

•

## அவ்வளவு லேசனாது

அவ்வளவு லேசானது
போயும் போயும்
பட்டாம் பூச்சி சிறகுகள் மீது
கட்டப்பட்ட
இந்த மஹா
தீவினை மிக்க
உலகம்
வசந்த காலங்கள்
பெரு நகரங்கள்
பேரழிவுப் பீடிப்புகள்
வரலாற்றின் மேல்
சரிந்தியங்கியபடி

நீ
நான்
எவருக்கு
ஆறுதல் தேவைப்படுகிறதோ
அவர்கள்

கோமாளி நிறத்து
சிறகுகள்
படபடத்துக் கொண்டு

எரியின் மீதான
ஒரு கடுங்காற்றில் சிக்கி

நீயும் கூட
நெடுநாளைக்கு முன்
உனது இறுதிப் பார்வையை
வீசினாய்
சொன்னாய்
உனது
கடைசி வார்த்தையை

●

# ஒருமுறை பெண்ணாகு பிரபுவே

## பானு முஷ்தாக்

கன்னடத்திலிருந்து
நஞ்சுண்டன்

லட்சோப லட்சம் வருடங்களாக என்னைப் போன்ற கோடானுகோடிக் கிருமிகளை சிருஷ்டித்து, எங்களுடைய பாவபுண்ணியங்களுக்காகச் சொர்க்கத்தையும் நகரத்தையும் நிர்மாணித்து எங்களுக்காகக் காத்திருக்கும் பிரபுவே, சொர்க்கத்தின் நந்தவனத்துப் பரிமளம் சுமந்த காற்று வாங்க இப்போது நீ புறப்பட்டிருக்கலாம். இல்லையா? தேஜஸின் ஒளிமயமான கிரணங்களுடன் கைதொழுது நின்றிருக்கும் தேவர்களுக்கு நீ ஆணையிட்டுக் கொண்டிருக்கலாம். இருந்தாலும் உன் நிம்மதிக்குக் கொஞ்சமும் குறைவில்லை. உன் ஆத்மாவின் துகள் எனப்படும் நான் உனக்கு நிவேதனம் செய்யும் உரிமை உண்டல்லவா? ஏனென்றால். . .

நான் மிகவும் மென்மையாயிருந்தபோதான சங்கதி. அப்பொழுது எனக்கு அதிகமான தொந்தரவெதுவுமில்லை. என்னெதிரில் சதா நான்கு சுவர்கள். உன் இனிய கற்பனையின், அற்புத சிருஷ்டியின் எல்லாத் தந்திர, சுதந்திரத்தையும் பெற்ற காற்று ஜன்னலைத் திறந்தபோது மட்டும் என் முகத்தில் வீசிக்கொண்டிருந்தது. நறுமணத்தைக் கர்வத்தோடு வீசிக்கொண்டிருந்த மல்லிகைக் கொடியை நான் வருடிக் கொண்டிருந்தது இரவில் மட்டும். ஆமணக்கு விதையைப் போன்ற வெண்மையான மேகம் சிவந்த நாக்கைப்போல மாலை நேரக்

கிரணத்தை ஓரமாகக் கட்டியிருந்த சித்திரங்களை நான் ரசித்துக்கொண்டிருந்தது பின்பக்க முற்றத்திலிருந்த ஒற்றைக் கருவேப்பிலை மரத்தின் கீழிருந்து. மடங்கிய யானைகளைப் போன்ற கறுத்த மேகங்களின் ஆர்ப்பாட்டத்தை உடம்பெல்லாம் கண்ணாகிக் கவனித்தது நடுவீட்டின் ஜன்னல் வழியாக. முத்துகளைக் கோர்த்த மாலை போன்ற அடைமழையையோ ஆவேசத்தோடு விழுந்து மேக வலையை எழுப்பிக்கொண்டிருந்த மழையின் ரௌத்திரத்தையோ பார்த்துக்கொண்டிருந்தது என் உள் முற்றத்திலிருந்து. நான் தெருவில்கூட இறங்காத என் பாதங்கள் பதிந்துகொண்டிருந்தது வீட்டின் வெளிமுற்றத்து நிலத்தின் மீது மட்டும்... தலையிலிருந்து முந்தானை சரிந்ததில்லை. லஜ்ஜை கண் இமைகளுக்குள்ளேயே தளும்பிக்கொண்டிருந்தது. சிரிப்பும் உத்ட்டோரத்தைத் தாண்டவில்லை. பார்வை படபடக்கவில்லை. இப்படியாக அம்மா என்னை அதிகம் கண்காணிக்கவில்லை. அதைச் செய்யாதே... இதைச் செய்யாதே... இப்படி நிற்காதே... அப்படிப் பார்க்காதே... என்று சொல்லிக் கொண்டிருக்கவில்லை. ஆனாலும் ஒரு சின்னக் கேள்வி! இவையெல்லம் அதாவது... இந்தப் பச்சை வண்ணத்தின் பளபளப்பு, முகத்திலடிக்கும் இந்த வண்ணங்கள், பளபளக்கும் கற்கள், இனிய வாசனை பரப்பும் மண், வீசிக்கொண்டிருக்கும் காற்று, இந்தச் சுகந்தம், மரங்களும் செடிகளும், தோட்டமும் காடும், ஆர்ப்பரிக்கும் கடல், இந்த மலை, மழை நீரில் காகிதப்படகு... இவை எதுவும் நான் தொடக்கூடாதவை, முழுகக்கூடாதவை, முகரக்கூடாதவை, பார்க்கக் கூடாதவை, முகம்தோய்க்கக் கூடாதவை. இவையெல்லாவற்றையும் நீ தந்திருப்பது அவனுக்காக. உன் சர்வ உத்தம சிருஷ்டிக்காக. இல்லையா? எனக்கு இந்த ஓர் உண்மை மட்டும் தெரியும். அதனால் அதிகம் தகறாறு செய்யவில்லை. ஏனென்றால், இது உன்னுடைய் கட்டளையாம்! பாவம் அம்மா! அவள் என்ன செய்வாள்?

அதற்காக நான் மறுபேச்சில்லாமல் அம்மா சொன்ன எல்லாவற்றையும் கேட்டு, அப்படியென்றால்... அதைச் சொல்லிவிடுகிறேன், 'குனிந்து வளைந்து நடக்க வேண்டும். அவன் உன் தெய்வம்... அவன் சொன்னபடி கேட்க வேண்டும்... பக்தியோடு அவனுக்குச் சேவை செய்ய வேண்டும்...?' இவையெல்லாம் என் மனத்தில் ஆழமாகப் படிந்துவிட்டிருந்தன.

அப்பாவையாவது பராவாயில்லை. . . அம்மாவைப் பிரிவது மட்டும் என் இதயத்தையே பிடுங்கி உள்ளங்கையில் வைத்து நசுக்கியதைப்போலயிற்று. அம்மாவும்கூட வேதனைப்பட்டாள். ஆனால் அவள் வாயிலிருந்து ஒரு சத்தமும் வெளியே வரவில்லை. அவள் வயிற்றுக்குள் ரம்பம் அறுத்தது. ஆனாலும் அவள் கண்ணில் நீர் வரவில்லை. உன் சொர்க்கத்தின் எல்லையற்ற புனிதமான இரண்டு குளங்களைப்போல அவள் கண்கள் மின்னிக்கொண்டிருந்தன. விழியோரம் மட்டும் ஈரம். அநேகமாக இது உனக்குப் புரியும். ஏனென்றால் எங்கள் ஒவ்வொருவர் மீதும் உனக்கு எழுபது தாய்மார்களின் அன்பு உள்ளதாம்.

ஒரு தாயின் இதய நெருப்பு அநேகமாக உன் எழுபது இதயங்களுக்கும் பரவியிருக்கலாம். ஆனால் அங்கெல்லாம் நீ எனக்குத் தென்படவில்லை. நான் மிகவும் பயந்தவளாயிருந்தேன். அம்மா என்னை நெஞ்சோடு அணைத்துக்கொண்டாள். அவளது தண்ணென்ற கை என் சுடும் கன்னங்களைத் தடவியது. அதற்குள்ளாக, அம்மாவிடமிருந்து என்னை விடுவித்து, அவன் என்னைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டான். கிங்காப்புத்[1] துணியில் சுற்றப்பட்ட மதிப்புமிக்க நகையாயிருந்தேன் நான்.

இப்போது அம்மா லேசாக விசும்பினாள். எவ்வளவோ தூரம் கடந்தாலும், அவள் விசும்பல் எனக்குக் கேட்டுக்கொண்டிருந்தது. இங்கும் ஒரு சின்னக் கேள்வி! அவனென்பது நமக்குள் ஆழமாகப்பதிந்திருந்தால் என்னவாகும்? இப்படிப்பட்ட பிராணிகளின் உலகம், பூவின் மனசுக்குள் மெல்லிய நுட்பமான அலங்கார வேலை, தங்க முலாம், அற்புதமான குளம் குட்டை நதி சுனைகளை ஒய்வாக அமர்ந்து சிருஷ்டித்த உனக்கு என் இதயத்துக்குள் எட்டிப் பார்த்து என் அச்சங்களையும் ஆசைகளையும் நிராசைகளையும் கனவுகளையும் பார்க்க நேரமில்லை?

இன்னும் எனக்கென்று சொந்தமாக எதுவுமில்லை. மாற்றார் முற்றத்தில் நான் வேர்விட வேண்டியிருந்தது, துளிர்க்க வேண்டியிருந்தது, பூக்க வேண்டியிருந்தது. ஐக்கியமாகிக்கொண்டிருந்தவன் அவன். கரைந்து கொண்டிருந்தது என் இருப்பு. என் பெயரையும் இழந்தேன். . . புதுப் பெயர் என்ன தெரியுமா? அவன் மனைவி என்பது. என் உடம்பு, மனசு எதுவும் என்னுடையதாக இல்லை. அதுவரை என் அறிவுக்கே எட்டாதிருந்த என் உடம்பின் நெகிழ்திறத்தின் வலிமையை எனக்கே ஆச்சரியமேற்படும் அளவுக்கு அவன் விரும்பினான்... அதில் மூழ்கிக் கொண்டிருந்தான். அந்தக் கணம் தவிர, எப்போதும் உன் கட்டளையின் அதிகாரத் தடி அவன் கையில் மின்னிக்கொண்டிருந்தது.

அவன் கில்லாடித்தனம் எங்கெங்கே எப்படி எப்படி வெளிப்பட்டதோ எனக்குத் தெரியாது. கணநேரத்துக்குள் என் இதயத்தைத் தூள் தூளாக்கிக்கொண்டிருந்தான்... மூலைக்கு மூலை வீசிக்கொண்டிருந்தான். என் தேகம் அவனுக்கொரு விளையாட்டுத் திடல், மனசு அவன் கையில் ஒரு விளையாட்டுப் பொம்மை. இப்படி . . . இப்படி . . . எச்சரிக்கையோடு எடுத்துத் தேர்ந்து மனசுக்குப் பத்துப்போட்டுக் கொண்டிருந்தான்... புத்தியை முறித்துக்கொண்டிருந்தான். பிரபுவே அந்த விளையாட்டுக்கு நான் ஏன் உட்படவேண்டியிருந்தது? அவன் மேல் எனக்கொன்றும் வெறுப்பில்லை. அவனோடு விளையாட வேண்டுமென நான் விரும்பியதுமில்லை. நான் அவன் முதுகெலும்பாகி, அவன் என் கண்ணீரைத் துடைப்பவனாயிருந்தான்?

ஒரு வாரம்கூடக் கழிந்திருக்கவில்லை. அவன் வெறிகொண்டவனாகக் கூச்சலிட்டான். நான் யார்? என் அந்தஸ்தென்ன? எனக்கு லட்சம் லட்சமாகக் கொடுப்பவர்

களிருந்தார்கள். போயும் போயும் உன்னைப் போன்ற பிச்சைக்காரியைக் கட்டிக்கொண்டேன்...' இதற்கு நான் என்ன பதில் சொல்ல வேண்டும். அம்மாவின் உபதேசப்படி நான் மௌனமாயிருந்தேன். அவன் கட்டளையிட்டான், 'இப்போதே உன் பிறந்த வீட்டுக்குப்போய் ஐம்பதாயிரம் ரூபாய் வாங்கி வா. இல்லையென்றால் நீ மறுபடியும் இங்கே கால் வைக்க முடியாது'. நான் இப்போது மலிவான துணியில் சுற்றப்பட்ட கில்ட் நகையைப்போல அம்மாவிடம் திரும்பிப் போனேன்.

அம்மாவின் முகம் ஒளிர்ந்தது. ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான சூரியசந்திரர்கள் அவள் முகத்தில் ஒளிர்ந்தார்கள். அவன் என்னோடு வராமல்போனதற்காக அந்த ஒளி சட்டென அணைந்தது. மெல்ல அணைத்துக்கொண்டாள். ஐம்பதாயிரம் ரூபாய் என் சுகத்தையும் அமைதியையும் கெடுத்தது. அந்த இரவு அம்மாவின் பக்கத்தில் படுத்தபோது இதமாகத் தோன்றினாலும், அவன் நினைவுக்கு வந்தான். அம்மாவின் பாசக் கோட்டையில் ஓட்டை விழுந்திருந்தது. அவன் உள்ளே நுழைந்திருந்தான். மூன்று தினங்கள் கழிவதற்குள்ளாகவே நானும்கூட ஆர்வத்தோடு எதிர்பார்த்தேன். 'பணம் கிடைச்சுதா?' என்று விசாரித்தான். என் வாடிய முகத்தைப் பார்த்து, 'நீ அவங்களப் பார்க்கறது இதுவே கடைசி. இனிமே நீ இங்க வரக்கூடாது. அவர்களும் நம்ம வீட்டுக்கு வரக்கூடாது' என்றான்.

அம்மா வயிறு நிறையச் சாப்பிட வைத்தாள். மனம் நிறைய வாழ்த்தினாள். என் கூந்தலைச் சிக்கில்லாமல் வாரினாள். தன் அன்பின் முத்தங்களையெல்லாம் கோர்க்கும் விதமாக நீண்ட சடை பின்னிவிட்டாள். அவள் முடிந்த மல்லிகை தலை நிறைய அவளைப்போலவே கமகமத்தது. இடையில் கோர்த்த கனகாம்பரங்கள் கண்ணாமூச்சி விளையாடின. அம்மாவை அடிக்கொரு தரம் பார்த்தவாறு பெயர்த்தெடுக்க முடியாத காலடிகளைப் பெயர்த்தபடி அவன் பின்னால் அடியெடுத்துவைத்தேன்.

இந்த விஷயத்தில் மட்டும் அவன் பேச்சுத் தவறுவதில்லை. அவனது அகங்காரத்துக்கு ஒரு மகுடம் தேவையல்லவா? நான் அவன் வீட்டுக்குப்போய் மூன்று தினங்கள் வரை என் சடையை அவிழ்க்கவில்லை, அம்மாவுடைய அன்பின் முத்துகள் எங்கே சிதறிவிடுமோ என்று. அது என் இதயத்தின் அநுபந்தம். அவனுக்கோ அவனுடையதே அதிகாரம். சட்டம்... அவன் சொல்வதே முடிவான வார்த்தை. நான் அம்மாவைப் பார்க்கவில்லை. இவைகளையெல்லாம் நான் மறுபடியும் உன்னிடம் சமர்ப்பித்துக்கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. எனக்குத் தெரியும் உன் கணக்குப்பிள்ளைகள் இப்படிப்பட்ட கோடிக்கணக்கான செய்திகளை உனக்கு ஒவ்வொரு நாளும் அனுப்பிவைக்கிறார்கள். இல்லையா? அவையெல்லாம் எழுதுகோல்களால் எழுதப்பட்டவை. ஆனால் இது இதயத்தால் எழுதப்பட்டது. அதுவும் பெண் இதயத்தின் கூரான முனையால் அதற்குள்ளிருக்கும் சிவப்பு மையால் எழுதப்பட்ட எழுத்துகளின் மாலை. அநேகமாகக்

கணக்குப் பிள்ளைகளில்கூடப் பெண் பிரிவினரில் பெண் இதயம் கொண்டவர்கள் இல்லாததினால் இப்படிப்பட்டதொரு நிவேதனம் உனக்கு இதுவரைக்கும் வந்து சேர்ந்திருக்காது.

என்றைக்கும்போல ஜன்னல் கதவுகள் மூடப்பட்ட ஆத்மாவின் கைதி நான். அம்மாவையோ அப்பாவையோ தம்பியையோ மறுபடியும் நான் பார்க்கவில்லை. ஆனாலும் அம்மா முயற்சி செய்யாதிருப்பவளல்ல என்று எனக்குக் கொஞ்சம் எதிர்பார்ப்பு. எனக்குத் தெரியும் அவள் என்னைக் காண்பதற்கு வேண்டியளவு முயற்சி செய்திருக்கிறாள். ஆனால் அவை எதுவும் பலிக்காதபடி புரிபடாத கோட்டையை அவன் கட்டியிருந்தான். அவனுக்குப் பணத்தின் மீதிருந்த பேராசை எங்களுடைய உறவு, அன்பு, வாத்சல்யம் எல்லாவற்றையும் விழுங்கிவிட்டது. அவன் குருடானாலும், தன் நிலைபாட்டில் உறுதியாயிருந்தான்.

சுற்றியிருந்தவர்களில் பலரும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். 'அவன் விருப்பப்படி நடந்துகொள்'. அதோடு, பிரபுவே, நீயும் பல இடங்களில் உன் குரலை முழக்குகிறாய் அவனே என் தெய்வம், அவனை அனுசரித்து நடப்பது என் கடமை என்று. அவன் இந்த உலகத்தில் உள்ள எல்லோரையும் எங்கேயும் எப்போது வேண்டுமானாலும் சந்திக்கலாம். ஆனால் நான்? பிரபுவே, நீயே சொல்லியிருக்கிறாய் தாய் தெய்வமென்று. யார் காலடியில் சொர்க்கம் உள்ளதென நீ காட்டியிருக்கிறாயோ . அவளை ஒருமுறையாவது பார்க்கும் படியில்லை. இந்தச் சிறுமதிக்குத் தோன்றும் இப்படிப்பட்ட சின்னச்சின்னப் பிரச்சனைகளைக் கேட்க உனக்கு நேரமிருக்கிறதோ இல்லையோ! என் மொத்த வாழ்க்கையும் மூன்று மணிநேர நாடகமாக உனக்குத் தோன்றலாம். நான் ஒரு பாத்திரத்தில் நடிப்பவளாகத் தோன்றலாம். ஆனால் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக்கொள். என்னுடையவை இரவல் சுக துக்கங்களல்ல. அவை அபிநயிக்கத் தக்கவையல்ல. அவை சொந்த அனுபவங்கள். நீயோ பங்குகொள்ளாத . சூத்ரதாரி. உன்னுடையதே ஒரு பாத்திரமாக என் உடம்பு மனசிலெல்லாம் ஏறி விழுந்து தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கும்போது? சூத்திரதாரியான உனக்குக் கடமை என்று எதுவும் இல்லையா? போகட்டும் ஒரே ஒரு பதிலையாவது சொல். இதில் என்னுடைய தவ்றென்ன இருக்கிறது?

சாப்பிட்டாயா கொண்டாயா என்று அவன் கேட்கவில்லை. ஆனால் அவன் உழுதான், விதைத்தான். சிதறுண்டிருந்த மனசுக்கும் ஆயாசத்தோடிருந்த ஆத்மாவுக்கும் இடையில் முதல் கர்ப்பத்தால் உடம்பு மட்டும் அழகாயிருந்தது. அதோடு அவனுக்குப் பசியும் தீவிரமாயிருந்தது. நானே தாயாகும் பாதையில் சென்றாலும், திருப்பத்தில் நின்று ஒவ்வொரு கணமும் பிறந்த வீட்டுத் தடத்தைத் திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தேன். தொலைதூரம் வரை எந்த உருவத்தையும் காணவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக ஞாபகத்தின் பசுமையான மரங்கள்

மட்டும் அவ்வப்பொழுது இலை உதிர்த்தபடி மொட்டையாகும் காரியத்தில் மூழ்கியிருந்தன.

பிறகு எனக்குத் தெரியவந்தது என்னவென்றால், அப்பாவைச் சம்மதிக்கவைத்து அவர்களுக்குச் சொந்தமாயிருந்த எல்லாவற்றையும் விற்று இருபதாயிரம் ரூபாய் திரட்டிக் கொண்டு, அம்மா எங்கள் வீட்டுக்கு வந்துகொண்டிருந்தாளாம். அன்று காகம் 'கா' என்று கரைந்து கொண்டிருந்தது. வலது கண் துடித்தது. அடுப்பு சடபடத்தது. அநேகமாக அம்மா வருவாளோ? புறப்பட்டிருந்த அம்மா வரவில்லை. அங்கெங்கோ ஆக்ஸிடெண்ட்டாம். அந்த இடத்திலேயே அவள் உயிர் பிரிந்ததாம். எல்லாம் 'அப்படியாம்' செய்திகள். அப்போதும் அந்த நேரத்திலும் அம்மாவின் பிணத்தைப் பார்க்கக்கூட அவன் அனுப்பவில்லை. அதற்குப் பதிலாக அந்தச் செய்தி என்னை வந்து சேராதபடி எச்சரிக்கையாயிருந்தான்.

இங்கேதான் எங்கள் ஊர்ப் பெரிய ஆஸ்பத்திரியில் அவள் பிணத்தை அறுத்தார்களாம். அனேகமாக இதயத்தை அறுத்திக்கமாட்டார்கள். அதைத் துண்டாக்கியிருந்தால், அதில் கிடைத்திருக்கக்கூடியது உறைந்துபோன ரத்தமல்ல. பதிலுக்கு உறைந்துபோன ஆத்மா, மங்காத லக்ஷ்மண கோடுகள், பல அக்னிப் பரீட்சைகளின் அடையாளங்கள். ஆனால் ஒன்று மட்டும் உண்மை. அவள் தேகத்தைப் பிளந்தாலும் உயிரோடிருந்தபோதும் இறந்தபோதும் அவளது மனசையும் ஆத்மாவையும் யாரும் தொட்டதில்லை. கன்னியாகவே இருந்த அவளது கண்கள் மட்டும் திறந்தேயிருந்தனவாம்! யாரை எதிர்பார்த்திருந்தாளோ? அந்த வரவுக்காக துரதிர்ஷ்டம் பிடித்த அவளது கண்கள் திறந்திருக்கலாம்.

அங்கிருந்து இங்கிருந்து. . . ஜன்னலிலிருந்து வெண்ட்டிலேட்டரிலிருந்து துணுக்குத் துணுக்காகச் செய்திகளைக் கேட்டுக்கொண்டிருந்தாலும், எல்லாவற்றையும் பார்த்து வந்திருந்த அவன் இறுக்கமாகவே மௌனமாகவே இருந்தான். அம்மாவின் பிணத்துக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த காயம்பட்ட என் அப்பா அம்மாவின் மடியிலிருந்த இருபதாயிரம் ரூபாயை எடுத்து அவன் கையிலிட்டாராம். 'இப்பவாவது அவளக் கூட்டிட்டு வா' என்று வேண்டிக் கொண்டாராம். அவன் இதையும் எனக்குத் தெரிவிக்கவே இல்லை. என்னை அழைத்துப்போகவும் இல்லை.

ஒரு மகள் பிறந்தாள். அம்மாவைப்போலவே ஜாடை. கண்களோ ஆழமான குளங்கள். அம்மாவைப்போலவே அவளைத் தூக்கிக் கொஞ்சித் தாலாட்டினேன். இப்போது கண்ணீர் ஆறாக வழியவில்லை. பதிலுக்குப் பனியைப்போல் கண்ணோரத்தில் மட்டும் பிரதிபலித்துக்கொண்டிருந்தது. உன் அற்புத நன்கொடைக்கு வந்தனம். மறக்கும் சக்தியைக் கொடுத்து வாழும் மனவுறுதியைத் தந்தாய். ஞாபகத் தென்றல் வாழ்க்கைப் பாழ்நிலத்தில் குளிர்ச்சியாக வீசிக்கொண்டிருந்தது. அவளுக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தபோதே மீண்டும் ஒருமுறை சூல்கொண்டேன். அவளைத் தூக்கித் தாலாட்டிக்கொண்டிருந்தபோதே

வேறொரு ஜோடிக் காலின் இனிய உதையும் சின்னஞ்சிறு இதயத்தின் துடிப்பும் எனக்குள் முளைத்தன.

நான் ஆதங்கத்துக் குள்ளானேன். அவன் மீசையை முறுக்கினான். 'வளர்க்கறவன் நான். சொமக்கறதுக்கு உனக்கென்ன கஷ்டம்?' பாவம், சரியாகவே சொல்கிறான். பிள்ளையை வயிற்றில் சுமக்கும் கஷ்டம் என்னவென்பதை நீ ஒருமுறையாவது அவனுக்குக் காட்டியிருந்தால்... அவன் இவ்வாறு எப்படிப் பேசியிருப்பான்? காறி உமிழ்வதைப்போல, இறுக்கத்தைத் குறைக்கச் சிறுநீர்கழிப்பதைப்போல, சிறிது உன்மத்த சந்தோஷத்தை எளிமையாகப் பிரயோகித்துச் சுலபமாக சிருஷ்டித் தொழிலை நிருபித்துவிட்டு நீ கவலையற்றிருக்கிறாய். அவன் என்ன ரத்தம் சதைகளால் உயிரூட்ட வேண்டுமா, தன் எலும்பு மஜ்ஜைகளைக் கரைத்து வயிற்றுக் குழந்தைக்கு ஊட்ட வேண்டுமா, சதைக் கண்டங்கள் மட்டுமல்லாமல் இடுப்பு எலும்புகளின் கீல்கள் முறியும்படியான வலிக்கு இடையே அவன் பிளவுபட வேண்டுமா? இவை எல்லாவற்றையும் அவன் அனுபவித்திருந்தால்? இல்லை இவ்வாறு கேட்பதற்கும் எனக்கு வாய்ப்பில்லை. ஏனென்றால் நீ சிருஷ்டி கர்த்தா. அவன் உனக்குப் ப்ரியமான சிருஷ்டி. நான் ப்ரியமற்ற சிருஷ்டியா?

அவன் சந்தோஷத்துக்கு இணையில்லாதபடி, அவன் விரும்பியபடி ஆணே பிறந்தது. எனக்கு விசேஷ சந்தோசமில்லாவிட்டாலும் ஒரு சமாதானம் உண்டாயிற்று. என்னைப்போலவே வாழ்நாள் முழுக்கப் பிரக்ஞையின் நிராதரவான கைதியாகும் ஜீவன் சிருஷ்டியாகவில்லை. எந்த வசிப்பிடமும் வீடும் இல்லாமல் பிறரைச் சார்ந்து வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில்லாத, ஆண் என்னும் அகங்காரத்தின் உச்சமான அடிகளை எடுத்துவைக்கக் கூடிய மகன் பிறந்தானல்லவா! இருந்தாலும் மூத்த குழந்தையிடமே எனக்கு அதிக பாசம்.

பிள்ளைகள் இருவரும் வளர்ந்தார்கள். அவனது அகங்காரத்தின், தன்னை மேலானவனாகக் கருதும் தன்மையினது பிரதிஷ்டையின் முட்டைகள் உடைந்து குஞ்சுகள் பொறிந்துகொண்டேயிருந்தன. நான் அடியோடு பணிவான சேவகியாக மாறிவிட்டிருந்தேன். ஏனென்றால் அது மட்டுமே என் வாழ்வின் பாதையாக இருந்தது. உலகத்துக்கு எந்தக் காணிக்கையும் செலுத்தாத, உலகத்திடமிருந்து எதையும் பெறாத, சமூக உறவைப் பற்றிய அறிவே இல்லாத, பெயரற்ற, அடையாளமில்லாத நான் வெறுமனே அவனுடைய மனைவி அல்லது இலவசமாகக் கிடைத்த சேவகியாயிருந்தேன். ஒருக்கால் அவனுடைய பாதுகாப்பு இல்லாதுபோனால் நான் என்னாவேன் என்று இரவின் அமைதியில் ஊகித்தாலே நடுங்கிக்கொண்டிருந்தேன். அவனில்லாமல் நானில்லை என்கிற உண்மை முகத்திலறைந்தது. நான் அவனுடைய நிழல் அவ்வளவே. இதை ஒத்துக்கொள்ள நான் முதன்முதலில் தயாராயில்லை. எனக்குள்ளேயே தீவிரப் போராட்டம் நடந்தது. அவனில்லாமல் இனி என்ன என்ற கேள்வி தோன்றிய உடனே நான் பயந்தவளாகிக்

கொண்டிருந்தேன். அந்தச் சந்தர்ப்பத்தை நினைத்துப் பார்க்கக்கூட எனக்குப் பயமாயிருந்தது. சேவகியானாலும் பரவாயில்லை வேலைவாங்கிக்கொண்டு சாப்பாடு, துணிமணி வழங்கிக்கொண்டிருந்த மகானுபவன் எனக்கு நிஜமாகவே மகாத்மாவாகத் தோன்றினான்.

இப்படியே தொடர்ந்திருந்தால் அநேகமாக நானும்கூட பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து ஒரு நாள் இறந்தும் போயிருப்பேனோ... அம்மாவைப்போல... ஆனால் அன்றொரு நாள் என்னை ஆஸ்பத்திரியில் சேர்த்தான் அவன். வ்யிற்றில் ஏதோ கட்டி வளர்ந்திருக்கிறதென்று, டாக்டர்கள் என்னவெல்லாமோ சோதனைகள் செய்து ஆபரேசன் செய்ய வேண்டும் என்றார்கள். அவன் முகம் சுளித்தான். அநேகமாக என் மேல் கோபம்கொண்டிருப்பான். ஆனால் அவர்களெல்லோர் எதிரிலும் தெரியப்படுத்திக்கொள்ளவில்லை. அவ்வளவே, இருந்தாலும் எனக்கு ஆபரேஷன் நடந்த பிறகு அவன் வந்து நின்றான். வேறொன்றும் விசாரிக்கவில்லை. 'உன் கழுத்திலிருக்கும் சங்கிலியைக் கொடு' என்று கேட்டான். அந்தச் சங்கிலியைப் பற்றிக் கொஞ்சம் சொல்வது பொருத்தமாயிருக்கும். அந்த இரட்டை வடச் சங்கிலி எனக்குத் திருமணமானபோது அம்மா செய்தது. அதுவும்கூட அவளுடைய அம்மா அவள் திருமண சமயத்தில் கொடுத்திருந்த தங்கத்தை உருக்கிச் செய்தது. அம்மாவின் ஞாபகமாக நான் அதைச் சதா என் கழுத்திலேயே அணிந்திருந்தேன். இப்படி இருந்திருந்தாற்போலக் கேட்டதால் கொடுப்பதற்கு உடனே மனம் வரவில்லை. தாமதப்படுத்தியபடியே கேட்டேன், 'அது இப்ப எதுக்கு வேணும்?'

அநேகமாக என் வாழ்க்கையில் அவனை எதிர்த்துக் கேட்ட முதல் கேள்வி அது. அவன் கொஞ்சம்கூடத் தாட்சண்யமோ கருணையோ இல்லாமல் சொன்னான், 'மறுபடியும் கல்யாணம் பண்ணிக்கப்போறேன். அந்தப் பொண்ணுக்குப் போடணும்'. எனக்குக் கண்கள் இருட்டிக்கொண்டு வந்தன. இந்த க்ளூகோஸ் பாட்டில்களைக் கழற்றியெறிந்துவிட்டு ஓடிப்போய்விடவா? ஓடிப்போவதென்றால், எங்கே போவது? அவன் கன்னத்தில் அறையவா? சே. முடியாது! பிள்ளைகளின் கதி என்ன? என் வீட்டின் நான்கு சுவர்கள்கூட எனக்கு இனி வாய்க்கமாட்டா என்னும் உண்மை என் முன்னால் திறந்துகொண்டிருந்தபோதே நான் நினைவிழந்தேன்.

நான் என் கழுத்திலிருந்த சங்கிலியை என் உயிரைப்போல இடது கையில் பிடித்து, 'நான் குடுக்கமாட்டேன்' என்றேன். இதை எதிர்பார்க்காத அவன் அநேகமாக அதிர்ச்சியடைந்திருக்க வேண்டும். குரூரமான பார்வையை வீசினான். சங்கிலி கிடைக்காமல்போனதைவிட என் நிராகரிப்பாலேயே அவனுக்கு அதிக அவமானமாயிற்று. மூச்சையிழுத்துக்கொண்டு அவன் கொதித்தான். 'ஓஹோ, அப்டின்னா உன் சங்கிலியக் குடுக்கலன்னா என் கல்யாணம் நடக்காதுன்னு நெனச்சிட்டிருக்கறியா?' என்று அதட்டினான். நான் ஷீணித்த குரலில் கேட்டேன், 'இப்ப இன்னொரு

கல்யாணம் எதுக்கு?'

'என்னு விளக்கம் வேறெ குடுக்கணுமா உனக்கு? அப்டின்னா கேளு. உன்னப்போலப் பிச்சக்காரியக் கட்டிக்கிட்டு வாழ்க்கைய இழக்கறதுக்கு எனக்கு இஷ்டமில்ல. உன்னைப்போல நோயாளியால என்ன உபயோகம்? அதுக்குத்தான் வசதியான குடும்பத்தச் சேர்ந்த நல்ல பொண்ணக் கல்யாணம் பண்ணிக்கப்போறேன்'.

எனக்கு வலிகளைத் தாங்கும் சக்தியை நீ தந்திருக்கிறாய். ஆனால் வலிகளைக் கொடுக்கும் இத்தனைக் குரூரத்தை அவனுக்குத் த்ந்திருக்கூடாது. பொறுமைக்கு எல்லை எது? பொறுமையே என் தாரக மந்திரமாயிருந்தாலும் அந்த நிராதாரவான நிலைமையிலும் நான் எரிந்து விழுந்தேன். நான் பேசுவதற்கு முன்பே அவன் சொன்னான், 'இன்னும் கேக்குறியா? உன்னால் உனக்கு என்ன சுகம் கிடைச்சிருக்குது? வீட்டுக்கு விலக்கானப்பல்லாம் பொணம் மாதிரி விழுந்து கெடந்தியல்ல? அதுக்குத்தான் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கப்போறேன்'.

என் மனசின் சிந்திக்கும் ஆற்றல் வெட்டுப்பட்டிருந்தது. பேச்சற்றுப்போனேன். கண்ணீர் அலைகளால் கண்கள் பஞ்சடைந்தன. இருந்திருந்தாற்போல நான் வீதியில் எறியப்பட்ட குப்பையைப் போலானேன். எனக்கு ஆக்ரோசம் நிரம்பி வழிந்தது. படுக்கையிலிருந்து எழ விரும்பினேன். ஆனால் எழு, முடியவில்லை. நிதானமாக ஆலோசிக்கத் தொடங்கினேன். அவன் திருமணத்தைத் தடுக்க என்னால் முடியுமா? நான் அவனைச் சார்ந்துள்ள சேவகி என்னும் உரிமையை மீண்டும் பெற முடியுமா? என் எளிய மூன்று நான்கு கேள்விகளுக்கு ஆயிரமாயிரம் எதிர்க் கேள்விகள் கிடைத்தன. 'பார், நீயோ நோயாளி. அவன் இன்னொரு திருமணம் செய்துகொள்ளட்டும் விடு.'

'அட, நல்லாருக்குதே இது! அவன் ஆம்புள ஒன்னுல்ல நாலு கல்யாணம் பண்ணிக்குவான். அதெல்லாம் நீ கேட்க முடியுமா?' என்று ஒரு குரல் சொன்னால், 'பாரும்மா, அவன் கல்யாணம் பண்ணிக்கிறதுன்னா பண்ணிக்கட்டும். உனக்கு மாசாமாசம் கொஞ்சம் பணம் வர்ற மாதிரி கேஸ் போடு. தீர்ப்பாகறதுக்கு ஒரு நாலஞ்சி வருஷமாகும். அது வரைக்கும் கூலி வேல கீலி வேல செஞ்சிக்கிட்டிரு' என்றது மற்றொரு குரல். மீசைக்குக் கீழே புன்னகை பூத்த இரண்டொருவர் 'பாவம்!' என்று போலி இரக்கம் காட்டினார்கள். அப்படியென்றால் அவன் செயலுக்குச் சமூகத்தின் ஒப்புதல் இருக்கிறது. அதோடு இதற்கெல்லாம் உன்னுடைய தூண்டுதலும் இருக்கிறதாம்! உன் பெயரைச் சொல்லியே அவன் இப்படியெல்லாம் அதிகாரம் செய்கிறானாம். நான் உன்னுடைய பூரணமற்ற சிருஷ்டி என்னும் காரணத்துக்காக எல்லாக் கதவுகளும் எனக்காக மூடியிருக்கின்றன. ஹே பிரபுவே, என் முறையீடு கேட்கிறதா? என் அழுகை உனக்குத் தெரிகிறதா? நான் என்ன செய்யட்டும்? நான் என்ன செய்யட்டும்?

மூன்று தினங்களாக அவன் ஆஸ்பத்திரிக்கு வரவில்லை. ஆஸ்பத்திரிக்காரர்கள் கொடுக்கும் இலவச உணவை நானும்

குழந்தைகளும் பகிர்ந்து உண்டு உயிர் பிழைத்திருக்கிறோம். அதற்கும் தடை ஏற்பட்டது. அன்று ஆஸ்பத்திரிக்காரர்கள் என்னை வீட்டுக்கனுப்பினார்கள். பிள்ளைகள் இருவரையும் அழைத்துக்கொண்டு மிகுந்த கஷ்டத்தோடு நான் என் வீட்டுக்குச் செல்லும் பாதையில் போய்க்கொண்டிருக்கிறேன். ஆனால் வீட்டின் முன் பக்கம் பெரிய பூட்டு. வீட்டின் முன்னால் பச்சைத் தென்னங்கீற்றுப் பந்தல். வீட்டில் யாரும் இல்லை. அக்கம் பக்கத்தவர்கள் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்துவிட்டு மறைந்தார்கள். பிள்ளைகள் என்னை நெருக்கிக்கொண்டு உட்கார்ந்தன. வீட்டின் முன் பக்கம் திண்ணையின் மேல் உட்கார்ந்திருக்கையிலேயே, பகல் கழிந்து இரவு அடியெடுத்து வைத்தது.

எல்லா வீடுகளினுடைய மனங்களின் கதவுகள் மூடிவிட்டன. இரவின் மௌனம் அதிகரித்துக்கொண்டிருந்தது. என் நிராதரவான நிலையைக் கண்டு பிள்ளைகளும்கூட 'அம்மா பசிக்குது.' என்று சொல்லவில்லை. கால் மரத்துப் போனதைப்போலத் திண்ணையின் மேலேயே கையை நீட்டினேன். பிள்ளைகள் இரண்டும் என்னை ஒட்டிக்கொண்டே படுத்தன. அப்படியே தூக்கக் கலக்கத்திலேயே விழிப்பு வந்தது. நேரம் எவ்வளவோ தெரியவில்லை. உடம்பு வெந்து போகிறாற்போல அலறல் ஒன்று தாக்கிக் கண்திறந்தபோது, மகன் பக்கத்திலிருந்து சரிந்து சாக்கடையில் விழுந்திருந்தான். ஒரே தாண்டில் ஓடிச் சேறு படிந்திருந்த குழந்தையைத் தூக்கி நெஞ்சோடு அணைத்துக்கொண்டேன்.

. . . அப்போதுதான் பந்தலுக்குப் பக்கத்தில் டெம்போ நின்ற சத்தம். ஜனங்களின் உற்சாகம், மகிழ்ச்சி, ஆரவாரம். அவன் கீழே இறங்கினான். டெம்போவின் பின் பக்கத்திலிருந்து சிவப்புத் துணி உடுத்திருந்த ஒரு பெண்ணைப் பலமான தன் இரண்டு கைகளிலும் தூக்கிக்கொண்டு. . . கிங்காப்புத் துணியில் சுற்றியிருந்த மதிப்புவாய்ந்த நகையைப்போல... திடமான அடிகளை எடுத்துவைத்து அவன் முன்னேறினான். வீட்டின் கதவு திறந்தது. எல்லோரும் அவனோடிருந்தார்கள். என் மகன் நடுங்கியபடி என்னைக் கட்டிக்கொண்டான். விரிந்த கண்கள் நிலைக்குத்தியிருக்க நான் அதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தேன். சிவப்பு மை நிரம்பிய இதயத்தின் முனை உடைந்துள்ளது. சொல்வதற்கு நா எழவில்லை. எழுத வார்த்தைகள் இல்லை. பொறுமையென்பதன் அர்த்தம் தெரியவில்லை. நீ மீண்டும் ஒரு முறை பிரபஞ்சத்தை நிர்மாணிப்பதனால் ஆணையும் பெண்ணையும் சிருஷ்டிப்பதனால் அனுபவமற்ற குயவனைப்போலச் செய்யாதே. பூமிக்கு... வா... ஒரு முறை பெண்ணாகு பிரபுவே!

•

1. 'கிங்காப்புத் துணி' ஜரிகை வேலைப்பாடமைந்த விலையுயர்ந்த பட்டுத் துணி.

# நூலகத்தில் ஒரு ஜெனரல்

## இடாலோ கால்வினோ

தமிழில்

ஆர். சிவகுமார்

புகழ்பெற்ற பண்டூரியா நாட்டில் ஒரு நாள், உயர் அதிகாரிகளின் மனங்களில் ஒரு சந்தேகம் உண்டானது: அதாவது, ராணுவ செல்வாக்குக்கு எதிரான கருத்துக்களை புத்தகங்கள் கொண்டிருக்கின்றன என்பதாக. தவறுகளைச் செய்யவும் அழிவை உண்டாக்கவும் ஆன இயல்பு உடைய நபர்களே படைத்தலைவர்கள் என்பதாகவும், மகத்தான வெற்றியை ஈட்டித்தரும் குதிரைப்படைத் தாக்குதல்களாக யுத்தங்கள் எல்லா நேரத்திலும் இருப்பதில்லை என்பதாகவும் ஒரு பரவலான மனப்பாங்கை பெரும்பாலான பழைய, நவீன, வெளிநாட்டு, மற்றும் பண்டூரியா நாட்டுப் புத்தகங்கள் கொண்டிருந்ததாக சோதனைகளும், விசாரணைகளும் வெளிப்படுத்தின.

நிலைமையை ஆராய ராணுவ உயர் அதிகாரிகள் கூடினார்கள். ஆனால் எங்கிருந்து தொடங்குவது என்பது அவர்களுக்குத் தெரியவில்லை; ஏனென்றால் அவர்களில் யாரொருவருக்கும் புத்தகங்களைப் பட்டியலிடுதல் தொடர்பான அறிவு கிடையாது. கண்டிப்பும், நேர்மை உணர்வும் கொண்ட ஜெனரல் ஃபெடினாவின் தலைமையில் ஒரு விசாரணை கமிஷன் நிறுவப்பட்டது. பண்டூரியா நாட்டின் ஆகப் பெரிய நூலகத்தின் எல்லா புத்தகங்களையும் விசாரணை கமிஷன் ஆராய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

தூண்களும், படிக்கட்டுகளும் நிரம்பிய ஒரு பழைய கட்டடத்தில் நூலகம் இருந்தது; அதனுடைய சுவர்கள் காரை பெயர்ந்தும், அங்குமிங்கும் பொடிந்து விழுந்து கொண்டும் இருந்தன. அதனுடைய குளிர்ச்சிமிக்க அறைகள் புத்தகங்களால் நிரம்பிப் பிதுங்கி வழிந்தன; சில பகுதிகள் அணுக முடியாதவையாக இருந்தன; சில மூலைகளுக்கு சுண்டெலிகளால் மட்டுமே போக முடியும்.

ராணுவத்துக்கு ஆகும் செலவுகளின் பளுவால் திணறிக் கொண்டிருந்த பண்டூரியாவின் நிதித்துறையால் நூலகத்துக்கு எவ்வித உதவியும் அளிக்க முடியவில்லை.

நவம்பர் மாதத்தில் மழை பெய்து கொண்டிருந்த ஒரு காலையில் நூலகத்தை ராணுவம் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டது. பருமனாகவும், சவரம் செய்யப்பட்ட, சதைப்பற்றான கழுத்துப் பகுதியைக் கொண்டிருந்தவருமான ஜெனரல் தன்னுடைய குதிரையிலிருந்து விறைப்புடன் கீழே இறங்கினார்; மூக்கின் மீது மட்டும பிடிப்புடன் பொருத்தப்பட்டிருந்த கண்ணாடி வழியாக நெரித்த புருவங்களுடன் அவர் கடுகடுப்பாகப் பார்த்தார். உயர்த்திய தாடைகளுடனும் கீழ்நோக்கிய கண் இமைகளுடனும் இருந்த நான்கு ஒல்லியான லெஃப்டினன்டுகள் ஒரு காரிலிருந்து இறங்கினார்கள்; ஒவ்வொருவரும் தங்கள் கைகளில் ஒரு சிறிய பெட்டியை வைத்திருந்தார்கள். பிறகு சிப்பாய்களின் அணி ஒன்று வந்தது; கோவேறு கழுதைகள், வைக்கோல் கட்டுகள், கூடாரங்கள், சமையல் சாதனங்கள், முகாம் ரேடியோ மற்றும் சமிக்ஞைக் கொடிகள் ஆகியவற்றுடன் அவர்கள் நூலகத்தின் பழைய முற்றத்தில் முகாமை நிறுவினார்கள்.

நுழைவாயில்களுக்கு அருகில் காவலாளிகள் நிறுத்தப்பட்டார்கள்; 'பெரிய அளவிலான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன,' என்ற அறிவிப்புடன் உள்ளே நுழையும் அனுமதி மறுக்கப்பட்டது. ஆய்வை வெகு ரகசியமாக செய்வதற்கு இந்த வழிமுறை பயன்பட்டது. குளிரால் விறைத்துப் போகாமலிருக்க கனமான கோட்டுக்கள், கழுத்துத் துண்டுகள், கம்பளித் தொப்பிகள் ஆகியவற்றை அணிந்து கொண்டு ஒவ்வொரு நாள் காலையிலும் நூலகத்துக்கு வந்து பழக்கப்பட்ட படிப்பாளிகள் திரும்பிப் போக வேண்டியதாயிற்று. குழம்பிப் போன அவர்கள் ஒருவரையொருவர் கேட்டுக்கொண்டார்கள்: 'நூலகத்தில் எதற்காக இவ்வளவு பெரிய திட்டமிட்ட நடவடிக்கை? அவர்கள் அந்த இடத்தையே சீர்குலைத்துவிட மாட்டார்களா? குதிரைப்படை எதற்கு? அவர்கள் சுடவும் போகிறார்களா என்ன?

புத்தகங்கள் எவ்வாறு வரிசைப்படுத்தப் பட்டுள்ளன என்பதை ராணுவ அதிகாரிகளுக்கு விளக்கிச் சொல்வதற்காக குள்ளமானவரும், நூலகப் பணியாளர் களிலேயே முதியவருமான திருவாளர் க்ரிஸ்ப்பினோ பணியில் இருக்க வைக்கப்பட்டார். அவருடைய வழுக்கைத் தலை முட்டை வடிவிலும், கண்ணாடிக்கும் பின்னால் கண்கள் குண்டூசித்தலை போலவும் இருந்தன.

இந்தப் பணியை துல்லியமான திட்டமிடலுடன் நடத்தி முடிப்பதே ஜெனரல் ஃபெடினாவின் முழுமுதல் அக்கறையாக இருந்தது; ஏனென்றால், ஆய்வை முடிக்காமல் நூலகத்தை விட்டு விசாரணைக்குழு வெளியேறக் கூடாது என்பது அவருடைய உத்தரவு. ஒருமித்த கவனம் தேவைப்பட்ட பணியாக அது இருந்ததால் படை அதிகாரிகளின் சிந்தனை வேறு திசைகளில் சென்றுவிடக்கூடாது. மளிகைப் பொருட்கள் வாங்கி வரப்பட்டன; சிப்பாய்களின் குடியிருப்பிலிருந்து சில அடுப்புகளும் விறகுச் சுமைகளும் கொண்டுவரப்பட்டன; சில பழைய சுவாரசியமற்ற பத்திரிகைகளின் தொகுப்புகளும் தருவிக்கப்பட்டன. குளிர்ப்பருவத்தில் அதற்கு முன் நூலகம் எப்போதும் அவ்வளவு கதகதப்பாக இருந்ததில்லை. ஜெனரலுக்கும் அவருடைய அதிகாரிகளுக்கும் பாதுகாப்பான இடங்களில் எலிப்பொறிகள் சூழ தற்காலிகப் படுக்கைகள் அமைக்கப்பட்டன.

பிறகு பணிகள் ஒதுக்கப்பட்டன. ஒவ்வொரு லெஃப்டினன்டுக்கும் ஒரு குறிப்பிட்ட அறிவுத்துறை, ஒரு குறிப்பிட்ட நூற்றாண்டின் வரலாறு பிரித்துக் கொடுக்கப்பட்டது. புத்தகங்களை வகைப்படுத்தி பிரிப்பதையும், ஒரு குறிப்பிட்ட புத்தகம் அதிகாரிகளுக்கானதா அதிகாரப் படிநிலை பெறாத அதிகாரிகளுக்கானதா, சாதாரண சிப்பாய்களுக்கானதா அல்லது ராணுவ நீதிமன்றத்துக்குத் தெரிவிக்கப்பட வேண்டியதா என்பதைத் தீர்மானித்து அதற்குரிய வகையில் ரப்பர் ஸ்டாம்ப் இடுவதையும் ஜெனரல் மேற்பார்வையிட தீர்மானிக்கப்பட்டது.

விசாரணைக்கு தன்னுடைய பணியைத் தொடங்கியது. ஜெனரல் ஃபெடினாவின் அறிக்கையை ஒவ்வொரு நாள் மாலையிலும் முகாம் ரேடியோ தலைமையகத்துக்கு அனுப்பியது. 'இவ்வளவு புத்தகங்கள் நுணுகி ஆராயப்பட்டன. சந்தேகத்துக்குரியவை என்று இவ்வளவு புத்தகங்கள் கையகப்படுத்தப்பட்டன. அதிகாரிகளுக்கும், சிப்பாய்களுக்கும் தகுதியானவை என்று இவ்வளவு புத்தகங்கள் அறிவிக்கப்பட்டன'. இந்த கிளர்ச்சியற்ற எண்களோடு மிக அரிதாகவே வழக்கத்துக்கு மாறான சில விஷயங்கள் தலைமையகத்துக்கு அனுப்பப் பட்டன: தன்னுடைய கிட்டப்பார்வைக்கான கண்ணாடியை உடைத்துவிட்ட ஒரு அதிகாரிக்கு ஒரு புது கண்ணாடி வேண்டும் என்ற கோரிக்கை, கவனிப்பின்றி கிடந்த சிசரோவின் ஒரு அரிய கையெழுத்துப் பிரதியை ஒரு கோவேறு கழுதை சாப்பிட்டுவிட்டது என்ற செய்தி போன்றவை அவை.

ஆனால் இவற்றை விட அதிக முக்கியத்துவம் வாய்ந்த சில சம்பவங்கள் நிகழந்து கொண்டிருந்தன; அவற்றைப் பற்றி முகாம் ரேடியோ எந்த செய்தியையும் அனுப்பவில்லை. குறைந்து போவதற்குப் பதிலாக, ஏற்கனவே வனத்தின் அடர்த்தியுடன் இருந்த புத்தகங்கள் முன்பை விட சிடுக்குகளும், புலனரகாத தீங்குகளும் கொண்டு பல்கிப் பெருகுவதாகத் தோன்றின திருவாளர் க்ரிஸ்ப்பினோவின் உதவி மட்டும் இல்லாதிருந்தால் அதிகாரிகள் வழிதவறிப் போயிருப்பார்கள் உதாரணமாக, லெஃப்டினன்ட் அப்ரோகட்டி தான் படித்துக்கொண்டிருந்த புத்தகத்தை மேஜைமேல் எறிந்துவிட்டு எழுந்து, 'ஆனாலும் இது பெரும் அவமதிப்பு! ப்யூனிக் போர்களைப் பற்றிய ஒரு புத்தகம் கார்த்தீஜியர்களைப் பற்றி நல்லவிதமாகவும், ரோமானியர்களைக் குறை சொல்லியும் பேசுகிறது இதை உடனே தலைமையகத்துக்கு அறிவித்தாக வேண்டும்!' என்று சொல்வான் (சரியாகவோ, தவறாகவோ பண்டூரியர்கள் தாங்கள் ரோமானியர்களின் சந்ததி என்று கருதிக்கொண்டிருந்ததை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்) மென்மையான காலணியுடன் நடந்து கொண்டிருந்த நூலகர் அவனிடம் வந்து, 'அது ஒன்றுமில்லை, இந்த இடத்தில் ரோமானியர்களைப் பற்றி அது என்ன சொல்கிறது என்று படித்துவிட்டு அதையும் உங்களுடைய அறிக்கையில் சேர்த்துக் கொள்ளுங்கள்; அடுத்து, இது மற்றும் இது,' என்று சொல்லி ஒரு அடுக்கு புத்தகங்களை அவனுக்குக் கொடுப்பார். பதற்றத்துடன் அவற்றின் புத்தகங்களைப் புரட்டிய லெஃப்டினன்ட் ஆர்வம் மேலிட அவற்றைப் படித்து குறிப்புகள் எடுக்கத் தொடங்கினான். பிறகு தலையைச் சொறிந்துவிட்டு முணுமுணுப்பான்: 'கடவுளே! என்னென்ன கற்க வேண்டியுள்ளது! யார் நினைத்திருக்க முடியும்! ஒரு பெரிய புத்தகத்தை கோபத்துடன் மூடியபடி, 'நல்ல லட்சணமான புத்தகம்! சிலுவைப் போர்களுக்கு உத்வேகமூட்டிய, லட்சியங்களின் தூய்மையைச்

சந்தேகிக்கும் துடுக்குத்தனம் இவர்களுக்கு இருக்கிறதே! ஆமாம், ஐயா. சிலுவைப்போர்களை! என்று சொன்ன லெஃப்டினன்ட் லூச்செட்டியிடம் போய் திருவாளர் க்ரிஸ்ப்பினோ புன்னகைத்தபடி, 'இதோ பாருங்கள், அந்த விஷயம் பற்றி நீங்கள் அறிக்கை தயாரிக்க விரும்பினால், மேலும் சில தகவல்களைக் கொடுக்கும் வேறு சில புத்தகங்களை உனக்கு நான் சிபாரிசு செய்யவா?' என்று சொல்லிவிட்டு பாதி அலமாரியை நிரப்பியிருந்த புத்தகங்களை கீழே இழுத்துப்போட்டார். அவற்றின் மீது கவிழ்ந்து படிக்கத் துவங்கிய லெஃப்டினன்ட் லூச்செட்டி அதில் மூழ்கிப்போய் ஒரு வாரத்துக்குப் பக்கங்களைப் புரட்டியபடியே, 'இவை சிலுவைப் போர்கள் என்றாலும் மிக சுவாரசியமாக இருக்கின்றன,' என்று சொல்லிக்கொண்டிருந்தான்.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை விசாரணைக் குழுவின் மாலைநேர அறிக்கையில் அதிகரித்துக் கொண்டே போனது; ஆனால் நேர்மறையாகவோ, எதிர்மறையாகவோ கருத்து முடிவு எதையும் சொல்லும் எண் இலக்கங்கள் எவையுமில்லை. ஜெனரல் ஃபெடினாவின் ரப்பர் ஸ்டாம்ப் பயன்படுத்தப்படாமல் கிடந்தது. லெஃப்டினன்ட்டுகளின் பணியை ஆய்வு செய்ய வேண்டும் என்று தோன்றினால், 'ஏன் இந்த நாவலை கண்டிக்காமல் ஏற்றுக் கொண்டாய்? அதிகாரிகளைவிடவும் சிப்பாய்கள் மேலானவர்கள் என்று இதில் சித்தரிக்கப்பட்டுள்ளது. பதவிகளின் அடுக்கு முறைகளில் ஆசிரியருக்கு மரியாதையில்லை!' என்று ஜெனரல் சொல்வார். லெஃப்டினன்ட் மற்ற ஆசிரியர்களை மேற்கோள் காட்டி சரித்திர, தத்துவ, மற்றும் பொருளாதார விஷயங்களைப் பேசி ஒரே குழப்பமாக்கிவிடுவான். இது பொது விவாதமாகி மணிக்கணக்காக நீடிக்கும். சாம்பல் நிற சட்டை அணிந்திருந்தால் அவ்வளவாகக் கண்ணுக்குத் தெரியாமலும் ஓசையின்றியும் நடமாடிக் கொண்டிருந்த திருவாளர் க்ரிஸ்ப்பினோ சரியான நேரத்தில் விவாதத்தில் கலந்துகொண்டு விவாதப் பொருளுக்கு மேலதிகத் தகவலைக் கொடுக்கும் ஏதாவது ஒரு புத்தகத்தைப் பரிந்துரைப்பார்; அந்த புத்தகம் எப்போதும் ஜெனரல் ஃபெடினாவின் நம்பிக்கைகளை வெகுவாக பலமிழக்கச் செய்யும்.

இதற்கிடையில் செய்வதற்கு அதிகம் எதுவுமில்லாத சிப்பாய்களுக்கு சலிப்பு உண்டானது. அவர்களில் அதிகம் படித்த பாரபஸோ படிப்பதற்காக அதிகாரிகளிடம் ஒரு புத்தகம் கேட்டான். துருப்புகள் படிப்பதற்குத் தகுதியானவை தரலாம் என்று அறிவிக்கப்பட்ட புத்தகங்களில் ஒன்றை அவனுக்குத் தரலாம் என்று முதலில் அவர்கள் நினைத்தார்கள்; ஆனால் இன்னும் ஆராயப்பட வேண்டிய புத்தகங்கள் ஆயிரக்கணக்கில் இருப்பதை யோசித்துப் பார்த்த ஜெனரலுக்கு பணி ஆற்ற வேண்டிய நேரத்தில் பாரபஸோ வெறுமனே படித்துக் கொண்டிருக்க விரும்புவது வெறுப்பைத் தந்தது; எளிதானது என்று திருவாளர் க்ரிஸ்ப்பினோவால் பரிந்துரை செய்யப்பட்டிருந்த ஒரு நாவலை அவனுக்குக் கொடுத்தார். படித்துப்பார்த்துவிட்டு அதைப்பற்றி அவன் அவருக்கு அறிக்கை தரவேண்டும். மற்ற சிப்பாய்களும் அதே போல் கோரிக்கை வைக்க அதே மாதிரியான பணி தரப்பட்டது. டோமஸோன் என்ற சிப்பாய் படிக்கத் தெரியாத ஒரு சக சிப்பாய்க்கு ஒரு புத்தகத்தை உரக்க வாசித்துக் காண்பித்தான். கேட்டவன் தன்னுடைய அபிப்பிராயங்களைச் சொல்வான். சிப்பாய்களும் அதிகாரிகளுடன் சேர்ந்து பொது விவாதங்களில் ஈடுபட

ஆரம்பித்தார்கள்.

விசாரணைக்குழுவின் பணி முன்னேற்றம் பற்றி அதிகம் தெரியவில்லை: நீண்ட குளிர்கால வாரங்களில் நூலகத்தில் என்ன நடந்தது என்பதைப் பற்றி அறிக்கை தரப்படவில்லை. நமக்குத் தெரிந்ததெல்லாம் தலைமை அலுவலகத்துக்கு ஜெனரல் ஃபெடினா அனுப்பிய ரேடியோ அறிக்கைகளின் எண்ணிக்கை குறைந்து போயிற்று என்பதுதான்; இறுதியில் அவை ஒட்டுமொத்தமாக நின்றே போய்விட்டன. ராணுவ தலைமை அதிகாரி கலவரமடைந்தார்; ஆய்வை எவ்வளவு விரைவாக முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவில் முடித்து விரிவான ஒரு அறிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டும் என்று ரேடியோ மூலம் ஒரு உத்தரவை அனுப்பினார்.

இந்த உத்தரவு ஜெனரல் ஃபெடினா மற்றும் அவருடைய சக பணியாளர்களின் மனதில் முரண்பட்ட உணர்வுகளை ஏற்படுத்தியது. ஒரு பக்கம், திருப்திப் படுத்தப்பட வேண்டிய பல புது ஆர்வங்களை அவர்கள் தொடர்ந்து கண்டுபிடித்துக் கொண்டிருந்தார்கள்; மேலும் அவர்கள் எப்போதும் கற்பனை செய்து பார்த்ததற்கும் அதிகமாகவே அவர்கள் தங்களுடைய படிப்பையும் ஆய்வையும் சுகமாக அனுபவித்துக் கொண்டிருந்தார்கள்; இன்னொரு பக்கம் அவர்கள் கண் முன்னாலேயே புதுப்பிக்கப்பட்டவை போலவும், முன்பைவிட சிக்கலானவை யாகவும் தோன்றிய ஒரு வாழ்க்கைக்கும், ஒரு உலகத்துக்கும் திரும்பிப் போக அவர்களால் காத்திருக்க இயலவில்லை; மேலும் இன்னொரு பக்கம், அவர்கள் நூலகத்தை விட்டு வெளியேற வேண்டிய நாள் வேகமாக நெருங்கி வந்து கொண்டிருந்தது அவர்களுக்கு அச்சத்தைக் கொடுத்தது; ஏனென்றால், பல வகையான கருத்துக்கள் அவர்களுடைய தலைகளுக்குள் கொதித்துக்கொண்டிருந்ததால் உண்டாகியிருந்த நெருக்கடியிலிருந்து வெளிவர வழி தெரியாத நிலையில் அவர்கள் தங்களுடைய பெரும்பணி குறித்து அறிக்கை தர வேண்டியிருந்தது.

மாலை நேரத்தில், சூரிய ஒளியில் ஜொலித்த மரக்கிளைகள் மீதிருந்த மொட்டுகளையும், நகரத்துத் தெருக்களின் விளக்குகளையும் அவர்கள் ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தபோது யாராவது ஒருவன் உரக்க கவிதை வாசித்தான். ஃபெடினா அவர்களோடு இல்லை; இறுதி அறிக்கை தயாரிப்பதில் அவர் ஈடுபட்டிருந்ததால் தன்னை யாரும் தொந்தரவு பண்ணக்கூடாது என்று உத்தரவிட்டிருந்தார். ஆனால் அவ்வப்போது அழைப்பு மணியை அடித்து 'க்ரிஸ்ப்பினோ! க்ரிஸ்ப்பினோ! என்று அவர் கூப்பிட்டதை மற்றவர்கள் கேட்டார்கள். அந்த முதிய நூலகர் இல்லாமல் அவரால் அறிக்கையைத் தயாரிக்க இயலவில்லை; இறுதியில் இருவரும் ஒரே மேஜை அருகில் உட்கார்ந்து அறிக்கையைக் கூட்டாக எழுதத் துவங்கினார்கள்.

ஒரு பிரகாசமான காலையில் ஒரு வழியாக விசாரணைக்குழு நூலகத்தை விட்டு வெளியேறி தலைமை அதிகாரியிடம் அறிக்கையைச் சமர்ப்பிக்கச் சென்றது; அதிகாரிகளின் பொதுச்சபைக்கு முன்னால் ஃபெடினா ஆய்வு முடிவுகளை உதாரணங்களுடன் விளக்கினார். தோற்று வாயிலிருந்து இன்றைய காலம் வரையிலான மனித வரலாற்றின் ஒரு வகை சுருக்க வடிவமாக அவருடைய பேச்சு இருந்தது; அவருடைய பேச்சில் நல்லெண்ணம் கொண்ட பண்டூரிய மக்களால் விவாதத்திற்கு அப்பாற்பட்டவை என்று நம்பப்பட்ட கருத்துக்கள் தாக்குதலுக்கு ஆளாயின; நாட்டின் துயரங்களுக்கு ஆளும் வர்க்கங்களே பொறுப்பு என்று அறிவிக்கப்பட்டது: தவறான

கொள்கைகளாலும், தேவையற்ற போர்களாலும் பலி கொள்ளப்பட்ட துணிவு மிக்கவர்கள் என்று மக்கள் புகழப்பட்டனர். புதுக்கருத்துக்களை அண்மையில் தழுவிக் கொண்டவர்கள் விஷயத்தில் இயல்பாக நடப்பதைப்போல அவருடைய பேச்சு ஒரு குழப்பமான வெளிப்பாடாகவும், எளிமையும் முரணும் கொண்ட பிரகடனங்களை உள்ளடக்கியதாகவும் இருந்தது. ஆனால் ஒட்டுமொத்த பொதுவான கருத்தில் எந்த சந்தேகமும் அங்கே எழ வாய்ப்பில்லை. ஜெனரல்களின் சபை அதிர்ச்சியில் உறைந்தது. அவர்களுடைய கண்கள் அகலத் திறந்திருந்தன; பிறகே அவர்களுக்கு உணர்வு திரும்பி கத்த ஆரம்பித்தார்கள். அவருடைய பேச்சை முடிக்கக் கூட ஜெனரல் ஃபெடினா அனுமதிக்கப்படவில்லை. ராணுவ கோர்டின் விசாரணைக்கு அவர் உட்படுத்தப்படலாம் என்றும், பதவியிறக்கம் செய்யப்பட்டு சாதாரண சிப்பாயாக ஆக்கப்படலாம் என்றும் பேச்சு கிளம்பியது. பிறகு, இன்னும் அதிகமான அவதூறு ஏற்பட்டுவிடலாம் என்று அஞ்சி, பணியில் ஈடுபட்டிருந்தபோது உண்டான தீவிர நரம்பு மண்டல பாதிப்பின் விளைவாக ஆரோக்கியக் குறைவு ஏற்பட்டதாகச் சொல்லி ஜெனரலுக்கும், நான்கு லெஃப்டினன்டுகளுக்கும் ஓய்வூதியம் கொடுக்கப்பட்டு பணியிலிருந்து விலக்கப் பட்டவர்கள், குளிரால் விறைத்துப் போகாமல் இருக்க கனத்த கோட்டுகளும், தடித்த ஸ்வெட்டர்களும் போட்டுக் கொண்டு சாதாரண குடிமக்களின் உடையில் அவர்கள் அடிக்கடி அந்த பழைய நூலகத்திற்குப் போவதைப் பார்க்க முடிந்தது; அங்கே திருவாளர் க்ரிஸ்ப்பினோ தன்னுடைய புத்தகங்களுடன் அவர்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தார். ●

# இந்திரபாபு கவிதைகள்

மலையாளத்திலிருந்து தமிழில்

சுகுமாரன்

மலையாளக் கவிதையின் புதிய தலைமுறையைச் சேர்ந்தவர்களில் ஒருவரான இந்திரபாபு (பி 1960) வின் கவிதைகளை தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் ஒரு கர்வ பங்கத்தின் சந்தோஷமிருக்கிறது எனக்கு. தனித்துவம் தென்படும் வகையில் தொடர்ந்து எழுதிக் கொண்டிருப்பவர் இந்திரபாபு. எனினும் உரிய அங்கீகாரம் பெற்றிராதவர்.

கடந்த இருபது, இருபத்தைந்து ஆண்டுகளாக, மலையாளக் கவிதையை அக்கறையுடன் கவனித்து வருகிறேன். அதன் பொதுப் போக்குகளோ, தனித்த து குரல் மாற்றங்களோ எனது அவதானிப்பிலிருந்து தப்பியதில்லை என்ற கர்வமும் எனக்கிருந்தது. இந்திரபாபு கவிதைகளின் அறிமுகம் எனது கர்வத்தை சரியச் செய்தது. எனது தொடர்ந்த கண்காணிப்பில் விடுபட்ட இந்தக் கவிதைகளை வாசித்த போது எனக்கு ஏற்பட்டது ஒரு கண்டுபிடிப்பின் பரவசம்.

மலையாளக் கவிதையில் நவீனத்துவத்தின் இறுதிக் கண்ணி என்று பாலச்சந்திரன் சுள்ளிக்காடைச் சொல்லலாம். அவருக்கு பிந்திய தலைமுறையினரின் கவிதை நவீனத்துவத்தின் நிறுவனப்படுத்தப்பட்ட இயல்புகளைத் தாண்டி வேறு திசையில் பயணம் தொடர்ந்திருக்கிறது. நவீனத்துவ (அல்லது ஆவணிக) கவிதைக்கு ஒரு கோட்பாடு வரம்பு இருந்தது. இன்றைய கவிதை அந்த வரம்பைப் புறக்கணித்து விரிவடைந்திருக்கிறது. இது எதார்த்தமானது தவிர்க்க இயலாதது.

பாலச்சந்திரனின் நிறுத்தத்திலிருந்து புறப்பட்டு தனது திசையில் முன்னேறியிருப்பவர் இந்திரபாபு. கொழுந்து விட்டெரியும் ஜீவிதத்தை இரு கைகளிலும் ஏந்தியவனின் மனத் தத்தளிப்பைச் சித்தரித்தவை பாலசந்திரன் கவிதைகள். அதே நிலையிலான மனிதனின் தர்ப சங்கடங்களைப் பேச எத்தனிப்பவை இந்திரபாபுவின் கவிதைகள். முன்னவர் 'கலகக் காரனின் சுழிவிரக்'கத்தின் தொனியில் பேசியவர். இரண்டாமவரின் மொழி 'கலகக்காரனின் நையாண்டி'.

## கேள்வி

இரண்டு நேர்துருவங்கள்
ஒரே படகில்
கடலின் நடுவில்
அலைகளின் விரல்களில் மின்சாரம்
அவர்கள் பயந்து போய்ப் பார்த்தார்கள்
நீ யாருடைய மகள்?
வெளிச்சமா அல்லது இருட்டா?
இரண்டுமல்ல
எனக்கு அதுதான் பிரச்சனை
இருட்டென்றால்
மார்போடு தழுவிக்கொள்ளலாம்
வெளிச்சமென்றால்
இதயத்தில் சுமக்கலாம்
இரண்டுமல்லாத உன்னை
நான் என்ன செய்ய?

## சோஃபியா

சோஃபியா,
தேவாலயம் திறந்து
நீ என்னைப் பார்
குளவிக்கூடுகள் கலையும்
இந்த இருட்டில்
என்னை நீ மூடுக
மழை மேகத்தின் செதில்கள்
உதிர்ந்து விழும் முன்பு
வீடுசேர வேண்டும் நாம்.

நீ
நகரமும் கிராமமுமல்லாதவள்
முன்பு யாரோ சொல்லித் தந்த
நேசத் தகர்ச்சியின் காதலி

காடு காணத் தயாரான
ராமனைப் பின்தொடர்ந்து
மரணத்தை வரித்தவள்
உன் மடியில்
எனக்கு அமைதி கிடைக்குமென்று
உன்னிடம் சொன்னது யார்?
உன் பரிசுத்தத்தை தழுவும் போது
என் பாவங்கள்
கரைந்தோடுமென்று சொன்னது யார்?

நிர்வாணமான
உன் இதயத்தில்
நான் முத்தமிட்டதை
நீ அறியவில்லையா?
டயோஜெனிஸின் ★
லாந்தரை விடப் பிரகாசமான
உன் விழிகளில்
பயம் கூடு கட்டியதா?

சோஃபியா,
குன்றிமணிகள் மின்னும்
இந்தப் பாதையில்
உன் முகத்தை
நான் பார்க்கிறேன்
இன்று உன் பிறந்தநாள் என்பதை
நானும் கூட நினைக்கவில்லை

ஒவ்வொரு கோடையின் முடிவிலும்
நமக்காக ஒரு வசந்தம்
வருமென்று விரும்பினோம்
ஒருபோதும் வராதென்று தெரிந்தாலும்
நீ உறங்காமல் இரு
கண்கள் இறுக மூடி
ஆகாயத்தை நெஞ்சில் தழுவி
நீ உறங்காமல் இரு.

★ பகலில் லாந்தர் விளக்குடன் மனிதர்களைத் தேடிய கிரேக்க தத்துவஞானி.

# நட்சத்திரத்தின் கண்கள்

முன்பு
ஏதோ மத்தியானத்தில்
வெக்கை தாங்கமுடியாமலானபோது
நீ என்னிடம் சொன்னாய்:
நாம் பறந்து போகலாம் அங்கே
தொலைவில்
சூரியன் வெம்மைக்கும் அப்பால்
சாமந்திக் காடுகளின் சமவெளிக்கு
நான் நினைத்தேன்:
சரியாயிருக்குமென்று
நாம் பறந்தோம்
நீ என்னையும்
நான் உன்னையும் அழைத்துப்
பறந்தோம்
பிறகு எப்போது
நீ நட்சத்திரத்தின் கண்களில்
பிரவேசித்தாய்?
எனக்கு நினைவில்லை
ஏதோ கடலிடுக்கில்
நான் மட்டும் வந்து விழுந்தேன்
உடல் சோர்ந்து போயும்
மனம் நடுங்கியும் கூட
நான் நீச்சல் நிறுத்தவில்லை
பிறகு எப்போதோ
கடலுக்கும் நான் வேண்டாதவன்
ஆனேன்
கடற்கரை மணலுக்கும்
நான் அந்நியனானேன்
மணற் படுகைகளினூடே...
பாறையடுக்குகளினூடே...
ஊர்ந்து ஊர்ந்து...
கடைசியில்
நான் இந்த குன்றின் உச்சிக்கு வந்தேன்.

நினைவிருக்கிறதா
நான் போன வழிகள்?
காட்சியும் கேள்வியுமில்லாத என்னை
மார்போடு கட்டியணைத்தவர்...?
அப்போதெல்லாம்
நீ எங்கே இருந்தாய்?
நினைவிருக்கிறதா?
உன் நெற்றியில்
என் உதடுகளுக்கு ஊற்றாக இருந்த
ஒரு விடியற்காலை இருந்தது
உன் சிறுத்த வயிற்றில்
என் முகத்துக்கு அடைக்கலம் தந்த
ஒரு சாயங்காலம் இருந்தது
எல்லாம் நம்மை
அழைத்துப் போனதெங்கே?
இந்த பூமிக்கா?
தெரியாது
எனினும் நாம் நினைத்திருக்கலாம்
நினைவுக்கு எட்டாத காலம் முதல்
நீ என்னுடையவளாக மட்டுமிருந்தாய்
ஒரு நீண்ட இடைவெளியில்
அநேக வசந்தங்கள் மலராமற் போயின
பிறகு... ஏதோ நள்ளிரவில்
ஆகாயத்திலிருந்து ஊர்ந்து விழுந்த
நட்சத்திரத்தின் கண்ணில் நீயிருந்தாய்.
யாரும் பாராமல் நான் அதையெடுத்து
என் இதயத்தில் அணைத்துக்
கொண்டதை
நீயும் அறிந்திருக்க மாட்டாய்.

## கவிதையும்
## கினிப்பன்றிகளும்

வாழ்க்கை திருடப்பட்ட
இந்த இரவில்
நான் கனவுகள் காணவேண்டும்
கண்கள் தோண்டப்பட்ட
இந்தப் பகலில்
நான் வாழ்க்கையைப் பார்க்க
வேண்டும்
கடவுளே,
நீ அறிந்திருக்கிறாயா...
என் இரத்தத்தில்
நேசத்தின் திராட்சை வனங்களை
வெயில் தின்று தீர்த்ததை.

யாரும் யாருடைய ஒற்றனுமாகலாம்
அன்பைச் சொல்லி
இனி எவரும் சச்சரவிடவேண்டாம்

இப்போது வேண்டும் எனக்கு
மழைபெய்யாத காடு
பனிபொழியாத மாமலை
பிதாவே,
எங்கே பிழையாகிப் போனது?
இந்த இரவின் கறுப்பா
பகலின் கொதிப்பா
எதை நீ திருப்பி எடுத்துக் கொண்டாய்?

நான் என் கவிதையைப் பாடி முடிக்கும்
போது
இன்னொருவன் தற்கொலை செய்ய
வருவான்
நதிக் கரையில் மறந்து வைத்த
என் வருத்தங்களை
அவன் கழிமுகத்தில் வீசியெறிவான்
நதியின் அக்கரையில் எனக்கிருந்த
வீட்டை
அவன் சொந்தமாக்குவான்:
ரகசியமாய்த் தற்கொலை
செய்துகொள்ள.

பார்,
இப்போது நதியின் அக்கரையில் நீ
இக்கரையில் என் நிழல்
மலைகளுக்கப்பால் சிங்கத்தின்
அரண்மனை
மான்கள் படைவீரர்கள்
காண்டாமிருகங்களுக்குப்
பாலாபிஷேகம்
காட்டெருமைகள் குழலூதுகின்றன
உருவமும் நிறமுமில்லாதவனே
வெடிமுழக்குவது யாருக்காக?
இனி யாரும் வரப்போவதில்லை.
கடைசி மெழுகுவர்த்தியையும்
களவாடிப் போய்விட்டார்கள் யாரோ.

## விதவை

நெற்றியில் அன்பன் இட்ட
செந்தூரம் கலையும் முன்பே
அணைந்ததம்மா! கண்களின் சுடர்!
தேசத்தைக் குத்திக் கிழிக்க வந்த
வேட்டைக்காரர்கள்
பறித்துப்போயினர் என் வாழ்க்கையை
இறக்கவில்லை நான்
பனிமூடிய மலைக்காட்டிலென்
அன்பன் கொன்றதும் மரித்ததும்
காண்கிறேன் மீண்டும் மீண்டும்.

புத்திரசோகம் எவ்வளவோ துச்சம்
அம்மா
வாழ்க்கையை நாட்டுக்காய்
வழங்கியதை நினைக்கையில்
என்ன செய்வென்

பொன்னிலஞ்சிப் பூவே!
உன் நெற்றியில் இனி
தேசத்தின் இரத்தத் திலகம்
பார்த்திருக்க முடியாது
நான் இங்கே இந்த
எல்லைகளில்லா உலகில் வசிக்கும்
போது
அறிகிறேன் பூவே!
உன்னில் எரியும் சிதையில் நான்
மட்டுமென்று.
நினைக்கும் போது
துடிக்கிறது என் ஆத்மா மறுபடியும்
உடல்கொன்று மீண்டும் என்
நாட்டுக்காய்ப் போராடி மரிக்க
எது தேசபக்தி ?
அரசாண்டு அழிப்பதா ?
கொன்று கொன்று அயல்நாட்டை
மயானமாக்குவதா ?
உயிர் காக்க
படையில் சேர்வதா ?
குடும்பம் பிழைக்க
கூலிப்பட்டாளமாவதா ?
தெரியாது நமக்கு எதுவும்
தேசத்தின் தீச்சுவாலையில்
இரத்த நாளம் முறிந்து சமர்ப்பிக்கையில்

கொண்டுபோவாயா என்னை
கொல்வதற்காய் ரத்தவெறி
கொக்கரித்து தீச்சொரியும்
அயலானின் நாட்டுக்கு
யாருக்கு வேண்டும் இந்தப்
பனிமூடிய மலை
பாதகர்களுக்கு இருக்கும் எதற்குமொரு
நியாயம்
கொல்லவும் தின்னவும்
வெறிமுற்றிய இவர்களைத்
தள்ளிவிடு சிதைநெருப்பில்

பனிமலை உருகி
நதியாய்ப் பரவித் தளிர்க்கட்டும்
சிநேக ஜுவாலையில்
அந்நியோன்னியம் பார்க்கட்டும்

அப்போதும்
விதவையால் விசும்புலது யார் என்
அம்மா?

புது எழுத்து 6/2

# வழியோரப் பூனைகள்

வாழ்க்கையிலிருந்து தப்ப
குறுக்குவழி எது ?
சாகவும் ஒரு வழி தேவை
பிறர்க்குப் பாரமாகாத வழி

சலனமற்ற தடாகத்தில்
முள்முனைகள் பாய்க்க
இனியாரும் வரமாட்டார்.
போஸ்ட்மார்ட்டம் முடிந்த சடலத்தில்
பூச்சொரிய தேவதைகள் வாரா.

கவிதை கவிதையிடம்
சொல்வதென்ன ?
எத்தனை நெகிழ்வானது
கவிதையென்று
வசனம் வசனத்திடம் சொல்வதென்ன?
எத்தனை வலுவானது வசனமென்று

கவிதைக்கும் வசனத்துக்கும்
இடையில்
இலட்சுமண ரேகை எதுவுமில்லை
மற்றெவரோ வரைந்த
வேற்றுமைகளை
மங்கச் செய்பவனல்லவா கவிஞன்

கட்டுப்பாடில்லாத வீட்டுக்குள்
இனி கூரைக்கம்புகள் மிச்சமில்லை
தரையில் விழாத ஜன்னல்களில்லை
மரணபயமற்ற விசிறியில்
வாயு பகவான்
இலக்கின்றிச் சுழல்கிறான்
கிழித்தெறிய இனி
மெலிந்த தோல்கள் மட்டுமே.
மற்றவர்கள் என்னவும் சொல்லட்டும்
மரணம் அவர்களது
குடித்தனக்காரனல்ல.

இலட்சணம் பொருந்திய கவிதையல்ல
வாழ்க்கை
வாழ்க்கையையும் கவிதையையும்
வேறுபடுத்தும் கண்ணாடியில்
ஈசல் சிறகுகள்
ஒட்டிக் கிடக்கின்றன

வரவேண்டாம், யாரும் இனி
இங்கே வரவேண்டாம்
கண்ணாடியில் இனி
யாருடைய முகமுமில்லை
இறந்தவர்களின் ஆத்மாக்கள்
தும்பிச் சிறகுகளில்
குடியேறியிருக்கலாம்
நேற்றுப் பெய்த மழையில்
பிறந்தன இந்த வெயில் தும்பிகள்
மழைக்காலங்களைப் பிளந்து
நூற்றாண்டுகள் வாழ
தும்பிகளுக்கு ஆசையில்லையென்று
சொன்னவனின்
எரிந்து கருகிய உடல்தான்
மின்கம்பிகளில் நேற்று
தொங்கிக் கிடந்தது.

காலம் யாருக்காகவும்
காத்திருப்பதில்லை
சாகவிருப்பவர்கள் விரைந்து
வாருங்கள்
விசிறிக்கு
எந்த நிமிடமும் மின்வெட்டு நோயாய்
மின்வெட்டு இரவு ஜுரம் போலக்
கொடுமை
மின் விசிறிகள்
வாழ்க்கைக்கு வழங்கும்
உத்தரவாதமே பவர்கட்
எல்லா ஞாயிற்றுக் கிழமைகளிலும்
விருந்தாளிகள் வரும் வீடு
தனிமையின் ஆடைகளில்
அழுக்குப் புரள்வதை
வேறெவரும் பார்ப்பதில்லை
மரம் விறைக்கும் குளிரில்
அழுக்கேறிய உடைகளைக்
கழற்றி எறியவும் முடிவதில்லை
என்ன குளிர் இது.

எனக்கு யாரோடும்
கடன்பாடில்லை என்கையில்
நீங்கள் பல்லிளிப்பது ஏன் ?
இரவும் பகலும் எனக்குத் தந்தது
நடுப்பகலின் தயவு மட்டுமே
கனல்காடுகளுக்கு அப்பால்
தெச்சியும் செவ்வந்தியும் பூத்துலவும்
ஒரு வனமிருக்கிறது
அவற்றின் மணம் நாம் அறிவதில்லை

பிடிவாதத்தின் யாகசாலைதான்
வாழ்க்கையென்று
யாராவது சொன்னதுண்டா ?
செண்பக மரத்தில் பூத்திருப்பது
வேனிலின் பிரியமான கனவுகளாக
வேண்டுமென்றில்லை
உருகிவிழும் மெழுகுவர்த்திக்கு
வாழ்க்கை தர
நம்மால் முடியாது
அப்போதும் அது தரும் ஒளியை
நாம் ஏற்றுக்கொள்கிறோம்
அதுதான் முறை...
வாழ்க்கைக்குள் நுழைந்து போகக்
குறுக்குவழிகள் இல்லை

வழியோரப் பூனைகளின் கண்கள்
இருள் வழிகளைத் தேடுகின்றன
அனாதைகளின் ஊர்வலம்
மீண்டும் காடிறங்கி வருகிறது
காக்கைக் கால்கள் பதிந்த
கடற்கரையில்
இரண்டு மனிதக் கால்களைத்
தேடியலைகிறோம் நாம்
அலைகள் கொண்டு போனதெல்லாம்
திரும்ப வரும்

நமது தயவு
கடலுக்குத் தேவையில்லை

# மூன்று மராத்திய தலித் சுயசரிதைகள்

**உபாரா**

**அன்னியன்**

லட்சுமண் மானே

விலை : ரூ. 100/-

**குலாத்தி**

**தந்தையற்றவன்**

கிஷோர் சாந்தாபாய் காலே

விலை : ரூ. 75/-




**உச்சாலியா**

**பழிக்கப்பட்டவன்**

லட்சுமண் கெய்க்வாட்

விலை : ரூ. 100/-

விடியல் பதிப்பகம்
11, பெரியார் நகர்,
மசக்காளிப்பாளையம் வடக்கு,
கோவை – 641 015.

# கொரியக் கவிதைகள்

தமிழில்
பிரேஞ்கினி

## யீ ஸோங்-போ (1725)

நீரில் விளையாடும்
மீன்களை நோகாதீர்கள்
மீனவர்கள் சென்றபின்
வெண் நாரைகள் வருகின்றன
நாள் முழுக்க மீன்கள் நீரில்
நீந்தியும் ஒளிந்தும் கொள்கின்றன
ஒய்வில்லாமல்.
0

முட்டாள் காற்று
தேனீக்கள் அங்கும் இங்கும் பறக்க
சிதறுகிறது மென்மலர்
கவைக்கிளையிடை எழும்பும் வலையில்
விழுகிறது பூவிதழ்
வண்ணத்துப் பூச்சியெனத் தாவும் சிலந்தி

## கிம் சத்கத் (1807)

கடந்த செப்டம்பரில் குஹோல் மலை வழியே சென்றேன்
இந்த செப்டம்பரிலும் குஹோல் மலை வழியே சென்றுகொண்டிருக்கிறேன்
ஒவ்வொரு செப்டம்பரும் குஹோல் கடப்பதாகவே இருக்கும்
இந்த குஹோல் மலை செப்டம்பரின் வண்ணம் கொண்டிருக்கிறது.

## கிம் கீ-ரிம் (1909)

### வண்ணத்துப் பூச்சியும் கடலும்

வெள்ளைப் பட்டாம்பூச்சிக்கு கடல்பற்றி பயமில்லை
அதன் ஆழம் மிக ஆழம் பற்றித் தெரியவே தெரியாது அதற்கு
பச்சைப் பசுங்கடல் மேலே பறக்கிறது றெக்கை அசைத்து
அலைபரப்பின் சாரலில் குட்டி இளவரசி போல் வெடவெடக்கிறது
கருநீல மாதத்தில் பூக்களின் வாசனை கடலிலில்லை
வண்ணத்துப் பூச்சியின் தோள் மீது இறங்குகிறது
இருளின் வெளுத்த நீலத்தில் புதுநிலா.

## ஸாங் ஹின் (1517 - 84)

பார்ப்பதை மறந்துவிடு
கேட்பதை பொருட்படுத்தாதே
இப்படித்தான் கழிந்தன இரவும் பகலும்
எவருடனும் கலக்காது

எனது கைகள் மட்டுமே
உழைத்தன நன்கு

அவைகளுக்கு மட்டுமே தெரியும்
கோப்பைகளை
எப்படி பரிமாறவேண்டும் என்பது.

ஒரு கவிதை இருக்க வேண்டும்
உணர முடிவதாய்
உருண்டு திரண்ட பழம் போல மௌனமாய்
பேச்சற்று
புராதனப் பதக்கங்கள் கட்டை விரலுக்கு அடையாளப்படுவது போல்

பாசி வளர்ந்து படிந்த
கைப்பகுதிகளால் தேய்ந்த ஜன்னல் விளிம்புகளைப்
போல மௌனமாய்

ஒரு கவிதை வார்த்தையற்றிருக்க வேண்டும்
பறவைகளின் பறத்தல் போல

நிலா உயர்வதைப் போல்
காலத்தினுள் கவிதை இயக்கமில்லாதிருக்க வேண்டும்

இரவு பின்னலிட்ட மரங்களை
குறுங்கிளை அடுத்த குறுங்கிளையாக
நிலா விடுவிப்பது போல,

பனிக்காலத்து இலைகளின் பின்புறமிருந்து நிலா
ஞாபகம் ஞாபகமாக
மனதை விடுவிப்பது போல

ஒரு கவிதை காலத்தினுள் சலனமில்லாதிருக்க வேண்டும்
நிலா உயர்வது போல்

ஒரு கவிதை சமானமாய் இருக்க வேண்டும்
நிஜத்திற்கு இணையாய் அல்ல

எல்லாத் துயரத்திற்கும்
ஒரு வெற்று வாசலைப் போல
மேப்பிள் மர இலையைப் போல

காதலுக்கு
தலைசாயும் புற்கள் மற்றும் கடலுக்கு மேலாக
இரண்டு வெளிச்சங்களைப் போல
ஒரு கவிதை அர்த்தம் தரக்கூடாததாக
கவிதையாக இருக்க வேண்டும்.

ஆர்க்கிபால்ட் மேக்லீஷ்

(அமெரிக்கா)

# கவிதைக் கலை

தமிழில் பிரம்மராஜன்

புது எழுத்து – தனிச் சுற்றுக்கு மட்டும்